# காலத்தை வென்ற காவிய மகளிர்!



நுணாவிலூர் கா.விசயரத்தினம்

# காலத்தை வென்ற காவிய மகளிர்

## Women of The Epics Who Outlasted Their Times

நுணாவிலூர்

**கா. விசயரத்தினம்**

NUNAVILOOR

**K. WIJEYARATNAM**

PUBLISHERS:

**WIJEY PUBLICATION,**

35, Southborough Road,
Bickley, Bromley, Kent,
BR1 2EA. UNITED KINGDOM
Ph : 020 34896569
Email : wijey@talktalk.net

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | காலத்தை வென்ற காவிய மகளிர் |
| ஆசிரியர் | : | நுணாவிலூர் கா.விசயரத்தினம் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2015 |
| பதிப்பு விவரம் | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | மலர்விழி ஜெயராசா |
| தாளின் தன்மை | : | 18.6 கி.கி. மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | டெம்மி சைஸ் (14 X 21 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | viii + 172 = 180 |
| அட்டைப்பட ஓவியம் | : | பான்ராஜா கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | : | ஸ்ரீ விக்னேஷ்வரா கிராஃபிக்ஸ் |
| அச்சிட்டோர் | : | பி.வி.ஆர். ஆஃப்செட், சென்னை–94. |
| வெளியிட்டோர் | : | விஜேய் வெளியீடு, ஐக்கிய இராச்சியம். |
| நூல் கட்டுமானம் | : | தையல் |

**Women of The Epics Who Outlasted Their Times**

| | | |
|---|---|---|
| Author | : | Nunaviloor K.Wijeyaratnam |
| Edition | : | First Edition, 2015 |
| Publishers | : | Wijey Publication |
| Copy Right | : | Malarvili Jeyarajah |
| Pages | : | viii + 172 = 180 |
| ISBN | : | 978-0-9575862-2-2 |
| Published by | : | WIJEY PUBLICATION, 35, Southborough Road, Bickley, Bromley, Kent, U.K. BRI 2EA. |
| Printed by | : | Manimekalai Pirasuram, Chennai-17, Tamilnadu, S.India. |

# சமர்ப்பணம்

இந்நூலை, 2006 -2015 ஆண்டுகளில் என்னை ஓர்
எழுத்தாளனாக இனங்கண்டு வளர்த்த,
நானும் பிற்கால இணைப்பாளராகச் சேர்ந்து வளர்த்த...

**EELAVAR LITERATURE ACADEMY OF BRITAIN [ELAB]:**
பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்துக்கும் (ஈலாப்)

**ஈலாப் இன்** என் சக எழுத்தாளர்கள், உலகரங்கில் பல பரிசுகள் பெற்ற ஆசிரியர்களுக்கும்...

**ஈலாப் இன் பூந்துணர்** (PERCEPTIONS):
2007 (210 - பக்கம், ISBN: 1-873265-52-2).
2010 (312 - பக்கம், ISBN: 978 -1-873265 -67-3).
2012 (240 -பக்கம், ISBN: 978 -1-873265-82-6).
2014 (176- பக்கம், ISBN: 978- 1-873265-19-2)

எனும் நூல்களுக்குத் தொகுப்பாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும், அன்றிருந்து இன்று வரை **ஈலாப்** இன் சக- நிறுவனர், இயக்குநர், தலைவராகக் கடமையாற்றி வரும்...
**பேராசிரியர் கோபன் மகாதேவா** அவர்களுக்கும்...

**சமர்ப்பணம் செய்வதில் பெருமைப்படுகிறேன்...**

**நுணாவிலூர் கா.விசயரத்தினம்**
நூலாசிரியர், **ஈலாப்** இணைப்பாளர்

# பொருளடக்கம்


நுல் அறிமுகம்:
நூலாசிரியர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் .... v

1 மகாபாரத மங்கா மாண்புடை மகளிர் .... 1

2. தொல்காப்பிய மகளிர் .... 16

3. சிலப்பதிகாரத்தில் பவனி வரும் மகளிர் .... 31

4. மணிமேகலையில் தோன்றும் மகளிர் .... 53

5. சீவக சிந்தாமணியில் உலாவும் மகளிர் .... 75

6. வளையாபதியில் வளையல் அணிந்த வனிதையர் .... 94

7. குண்டலகேசி நூலின் கதாநாயகி குண்டலகேசி .... 99

8. கம்பராமாயணம் காட்டும் அரச மகளிர் .... 106

9. பண்டைப் பாடல் பாடிய பெண்பாற் புலவர் .... 131

10. பெண் பெருமை பேசும் சங்க இலக்கியங்கள் .... 148

11. சங்க இலக்கியங்கள் பேசும் பெண் கூந்தற் பெருமை .... 156


12. துணை நின்ற நூல்கள் .... 166

13. ஆசிரியரின் நூல் விவரம் .... 169

14. ஆசிரியர் பற்றி .... 171


★★★

# நூல் அறிமுகம்



நான் கண்கண்ட தெய்வங்களான என் தாய், தந்தையரை அடிமனத்தில் நிலை நிறுத்தி, எண் திசைகளிலும் அமைந்துள்ள உறை தெய்வங்கள் காத்து நிற்கும் நான் பிறந்த புகழ் பூத்த நுணாவிலூரை என் பெயர்முன் நிறுத்தி, மனக் கணினியில் சேமித்து வைத்துள்ள பிறந்த மண்ணின் எண்ணற்ற நினைவலைகள் இன்றும் மனத்தில் அசைந்தும், நகர்ந்தும், ஊர்ந்தும், உலாவியும், பறந்தும் கொண்டிருக்க, ஆறாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள வந்தாரை வரவேற்கும் புகழ் பெற்ற இலண்டன் மாநகரிலிருந்து என் "காலத்தை வென்ற காவிய மகளிர்" என்ற நூலுக்கு ஓர் "அறிமுகம்" எழுத விழைகின்றேன்.

(1) மகாபாரத மங்கா மாண்புடை மகளிர், (2) தொல்காப்பிய மகளிர், (3) சிலப்பதிகாரத்தில் பவனி வரும் மகளிர், (4) மணிமேகலையில் தோன்றும் மகளிர், (5) சீவக சிந்தாமணியில் உலாவும் மகளிர், (6) வளையாபதியில் வளையல் அணிந்த வனிதையர், (7) குண்டலகேசி நூலின் கதாநாயகி குண்டலகேசி, (8) கம்பராமாயணம் காட்டும் அரச மகளிர், (9) பண்டைப் பாடல் பாடிய பெண்பாற் புலவர், (10) பெண் பெருமை பேசும் சங்க இலக்கியங்கள், (11) சங்க இலக்கியங்கள் பேசும் பெண் கூந்தற் பெருமை ஆகிய ஆக்கங்கள் இந்நூலின் அடக்கமாகும். மகளிர் பற்றியும் அவர்கள் பெருமை பற்றியும் பேசும் நூலாக இந்நூல் அமைகின்றது.

மகாபாரதத்தில் - கங்காதேவி, சத்தியவதி, அம்பை, அம்பிகை, அம்பாலிகை, காந்தாரி, குந்தி, மாத்ரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை ஆகிய பதினொரு அரச மகளிர் பற்றிப் பேசப்பட்டுள்ளது. கௌரவர் குடும்பத்திற்கும், பாண்டவர் குடும்பத்திற்கும் இடையே நடந்த

குடும்பப் போர் மகாபாரதப் போராயிற்று. "சத்தியம் மிக உயர்ந்த தருமம்", "தருமம் வெற்றி பெறும்" என்ற ஓர் உண்மைத் தத்துவத்தை மகாபாரதம் உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தொல்காப்பிய மகளிர் என்ற கட்டுரையில், தெய்வ வழிபாடு குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைகள், கைக்கிளை, பெருந்திணை களவியல், கற்பியல், குறியிடம் - பகற்குறி, இரவுக்குறி, அம்பல், அலர், களவு வெளிப்படல், களவிற் கூற்று நிகழ்த்த அறுவர், கற்பிற் கூற்று நிகழ்த்தப் பன்னிருவர், கற்பும் கரணமும் (சடங்கு முறை), மூதானந்தம் என்ற நிலையில் நின்று கணவனோடு இறந்துபடல், பாலை நிலையில் நின்று உடன்கட்டையேறல், தாபத நிலையில் நின்று கைம்மை பூண்டு வாழ்தல் ஆகிய எல்லா நிலைகளிலும் மகளிர் தொட்டுச் சென்று நிலையான வாழ்க்கையை அமைத்துச் சிறப்புடன் வாழ்கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் - கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி, கவுந்தியடிகள், தேவந்தி ஆகிய ஐந்து மகளிர் பற்றிப் பேசப்படுகின்றது. கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி ஆகிய மூவரும் கற்புக்கரசியர். கண்ணகி வணிகையர் குலத்தவளும் கோவலன் மனைவியுமாவாள். மாதவி கணிகையர் குலத்தவளாயிருந்தும் அக்குலத்தை வெறுத்து, கோவலனுடன் மட்டும் மனைவியாகத் திகழ்ந்த பெருமைக்குரியவள். கோப்பெருந்தேவி பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் பட்டத்து இராணியாயிருந்து, மன்னன் மாண்டதும் அவனுடன் இறந்தவள். கவுந்தியடிகள் ஒரு பெண்பாற் சமணத் துறவியாவாள். பார்ப்பனப் பெண்ணான தேவந்தி கண்ணகியின் உயிர்த் தோழியாவாள்.

மணிமேகலை, கோவலனுக்கும் மாதவிக்கும் மகள் ஆவாள். மணிமேகலை கணிகையர் குலத்தவளாயிருந்தும், அதில் நின்று ஒழுகாது விலத்தி வாழ்ந்து, கன்னிப் பருவத்தில் துறவறம் பூண்டவள். அவளுடன் சுதமதி, மாதவி, சித்திராபதி, தாரை, வீரை, காயசண்டிகை, இலக்குமி, ஆதிரை, பீலிவளை, இராசமாதேவி, அறவணவடிகள் ஆகிய மகளிர் மணிமேகலை நூலில் காட்சி தருகின்றனர். மணிமேகலா தெய்வம், சிந்தாதேவி, தீவதிலகை என்பவர்கள் மூலம் பல தெய்வீக நிகழ்வுகளையும் காண்கின்றோம். "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்ற உயர் கொள்கை கூறப்படுகின்றது. மணிமேகலை

புத்தம், தர்மம், சங்கம் ஆகிய முத்திற மணிகளில் நின்று தவத்தை மேற்கொண்டாள்.

சீவக சிந்தாமணி நூலில் சீவகன் என்னும் இளவரசன் காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டு மகளிரை ஒருவர்பின் ஒருவராக மணந்து, அவர்களிடையே ஒரு பிணக்குமின்றிச் சந்தோசமாக வாழ்க்கை நடாத்திய செய்தி யாவர் மனத்திலும் நிறைந்துள்ளதைக் காண்கின்றோம். இதில் எட்டு மகளிரின் நிறைந்த மனவுறுதியையும், பண்பையும் மெச்சாதிருக்க முடியாது. சீவகன் நாட்டின் பொறுப்பைத் தன் மகனிடம் கொடுத்து விட்டுச் சமண சமயத்தை நாடித் துறவு பூண்டான். தேவியர் எண்மரும் தவமியற்றி முத்தி பெற்றனர்.

வளையாபதியில் வர்ணம், குலம், சாதிக்கட்டுப்பாடு, குலப்பற்று, பலதார மணம், தெய்வ நம்பிக்கை ஆகியனவும், குண்டலகேசியில் குலம்பாராக் காதல், சமயவாதாடல், துறவறம் பூணல், புத்த சமயத்தில் சேர்ந்து பிக்குணியாதல், பிரசாரம் செய்தல், ஞான நிலையடைதல் ஆகியனவும் பேசப்பட்டுள்ளதைக் காணலாம்.

கம்பராமாயணம் - இதில் கோசலை, கைகேயி, சுமத்திரை, சீதை, கூனி, தாரை, அகலிகை, மண்டோதரி, சூர்ப்பணகை, திரிசடை, உருமை ஆகிய மகளிர் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அவர்களில் கைகேயி, கூனி, சூர்ப்பணகை ஆகிய மூவரும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டனர். கைகேயி, கூனி ஆகிய இருவரின் சூழ்ச்சிச் செயலால் தசரத மன்னன் மாண்டான். சூர்ப்பணகையின் செயலால் இராவணன் மடிந்தான். இராமன் அறநிலை நின்று, மனுநீதி தவறாது அரசாட்சி புரிந்து வந்தான்.

பெண்பாற் புலவர்கள்:- ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், அள்ளூர் நன்முல்லையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினியார், குறமகள் குறியெயினி, நக்கண்ணையார், நெட்டிமையார், பாரி மகளிர், பூங்கண் உத்திரையார், பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு, பேய்மகள் இளவெயினியார், மாறோக்கத்து நப்பசலையார், மாற்பித்தியார், வெண்ணி குயுத்தியார், வெறிபாடிய காமக்

கண்ணியர் ஆகிய பதினேழு (17) சிறப்புற்று விளங்கிய பெண்பாற் புலவர்கள் பற்றியும், அவர்கள் தமிழுக்கு ஆற்றிய சேவைகள் பற்றியும், அவர்கள் பாடிய பாடல்கள் பற்றியும் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் ஒருமித்து 123 சங்கப் பாடல்களைப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் சங்க இலக்கிய நூல்களான புறநானூற்றில் 60 பாடல்களும், குறுந்தொகையில் 31 பாடல்களும், அகநானூற்றில் 11 பாடல்களும், நற்றிணையில் 11 பாடல்களும், பதிற்றுப்பத்தில் 10 பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஔவையார் தனித்து 60 பாடல்களைப் பாடிய பெருமைக்குரியவராவர்.

பெண் பெருமை பற்றியும், பெண் கூந்தற் பெருமை பற்றியும் தொல்காப்பியம், குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, பரிபாடல், புறநானூறு, அகநானூறு, சிலப்பதிகாரம், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை ஆகிய பதின்மூன்று (13) சங்க இலக்கிய நூல்களில் பேசப்பட்டுள்ள சிறப்பினையும் காணலாம்.

இன்னும், இந்நூல் சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினரால் அச்சிடப்படவுள்ளது. இந் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும், மேலாளர் திரு. மோகன் அவர்களுக்கும், இத் தயாரிப்பில் உதவிய மற்றைய அனைவருக்கும் என் மனம் கனிந்த நன்றிகள் உரித்தாகும்.

நுணாவிலூர் கார்த்திகேயன் விசயரத்தினம்
திருவள்ளுவர் ஆண்டு 2046,
வைகாசித் திங்கள், 2015

**Nunaviloor K. Wijeyaratnam, MAAT, SLAS**
Co-ordinator: Eelavar Literature Academy of Britain (ELAB),
Retired Superintendent of Audit, Sri Lanka Audit Servivice,
35, Southborough Road, Bickley, Bromley, Kent. BR1 2EA.
UNITED KINGDOM.
Telephone: No. 020 3489 6569,
E-mail: wijey@talktalk.net

●●●



1

# மகாபாரத மங்கா
# மாண்புடை மகளிர்

மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரண்டும் உலகம் போற்றும் உயர்ந்த இதிகாசங்களாகும். மகாபாரதம் இராமாயணத்தைவிடப் பெரியது. அதில் சுமார் முப்பதாயிரம் (30,000) பாடல்கள் உள்ளன. வியாச மகரிசி அவர்களால் மகாபாரதம் எழுதப்பட்டது. இந்நூல் எழுந்த கால எல்லையைக் கணக்கிட்டுக் கூறமுடியாது. ஆனாலும் மகாபாரதம் கி.மு. 1,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலென்று சிலர் கருத்துரைப்பர். வியாசர் பாரதத்தைத் தழுவித் தமிழில் முதன் முதலில் எழுந்த காப்பியம் வில்லிபுத்தாழ்வாரால் இயற்றப்பட்ட வில்லி பாரதம் ஆகும். இதையடுத்து, "நல்லாபிள்ளை பாரதம், பாரதியாரின் "பாஞ்சாலி சபதம்", மூதறிஞர் ராஜாஜியின் "வியாசர் விருந்து", பல்கலை அறிஞர் "சோ" அவர்களின் "மஹாபாரதம் பேசுகிறது", திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் "மகாபாரதம்", அறிஞர்

அ. லெ. நடராசன் அவர்களின் "மகாபாரதம்", சுவாமி சித்பவானந்தர் அவர்களின் "மகாபாரதம்", பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் அவர்களின் "மகாபாரதம் உரைநடையில்" ஆகிய நூல்களும் எழுந்தன.

சகோதரர்களான கௌரவர் குடும்பத்துக்கும், பாண்டவர் குடும்பத்துக்கும் இடையில் தோன்றிய குடும்பப் பிரச்சினைகள் பெரும் யுத்தமாக உருக்கொண்டு பதினெட்டு நாட்கள் மகாபாரதப் போர் நடந்தது. அப்போரில் பதினெட்டு அக்ரோணிப் படைவீரர்கள் (முப்பத்தொன்பது இலட்சத்து முப்பத்தாறாயிரத்து அறுநூறு — 39,36,600) பங்கேற்று, அதில் பத்துப் பேர் தவிர மற்றைய அனைவரும் இறந்துபட்டனர். இறுதியாகப் பாண்டவர்கள் வெற்றி பெற்றுத் தருமர் முடிசூடி அத்தினாபுரத்தைத் தன் சகோதரரான பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோருடன் ஆட்சிபுரிந்துவந்தான். அத்தினாபுரத்து மக்களும் மகிழ்ச்சியில் மூழ்கி இன்புற்று வாழ்ந்துவந்தனர்.

மகாபாரதத்தில் பிரதீபமன்னன், சந்தனு, பீஷ்மர், சித்திராங்கதன், விசித்திரவீரியன், துருபதன், திருதராட்டிரன், பாண்டு, விதுரர், துர்வாச மகரிஷி, வியாசர், கர்ணன், தருமர், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், துரியோதனன், துச்சாதனன், அபிமன்யு, துரோணர், அசுவத்தாமன், சகுனி, சல்லியன், சஞ்சயன் ஆகிய அரசர்களும், கங்காதேவி, சத்தியவதி, அம்பை, அம்பிகை, அம்பாலிகை, காந்தாரி, குந்தி, மாத்ரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை ஆகிய அரச மகளிரும் அதிகம் பேசப்படும் பாத்திரங்களை வகித்துள்ளனர்.

இனி மகாபாரதத்தில் மகளிர் வகித்த பாத்திரங்களும், அவற்றில் அவர்கள் நின்று ஆற்றிய நற்பணிகளும், அதனால் அரச குலம் எய்திய சிறப்பு நிலைகளையும் காண்போம்.

## கங்காதேவி

அன்றொரு நாள் சந்தனு மன்னன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்ற பொழுது கங்காதேவி என்ற பெண்ணைப் பார்த்துக் காதல்

கொண்டு அவளை மணக்க விரும்பினான். அவளும் சில நிபந்தனைகளுடன் அதற்கு உடன்பட்டாள். "என்னைப் பற்றி ஒன்றும் கேட்கக் கூடாது, என் செயலில் தலையிடக்கூடாது" என்பதுதான் அவளின் நிபந்தனைகள். அவள்மேல் மோகம் கொண்ட சந்தனு நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டான். மன்னன் அவளைத் தேரில் ஏற்றிக் கொண்டு அத்தினாபுரத்தை அடைந்தான். நல்லதொரு நாளில் அவர்கள் திருமணம் நடந்தேறியது. ஆண்டுகள் பல கடந்தன. கங்காதேவி கருவுற்றுக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்து உடனே அக் குழந்தையைக் கங்கையில் வீசியெறிந்து கொன்றுவிட்டாள். சந்தனு இதைக் கண்டு நிபந்தனைப்படி ஒன்றும் பேசாதிருந்துவிட்டான். இவ்வாறு ஏழு குழந்தைகளையும் கொன்றாள். எட்டாவது குழந்தையையும் கங்கையில் எறிய முற்பட்ட பொழுது "இக் குழந்தையையாவது கொல்லாதே" என்று கதறி அழுதான் சந்தனு. "வேந்தே! இக் குழந்தையை நான் கொல்ல மாட்டேன். இனி நான் உம்முடன் வாழவும் மாட்டேன். நான் ஜன்கு மகரிஷியின் மகள். தேவர்களுக்கு உதவிபுரியவே நான் இந்நாள் வரை உன்னுடன் வாழ்ந்தேன். நமக்குப் பிறந்த எட்டுக் குழந்தை களும் புகழ் வாய்ந்த எட்டு வசுக்கள். இவர்கள் வசிஷ்டரின் சாபத்தால் எங்களுக்கு வந்து பிறந்தனர். அவர்களுக்கும் சாப விமோசனம் கிடைத்துவிட்டது. இக் குழந்தையை நான் என்னுடன் அழைத்துச் சென்று, அவன் பெரியவன் ஆனதும் தங்களிடம் ஒப்படைப்பேன். தாங்கள் என்னை நினைக்கும்போது உங்கள்முன் வந்து நிற்பேன்." என்று கூறிவிட்டு மறைந்துவிட்டாள்.

சந்தனு மன்னன் தன் மனைவியையும், மகனையும் நினைந்து முப்பத்தாறு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்துவந்தான். அன்றொரு நாள் அம்பு செலுத்தும் வியப்புக்குரிய ஒரு வாலிபனைக் கண்டு திகைத்து நிற்கையில் அவ்வாலிபன் திடீரென மறைந்துவிட்டான். உடனே தன் கங்காதேவியை அழைத்தான். கங்காதேவி ஒரு வாலிபனுடன் சந்தனு முன் தோன்றி "மன்னா இவன்தான் உன் எட்டாவது மகன். இவனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். இவன் தேவேந்திரனுக்கு இணையான வன். இவன் பெயர் தேவவிரதன். இவ்வீரனை அரண்மனைக்கு அழைத்துச் செல்லவும்" என்று கூறி மறைந்துவிட்டாள். சந்தனு மன்னன்

தன் மகனை அழைத்துக்கொண்டு நகரத்துக்குத் திரும்பித் தேவவிரதனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டித் தன் மகனுடன் நான்கு ஆண்டுகள் இன்புற்றுக் கழித்தான்.

## சத்தியவதி

சந்தனு மன்னன் அன்று ஒரு நாள் யமுனைக் கடற்கரைக்குச் சென்ற பொழுது சத்தியவதி எனனும் பெயருடைய ஓர் அழகிய செம்படவப் பெண்ணைக் (சத்தியவதி செம்படவ அரசனால் வளர்க்கப்படுபவள்) கண்டு மயங்கி அப் பெண்ணின் தந்தையிடம் சென்று சத்தியவதியைத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறினான். அதற்குச் செம்படவ அரசன் "என் மகளுக்குப் பிறக்கும் மகனுக்கே பட்டாபிசேகம் செய்து நாட்டை ஆளவேண்டும். வேறொருவருக்கும் அரசுரிமை கிடையாது." என்று ஒரு நிபந்தனை விதித்தான். இதற்குச் சந்தனு உடன்படாது அரண்மனை நோக்கிச் சென்றுவிட்டான். இதன்பின் சந்தனு கவலையில் ஆழ்ந்து சிந்தித்த வண்ணமிருந்ததை அவதானித்த தேவவிரதன் தேரோட்டியிடம் விசாரித்து முழு விவரத்தையும் அறிந்து கொண்டான். உடனே தேவவிரதன் செம்படவ அரசன் வீடு சென்று "செம்படவ அரசே நான் சற்றுமுன் அரசுரிமையைத் துறந்து விட்டேன். இன்றுமுதல் நான் பிரமச்சரிய விரதத்தை மேற்கொள் கிறேன். என்னுயிர் உள்ளவரை புத்திர உற்பத்தி செய்யேன். இது சத்தியம். எனவே உம் மகளை என் தந்தைக்குத் திருமணம் செய்து கொடு" என்று கேட்கச் செம்படவ அரசன் மிகுந்த மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தான்.

தேவவிரதனின் சபதத்தைக் கேட்டு அனைவரும் வியப்புற்றனர். இது செயற்கரிய வீர சபதம் என்றும் புகழ்ந்தனர். தேவவிரதனைப் "பீஷ்மர் (அஞ்சத்தக்க சபதத்தை மேற்கொண்டவர்) என வாழ்த்தினர். அன்றிலிருந்து தேவவிரதன் பீஷ்மர் ஆனார். சந்தனு மன்னன் முறைப்படி சத்தியவதியைத் திருமணம் செய்துகொண்டான். சந்தனுவுக்கு முதலில் "சித்திராங்கதன்" என்னும் மகன் பிறந்தான். சில ஆண்டுகளின்பின் "விசித்திரவீரியன்" என்னும் இரண்டாவது மகன் பிறந்தான்.

விசித்திரவீரியன் சிறுவனாயிருக்கும்போதே சந்தனு இறந்துவிட்டான். பீஷ்மர் சித்திராங்கதனை அரசனாக்கினார். பெரு வீரனான சித்திராங் கதன் நாட்டைச் சிறப்புற ஆண்டு வந்தான். இவன் கந்தர்வநாட்டு அரசனுடன் போர் தொடுத்து மாண்டுவிட்டான். பீஷ்மர் விசித்திர வீரியனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்து, அவனுக்கு உதவி நின்றார். ஆண்டுகள் பல கடந்தன.

விசித்திரவீரியன் வாலிபனானான். அவனுக்குத் திருமணம் செய்து வைக்க பீஷ்மர் விரும்பினார். அப்பொழுது காசி நாட்டு வேந்தன் தன் கன்னியர் அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூவருக்கும் சுயம்வரம் நடாத்துவதை அறிந்தார். சத்தியவதியின் அனுமதியுடன் காசியை அடைந்தார் பீஷ்மர். சுயம்வர மண்டபத்தில் கன்னியர் மூவரும், அரசர்களும் இருந்தனர். பீஷ்மர் "அரசர்களே மணங்களில் எட்டு வகை உண்டு. அந்த எட்டு வகையில் பெண்ணைப் பலாத்காரமாகக் கவர்ந்து திருமணம் செய்வதை "இராக்கதம்" என்றும், அதுவே சிறந்ததெனவும் கூறுவர். அதன்படி நான் இக்கன்னியர்களை அழைத்துச் செல்லவுள்ளேன். உங்களுக்கு ஆற்றல் இருந்தால் தடுத்து நிறுத்துங்கள், பார்க்கலாம்." என்று கூறிவிட்டுக் கன்னியர் மூவரையும் தேரில் ஏற்றிக்கொண்டு விரைந்து சென்றார். வீற்றிருந்த அரசர்கள் பீஷ்மரைத் தடுத்துப் போர்புரிந்து தோல்வியடைந்து தத்தம் நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். பீஷ்மர் கன்னியர் மூவருடனும் அத்தினாபுரம் சென்றடைந்தார். சில நாட்கள் சென்றபின் அம்பை பீஷ்மரை விட்டு வெளியேறிவிட்டாள். பீஷ்மர் விசித்திரவீரியனுக்கு அம்பிகை, அம்பாலிகை ஆகிய இருவரையும் திருமணம் செய்து வைத்தார். விசித்திரவீரியன் தன் மனைவியர் இருவருடனும் ஏழு ஆண்டுகள் வாழ்ந்தபின் காசநோய் பிடித்து மாண்டுவிட்டான். விசித்திரவீரியன் மக்கட் பேறின்றி இறந்துவிட்டானே என்று பீஷ்மரும், சத்தியவதியும் வருத்தப்பட்டனர்.

சத்தியவதி பீஷ்மரை நோக்கி "மகனே நான் கன்னியாயிருந்த பொழுது பராசர முனிவர் என்னுடன் உறவு கொண்டு ஓர் ஆண் குழந்தையைத் தந்தார். நான் மீண்டும் கன்னியானேன். அவர் தன்

மகனுடன் பிரிந்து சென்றுவிட்டார். அந்த மகனின் பெயர் வியாசன். வேதங்கள் யாவும் தெரிந்த சக்தி வாய்ந்த மகரிஷியாவான். நான் நினைத்தால் என்முன் வந்து நிற்பான். நான் சொல்வதையும் கேட்பான். எனவே நாங்கள் கட்டளையிட்டால் அவன் தன் சகோதரன் மனைவியர்க்குப் புத்திர பாக்கியம் கொடுப்பான். உன் எண்ணம் யாது?" எனக் கேட்டாள். அதற்கு பீஷ்மர் மிக்க மகிழ்ச்சியுடன் சம்மதம் தெரிவித்தார். சத்தியவதி மகனை நினைத்ததும் வியாசர் தோன்றினார். சத்தியவதி முழு விவரத்தையும் வியாசருக்குச் சொல்ல அவரும் ஒத்துக்கொண்டார். வியாசர் மூலமாக அம்பிகை, அம்பாலிகை, பணிப்பெண் ஆகிய மூவருக்கும் முறையே திருதராட்டிரன், பாண்டு, விதுரர் ஆகியோர் பிறந்தனர். அவர்கள் சிறுவராக இருந்தபடியால் தந்தை நிலையிலிருந்து பீஷ்மர் அவர்களைக் கவனித்துவந்தார். சத்தியவதி தன் இறுதிக் காலத்தைத் தவத்தில் ஈடுபடக் காட்டுக்குச் சென்றுவிட்டாள்.

## அம்பை

பீஷ்மர் காசி நாட்டிலிருந்து கவர்ந்து கொண்டுவந்த அரசிகள் மூவரில் மூத்தவள் அம்பை ஆவாள். அவள் பீஷ்மரிடம் "நான் சௌபல நாட்டு மன்னன் சால்வன் மேல் காதல் கொண்டுள்ளேன். அவனையே திருமணம் செய்யவுள்ளேன்." என்றுரைத்தாள். பீஷ்மரும் நீ அவனை விரும்பினால் இப்பொழுதே அவனிடம் செல்லலாமென்றார். அம்பை சால்வனை நாடித் தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்டாள். அதற்குச் சால்வன் "அம்பையே நாம் காதலித்தது உண்மைதான். மன்னர் பலர் கூடியிருந்த சபையிலிருந்து பீஷ்மர் உன்னைக் கவர்ந்து சென்றார். அவரையே நீ திருமணம் செய்துகொள்." என்று கூறி அவளைத் திருமணம் செய்ய மறுத்துவிட்டான். அம்பை கலங்கிய மனத்துடன் அத்தினாபுரத்துக்கே வந்துவிட்டாள். பீஷ்மர் பிரமசரிய விரதம் கடைப்பிடிக்கிறேன் என்று கூறிவிட்டார். அம்பை சால்வனிடமும் பீஷ்மரிடமும் மாறிமாறிச் சென்று முறையிட்டு ஆறு ஆண்டுகளைக் கழித்தாள். விரக்தியுடன் இமயமலைச் சாரலையடைந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடும் தவம்புரிந்தாள்.

முருகக் கடவுள் அவள்முன் தோன்றி **"இனி உன் துன்பங்கள் அகன்றுவிடும். இத் தாமரை மாலையை அணிபவனால் பீஷ்மர் இறந்துவிடுவார்."** என்று கூறிச் சென்றார். அம்பை பல அரசர்களை நாடி **"இந்த மாலையை அணிந்து கொள்பவர் பீஷ்மரைக் கொல்லும் வல்லமை பெறுவர். பீஷ்மரைக் கொல்பவரை நான் மணந்து கொள்வேன்."** என்று கூறினாள். பீஷ்மரின் ஆற்றலை அறிந்த மன்னர்கள் எவரும் மாலையை வாங்க முன் வரவில்லை. அதன்பின் அவள் பாஞ்சால நாட்டு அரசனான **துருபதன்** என்பவனிடம் சென்று தன் கதையைக் கூறித் தனக்கு அடைக்கலம் தருமாறு வேண்டி நின்றாள். பாஞ்சால மன்னனும் அவள் கோரிக்கைக்கு இணங்கவில்லை. அம்பை அந்த மாலையை மன்னனின் மாளிகையில் தொங்கவிட்டு ஓடிச்சென்று விட்டாள். துருபத மன்னன் அந்த மாலையை எவரும் எடுக்காது காத்து வந்தான்.

அம்பை முனிவர்கள் தவம் இயற்றும் ஒரு காட்டை அடைந்து தனக்கு நடந்த அவலங்களைத் தவத்தோருக்குக் கூறினாள். அவர்கள் **பரசுராமரை** அணுகும்படி கூறினர். அம்பை பரசுராமரிடம் சென்று தனக்கு நடந்தவற்றைக் கூறினாள். பரசுராமர் பீஷ்மரைச் சந்தித்துக் கதைத்தபொழுது இருவருக்குமிடையில் போர் மூண்டு வெற்றி தோல்வி இன்றி இறுதியில் பரசுராமர் போரிடாது விலகிவிட்டார். பின்னர் அம்பை சிவனை நோக்கிக் கடும்தவம் செய்தாள். சிவன் அவள்முன் தோன்றி **"பெண்ணே இப்பிறவியில் உன் இலட்சியம் நடைபெறாது. அடுத்த பிறவியில் அது ஈடேறும். பீஷ்மரும் இறந்துவிடுவார்."** என்று கூறிச் சென்றார். மறுபிறவி எடுப்பதற்காக அம்பை தீயில் விழுந்து மாண்டு, துருபதன் மகளாகச் **சிகண்டி** என்ற பெயரில் மறுபிறவி எடுத்தாள்.

ஒரு நாள் அரண்மனையில் தொங்கிய மாலையை எடுத்துத் தன் கழுத்தில் போட்டுக்கொண்டாள். இதை அறிந்த தந்தை துருபதன், பீஷ்மரின் பகைக்குப் பயந்து சிகண்டியை வீட்டை விட்டு வெளியே அனுப்பி வைத்தார். இதன்பின் சிகண்டி தவத்தில் ஈடுபட்டாள். **"இஷிகர்"** என்னும் முனிவருக்குப் பணிவிடை செய்து வந்தாள். அம் முனிவர் சிகண்டியைப் பார்த்து **"கங்கை ஆற்றின் உற்பத்தியிடத்தில் "விபஜனம்" என்னும்**

விழா நடைபெறவுள்ளது. அங்கு "தும்புரு" என்னும் கந்தருவ அரசனுக்குப் பணிவிடை செய். உனக்கு நன்மை வரும். உன் எண்ணமும் நிறைவேறும்." என்று கூறிச் சென்றார். சிகண்டியும் அவ்விழாவுக்குச் சென்றாள்.

அங்குச் சில கந்தர்வர் இருந்தனர். அவர்களில் ஒருவன் சிகண்டியை நோக்கி "நாம் இருவரும் நமது உருவத்தை மாற்றிக்கொள்ளலாமா? அதாவது நீ எனக்கு உன் பெண் வடிவத்தைக் கொடு, நான் உனக்கு என் ஆண் வடிவத்தைத் தருகிறேன்." என்றான். சிகண்டியும் அதற்குச் சம்மதித்து ஆணாக மாறிவிட்டாள். ஆனால் தன் பெயரை மாற்றிக் கொள்ளவில்லை. கந்தர்வனும் பெண் வடிவம் தாங்கிச் சென்றுவிட்டான். ஆணாக மாறிய சிகண்டி பல போர்ப் பயிற்சிகள் பெற்றுப் புகழுடன் வாழ்ந்தான். பின் பாஞ்சாலம் சென்று தன் தந்தையை அணுகி "தாங்கள் இனி பீஷ்மருக்குப் பயப்பட வேண்டாம்." என்று கூறி நடந்தவற்றை எடுத்துரைக்க, துருபதனும் சந்தோசப்பட்டு இருந்தான். பதினெட்டாம் நாள் நடந்த போரில் நள்ளிரவில் பாண்டவர் பாசறையில் தூங்கிக் கொண்டிருந்த சிகண்டியை அசுவத்தாமன் கொன்றுவிட்டான்.

## காந்தாரி

காந்தார நாட்டு மன்னன் சுலபனுடைய மகளான காந்தாரியைத் திருதராட்டிரனுக்கு மணம் முடித்து வைத்தார் பீஷ்மர். திருதராட்டிரன் கண் பார்வையற்றவன். கணவன் பிறவிக் குருடன் என்ற காரணத்தால் தானும் தன் கண்களைத் துணியால் இறுகக் கட்டிக்கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தாள். குந்திக்குக் குழந்தை பிறந்த செய்தியைக் கேள்விப்பட்டாள். அப்பொழுது காந்தாரி கருத்தரித்திருந்தாள். குந்திக்குக் குழந்தை பிறந்துள்ளதால் காந்தாரி பொறாமை கொண்டாள். ஆத்திரம் கொண்டு தன் அடிவயிற்றில் அடித்ததால் மாமிசப் பிண்டம் வெளிப்பட்டது. வியாசர் அருளால் அதிலிருந்து நாளாந்தம் ஒருவர் வீதம் நூறு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். இவ்வாறு காந்தாரி நூற்றொரு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். இவர்களில் மூத்தவன் துரியோதனன். இவன் பேராசையும், பிடிவாதமும் கொண்ட மூர்க்கன்.

இரண்டாவதாகப் பிறந்த **துச்சாதனன்** மிகக் கொடியவன். கடைசித் தம்பி **விகர்ணன்** ஒருவன் மட்டுமே நீதி, நியாயங்களுடன் நின்றவன்.

நடந்தேறிய போரில் நூறு பிள்ளைகளை இழந்து தவித்துக் கொண்டிருந்த திருதராட்டிரனையும், காந்தாரியையும் நாடாளும் மன்னனான தருமர் ஆறுதல் கூறி அவர்களைப் பதினைந்து ஆண்டுகள் குறையேதுமின்றிப் பாதுகாத்து வந்தான். எனினும் அவர்கள் தங்களின் கடைசிக் காலத்தைக் காடு ஏகித் தவம்புரிந்து வாழ விருப்புடையோம் என வேண்டி நின்றனர். தருமர் எவ்வளவு கூறியும் அதை அவர்கள் கேட்கவில்லை. **திருதராட்டிரனையும், காந்தாரியையும்** பின்தொடர்ந்து **குந்தியும், விதுரரும், சஞ்சயனும்** கானகம் சென்றனர். அவர்கள் அங்கு மூன்றாண்டுகள் துறவு, தியானம், தவம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர். அன்றொருநாள் காட்டுத் தீ எங்கும் பரவியபொழுது தியானத்தில் இருந்த **திருதராட்டிரன்**, காந்தாரி, குந்தி ஆகிய மூவரும் மாண்டனர். அன்றைய தினம் விதுரரும், சஞ்சயனும் தியானத்தில் ஈடுபட இமய மலையை நோக்கிச் சென்றதால் அவர்கள் இத் தீயிலிருந்து தப்பித்துள்ளனர்.

## குந்தி - மாத்ரி

யது வம்சத்தில் சூரசேனன் என்னும் மன்னனுக்குப் பிரிதா என்னும் மகளும், **வசுதேவன்** என்னும் மகனும் பிறந்தனர். இந்த வசுதேவன் கிருஷ்ணனுக்குத் தந்தையாவான். சூரசேனன் தன் மகள் பிரிதாவைக் **குந்திபோஜனுக்கு** வளர்ப்பு மகளாகக் கொடுத்தான். இதனால் பிரிதாவைக் **குந்தி** என்ற பெயரால் அழைத்தனர். ஒரு சமயம் **துர்வாச மகரிஷிக்குப்** பணிவிடை செய்யக் குந்திக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவள் பணிவிடையில் மகிழ்ச்சியுற்ற மகரிஷி குந்திக்கு ஒரு மந்திரத்தை அருளினார். அந்த மந்திரத்தை உச்சரித்தால் நினைத்த தெய்வம் தோன்றி நினைத்ததைக் கொடுக்கும். ஒருநாள் மந்திரத்தைச் சோதிக்க விரும்பிச் சூரியனை வேண்டி அம் மந்திரத்தை ஓதியதும் சூரியன் தோன்றி அவளுக்கு ஒரு மகப்பேறு கொடுத்தான். அதனால் அச்சமடைந்த குந்தி அக் குழந்தையை ஒரு பெட்டிக்குள் வைத்துக் கங்கை ஆற்றில் விட்டதும்

குந்தி மீண்டும் கன்னியானாள். இந்த இரகசியம் எவருக்கும் தெரியாது காப்பற்றிக்கொண்டாள் குந்தி.

கங்கையில் விட்ட குழந்தை பின்னாளில் **கர்ணன்** எனப் புகழ் பெற்றான். நடந்தேறிய சுயம்வரத்தில் குந்தி அத்தினாபுர மன்னனான பாண்டுவுக்கு மாலை சூட்டி மனைவியானாள். சில நாட்களின்பின் மத்திர நாட்டு மன்னன் மகளும் சல்லியனின் சகோதரியுமான **மாத்ரி** என்பவள் பாண்டுவுக்கு இரண்டாம் மனைவியானாள். பாண்டு மன்னன் வேட்டை ஆடுவதில் ஆர்வம் கொண்டவன். அன்றொருநாள் பரிவாரங்களுடனும் மனைவியருடனும் காடு சென்று வேட்டையாடிய பொழுது புணர்ச்சியில் உள்ள இரு மான்கள் மீது அம்பு செலுத்தினான். ஆண் மானாக இருந்த **கிந்தமர்** என்னும் முனிவர் பாண்டுவை நோக்கி **"நீ மனைவியருடன் கூடும்போது இறக்கக் கடவது"** என்று சாபமிட்டுச் சென்றார். இதனால் பாண்டு மகப்பேறு இல்லாமற் போகுமே என்று மனங் கலங்கித் தவித்தான்.

பாண்டு மன்னனின் நிலையை அவதானித்த குந்தி தன் இளமைப் பராயத்தில் துர்வாசர் அருளிய மந்திரத்தைப் பற்றிக் கூறினாள். அந்த மந்திரத்தால் மகப்பேறு கிடைக்கும் என்றும் கூறினாள். இதனால் பாண்டு மிக்க சந்தோசமடைந்தான். ஒரு நல்ல தினத்தில் **தருமதேவதையை** நினைந்து அந்த மந்திரத்தை உச்சரித்தாள் குந்தி. அதனால் அவர் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவனுக்கு **யுதிஷ்டிரன் (தருமர்)** எனப் பெயர் சூட்டினர். அதன்பின் **வாயுபகவானை** நினைத்துப் **பீமன்** பிறந்தான். இதையடுத்துத் **தேவேந்திரன்** அருளால் **அருச்சுனனைப்** பெற்றெடுத்தாள் குந்தி. பின்னர் பாண்டுவின் விருப்புக்கேற்ப மந்திரத்தை **மாத்ரிக்கு** உபதேசித்தாள். மாத்ரியும் அந்த மந்திரத்தை இரட்டையர்களான **அசுவினித் தேவர்களை** நினைந்து உச்சரிக்க **நகுலன், சகாதேவன்** ஆகிய இருவரும் பிறந்தனர். இவ்வண்ணம் பாண்டு மன்னனுக்கு ஐந்து புதல்வர்கள் வந்துதித்தனர். பாண்டு மன்னன் மனைவியர் மக்களுடன் சிலஆண்டுகள் காட்டிலேயே வாழ்ந்துவந்தான். அன்றொரு நாள் பாண்டு காம இச்சையால் மாத்ரியைக் கட்டியணைத்தான். அக்கணமே ரிஷியின் சாபத்தால் அவன் உயிர் துறந்தான். மாத்ரி **"மூதானந்த நிலையில்"**

நின்று பாண்டுவுடன் உடன் உயிர் நீத்தாள். ஆனால் குந்தி "தாபத நிலையில்" நின்று உடன்கட்டையேறாது கைம்மைபூண்டு தன் ஐந்து புதல்வர்களையும் காப்பாற்றி வளர்த்துவந்தாள். மேலும் பஞ்ச கன்னியர்களில் குந்தியும் ஒருத்தியாவாள்.

பாரதப்போரில் கர்ணன் மாண்டபொழுது, அவன் முன் கூறி வைத்த இரகசியக் கூற்றின் படியும், குந்தி அவன் தலையைத் தன் மடிமேல் வைத்து "மகனே மகனே" என்று அழுது புலம்பித் தன் மற்றைய ஐந்து புதல்வர்களையும் அழைத்து "இவன்தான் உங்கள் அண்ணன். இதுவரை இதை நான் உங்களுக்குச் சொல்லாததற்கு என்னை மன்னித்துக் கொள்ளவும்" என்று கூறித் தான் இதுவரை கட்டிக் காத்த இரகசியத்தைப் பலரும் அறியப்படுத்தினாள். இதை கேட்ட பாண்டவர்கள் "அண்ணனைக் கொன்றுவிட்டோமே" எனக் கதறி அழுதனர். குந்தி தன் இறுதிக் காலத்தில் காடேகித் தவத்தில் ஈடுபட்டிருந்தாள். ஒருநாள் அவள் தவம் செய்துகொண்டிருக்கையில் காட்டுத் தீ பரவியதில் மாண்டுவிட்டாள்.

## திரெளபதி —— சுபத்திரை

பாஞ்சால நாட்டு மன்னனான துருபதன் மகள்தான் திரெளபதி. அவளுக்குச் சுயம்வரம் செய்ய ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்தணர் வேடத்துடன் ஏகசக்கர நகரத்தில் தங்கியிருந்த பாண்டவர் களுக்கு இச் செய்தி கிட்டியது. குந்தியும் பாண்டவர்களும் பாஞ்சாலம் சென்று ஒரு குயவன் வீட்டில் தங்கியிருந்தனர். சுயம்வரத்தன்று பல நாட்டு மன்னர்கள் அரங்கின் உள்ளே தமக்குரிய இருக்கைகளில் அமர்ந்தனர். பாண்டவர்கள் அந்தணர்க்குரிய இடத்தில் சென்று பரவலாக அமர்ந்தனர். திரெளபதி மாலையுடன் வந்து நின்றாள். சுயம்வர நிபந்தனைகளை அவள் சகோதரனான திட்டத்துய்மன் "மன்னர்களே இதோ வில்லும் ஐந்து அம்புகளும் இருக்கின்றன. துவாரத்துடன் கூடிய சக்கரம் மேலே சுழன்று கொண்டிருக்கின்றது. அதற்கு மேலே மீன் வடிவில் ஓர் இலக்கு இருக்கிறது. அதன் நிழல் கீழே உள்ள தண்ணீரில் தெரிகிறது. இந்த நிழலை நோக்கிக் குறிபார்த்து மேலே உள்ள

மீன் இலக்கைச் சுழலும் சக்கரத்தின் துவாரத்தின் ஊடாக அம்பைச் செலுத்தி வீழ்த்த வேண்டும். அவ்வண்ணம் வீழ்த்துபவருக்கு என் தங்கை மனைவியாவாள்" என்று கூறினான். நிபந்தனைகளைக் கேட்ட சிலர் அதிர்ச்சியுற்றனர், சிலர் முயன்று பார்த்துத் தோற்றனர். சிசுபாலன், சல்லியன், ஜராசந்தன், கர்ணன், துரியோதனன் ஆகியோரும் முயன்று தோற்றுப் பின்வாங்கினர்.

மன்னர்கள் எவரும் வெற்றியடையாததைக் கண்ட திட்டத்துய்மன் போட்டி முறைகளைத் தளர்த்தி "சுயம்வரப் போட்டியில் மன்னர்கள் மட்டுமல்ல யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம்" என்று அறிவித்தான். உடனே அந்தணர் கூட்டத்திலிருந்து ஒரு வாலிபன் எழுந்து வந்து வில்லை எடுத்து, நாண் ஏற்றி, அம்பு தொடுத்து, மீன் வடிவ இலக்கைச் சுலபமாகக் கீழே வீழ்தினான். திரௌபதி வந்து அவனுக்கு மாலை சூட்டி அவனுக்கருகில் நாணத்துடன் நின்றாள். வெற்றிக் கனியான திரௌபதியுடன் பாண்டவர்கள் குயவன் வீட்டை அடைந்தனர். தாங்கள் கொண்டுவந்த கனி பற்றிய செய்தியை வீட்டின் உள்ளே இருந்த குந்திக்குக் கேட்குமாறு கூறினர். அங்கிருந்தவாறே குந்தி "நீங்கள் ஐவரும் அக்கனியைப் பகிர்ந்து உண்ணுங்கள்" என்று கூறினாள். வெளியே வந்து திரௌபதி அருச்சுனன் அருகில் நிற்பதைக் கண்டு திகைத்துப் பெரிதும் வருந்தினாள். தாயின் சொல்லைக் கருத்திற் கொண்டும், வியாசர் கூற்றை ஏற்றும் துருபதன் திரௌபதியைப் பாண்டவர் ஐவருக்கும் திருமணம் செய்து வைத்தான். பீஷ்மர், விதுரர் கருத்துக்கேற்ப பாண்டவர்க்குப் பாதி இராச்சியம் கொடுக்கச் சம்மதித்தான் திருதராட்டிரன். குந்தியும், மைந்தர்களும், திரௌபதியும் அத்தினாபுரம் வந்தனர். தருமருக்கு முடி சூட்டினான் திருதராட்டிரன். காண்டவப் பிரஸ்தம் பாண்டவர்க்கு ஒதுக்கப்பட்டது. பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தம் என்ற நகரத்திலிருந்து அவர்களுக்குரிய நாட்டை ஆண்டுவந்தனர்.

அருச்சுனன் ஓர் ஆண்டுத் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு பல தலங்களுக்குச் சென்று கடைசியாகத் துவாரகையில் உள்ள பிரபாசா என்னும் தலத்தையடைந்தான். அவனுக்குக் கிருஷ்ணரின் சகோதரி சுபத்திரையை அடைய வேண்டுமென்ற ஆசை பல நாட்களாக இருந்தது.

இதற்குப் பலராமர் தடையாயிருந்தார். கிருஷ்ணர் உதவியுடன் அருச்சுனன் துறவுக்கோலம் பூண்டு பலராமரிடம் செல்ல, அவர் துறவியை வணங்கித் தன் அரண்மனைக்கு அருகிலுள்ள ஆசிரமத்தில் தங்கி இருக்குமாறும், சுபத்திரையை அத்துறவிக்குப் பணிவிடை புரியுமாறும் வேண்டிக்கொண்டார். சில நாட்களில் தான் பணிவிடை செய்யும் துறவி அருச்சுனனே என்று சுபத்திரை தெரிந்துகொண்டாள். பின்பு கிருஷ்ணன் முன்னின்று **அருச்சுனன்-சுபத்திரை** ஆகிய இருவருக்கும் திருமணம் நடந்தேறியது. இருவரும் இந்திரப்பிரஸ்தம் திரும்பினர்.

சிறுகாலம் செல்ல, சுபத்திரை **அபிமன்யு** என்னும் உலகப் புகழ் வாய்ந்த மாவீரனைப் பெற்றாள். நாளடைவில் திட்டமிட்டபடி அபிமன்யுவுக்கும் விராட வேந்தன் மகள் **உத்தரைக்கும்** திருமணம் இனிதே நிறைவேறியது. திரௌபதி தன் ஐந்து கணவர்கள் மூலம் ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். திரௌபதி பஞ்ச கன்னியர்களில் ஒருத்தியாவாள். பாரதப்போர் முடிந்து முப்பத்தாறு (36) ஆண்டுகள் சென்றபின், சுவர்க்கலோகம் செல்வதற்குப் **பாண்டவர்களும், திரௌபதியும்** மரவுரி தரித்து, உண்ணா விரதம் மேற்கொண்டு, புண்ணிய நதியில் நீராடி, புனிதத் தலங்களைத் தரிசித்து, இமயமலையைக் கண்டு, மேருமலையைத் தரிசித்து, சுவர்க்கத்தை நோக்கிப் பயணம் தொடர்கையில் **திரௌபதி** சோர்ந்து விழுந்து இறந்துபோனாள்.

## நிறைவாக

**"சத்தியம் மிக உயர்ந்த தருமம்"**, "தருமம் வெற்றி பெறும்" என்ற ஓர் உண்மைத் தத்துவத்தை மகாபாரதம் உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது. தருமம் இரண்டு மனித உருவம் தாங்கிச் செயற்பட்டதையும் மகாபாரதத்தில் காண்கின்றோம். ஒருவர் **தருமர்**, மற்றவர் **விதுரர்.** அறவுரை கூறி நின்றார் விதுரர். அதேநேரம் தருமர் அறத்தைப் பேணிக் காக்க ஆயுதத்தை நாடினார். அதில் இருவரும் வென்றனர்.

பார்வதி, பரமசிவன், இந்திரன், வாயுபகவான், தருமதேவதை, முருகக் கடவுள், சூரியன், அசுவினித்தேவர்கள், சப்தரிஷிகள்,

முனிவர்கள், மகரிஷிகள், நாரதர், வியாசர், துர்வாச மகரிஷி, பராசர முனிவர், கண்ணன், பலராமர், அகஸ்தியர், சத்தியபாமா, அனுமன் ஆகிய மேலோர் அனைவரும் மகாபாரதம் முழுவதும் உலாவித் திரிந்து தத்தமது ஞானத் தத்துவங்களை வீசிச் சென்றமையால் மகாபாரதம் ஈடிணையற்ற இதிகாசமாக மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

மகாபாரதத்தில் நட்பு, ஞானம், சத்தியம், தவம், தானம், ஆசை, தியாகம், அறியாமை, விரோதம், சுவர்க்கம், நரகம், பிறப்பு, காதல், திருமணம், இறப்பு, போர், அழிவு, பணிவு, அறிவு, சுத்தம், தூய்மை, பரிசுத்தம், கல்வி, அறம், பொருள், இன்பம், முக்தி, காலத்தின் வலிமை, காலத்தின் நியதி, வினையின் பயன், பாவம், புண்ணியம், இன்சொல்லின் சிறப்பு, உபவாசத்தின் உயர்ச்சி, குதிரை யாகம், இராஜசூய யாகம், கர்மவினை, சாபம், துறவு வாழ்க்கை ஆகிய விடயங்கள் பரவலாகப் பேசப்பட்டு அவற்றிற்குரிய விடைகளும் காணப்பட்டுள்ளதையும் காண்கின்றோம்.

அறம், மறம் ஆகிய இரு நிலைகளில் நின்றவர்களையும் மகாபாரதம் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. அறநிலையில் சந்தனு, பீஷ்மர், விதுரர், பாண்டு, தருமர், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், துரோணர், துருபதன், பலராமர், கிருஷ்ணன், கங்காதேவி, சத்தியவதி, குந்தி, மாத்ரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை ஆகியோர் நின்று அறங்கூறிப் பேரும் புகழும் பெற்றனர். அதேநேரம் மறநிலையில் திருதராட்டிரன், காந்தாரி, துரியோதனன் ஆகிய தொண்ணூற்றி ஒன்பது சகோதரர்கள், சகுனி, அசுவத்தாமன், கர்ணன் ஆகியோர் மறங்காத்து மாண்டொழிந்தனர்.

குந்தியானவள் ஒரு முனிவரால் அருளிக் கொடுக்கப்பட்ட மந்திரத்தை உச்சரித்ததால் கர்ணன், தருமர், பீமன், அருச்சுனன் ஆகியோர் வந்துதித்தனர். அதன்பின் குந்தி, மாத்ரிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தாள். மாத்ரி அந்த மந்திரத்தை இரட்டையர்களான அசுவினி தேவர்களை நினைந்து உச்சரிக்க நகுலன், சகாதேவர் என்னும் இரட்டையர் பிறந்தனர். இன்னும் வியாசர் மூலமாக அம்பிகை,


அம்பாலிகை, பணிப்பெண் ஆகிய மூவருக்கும் முறையே திருதராட்டிரன், பாண்டு, விதுரர் ஆகியோர் பிறந்தனர். அக்காலத்தில் அரச மகளிர் மந்திரம் உச்சரித்தும், முனிவர்கள் மூலமும் மகப்பேறு பெற்ற அதிசயச் செய்திகளையும் காண்கின்றோம்.

மன்னர் பலதார மணம்புரிவது ஒரு வழக்காக இருந்துள்ளதை மகாபாரதத்தில் காணக்கூடியதாக உள்ளது. சந்தனு மன்னன் கங்காதேவி, சத்தியவதி ஆகிய இருவரையும், விசித்திரவீரிய அரசன் அம்பிகை, அம்பாலிகை ஆகியோரையும், வியாச மகரிஷி அம்பிகை, அம்பாலிகை, பணிப்பெண் ஆகிய மூவரையும், திருதராட்டிர வேந்தன் காந்தாரி, காந்தாரியின் பத்துச் சகோதரிகள் ஆகிய பதினொருவரையும், பாண்டு மன்னன் குந்தி, மாத்ரி ஆகிய இருவரையும், அருச்சுன அரசன் திரௌபதி, சுபத்திரை ஆகிய இருவரையும், பீமன் ஆன அரசன் திரௌபதி, இடும்பி ஆகிய இருவரையும் திருமணம் செய்து கொண்டனர். அக்கால மன்னர்கள் அதிகமாகப் போர் தொடுத்து மடிவதாலும், தத்தமது அரசுக்குப் பல வாரிசுகளை வைத்திருக்க வேண்டியதாலும், அவர்கள் பலதார மணம்புரிந்தனர் போலும்.

மேற்காட்டிய அரசியர்களான கங்காதேவி, சத்தியவதி, அம்பை, அம்பிகை, அம்பாலிகை, காந்தாரி, குந்தி, மாத்ரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை ஆகியோர் தத்தமக்குரிய மன்னர்களுடன் இணைந்து வாழ்ந்து, அரசுப் பரம்பரையை நிலைநாட்ட உதவி நின்று, அரச வாரிசுகளைப் பெற்றுக் கொடுத்து, ஆட்சிப் பொறுப்பிலும் உதவி நின்று, தம் மன்னர்களை அறநெறிக்குட்படுத்தி ஆகிய பெரும் பொறுப்புகளில் ஈடுபட்டுள்ள அரசியர்கள் வாழ்த்திப் போற்றற்குரியோராவர்.

❖❖❖





2

# தொல்காப்பிய மகளிர்

இடைச் சங்க காலத்தில் எழுந்த நூல்களில் "தொல்காப்பியம்" என்ற நூலொன்றைத் தவிர மற்றைய அனைத்து நூல்களும் கடலன்னை யுடன் சங்கமமாகியுள்ளன. எமக்குக் கிடைக்கும் நூல்களில் காலத்தால் மூத்த நூல் தொல்காப்பியம் ஆகும். இதைத் தொல்காப்பியர் (கி.மு.711) எனும் புலவர் யாத்தனர். இது ஓர் இலக்கிய, இலக்கண நூலாகும். "இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலாயிற்று தொல்காப்பியம்" எனக் கூறுவர் நக்கீரனார். அவ்வாறே இன்றும் இந்நூல் விளங்கி வருகின்றது. "நிலந்தரு திருவிற் பாண்டியன்" என்பானின் அரச அவையிலே அதங்கோட்டாசான் முன்பாக அந்நாளில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது எனப் பனம் பாரனாரின் பாயிரம் கூறுகின்றது. மேலும், "தொல்காப்பியம் பண்டைத் தமிழர்களின் தொன்மையையும், நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம் பெருநூல்" என்பது டாக்டர் மு. வரதராசனாரின்

கூற்றாகும். இனி மகளிர் பற்றித் தொல்காப்பியம் கூறுவதையும் காண்போம்.

## தெய்வ வழிபாடு

நிலம் என்பதை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்திணைகளாக வகுத்து, குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்கு மாயோன், மருதத்துக்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் ஆகிய ஆண் தெய்வங்களையும், பாலைக்கு மாத்திரம் கன்னி (துர்க்கை அல்லது கொற்றவை) என்னும் பெண் தெய்வத்தையும் வழிபடும் தெய்வங்களாக வகுத்துள்ளதையும் காண்கின்றோம். தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தெய்வ வழிபாடு நிலைத்திருந்ததைப் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

....... (பொருள். 5)

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப."

............... (பெருள். 1)

கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகிய ஏழையும் எழுதிணை என்பர்.

## ஐந்திணைகளில் மகளிர்

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களிலும் மகளிர் உலாவித் திரிந்து அவர்தம் உள்ளத்திலெழும்

உணர்வெழுச்சிகளிற் பங்கேற்றுப் பரவசமடைவர். இதைத் தொல்காப்பியர் கூற்றில் காண்போம்.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே."
................ (பொருள். 16)

இவ்வண்ணம் அவர்கள் குறிஞ்சியில் புணர்தலும், பாலையில் பிரிதலும், முல்லையில் இருத்தலும், நெய்தலில் இரங்கலும், மருதத்தில் ஊடலும் ஆகிய வேறுபட்ட உணர்வுகளோடு வாழ்வியலை நடாத்தி வெற்றியும் கண்டுள்ளனர்.

## கைக்கிளை

கைக்கிளை என்பது ஒருதலைக் காமமாகும். இதை ஒவ்வாக் காமம் என்றும் கூறுவர். கைக்கிளை புணராது நிகழும். இதைத் தொல்காப்பியம் இவ்வாறு கூறும்.

"காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே."
................(பொருள். 53)

காமவுணர்ச்சி தோன்றாத இளையவளிடத்துப் பாதுகாவல் இல்லாதபொழுது அவளைத் துன்புறுமாறு புகழ்தலும், பழித்தலும் செய்து, தனக்கும் அவளுக்கும் பொருந்தக்கூடியவற்றைச் சேர்த்து, அவள் சொற்கேளாமல் தானே சொல்லி இன்பமடைதல், பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பாகும். இவ்வாறான துன்புறு செயல்கள் பல மகளிரைப் பாதிப்படையச் செய்கின்றன.

## பெருந்திணை

பெருந்திணை என்பது ஒருவனும், ஒருத்தியும் ஒருவர்க்கொருவர் அன்பின்றிக் கூடி வாழும் முறையாம். இதைப் பொருந்தாக் காமம் என்றும் கூறுவர். பெருந்திணை புணர்ந்த பின்னான நிகழ்வாகும்.

"ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடும் தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே."

........(பொருள். 54)

ஆண்மகனுக்கே உரிய மடலேறுதல், இளமை நீங்கிய முதுமைக் காலத்திலும் ஆசை மிகுதியால் தம்முள் கூடி இன்பம் துய்த்தல், தெளிவு நிலையற்றுக் காமத்தின் கண் மிகுதிப்பட்டு நிற்றல், ஐந்திணையாகிய ஒத்த காமத்தில் மாறுபட்டு நிற்றல் ஆகிய நான்கும் பெருந்திணை எனத் தொல்காப்பியம் கூறும். முதற் கூறியது தவிர, மற்றைய மூன்றிலும் மகளிரும் பங்கேற்று நாணப்பட்டு ஒதுங்கி நிற்பர். மடலேறல் நற்செயலன்று. எனவே அது பெண்களுக்கு ஒதுக்கப்படவில்லை.

## களவியல்

மனிதன் என்றும் இன்பத்தையே நாடிச் செல்கின்றான். அதை அவன் அனுபவிக்கப் பெண்ணொருத்தி காத்திருப்பாள். தலைவன் தலைவியர் எதிர்ப்படும்பொழுது காதற்களவு நிகழும். இன்பம், பொருள், அறம் என்று கூறப்பட்ட அன்புடனிணைந்த ஐந்திணையான குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் நிகழும் களவியல் பற்றித் தொல்காப்பியம் பேசுகின்றது.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்'"

..............(பொருள். 89-1,2)

அச்சம், நாண், பேதைமை ஆகிய முக்குணங்களும் தலைவியருக்கு என்றும் முந்தி வந்து நிற்றல் அவர்களுக்குரிய பாதுகாப்பும், சிறப்பும் ஆகும். அதனால் அவர்கள் வேட்கையுற்றபொழுதும் புணர்ச்சிக்கு இசையாது வரைந்தெடுப்பதில் நாட்டம் செலுத்தி நிற்பர்.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப." ............... (பொருள். 96)

தொல்காப்பியர் காலத்தில் மேற்காட்டிய முக்குணங்கள் இந்நாளில் மகளிர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்றாகி நாற்குணங்களாகவும், நாற்படையாகவும் நளவெண்பாவில் திகழ்வதைக் காண்கின்றோம்.

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு." ....................... (பாடல். 39)

**புணர்ச்சியில் தலைவி இயல்பு:-** இயற்கைப் புணர்ச்சியில் தலைவியின் இயல்புகள் பற்றித் தொல்காப்பியர் இவ்வாறு சூத்திரம் அமைத்துள்ளார்.

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப."
........ (பொருள். 97)

அடைய வேண்டுமென்ற பேராசையும், என்றும் நினைத்தலும், எண்ணம் கிட்டாதெனில் உண்ணாது உடல் மெலிதலும், விழித்திருத்தலும், தானே கூறிக்கொள்வதும், நாணம் நீங்குதலும், காணும் பொருள் யாவும் முன்கண்ட பொருளென் நினைத்தலும், அவையே நினைவாகப்

பித்தாதலும், மயக்க முறுதலும், கைகூடாதவிடத்து இறந்துவிடுதலும் ஆகியன தலைவிக்குரிய சிறப்பு வாய்ந்த களவெனக் கூறுவர்.

**குறியிடம் கூடும் தலைவி:-** தலைவன், தலைவி ஆகிய இருவரிடையே நிகழும் களவொழுக்கத்தின் பொழுது தலைவனுக்குத் துணை நின்று உதவப் பாங்கன் அமைவதுபோல் தலைவிக்குத் தோழி அமைவாள். தலைவியின் தோழியாக இருப்பவள், செவிலியின் மகள் ஆவாள். தோழியின்றித் தலைவியானவள் தனித்து ஓர் இடமும் செல்லக்கூடாது என்ற இறுக்கமான கட்டுப்பாடு அன்றிருந்தது.

"தோழி தானே செவிலி மகளே." ............... (பொருள். 123)

தலைவன் தலைவியைக் கூடுவதற்கு முயலுங்கால் தலைவியின் உள்ளக் கருத்தினை அறிந்து, அவர்களைக் கூட்டுவித்தலும் தோழியிடம் உண்டெனத் தொல்காப்பியம் கூறும்.

"முயற்சிக் காலத்து அதற்பட நாடிப்
புணர்த்த லாற்றலும் அவள்வயி னான." .......(பொருள். 127)

உயர்ந்த மறைப்பொருளை எடுத்துக்கூறும் ஆற்றல் செவிலித்தாய்க்கு உள்ளதால், அவளே தலைவிக்குத் தாயுமாகின்றாள் என்று தொல்காப்பியர் செப்புகின்றார்.

"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள் செவிலி யாகும்." ....... (பொருள். 122)

தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் உலாவுங்கால் குறியிடம் அமைத்துக் கூடுவர். பகலிற் கூடுமிடம் "பகற்குறி" என்றும், இரவில் கூடுமிடம் "இரவுக்குறி" என்றும் அழைப்பர்.

"குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்ற தென்ப." ..................... (பொருள். 128)

தலைவியின் இல்லத்துக்கு அருகிலுள்ளதாகவும், வீட்டிலுள்ளோர் தலைவன் தலைவியர் பேசுவனவற்றைக் கேட்குமாறும் அமைந்த பகுதிதான் இரவுக்குறிக்குரிய இடமாகும்.

"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான." ........ (பொருள். 129)

மதிலின் புறத்தே அமைந்த பகுதிதான் பகற்குறிக்குரிய இடமாகும். அவ்விடம் தலைவிக்கு நன்கு அறிந்த இடமாக இருத்தல் வேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

"பகற்புணர் களனே புறனென மொழிப
ஆவளறி வுணர வருவழி யான." ............... (பொருள். 130)

தலைவனோடு கூடியபின்னர், அவன் விருப்புக்கு மாறுபட்டு நடத்தல் தலைவிக்குத் தருமமாகாமையால் அவன் விருப்பிற்கு இணங்கியும், தானும் செல்லக்கூடிய குறியிடம் கூறுதலே தலைவியின் செயலாகும். மேலும், தலைவன் தலைவியர் கூடலுக்குத் தோழி குறியிடம் குறித்தலும் உளவாம்.

"அவன்வரம்பு இறத்தல் அறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டு கிளவி கிழவிய தாகும்
தான்செலற் குரியவழி யாக லான." ............... (பொருள். 118)

"தோழியின் முடியும் இடனுமாறு உண்டே." ........ (பொருள்.119)

தலைவியின் களவொழுக்கத்தை அவள் தந்தையும், உடன் பிறந்த தமையன்மாரும் உற்றுக் கண்காணித்து அவள் செயற்பாட்டினைக் குறிப்பால் அறிந்துகொள்வர்.

"தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப."
........(பொருள். 135)

**களவு வெளிப்படல்:-** தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுது களவு வெளிப்படுதலுமுண்டு. இது "அம்பல்", "அலர்" என இருவகையால் வெளிப்படும். அம்பல் என்பது சொல் நிகழா முகிழ்நிலைப் பரவாக் களவாகும். அலர் என்பது பேசப்படும் பரவிய களவாகும். இவ்விரண்டிற்கும் தலைவனே பொறுப்பாவான் என்று தொல்காப்பியம் கூறித் தலைவியைக் காப்பாற்றிக் கொள்கின்றது.

"அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவ னாகும்." ........ (பொருள். 137)

களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள காதலர்கள் களவு வெளிப்பட்ட பின்னரும், களவு வெளிப்படா முன்னரும் ஆகிய இரு நிலைகளிலும் தலைவியரைத் தலைவர் திருமணம் புரிந்துகொள்வரெனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இருவாற்றானும் வரைதல் அறத்தொடு பொருந்தும் என்றவாறு.

"வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே." ........ (பொருள். 138)

**களவிற் கூற்று நிகழ்த்தற்குரியோர்:-** களவொழுக்கத்தில் இறங்கியுள்ள தலைவன் தலைவியருக்கு அறிவுரை கூறப் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, மிகுந்த சிறப்பினையுடைய தலைவன், தலைவி ஆகிய அறுவரை நியமித்துள்ளதைக் கூறும் தொல்காப்பியச் சூத்திரம் இதுவாகும். இவர்களில் தோழி, செவிலி, தலைவி ஆகிய மூவரும் பெண்பாலார் ஆவர்.

"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொடு
அளவியன் மரபின் அறுவகை யோரும்
களவியற் கிளவிக் குரியர் என்ப." ............... (பொருள். 490)

**களவொழுக்கக் காலவரை:-** களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்குங்கால் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்திருக்கும் வழக்கம் இல்லை.

அவர்கள் காதல் தெய்வீகமானது. அவ்வண்ணமே அன்றைய காதலர்கள் தூய சிந்தையுடன் செயற்பட்டனர். ஆனாலும் அவர்கள் மத்தியில் தோன்றிய களவின் காலவரையை இரண்டு மாதம்தான் நிகழுமென்று இறையனார் களவியலில் வரையறை கூறப்பட்டுள்ளது.

"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப." ....... (நூற்பா. 32)

தலைவியருக்கு ஒரு வழுவும் நிகழ்ந்துவிடக்கூடாதென்ற பேரெண்ணங்கொண்ட பழந்தமிழறிஞர் இவ்வாறான வரையறையை முன்கூட்டியே வகுத்துள்ளமை என்றென்றும் போற்றற்குரியதாகும்.

## கற்பியல்

கற்பு என்பது ஒழுக்கத்தின் இயல்பை உணர்த்துவது. கற்பின் வழி நின்று வாழ்க்கை நடாத்துவதையே யாவரும் விரும்புவர். பெண்ணானவள் கற்பைப் பேணிக் காத்து ஒழுக்கமாக இருக்கவேண்டியவள் என்று ஆண்கள் விரும்புவர். ஆனால் கற்பை இரு சாரரான ஆண்களும், பெண்களும் கடைப்பிடிக்க வேண்டியவர்களாவர். அன்றேல் அவர்கள் வாழ்க்கை சீரழிந்துவிடும். "ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி" என்ற தமிழன் கோட்பாடு அமைந்துவிட்டால் மானிட வாழ்வியல் அன்பு மயமாகிவிடும்.

கற்பும் கரணமும்:- தலைவன் தலைவியைக் கண்டு, காதல் அரும்பி, சிலநாட் பழகி, பல நாள் ஒதுங்கி, பின் அவளைக் கண்டதுமில்லை, தொட்டதுமில்லை என்று பொய் கூறுதலும், குற்றப்பட ஒழுகுதலும் மக்கள் வாழ்க்கையைச் சீரழித்துவிடுகின்றன. தலைவன் தலைவியரிடையில் பொய்யும், வழுவும் தோன்றிய பின்னர் ஆன்றோரும், சான்றோரும் (ஐயர்) கரணம் என்ற சடங்கொடு கூடிய மணநிகழ்வு முறைகளை வகுத்துள்ளனர்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப." .............. (பொருள். 143)

சடங்கோடுகூடிய மணவிழாவில் கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவன், கொள்ளுதற்குரிய மரபினையுடைய தலைவியைக் கொடுத்தற்குரிய தலைவியின் தமர் (பெற்றார்- உற்றார்) மணஞ்செய்து கொடுக்கும் முறையைக் கற்பென்று சிறப்பித்துக் கூறுவர்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே."
........(பொருள். 140)

தலைவனும், தலைவியும் அன்பினால் இணைந்து தனிவழிப் பாலையில் சென்றவிடத்தும், கொடுத்தற்குரிய தலைவியின் தமர் இல்லாதவிடத்தும், சடங்கோடுகூடிய மணநிகழ்வு நடைபெறுதலும் உளதாம். இங்கே கரணத்தின் சிறப்பினைக் காண்கின்றோம்.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான." ........ (பொருள். 141)

கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோர்:- பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருடன் சிறப்பினையுடைய பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி ஆகிய அறுவரையும் சேர்த்துப் பன்னிருவரும் கற்பிற் கூற்று நிகழ்த்தற் குரியோராவர். இவர்களில் விறலி, பரத்தை, தோழி, செவிலி, கிழத்தி ஆகிய ஐவரும் பெண்களாவர்.

"பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பில் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெடு மரபிற் கற்பிற் குரியர்." ........ (பொருள். 491)

களவிற் கூற்று நிகழ்தற்குரியோராக அறுவரையும், கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோராகப் பன்னிருவரையும் நியமித்துக் கற்புக்கு மிக முக்கியம் கொடுத்துள்ள சிறப்பினையும் காண்கின்றோம்.

**ஒருங்கு தவம் பயிலல்:-** தலைவனும் தலைவியும் இன்பம் துய்த்து, முதுமைக் காலத்தில் மீண்டும் சிற்றின்பத்தில் இறங்காது, பாதுகாப்புத் தரக்கூடிய தம் பிள்ளைகளுடனும், அறன் நாடுகின்ற உறவினருடனும் கூடி வாழ்ந்துகொண்டு, சிறந்த பேரின்பத்தைத் தரும் வழியிற் புகுதலே இப் பிறப்பின் பயனாகும் என்கின்றது தொல்காப்பியம்.

**"காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறத்தது பயிற்றல் பிறந்ததன் பயனே." ........ (பொருள். 190)**

## பரத்தையிற் பிரிவு

சமூக விரோதச் செயலான தம் உடம்பை ஆடவர்க்கு விற்கும் பெண்களைப் பரத்தையர் எனப் பழிப்பர். தலைவன் பரத்தையை நாடிச் சென்ற காலை தலைவி பூப்பெய்திய செய்தி கேட்டுத் தலைவியை நாடி முதல் மூன்று நாளும் அவள் சொற்கேட்டு, ஒழுகி நின்று, பிற்பட்ட பன்னிரண்டு நாளும் அவளைப் பிரியாது கூடி நிற்பான் என்று சொல்லுவர் புலவர். பரத்தையிற் பிரிவைத் தணிக்க இவ்வரையறை கூறப்பட்டுள்ள தெனலாம். இதைத் தொல்காப்பியச் சூத்திரம் இவ்வாறு கூறும்.

**"பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
**நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்**
**பரத்தையிற் பிரிந்த காலை யான." ........ (பொருள். 185)**

அக்காலத்தில் பரத்தையிற் பிரிவு நால்வர்க்கும் உரித்தே என்பதைக் கீழ்வரும் சூத்திரம் எடுத்துக் கூறுகின்றது. இங்கு நால்வர் என்பது:- (1) அந்தணர் (2) அரசர் (3) வணிகர் (4) வேளாளர் ஆகிய நால்வகுப்பினராவர்.

**"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**
**நிலத்திரி பின்ற/ தென்மனார் புலவர்." ........ (பொருள். 220)**

கற்புடைய தலைவியானவள் தலைவனின் பரத்தையைப் புகழ்ந்து ஏத்திக் கூறினாளாயினும், அவள் உள்ளத்தில் ஊடல் உண்டெனத் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.

"கற்புவழிப் பட்டவள் பரத்தை யேத்தினும்
உள்ளத்து ஊடல் உண்டென மொழிப." ........ (பொருள். 229)

## உடன்கட்டையேறல்

ஒரு பெண்ணை வரைந்தெடுத்து, அவளுக்கு வாழ்வு கொடுத்து, அவளை வாழ்க்கைத் துணையாகக் கொண்டோன் இறந்துபட்டவிடத்து அவன் தலையோடு தன் முலைகளையும் முகத்தையும் சேர்த்துக்கொண்டு உடன் இறந்துபட்ட ஒரு பெண்ணின் பரிதாப நிலையைத் தொல்காப்பியத்தில் காண்கின்றோம். மேலும் பெரும் புகழினை நிலைநிறுத்தி இறந்துபட்டவனைச் சுற்றிக் கூடிய உறவினர்கள் அழுத மயக்கமும், மனைவியர் தத்தம் கணவரைக் கட்டிக்கொண்டு அழுததைக் கண்டோர் பொறுக்க முடியாத வருத்தமும் ஆகியவை வேறு தென்படும் காட்சிகளாம்.

"முலையும் முகனும் சேர்த்திக் கொண்டான்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்"
........ (பொருள். 77-16-21)

கணவனோடு இறந்துபட்ட மனைவியின் இறப்பைக் கண்டோர் பிறர்க்கு எடுத்துக் கூறிய "மூதானந்தம்" என்ற நிலையைத் தொல்காப்பியனார் எடுத்துக்காட்டுகின்றார். மூதானந்தம் என்பது ஒன்றுபட்ட அன்பினால் வந்த சாக்காடு. இன்னும், கொடுமைமிக்க பாலைநில வழியில் தன் ஆருயிர்க் கணவனை இழந்து தனியளாய்த் தவித்து நின்று வருந்திப் புலம்பிய தலைவியின் "முதுபாலை" நிலையையும் தொல்காப்பியம் சித்திரிக்கின்றது.

"கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந் தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்"

........ (பொருள். 77-22-25)

தன் ஆருயிர்த் தலைவியை இழந்த தலைவன் தனித்துநின்று "தபுதார" நிலையில் வாடுவதையும், தலைவன் இறந்துபட்டவிடத்துத் தலைவியானவள் உடன்கட்டையேறாது கைம்மை பூண்டு "தாபத" நிலையில் வருந்தி வாழ்வதையும், தலைவனை இழந்த தலைவி "பாலை" (புறங்காடு) நிலையில் நின்று உடன்கட்டையேறுவதையும் தொல்காப்பியம் காட்டுகின்றது.

"காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நளியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும்."

........ (பொருள். 77-28-31)

- மூதானந்தம் - தலைவன் இறந்த பொழுதே தலைவியும் உடனுயிர் நீத்தல்.
- பாலை நிலை - உடன்கட்டையேறல்.
- தாபத நிலை - உடன்கட்டையேறாது கைம்மை பூண்டு வருந்தி வாழ்தல்.
- தபுதார நிலை - தலைவியை இழந்த தலைவன் தனித்து வருந்தி வாழ்தல்.
- முதுபாலை - கொடிய பாலைவன வழியில் தலைவனை இழந்து தனியளாய்த் தவித்து நிற்கும் தலைவியின் புலம்பல் நிலை.

தற்கால மகளிர் மூதானந்தம், பாலை நிலை ஆகியவற்றை ஒதுக்கி விட்டுத் தாபத நிலையில் நின்று கைம்மை பூண்ட வாழ்க்கை நடாத்தித் தம் பிள்ளைக்களையும் குடும்பத்தையும் மேனிலையடையச் செய்வதில் ஈடுபட்டிருத்ததை நாம் மெய்யார வாழ்த்திப் பாராட்ட வேண்டும்.

## நிறைவுரை

தலைவியர்கள் காதற்களவிற் புகுந்து தமக்கேற்ற தலைவர்களை வரைந்தெடுத்துக்கொண்டு, வாழ்வியலில் இறங்கி, ஐவகை நிலங்களான குறிஞ்சியில் புணர்தலும், முல்லையில் இருத்தலும், பாலையில் பிரிதலும், மருதத்தில் ஊடுதலும், நெய்தலில் இரங்குதலும் நிகழ்த்தி, தொல்காப்பியர் காலத்திலேயே தலைவன், தலைவியர் களவியலில் ஈடுபட்டிருக்கும்பொழுது அவர்கள் மத்தியில் பொய்யும், வழுவும் தோன்றியதைக் கண்ட ஆன்றோர் கரணம் எனப்படும் சடங்கு முறையோடு கூடிய திருமணம் கொண்டு கொடுத்து நிகழ்ந்து வந்ததும், அது இன்றும் தமிழரிடையே தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதும், அன்றைய மகளிர் சிலர் பரத்தைமை நடாத்தி ஆண்களை ஈர்த்து வந்ததும், தலைவி, தலைவன் ஒன்றிணைந்து குழந்தைச் செல்வங்களுடன் இன்புற்று வாழ்ந்ததும், பின்னாளில் தலைவன் இறந்துபட்டபொழுது மூதானந்தம் என்ற நிலையில் ஒரு சில தலைவியர் உடனுயிர் நீத்ததும், வேறு சிலர் பாலை நிலையில் நின்று உடன்கட்டையேறியதும், இன்னும் சிலர் மூதானந்தம், பாலை நிலை இரண்டையும் தவிர்த்துத் தாபத நிலையில் நின்று கைம்மை பூண்டு தம்மை வருத்தி வாழ்வதும் ஆகிய பல துறைகளில் ஒவ்வொன்றையும் தொட்டுச் சென்று தம் வாழ்வியலை முடித்துக்கொள்வர்.

களவியல் இரண்டு மாதம்தான் நிகழும் என்ற காலவரையறை, தோழி என்றும் தலைவியுடனிருந்து உதவிக் கண்காணித்தல், களவொழுக்கக் காலத்தில் எழும் அம்பல், அலர் ஆகியவற்றிற்குத் தலைவனே பொறுப்பாவான், மடலேறல் தலைவியருக்கு ஒதுக்கப்படாமை, களவிற் கூற்றும் கற்பிற் கூற்றும் நிகழ்த்த முறையே அறுவரையும், பன்னிருவரையும் நியமித்தமை, கற்பெனப்படுவது கரணமொடு புணர்தல், கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே என்ற கூற்றுக்கள் யாவும் தலைவியர்

பாதுகாப்புக் கருதியே எழுந்தன என்பது தெளிவாகின்றது. இதில் முன்னின்று செயற்பட்ட ஆன்றோரும், சான்றோரும், தொல்காப்பியரும் போற்றற்குரியோராவர்.

ஆணின்றிப் பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை என்பது தெளிவுப்பொருளாகும். எனவே அவர்கள் இருவரும் சேர்ந்திணைந்து வாழவேண்டும். அன்றேல் மனித இனம் அழிந்துவிடும். பெண்ணானவள் ஒன்றை ஒன்பதாக்குபவள். ஒன்பது என்றால் பலதாக்குபவள் என்று பொருள். ஆண் தன் விந்தைப் பெண் கருப்பையில் வைத்துவிடுகின்றான். அத்தோடு அவன் வேலை முடிந்துவிடுகின்றது. அவ்விந்தைப் பெண் மகிழ்வுடன் ஏற்று அதை ஒன்பதாக்கி ஒன்பது மாதங்களின்பின் கை, கால், தலை, உடல் ஆகிய உறுப்புக்களைக் கொண்ட அழகிய குழந்தையைப் பெற்றுத் தருகின்றாள். தற்பொழுது உலகின் சனத்தொகை 721 கோடியாகும். இவ்வளவு மக்களையும் பெண்கள்தான் பெற்றுத் தந்துள்ளனர். இஃது ஓர் உலகச் சாதனையாகும். எனவே பெண் குலத்தாரைப் புகழ்ந்து பாராட்டிப் போற்றுவோம்.

❖❖❖





3

# சிலப்பதிகாரத்தில் பவனி வரும் மகளிர்

**சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி** என்ற ஐந்து நூல்களையும் **"ஐம்பெரும் காப்பியங்கள்"** என்றழைப்பர். இக் காப்பியங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டவையாகும். செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தைச் சேரன் தம்பி இளங்கோவடிகள் இயற்றித் தந்துள்ளார். அதில் காண்டங்கள்- மூன்று, காதைகள்- முப்பது உள்ளன. இன்னும் கதாநாயகன்- கோவலன், கதாநாயகி- **கண்ணகி**, எதிர்முகம்- பொற்கொல்லன், உப பாத்திரங் களாக- மாதவி, கவுந்தியடிகள், மாதரி, பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன், அரசி கோப்பெருந்தேவி, சேரன் செங்குட்டுவன், மாடலன், தேவந்தி ஆகியோரும் காப்பியத்தை அலங்கரிக்கின்றனர்.

சிலம்பால் எழுந்த வரலாற்றைக் கூறுதலால் இந்நூல் "சிலப்பதிகாரம்" என்று பெயர் பெற்றது. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகிய மூன்றும் வலியுறுத்தப்படுகின்றன. இவை மக்களை அறவாழ்க்கையில் வாழ ஆற்றுப்படுத்தி நிற்கின்றன. சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு ஆகிய முந்நாடுகளின் சிறப்புக்களையும், அவற்றின் தலைப்பட்டணங் களான புகார், மதுரை, வஞ்சி ஆகியவற்றின் பெருமைகளையும், அம்முந்நாடுகளை ஆண்ட மூவேந்தர்களான சோழ, பாண்டிய, சேர வேந்தர்களின் ஆட்சிச் செங்கோலையும், பண்டைத் தமிழரின் பழக்கவழக்கம், சமயநெறி, உயிர்க்கொலை நீக்கல், பிறர்மனை அஞ்சுதல், நற்பண்புகள், வாணிகம் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் உள்ளங்கவர் காவியம் சிலப்பதிகாரமாகும். இனி, மகளிர் பற்றிச் சிலப்பதிகாரம் கூறும் பாங்கினையும் காண்போம்.

## கண்ணகி

சோழநாட்டின் காவிரிப் பூம்பட்டினத்தில் மாநாய்கன் எனும் வணிகனின் மகளாவாள் கண்ணகி. அவள் பண்பும், அழகும் நிறைந்த பன்னிரு வயதினள். அதே பட்டினத்தில் மாசாத்துவான் எனும் வணிகனின் மகனாவான் கோவலன். அவன் பேரழகும், பெரும் புகழும் நிறைந்த பதினாறு வயதினன். கண்ணகி, கோவலன் பெற்றோர்கள் ஒரு சுபதினத்தில் கண்ணகி நங்கைக்கும், கோவலன் நம்பிக்கும் சிறப்பு முறையில் திருமணம் செய்வதற்கு முடிவு செய்து, யானை மீது மாண்புறு மகளிரை அமரச்செய்து பூம்புகார் நகரமெங்கும் திருமணச் செய்தியை அறிவித்து, மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் வந்து கண்ணகியைக் கோவலன் திருமணம்புரிந்துகொண்டான்.

பூங்கொடி போன்ற மாதர்கள் பலர் மங்கலப் பொருள்களோடு வந்து, "காதலனைப் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் வாழ்க" என வாழ்த்தி, மலர் தூவி, அருந்ததி போன்ற கண்ணகியை அமளியில் ஏற்றினர். கண்ணகியும், கோவலனும் எழுநிலை மாடத்தின் இடைநிலத்தில் இருந்தனர். இருவரும் மகிழ்வுடன் நிலாமுற்றத்தை நாடிச் சென்றனர். ஆங்கே,

அவர்கள் தாரும் மாலையும் ஒன்றுடனொன்று கலந்து மயங்கிக் கொண்டன. கோவலன், கண்ணகிமேற் தீராக் காதல்கொண்டு "பொன்னே முத்தே கரும்பே தேனே ஆருயிர் மருந்தே மணியே அமிழ்தே இசையே" என்று பலபல கூறிப் பாராட்டினான்.

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?
தாழிருங் கூந்தல் தையால் நின்னை."

........(மனையறம்படுத்த காதை: 73-80)

இவ்வண்ணம் என்றும் நயம்பாடிக் கண்ணகியுடன் ஒன்றுசேர்ந்து கோவலன் அவளையும் இன்பத்தில் ஆழ்த்தித் தானும் மகிழ்ந்திருந்தான். கண்ணகியும் சிறப்புடன் இல்லறத்தை நடாத்திவந்தாள். இவ்வாறான இன்ப வாழ்க்கையில் அவர்கள் இருவரும் சில ஆண்டுகளைக் குதூகலமாகக் கழித்துவந்தனர்.

கணிகை குலத்து மாதவி சோழமன்னன் கரிகாலன் முன்னிலையில் நடன அரங்கேற்றம் நிகழ்த்தி மணிமாலை ஒன்றைப் பெற்றாள். மாதவியின் தாய் அந்த மணிமாலையை ஒரு கூனி கையில் கொடுத்து "இம்மாலையை ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்து வாங்குவோன் மாதவிக்கு மணமகன் ஆவான்" எனக் கூறிச் செல்வர்கள் நடமாடும் வீதியில் நிற்கையில், கோவலன் அப்பொன்னைக் கொடுத்து வாங்கிக் கூனியுடன் மாதவி மனையை அடைந்தான். அம்மாலையை மாதவியின் கழுத்தில் அணிவித்து அவளுடன் கூடி இன்புற்று வாழ்ந்துவந்தான் கோவலன். தன் மனைவி கண்ணகியையும், குடும்பத்தையும் மறந்துவிட்டான்.

மாதவி தன்னை அலங்கரித்துக்கொண்டு நிலா முற்றத்தில் ஆடிப்பாடி மலர்ப்படுக்கையில் கோவலனை அரவணைத்து மகிழ்விக்கின்றாள். அதே நேரம் கண்ணகி கோவலனைப் பிரிந்து, காற்சிலம்புகள் இன்றி, இடை மேகலையின்றி, காதுகளில் குண்டலங்களின்றி, கண் மையின்றி, மார்பகக் குழம்புப் பூச்சின்றி, கூந்தல் நெய்யின்றி, மங்கல அணியுடன், நெற்றியில் திலகமின்றிக் கைம்பெண்போல் காட்சிதந்தாள்.

இந்திர விழா முடிவில் கோவலனும், மாதவியும் மாறிமாறி யாழில் கானல்வரி மீட்டனர். மாதவியை மகிழ வைக்கக் கோவலன் **"தலைவன், தலைவி, களவுக்காதல்"** ஆகியவற்றை வைத்துக் கானல் வரிப்பாடல் பாடினான். இதன் உட்பொருள் அறியாத மாதவி, அவன் பாடலில் வேறொரு பெண்மீது காதல் கொண்டுள்ளான் என்று கற்பனை செய்து, ஊடல் கொண்டு, தானும் வேறொருவன்மீது காதல் கொண்டுள்ளதாகக் கானல்வரி அமைத்துப் பாடினாள். அவள் ஊடலை அறியாத கோவலன், அவள் உண்மையில் கெட்டவள் எனக் கருதி, அவளைத் தனியே விட்டுத் தான் மட்டும் தனித்துப் போய்விட்டான். மாதவி துடிதுடித்துத் திகைத்துத் தனியே தன் வீடு சென்றாள்.

மாதவியைப் பிரிந்து அலைந்த கோவலன், கண்ணகியிடம் வந்து சேர்ந்தான். அவள் நிலையைக் கண்டு மனங்குலைந்தான். **"பரத்தையோடு கூடியதால் என் செல்வமெல்லாம் இழந்துவிட்டேன். இதை நினைந்து வெட்கப்படுகிறேன்."** என்று கூறினான். இதற்குக் கண்ணகி மறு பேச்சு ஒன்றும் பேசவில்லை. கோவலன் மேல் ஊடல் கொள்ளவுமில்லை வெறுப்பும் காட்டவில்லை. இன்முகம் காட்டி **"வருந்தாதீர் என் இரண்டு காற்சிலம்புகள் உள்ளன அவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்."** என்று கூறி எடுத்தளித்தாள்.

கோவலன் அவற்றைப் பெற்றுக்கொண்டு **"இச் சிலம்பினை வாணிக முதலாகக் கொண்டு, மதுரை மாநகரை அடைந்து வாணிகம் செய்து, இழந்த பொருளை ஈட்டத் துணிந்துள்ளேன். நீயும் என்னுடன் வருக"** என்று கூறி, இருவரும் இரவு விடியுமுன் ஊரை

விட்டுப் புறப்பட்டு, கவுந்தியடிகளின் துணையோடு, மூவரும் உறையூர் தாண்டி, ஐயை கோட்டத்தில் தங்கினர். அதன்பின் வையை ஆற்றைக் கடந்து, மதுரை மாநகரின் புறஞ்சேரியில் தங்குகின்றனர். அப்போது மாதரி எனும் ஆயர்குலப்பெண் வருகிறாள். அவளிடம் கண்ணகியையும், கோவலனையும் அழைத்துச் செல்லும்படி கவுந்தி கேட்க, மாதரி இருவரையும் அழைத்துக்கொண்டு தன் இல்லம் சேர்கிறாள். தன் மகள் ஐயையைக் கண்ணகிக்குத் துணையாக வைத்தாள்.

கோவலன் கண்ணகியிடமிருந்து ஒரு சிலம்பை வாங்கிக்கொண்டு, அதை விற்பதற்காகப் புறப்பட்டான். எதிரில் ஒரு பொற்கொல்லன் வந்தான். அவனிடம் சிலம்பை மதிப்பிடுமாறு கோவலன் கேட்க, அவன் "இச் சிலம்பு பாண்டி மாதவிக்கே ஏற்ற உயர்ந்த சிலம்பு" என்று கூறிக் கோவலனைத் தன் வீட்டருகில் நிற்கவிட்டு, நெடுஞ்செழியன் மன்னனிடம் ஓடுகிறான். கோப்பெருந்தேவியின் சிலம்பு ஒன்றை அன்றொரு நாள் களவாடிய இப் பொற்கொல்லன், கோவலனைத் திருடனாக்க எண்ணி, சிலம்பு திருடிய திருடன் கிடைத்தான் என்று கூறிப் பாண்டியன் காலில் வீழ்ந்தான். கோப்பெருந்தேவியின் ஊடலைத் தீர்க்க இச் சிலம்பைக் காட்டலாம் என்று எண்ணி அவசரப்பட்டுத் தீர ஆராயாது

"ஊர்காப்பாளரைக் கூவி, ஈங்கு என்
தாழ் பூங்கோதை - தன் காற்சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்,
கொன்று அச்சிலம்பு கொணர்க,"

........(கொலைக்களக் காதை: 150-153)

என்று தீர்ப்பு வழங்கிவிட்டான் பாண்டிய மன்னன். பொற்கொல்லன் மகிழ்ச்சியுற்றான். காவலர்கள் கோவலனைப் பார்த்ததும் அவன் கள்வனாக இருக்க முடியாதென்கின்றனர். அவர்களில் கல்வியறிவில்லாத ஒரு மூடன் கோவலனை வெட்டிச் சாய்த்துவிட்டான்.

"கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன்: விலங்கு ஊடு அறுத்தது:
புண்ணுமிழ் குருதி பொழிந்து உடன் பரப்ப,

மண்ணக மடந்தை வான் துயர் கூரக்,
காவலன் செங்கோல் வளைஇய, வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து என்."
........(கொலைக்களக் காதை: 212-217)

மதுரை சென்ற கோவலன் இன்னும் வரவில்லையே என்று கண்ணகி கலங்கிக்கொண்டிருந்த நிலையில், கோவலன் கொல்லப்பட்ட செய்தி கேட்ட ஒருத்தி ஓடிவந்து, "அரசமாதேவியின் சிலம்பைத் திருடிய கள்வனென்று கோவலனைக் காவலர் கொலை செய்துவிட்டனர்" என்று கூறினாள். அது கேட்ட கண்ணகி, பொங்கி எழுந்தாள், அழுதாள், விழுந்தாள். "பாண்டியன் தவறு செய்தான், நான் கோவலனை இழந்து விட்டேன் என்று ஏங்கி ஏங்கி மயக்கம் உற்றாள். மயக்கம் தெளிந்த கண்ணகி தன்னிடமுள்ள மற்றொரு சிலம்பைக் கையில் எடுத்துக் கொண்டு, பாண்டியன் வாயிலை அடைந்து "அரசமுறை தவறிய மன்னனின் காவலனே கணவனை இழந்த பெண்ணொருத்தி, ஒற்றைச் சிலம்புடன் வந்திருப்பதாக மன்னனிடம் கூறுவாயாக" என்று கர்ச்சித்தாள். மன்னன் அவளை வரவழைத்து "அழுகுரலோடு நிற்கும் பெண்ணே நீ யார்?" என்று வினவினான். "அறிவு கெட்ட மன்னா நீதி தவறாச் சோழநாட்டின் புகார் என் ஊர். உன்னாற் கொல்லப்பட்ட கோவலனின் மனைவி நான்." என்று இடித்துரைத்தாள்.

"சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்து, இங்கு,
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்
கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி
கண்ணகி, என்பது, என் பெயரே."
........ (வழக்குரை காதை: 59-62)

கள்வனைக் கொல்வது நீதிதானே என்கிறான் மன்னன். தன்னுடைய சிலம்பின் பரல் மாணிக்கம் என்கிறாள். மன்னன் தன் தேவியின் சிலம்பின் பரல் முத்து எனக் கூறிச் சிலம்பை வைக்கின்றான். கண்ணகி அச் சிலம்பை எடுத்து உடைக்க, மாணிக்கப் பரல்கள் தெறிப்பதைக் கண்டு மன்னன் நடுநடுங்கித் தன் குற்றம் உணர்ந்து,

யானோ அரசன்? யானே கள்வன், என்று கூறி நிலத்தில் வீழ்ந்து மடிந்தான்.

"தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,
பொன்செய் கொல்லன், தன் சொல் கேட்ட,
யானோ அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்."
.......(வழக்குரை காதை: 73-77)

பாண்டிய மன்னன் இறந்தானெனக் கேட்ட கோப்பெருந்தேவியும் வீழ்ந்து மடிகிறாள். மன்னனும் கோப்பெருந்தேவியும் இறந்ததை அறியாத கண்ணகி, தவறு செய்யாத தன் கணவனைக் கொன்ற மன்னனையும், மதுரையையும் அழிப்பது தவறா? எனக் கேட்டுக்கொண்டு, தன் இடது மார்பைத் திருகி வீசி எறிகிறாள். தீ எழுந்து பரவுகிறது. தீக்கடவுள் தோன்றி, அவள் ஆணை கேட்டு, நல்லுயிர்களைத் தவிர்த்து, தீயவர்களை எரிக்கின்றது.

பத்தினிப் பெண்களை நம் முன்னோர் மூன்று வகையாகப் பிரித்துக் கூறுவர்.

முதல் ரகம் :- கணவன் இறந்தவுடன் மனைவியும் அவனுடன் உயிர் துறத்தல். இதை மூதானந்தம் என்பர்.

இரண்டாம் ரகம்:- கணவன் இறந்தான் என்றதும் அவனுடன் மனைவியும் ஈமஎரியில் புகுந்து உயிர் விடல். இது பிற்காலத்தில் உடன்கட்டையேறல் என்றாயிற்று. இதைப் பாலைநிலை என்பர்.

மூன்றாம் ரகம் :- கணவன் இறந்தபின் மனைவியானவள் பூவிழந்து, பொட்டிழந்து, மங்கல அணியிழந்து, அறுசுவை உணவு நீக்கி, வெறுந்தரையில் படுத்துறங்கிக் கைம்மை நோன்பு நோற்று உடலை வருத்தி வாழ்வர். இதைத் தாபத நிலை என்பர்.

கண்ணகி இம் மூன்று ரகங்களிலும் சேராது பத்தினித் தெய்வமானாள். கணவனை இழந்த கண்ணகியின் செயல் சரிதானென்று முதுபெண்டிர் தீயை வணங்கினர். மக்கள் "இவள் யார்? எந்நாட்டாள்? யார் மகள்? சிலம்புடன் வந்து ஊரை எரித்தாள்" என்று பயத்துடன் ஓடுகின்றனர். தீயின் வெப்பம் ஆற்றாமல் மதுராபதித் தெய்வம் கண்ணகிமுன் தோன்றி "யான் மதுரையின் ஆதிதேவதை. பாண்டிய மன்னர் நீதி காப்பவர்கள். நெடுஞ்செழியனும் நீதியில் சிறந்தோன். கோவலனுக்கு நிகழ்ந்தது ஊழ்வினையாகும். பதினான்கு நாட்களுக்குப்பின் உன் கணவனைத் தெய்வ உருவில் காண்பாய்" என்று உரைத்ததும் நெருப்புத் தணிந்தது. கண்ணகி வையைக் கரை வழியே மேற்கு நோக்கிச் சென்று, சேர நாட்டிலுள்ள திருச்செங்குன்றம் என்னும் மலை மீதேறி, அங்கு ஒரு வேங்கை மர நிழலில் நின்றாள். இதைக் குன்றக் குறவர் கண்டு, அவளை யார் என்று கேட்க, "மதுரையும், அரசும் அழியக் கணவனை இழந்த தீவினை செய்தவள் யான்" என்று கூறினாள். அதே நேரம் கண்ணகியைத் தெய்ய வடிவுடன் வந்த கோவலன் விண்ணில் அழைத்துச் செல்லும் காட்சியைக் கண்டு வியப்புடன் தொழுதனர். கண்ணகியே தமது குலதெய்வம் என்று குரவை பாடி, சேர வேந்தனாகிய செங்குட்டுவனை வாழ்த்திப் போகின்றனர்.

சேரன் செங்குட்டுவன் தன் தேவியாகிய வேண்மாளுடன் வஞ்சி நகரிலிருந்து மலைவளம் காண வந்திருப்பதை அறிந்த குன்றக் குறவர், வேங்கை மர நிழலில் அவர்கள் நேரில் கண்ட தெய்வத்தைப் பற்றித் தங்கள் மன்னனிடம் கூறினர். மன்னனுடன் இருந்த ஆசான் சாத்தனார், மதுரையில் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி அரசனுடன் வழக்குரைத்து வென்று மதுரையை எரித்ததும், நெடுஞ்செழியன் தேவியுடன் உயிர் நீத்ததும் ஆகிய செய்திகளைக் கூறினார். அது கேட்ட செங்குட்டுவன், பாண்டியன் இறந்ததற்கு வருந்தினான். சேரமாதேவி, தம்முடைய நாட்டுக்கு வந்த கண்ணகியை வழிபட ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறாள். இமயத்தில் கல்லெடுத்துக் கங்கைநீரில் நீராட்டிப் பெருமைப்படக் கருதி, பறை முழங்க இமயம் நோக்கிப் புறப்படுகிறான் சேரன்.

தமிழ் மன்னர் வீரத்தை, வட ஆரிய மன்னர் பழித்ததாகச் செய்தியறிந்து சினங்கொண்டு, கண்ணகிக்குப் படிமம் செய்ய இமயத்தில் எடுக்கும் கல்லை வடவரசர் தலைமேல் வைத்துக் கொணர்வேன் எனச் சபதம் செய்து, கனகவிசயருக்குப் பாடம் கற்பிக்கத் தம் படை புறப்பட்டுவிட்டது எனக் கூறிக் கங்கையின் தென்கரையில் பாசறை அமைத்து, எதிர்த்து வந்த கனகவிசயரை வென்று, அவர்களைச் சிறைப்படுத்தினான் செங்குட்டுவன். அமைச்சன் வில்லவன்கோதையை ஏவிப் பத்தினிக்குச் சிலை வடிக்க இமயத்திலிருந்து கல் எடுக்கிறான் செங்குட்டுவன். எடுத்த கல்லைக் கனக விசயர் தலைமீது ஏற்றிச் சென்று கங்கை ஆற்றில் முறைப்படி நீராட்டினான். அப்பொழுது அங்கு வந்த மாடல மறையோன், பாண்டிய நாட்டில் நெடுஞ்செழியன் இறந்தபின் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் அரசேற்று, ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டு அரசாட்சிபுரிவதையும், சோழ நாட்டின் செங்கோல் சிறப்பையும் கூறுகின்றான். கனக விசயரைப் பாண்டியனுக்கும், சோழனுக்கும் காட்டி வருமாறு நீலனை ஏவிய சேரன், வஞ்சி நகர் வர, மக்கள் வாழ்த்தி வரவேற்கின்றனர்.

"போரில் தோற்றோடித் துறவுக்கோலம் பூண்டவர்கள் தலை மீது கல்லேற்றி வருவது வீரமா? எனக் குறை கண்டனர் சோழ பாண்டியர்" என்று நீலன் கூறச் சினங் கொண்டான் சேரன். மாடலன், மன்னன் சினம் தணிவித்து, யாக்கை, செல்வம், இளமை நிலையாமைகளை எடுத்துக் கூறி, வானவர் போற்றும் அறக்கள வேள்வி செய்ய ஆற்றுப்படுத்துகிறான். மன்னன் அது கேட்டுச் சினந்தணிந்தான். ஆரிய மன்னர் விடுதலை பெறுகின்றனர். வேள்விகள் நடைபெறுகின்றன. ஆரியர்க்குப் பொன்னும் பொருளும் வழங்கினான் சேரன். கண்ணகிக்குக் கோட்டம் எழுகிறது. விழா நடக்கிறது. சேர மன்னன் மக்களுடன் சேர்ந்து மகிழ்கிறான்.

கண்ணகியின் காவற்பெண்டும், அடித்தோழியும், தேவந்தியும், மாதரி மகள் ஐயையும் கண்ணகி கோயிலுக்கு வந்தனர். கண்ணகியின் தாயும், மாமியும் உயிர் விட்டதும், மாமனும் தந்தையும் துறவு பூண்டதும், மாதவியும் மணிமேகலையும் துறவிகளானதும், மாதரி உயிர் நீத்ததும்,

கூறும்போது, விண்ணில் மின்னற்கொடி போன்று கண்ணகி தெய்வ வடிவில் தோன்றிச் செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுத்து வாழ்த்தினாள். வஞ்சி மகளிர் முடி வேந்தர் மூவரையும் வாழ்த்திப் பாடுகின்றனர். கண்ணகி, பாண்டியன் தீதிலன், அவன் மகள் நான் என்று கூறிச் சேரனை வாழ்த்துகிறாள்.

பத்தினிக் கோட்ட வழிபாடு நாள்தோறும் செவ்வனே நடைபெற வேண்டிப் பூசையாட்டியாகத் தேவந்தியை நியமிக்கின்றான் சேரன். கனக விசயரும், பிற மன்னர்களும், இலங்கை கயவாகுவும் தத்தம் நாட்டுக்குப் பத்தினி எழுந்தருள வேண்டுமென வேண்ட, "வரம் தந்தேன்" என்ற ஒலி கேட்டு மகிழ்ந்தனர். சேரனும், மாடலனும் சென்ற பின்னர், துறவி இளங்கோ பத்தினிக் கோட்டத்துக்கு வருகிறார். தேவந்தி பத்தினித் தெய்வமுற்று, இளங்கோவின் துறவற வரலாற்றைக் கூறுகிறாள்.

இளங்கோவடிகள் இக்காப்பியத்தில் இறுதியில் கூறப்பட்டுள்ள தெளி பொருளாகவுள்ள அறவுரைகள் உலகம் முழுவதற்கும் பொதுவானவை ஆதலின் அவற்றை அவர் பாடலால் காண்போம். மனிதநேயம் இக்காப்பியத்தின் உயிர்மூச்சாகின்றது.

"பரிவும், இடுக்கணும், பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்

செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகல்மின் பொருள்மொழி நீங்கல்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழைஉயிர் ஓம்புமின்

அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும், விரகினில் ஒழிமின்
இளமையும், செல்வமும், யாக்கையும், நிலையா
உளநாள் வரையாது, ஒல்லுவது ஒழியாது

செல்லும் தேஎயத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லல் மாஞாலத்து வாழ்வீர், ஈங்கு, என்."

........(வரந்தரு காதை)

## மாதவி

அழகிய பூம்புகார் நகரிலே கணிகையர் குலத்தில் சித்திராபதியின் ஒரு தனி மகளாக அவதரித்தாள் மாதவி. நாடகத் துறையில் ஏழாண்டுக் காலம் தொடர்ந்து நன்கு பயின்று நாடக அரங்கிலே உலகம் வியக்கும் வண்ணம் அருமையான முறையில் ஆடத் தொடங்கினாள். அவள் ஆட்டத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்திருந்தன. நாடகத்தின் பதினொரு வகைக் கூத்தினையும் சோழ நாட்டு மக்கள் கண்டு களித்தனர். நாடக அரங்கில் மாதவி கால் பதித்து ஆடுவதை, இளங்கோவடிகள் வெண்பாவில் பதித்த பாங்கிவை.

"எண்ணும், எழுத்தும், இயல்ஐந்தும், பண்நான்கும்,
பண்நின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் - பூம்புகார் பொற்றொடி மாதவிதன்
வாக்கினால் ஆடு அரங்கின் வந்து."

..................(அரங்கேற்று காதை: 176-179)

மாதவியின் வரலாறு ஒன்று உண்டு. இனி அதையும் காண்போம். பொதியமலையில் வாழ்ந்த அகத்திய முனிவர், இந்திரன் மகன் சயந்தன், ஊர்வசி ஆகிய இருவருக்கும் அன்றொரு சாபம் கொடுத்தார். அதனால் ஊர்வசி மண்ணில் மாதவியாகப் பிறந்தாள். சயந்தன் பூவுலகில் வேணுவாகப் பிறந்தான். மாதவியாகப் பிறந்த ஊர்வசி நடனம் கற்று நாடக

அரங்கில் நாட்டியம் ஆடினாள். வேணுவாகப் பிறந்த சயந்தன் அவள் ஆடலுக்குத் துணை நின்றான். சில ஆண்டுகளின் பின் அவர்கள் சாபவிமோசனம் பெற்று மேலுலகம் சென்றனர். அந்த மாதவி மரபில் தோன்றியவள் இந்த மாதவியாவாள்.

சித்திராபதி தன் மகள் மாதவியின் பன்னிரண்டாவது வயதில் அவளுடைய கலைத்திறனைச் சோழ மன்னனான கரிகாலனுக்கு எடுத்துக்காட்ட விரும்பி ஒழுங்குகள் செய்தாள். கோவலனையும், ஆயிரக்கணக்கானோரையும் அழைத்திருந்தனர். அரசன் முன்னிலையில் பூங்கொடி போன்ற மாதவி அரங்கில் தோன்றி, வலக்கால் முன்வைத்து, நாட்டில் நன்மை பெருக வேண்டித் தெய்வப் பாடல்கள் பல பாடி, ஆடிச் சபையோரை மகிழ்வித்தாள். மன்னன் மாதவிக்கு ஆயிரத்தெண் கழஞ்சுப் பொன் விலைமதிப்பு மிக்க மணிமாலையும், "தலைக்கோலி" என்ற சிறப்புப் பட்டமும் அளித்தான்.

"இலைப்பூங்கோதை, இயல்பினின் வழாமைத்,
தலைக்கோல் எய்தித், தலை அரங்கேறி,
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு
ஒருமுறையாகப் பெற்றனள்," ........ (அரங்கேற்று காதை)

அம்மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து வாங்குவோன் மாதவிக்குரியோன் ஆவான் என்று கூறுப்படி கூனியைச் சித்திராபதி ஏவ, கோவலன் அதை வாங்கி, கூனியுடன் மாதவி இல்லம் சென்று, மாதவி கழுத்தில் மாலையை அணிவித்து. மனைவி கண்ணகியையும் குடும்பத்தையும் துறந்து, மாதவியுடன் சேர்ந்து இன்புற்று வாழ்கின்றான். மாதவி நிலாவெளியில் ஆடிப்பாடிக் கோவலனைச் சந்தோசப்படுத்துகின்றாள். இவ்வண்ணம் மாதங்கள் பல சென்றன,

"மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக், கூனி ___ தன்னொடு
மணமனை புக்கு, மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி,

விடுதல் அறியா விரும்பினன் ஆயினன் -
வடு நீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தென்."
..................(அரங்கேற்று காதை)

இந்திர விழாவின் இறுதிநாளன்று, கடலாடுவதற்கு மக்கள் திரண்டு வருகின்றனர். மாதவியின் சிறந்த ஆடலைக் கண்டு மக்கள் மகிழ்கின்றனர் இந்திர விழாவில் பல மக்கள் மத்தியில் மாதவி ஆடியது கோவலன் மனத்தில் தைத்துவிட்டது. இதனால் அவன் துக்கம்கொண்டான். இதைக் கண்ட மாதவி தன்னை அலங்கரித்துக்கொண்டாள். இருவரும் அதிகாலை கடற்கரைக்கு வருகின்றனர். வயந்தமாலை யாழை மாதவியிடம் கொடுக்கிறாள். கோவலனும் மாதவியும் மாறி மாறிக் காதற்பொருளில் கானல்வரிகளை யாழில் அமைத்துப் பாடினர். கோவலன் வேறொருத்திமேல் மையல் கொண்டுள்ளான் என்று மாதவி எண்ணி ஊடல்கொண்டாள். அதேபோல் மாதவி அயலான் ஒருவன்மேல் கள்ளக்காதல் கொண்டுள்ளாள் என்று கோவலன் கருதினான். எனவே மாதவியை விட்டு விலகினான் கோவலன். செய்வதறியாது மாதவி திகைத்துப் புலம்பித் தனித்துத் தன் வீட்டுக்குச் சென்றாள். மாதவியின் விஞ்சிய ஊடலால் அவள் வாழ்வு நிலைத்து நீடிக்கவில்லை.

கோவலனைப் பிரிந்து மாதவி மனங்குலைந்து தவிக்கிறாள். கோவலனுக்கு நீண்டதொரு மடல் எழுதி, தோழி வயந்தமாலையிடம் கொடுத்து அனுப்புகிறாள். கோவலன் அம் மடலை வாங்காது இழிமொழிகள் வீசித் திருப்பி அனுப்புகிறான். அவர் இனியும் வருவாரென்ற நம்பிக்கையில் மாதவி வாடிக்கொண்டிருக்கிறாள். மாதவியின் மடல் பின்வருமாறு அமைந்திருந்தது.

"மன்னுயிர் எல்லாம் மகிழ்ந்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கள் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்,

தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்,
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்று இஃது அறிந்தீமின்" 63

(வேனிற் காதை)

கோவலன் இனி வரான் என்றறிந்த மாதவி உலக இன்பத்தை வெறுத்த நிலையில் வாழ்ந்தாள். இந்நிலையில் கோவலன் கொல்லப்பட்டான், கண்ணகி விண்ணுலகம் அடைந்தாள் என்ற செய்தியை மாதவி கேட்டாள். தன் தாய் சித்திராபதியிடம் "மணிமேகலையைக் கணிகையர் கோலம் காணாது ஒழிக" என்று கூறி, தன் கூந்தலைக் களைந்து துறவறத்தை மேற்கொண்டாள். கோவலனால் தனக்குப் பிறந்த ஒரே மகள் மணிமேகலையையும் துறவியாக்கினாள்.

"மற்று அது கேட்டு, மாதவி மடந்தை,
நற்றாய் தனக்கு, நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணாது ஒழிக எனக்,
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்து அறம் கொள்ளவும்
என்வாய்க் கேட்டோர், இறந்தோர் உண்மையின்,
நன்னீர்க் கங்கை ஆடப் போந்தேன்
மன்னர் கோவே, வாழ்க ஈங்கு எனத்-"

.................... (நீர்ப்படைக் காதை)

கண்ணகிக் கோட்டத்துக்குக் கண்ணகியின் காவற்பெண்டான மாதவி வந்து, "காதற் கணவனைக் கைப்பிடித்த கண்ணகிக்கு நான் செவிலித்தாய் ஆவேன்" எனக் கூறுகின்றாள்.

"மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள், காதல் கணவன் கைப்பற்றிக்,
குடம்புகாக் கூவல் கொடுங்கானம் போந்த

தடம்பெரும் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்,
தண்புகார்ப் பாவைக்குத் தாயர் நான் கண்டீர்"

.................................. (வாழ்த்துக் காதை)

பொது மகளாகப் பிறந்து, கோவலன் ஒருவனுடன் மாத்திரம் வாழ்ந்து காட்டிய மாதவி கற்புக்கரசியருள் ஒருத்தி ஆவாள். கணவனான கோவலன் மாண்டபின், தன் குல வழக்கத்தை ஒதுக்கிக் கைம்மை பூண்டு நோன்புத் தவமிருந்தவளும் மாதவியாவாள்.

## கோப்பெருந்தேவி

நீதி தவறாது, அறநெறி நின்று செங்கோலோச்சி வாழ்ந்த பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் பட்டத்துராணிதான் கோப்பெருந்தேவி ஆவாள். அன்று அரச அரண்மனையில் நாடக மகளிரின் ஆடலும், பாடலும், அவர்கள் தோற்றமும் மன்னனை மகிழ்வித்தது. இதை அவதானித்துக்கொண்டிருந்த கோப்பெருந்தேவியின் மனம் குலைந்தது. "தலைவலி" என்று சாட்டுக் கூறி அந்தப்புரம் சென்றுவிட்டாள். அதனால் பாண்டியன் கலங்கினான். உடனே அவன் அரசவையைக் கலைத்துவிட்டு, கோப்பெருந்தேவியின் ஊடலைத் தீர்க்க அந்தப்புரத்துக்குச் சென்றான்.

"கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்,
பாடல் பகுதியும், பண்ணின் பயங்களும்,
காவலன் உள்ளம் கவர்ந்தன" என்று, தன்
ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்துத்,
தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டுக்,
குலமுதல் தேவி, கூடாது ஏக,
மந்திரச் சுற்றம் நீங்கி, மன்னவன்
சிந்து அரி நெடுங்கண் சிலதியர் தம்மொடு
கோப்பெருந் தேவி கோயில் நோக்கிக்,
காப்புடை வாயில் கடைகாண் அகவையின்,"

.................(கொலைக்களக் காதை)

பாண்டியன் அரண்மனை நோக்கி கண்ணகி வரும்பொழுது, பாண்டிமாதேவி, செங்கோலும் வெண்குடையும் தரையில் விழவும், கொற்றவாயில் மணி இடைவிடாது ஒலிக்கவும், எட்டுத்திசைகளும் அதிர்ந்து முழங்கவும், சூரியனை இருள் விழுங்கவும், இரவில் வானவில் தோன்றவும், பகலில் நட்சத்திரங்கள் எரிந்து கீழே விழவும் ஆகிய தீய கனாக்களைக் கண்டு, அவற்றைத் தன் கணவனுக்கும் கூறிக் கொண்டாள்.

**ஆங்குக்,**
**"குடையொடு கோல் வீழ நின்று நடுங்கும்**
**கடைமணி இன்குரல் காண்பென்- காண், எல்லா**
**திசைஇரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்,**
**கதிரை இருள் விழுங்கக் காண்பென்- காண், எல்லா**
**இடுங்கொடி வில் இர் வெம்பகல் வீழும்**
**கடுங்கதிர் மீன், இவை காண்பென்- காண், எல்லா**
**................(வழக்குரை காதை)**

கோவலனுக்குக் கொடுத்த தீர்ப்புத் தவறென்றுணர்ந்த பாண்டிய மன்னன் "இனி நான் உயிர் வாழேன். என் ஆயுள் இத்தோடு முடியட்டும்." என்று கூறிக் கீழே சரிந்து உயிர் துறந்தான். பாண்டியன் விழுந்து இறந்ததைக் கண்ட தலைக் கற்பினளான கோப்பெருந்தேவி நிலைகுலைந்து, நடு நடுங்கி, மயங்கிக் கீழே விழுந்து உயிர் துறந்தாள்.

**"கோப்பெருந் தேவி, குலைந்தனள், நடுங்கிக்,**
**"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்று,**
**இணைஅடி தொழுது வீழ்ந்தனளே, மடமொழி"**
**....... (79-81 .......வழக்குரை காதை)**

கோப்பெருந்தேவியின் ஊடலால் கோவலன் வெட்டிக் கொலை செய்யப்பட்டான். பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் தன்னை மாய்த்துக் கொண்டான். கோப்பெருந்தேவியும் இறந்து பட்ட தன் கணவன் உடல்மேல் வீழ்ந்து மடிந்தாள்.

சிலப்பதிகாரத்தில் மகளிர் மூவரான **கோப்பெருந்தேவி, கண்ணகி, மாதவி** ஆகியோரைச் சிறப்பித்துக் கூறலாம். இவர்கள் மூவரும் கற்புக்கரசியாவர். பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுடன் வாழ்ந்து, அவன் மடிந்ததும் **மூதானந்தம்** என்ற நிலையில் நின்று உயிர் துறந்தவள் **கோப்பெருந்தேவி** ஆவாள். கற்பின் விளக்காய் காவியத் தலைவி யானவள் **கண்ணகி**. பொதுமகளாய் இருந்தும் ஒருவன் மனைவியாக வாழ்ந்துகாட்டியவள் **மாதவி** ஆவாள்.

## கவுந்தியடிகள்

கவுந்தியடிகள் ஒரு பெண்பாற் சமணத்துறவியாவார். கவுந்தியடிகள் மூலம் சமணக் கொள்கை சிலப்பதிகாரத்தில் பேசப்படுகின்றது. கோவலனும் கண்ணகியும் புகார் நகரைக் கடந்து, கவுந்தியடிகளின் நட்பைப் பெற்று, மூவரும் மதுரையை நோக்கி நடந்து காவிரியை அடைந்து இளைப்பாறுகின்றனர். அதே வேளை அவ்வழிவந்த காமுகனும் பரத்தையும், கோவலன் கண்ணகியைக் கண்டு, யார் இவர்களெனக் கவுந்தியடிகளிடம் கேட்க, அடிகள் தம் மக்கள்தான் எனக் கூறினார். ஒரு தாய் மக்கள் கணவன் மனைவியாவது எப்படி முடியுமென்று கூறிப் பரிகாசம் செய்கின்றனர். கோபங்கொண்ட அடிகள் அவர்களை நரியாக்குகிறார். அவர்கள் இருவரும் முது நரிகளாக மாறினர். கண்ணகியும் கோவலனும் அவர்களுக்குச் சாபவிமோசனம் கொடுத்தருள வேண்ட **"உறையூரின் காட்டில் இவர்கள் பன்னிரண்டு மாதங்கள் துன்புற்று வாழ்ந்தபின் முன்னைய வடிவம் பெறுவாராக"** என்று சாபவிமோசனம் கொடுத்தார். இங்கு கவுந்தியடிகளின் தவத்தின் வலிமையைக் காண்கின்றோம்.

**"உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை**
**கடவதும் உண்டோ? கற்றறிந்தீர் எனத்........**
**தீமொழி கேட்டுச், செவியகம் புதைத்துக்,**
**காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க........** 230

**எள்ளுநர் போலும் இவர், என் பூங்கோதையை:**
**முள்ளுடைக் காட்டின் முதுநரி ஆக எனக் ........**

கவுந்தி இட்டது தவம் தரு சாபம்
கட்டியது ஆதலின், பட்டதை அறியார்,
குறுநரி நெடுங்குரல் கூவிளி கேட்டு,

நறுமலர்க் கோதையும், நம்பியும் நடுங்கி,
நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்,
அறியாமை என்று அறியல் வேண்டும்
செய்தவத்தீர் நும் திரு முன் பிழைத்தோர்க்கு
உய்திக் காலம் உரையீரோ என, '.

அறியாமையின் இன்று இழிபிறப்பு உற்றோர்
உறையூர் நொச்சி ஒருபுடை ஒதுங்கிப்,
பன்னிரு மதியம் படர்நோய் உழந்த பின்,
முன்னை உருவம் பெறுக, ஈங்கு இவர் எனச்......."

— (நாடுகாண் காதை)

அதன்பின் மூவரும் உறையூரை அடைந்தனர். அங்கிருந்து மூவரும் மதுரையை அடைந்தனர். ஆங்கே ஆய முதுமகளாகிய மாதரி கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினாள். தவ மூதாட்டி கவுந்தியடிகள் மாதரிக்கு "கற்புக்கடம் பூண்ட இவள், என் கண்கண்ட தெய்வம். இவள் போலும் ஒரு தெய்வத்தை நான் கண்டதில்லை" என்று கண்ணகியை அறிமுகப்படுத்தினாள்.

"இன்துணை மகளிர்க்கு இன்றிய மையாக்
கற்புக்கடம் பூண்ட இத் தெய்வம் அல்லது,
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்:"

.......(142-144.......அடைக்கலக் காதை)

இளங்கோ படைத்த பாத்திரங்களுள் சிறந்தவர் எனக் கருதப்படுபவர் கவுந்தியடிகளாவார். சமணமதக் கருத்துக்களை இத் துறவி மூலம் இளங்கோ கூறுகின்றார். படிப்பவர் மனத்தில் ஆழப்பதிந்திருப்பது கவுந்தியடிகளின் பாத்திரமாகும். அவர் எல்லா மக்களையும் "தம் மக்கள்"

என்று கூறித் தன் பரந்த உள்ளத்தைக் காட்டுகிறார். தவறு புரிந்தவர்களுக்குச் சாபம் கொடுத்து, படிப்பனை புகட்டி, சாபவிமோசனம் கொடுத்ததையும் காண்கின்றோம். கவுந்தியடிகளாரின் தெய்விகத்தையும், துறவையும் என்றும் மெச்சுவோம், போற்றுவோம்.

## தேவந்தி

பாசாண்டசாத்தன் மனைவியாகிய தேவந்தி, காவியத் தலைவியாகிய கண்ணகியின் பார்ப்பனத் தோழியாவாள். தேவந்தி பற்றிய வரலாறொன்றுண்டு. இதையும் பார்ப்போம். அன்றொரு நாள் மாலதி என்பவள் தன் மாற்றாளின் குழந்தைக்குப் பாலூட்டும்பொழுது, பால் புரைக்கேறி அக் குழந்தை இறந்துவிட்டது. அதைக் கண்ட மாலதி பயந்து, தன் மணாளனும் மாற்றாளும் கோபம் கொள்வார்கள் என அஞ்சி, இறந்த குழந்தையைப் பல கோயிற் படிகளில் வைத்து, **"என் துன்பத்தைத் தீர்ப்பாயாக"** என்று வேண்டி நின்றும், பலனேதும் கிடைக்கவில்லை. அதன்பின், பாசாண்ட கோயிலை அடைந்து, குழந்தை உயிர் பெற வரம் வேண்டி நிற்கையில் இடாகினிப்பேய் ஒன்று தோன்றி **"செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்"** என்று கூறி, கையிலிருந்த பிணத்தைப் பறித்துக்கொண்டு, சுடுகாடு சென்று அப்பிணத்தைத் தின்று விட்டது.

மாலதி பெருந்துயர் கொண்டு ஏங்கித் துடித்தாள். அதைக் கண்ட பாசாண்டசாத்தன் அவளைத் தேற்றித் தானே ஒரு குழந்தையாகி அவள் முன் கிடந்தான். குழந்தையைக் கண்ட மாதலி மகிழ்வுற்று அக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு அதன் தாயிடம் கொடுத்தாள். அக் குழந்தை வளர்ந்து, கல்வி கற்றுக் குமரனாகச் சிறந்து விளங்கினான். காலப்போக்கில் அவன் பெற்றோர் இறந்தனர். பின்னர் தேவந்தி என்பவளை மணம்புரிந்து இல்லறத்தில் ஈடுபட்டான். சில காலம் சென்றபின் பாசாண்டசாத்தன் **"நான் தீர்த்த யாத்திரை செய்யப் போகிறேன் என் பிரிவைப் பொறுத்துக்கொள் எம் கோயிலுக்கு வருக"** என்று தேவந்தியிடம் கூறிச் சென்றுவிட்டான். **"தீர்த்தமாடச் சென்ற என் கணவனை மீட்டுத் தருவாயாக"** என்று பாசாண்டசாத்தன் கோயிலுக்கு நாள்தோறும் சென்று வழிபட்டு வந்தாள்.

கண்ணகிக்கும் தனக்கும் கணவனைப் பிரிந்திருக்கும் நிலை ஏற்பட்டதை எண்ணிக் கண்ணகி இல்லம் ஏகி "நீ விரைவில் கணவனோடு சேர்வாயாக" என்று கூறி வாழ்த்தினாள்.

"கண்ணகி — நல்லாளுக்கு உற்ற குறை உண்டென்று
எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணீ
அறுகு, சிறுபூளை, நெல்லொடு தூஉய்ச் சென்று
பெறுக, கணவனொடு என்றாள்"
—(41-44— கனாத்திறம் உரைத்த காதை)

அப்போது கண்ணகி "நான் பெறுவேனாயினும் என் மனம் கனவினால் ஐயுறுகின்றது" என்றாள். அது கேட்ட தேவந்தி "நீ முற்பிறப்பில் கணவனுக்கு ஆற்றவேண்டிய பணிகளில் தவறினாய். அதனால் இப்பிறப்பில் தவிக்கிறாய். சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய இரு பொய்கைகளில் நீராடித் தொழுதவர்கள் கணவரைப் பெறுவர். நாமும் ஆடுவோம் வா" என்று கேட்டாள். இதைக் கேட்டுக் கண்ணகி "கணவனே தெய்வமெனக் கருதும் மகளிர் பிற தெய்வங்களை வணங்கக்கூடாது" என்று மறுத்துவிட்டாள். அந்நேரத்தில் கோவலன் வந்தான். அவனைக் கண்ணகி வரவேற்றாள். இங்கே தேவந்தியின் தெய்வத் தன்மை புலனாகின்றது. சேரமன்னன் செங்குட்டுவன், தேவந்தியைப் பார்த்து "மணிமேகலை என்பவள் யார்? அவள் துறவு பூண்டதன் காரணம் யாது? கூறுவாயாக" என்று கேட்க, தேவந்தி "நீவிர் வாழ்க. மணிமேகலை, கோவலனுக்கும் கணிகை மாதவிக்கும் மகளாவாள். மணிமேகலையை எவரும் வாழ்க்கைத் துணையாக ஏற்கார் என்பதை அறிந்த மாதவி தன்னைப் போலவே அவளையும் துறவறம் பூணச்செய்தாள். இதை அறிந்த மக்கள் பெருந்துயரம் அடைந்தனர்" என்று கூறினாள்.

பின் செங்குட்டுவன் பத்தினி வழிபாடு நாள்தோறும் தவறாது நடாத்தப்பட வேண்டுமென்று தேவந்தியைப் பூசையாட்டியாக நியமித்தான். கற்புக் கடவுளை மும்முறை வலம் வந்து வணங்கினான். கனக விசயரும், பிற மன்னர்களும், இலங்கை கயவாகுவும் தத்தம் நாட்டுக்குப் பத்தினி

எழுந்தருள வேண்டுமென்று வேண்ட, "வரம் தந்தேன்" என்ற ஒலி கேட்டு யாவரும் மகிழ்கின்றனர். துறவி இளங்கோவடிகள் கண்ணகி கோவிலுக்குச் சென்றார். அவர்முன் பத்தினிக் கடவுள் தேவந்திமேல் தோன்றி இளங்கோவின் துறவு வரலாற்றைக் கூறுகிறாள். தேவந்தி பத்தினித் தெய்வத்திற்குப் பணிவிடைபுரிந்து வருகின்றாள்.

## முடிவுரை

தீந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தில் **கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி, கவுந்தியடிகள், தேவந்தி** ஆகிய ஐந்து மகளிர் பற்றி விரிவாக மேற்கண்டோம். **கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி** ஆகிய மூவரும் கற்புக்கரசிகளாவர். **கண்ணகி** வணிகையர் குலத்தவளும் கோவலன் மனைவியுமாவாள். **மாதவி** கணிகையர் குலத்தவள். அவள் அக்குலத்தை வெறுத்து, ஒருவன் மனைவியாகத் திகழ்ந்த பெருமைக் குரியவள். **கோப்பெருந்தேவி** பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் பட்டத்துராணியாவாள். **கவுந்தியடிகள்** ஆற்றல் படைத்த ஒரு பெண்பாற் சமணத் துறவியாவாள். பார்ப்பனப் பெண்ணான **தேவந்தி** கண்ணகியின் உயிர்த் தோழியாவாள்.

**சோழநாட்டில்** எழுந்த கண்ணகி - கோவலன் கதை, மாதவியால் நீண்டு பெருகிப் **பாண்டிய** நாட்டைச் சென்றடைந்து, அங்குள்ள பொற் கொல்லனால் மீண்டும் நீடித்துச் **சேரநாட்டை** அடைந்து முடிவுற்றதைக் காண்கின்றோம். முந்நாடுகளையும் தொட்டுச் சென்றதால் சிறப்புற்றது சிலப்பதிகாரம். இதில், கனாக் காணல், துறவறம் பூணல், கானல் வரி, ஊழ்வினை, தவ வலிமை, குரவை ஆடல், தெய்வம் உருக்கொண்டு வரலாறு கூறல், பூசை வழிபாடுகள், கண்ணகி கோவில்கள், வணிகையர் குலம், கணிகையர் குலம், மூதானந்தம் - தாபத நிலைகள், கடலாடல் ஆகிய அம்சங்களையும் காண்கின்றோம்.

மகளிர்க்கு உரித்தான **ஊடல்** பற்றிய விளைவுகளையும் காண்போம். **கண்ணகி** கோவலன்மேல் என்றும் ஊடியதில்லை. அதனால் கண்ணகியின் வாழ்வு சிதைந்தது. தன்னை விட்டு மாதவியுடன் கூடி

வாழ்ந்து, அவளையும் விட்டு விலகிக் கண்ணகியை மீண்டும் நாடி வந்த கோவலனுடன் ஊடாது, அவனை இன்முகம் காட்டி வரவேற்றவள் கண்ணகி. மாதவி கோவலனுடன் ஊடி நின்றாள். அவள் எதற்கும் கோவலனுடன் விஞ்சிய ஊடலைக் காட்டியதால் அவள் வாழ்வும் நிலைக்கவில்லை. கோப்பெருந்தேவி நெடுஞ்செழியனுடன் அற்ப விடயங்களுக்கும் ஊடி நின்றாள். அதனால் அன்று தீர விசாரியாது கோவலன் தன் தேவியின் சிலம்பைத் திருடியவன் என்று மரண தண்டனை விதித்தான். பின் உண்மை அறிந்து விழுந்து மாண்டான். கோப்பெருந் தேவியும் அவனுடன் சேர்ந்து உயிர் துறந்தாள். சிறு ஊடல் இருவர் உயிரையும் காவுகொண்டது.

தீர ஆலோசியாது, கோவலன் சிலம்பு திருடிய கள்வன் என்று பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனால் கொலை செய்யப்பட்டான். அதை அறிந்த கண்ணகி பொங்கி எழுந்து தன் கணவன் கள்வன் இல்லையென்று நிரூபித்தாள். அதனால் நெடுஞ்செழியன் உயிர் துறந்தான். அவனுடன் கோப்பெருந்தேவியும் மாண்டாள். மதுரை தீப்பற்றி எரிந்தது. கோவலன் கொல்லப்பட்டதனால் கண்ணகியின் தாயும், மாமியும் உயிர் துறந்தனர். அவள் தந்தையும், மாமனும் துறவு பூண்டனர். மாதவியும், மணிமேகலையும் துறவிகளாயினர். மாதரி உயிர் நீத்தாள். கண்ணகி தெய்வமானாள்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும், தெய்வம் தெளிமின், பொய்யுரை அஞ்சுமின், ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின், தானம் செய்மின், தவம்பல தாங்குமின், பிறர்மனை அஞ்சுமின், அறமனை காமின், அல்லவை கடிமின், கள்ளும், களவும், காமமும், பொய்யும், விரகினில் ஒழிமின், இளமையும், செல்வமும், யாக்கையும், நிலையா போன்ற அறநெறிகள் இக்காப்பியம் முழுவதும் பரந்து செறிந்து நின்று, மக்களை மனிதநேயப்படுத்தி, அவர்தம் வாழ்வியலை மேம்படுத்துவதில் ஆற்றுப்படுத்துகின்றன.

❖❖❖



4

# மணிமேகலையில் தோன்றும் மகளிர்

ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலை இரண்டாம் நூலாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த இந்நூலை மதுரை கூலவாணிகன் சாத்தனார் என்பவர் யாத்துள்ளார். காவிரிப் பூம்பட்டினம், மணிபல்லவத்தீவு, வஞ்சி, காஞ்சி ஆகிய இடங்களைக் கதை தொட்டுச் செல்கின்றது. அதில் மணிமேகலை கதாநாயகியாகவும், சித்திராபதி எதிர்முகமாகவும், அறவணவடிகள், மாதவி, சுதமதி, தீவதிலகை, உதயகுமாரன், காஞ்சனன், காயசண்டிகை, மணி மேகலா தெய்வம், ஆபுத்திரன், ஆதிரை ஆகியோர் உப பாத்திரங் களாகவும் தோன்றி நூலை அலங்கரிக்கின்றனர். இந்நூல் புத்தமதம் பற்றிப் பேசுகின்றது. அதில் முப்பது காதைகளும், ஒருமித்து 4,856 அடிகளும் உள்ளன. இந்நூல் தமிழன்னையின் மேகலையாகத் திகழ்கிறது. இனி, மணிமேகலை நூலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை காட்சி தருபவள்

மணிமேகலை ஆவாள். அவளுடன் சேர்ந்து சுதமதி, மாதவி, சித்திராபதி, தாரை, வீரை, காயசண்டிகை, இலக்குமி, ஆதிரை, பீலிவளை, தீவதிலகை, சிந்தாதேவி, இராசமாதேவி, அறவணவடிகள், மணிமேகலா தெய்வம் ஆகிய மகளிரின் சிறப்பினையும் காண்போம்.

## மணிமேகலை

சோழ நாட்டில் பூம்புகார் நகரில் கோவலனுக்கும் கணிகையர் குலத்து மாதவிக்கும் மகளாகப் பிறந்தவள் மணிமேகலை. பூம்புகார் நகரில் நடைபெற்ற இந்திரவிழாவுக்கு மாதவியும், மணிமேகலையும் வழக்கப்படி பண்டை நடனம் ஆடுவதற்குப் போகவில்லை. அதனால் சித்திராபதி சினங்கொண்டு வயந்தமாலையை அழைத்து "விழாவிற்கு இருவரும் வராதது பற்றி அறிந்து வா" என்று கூற, அவளும் மாதவியிடம் சென்று கூறினாள். அதற்கு மாதவி "பத்தினியாகிய கண்ணகியின் மகள் மணிமேகலை தவத்திற்கு உரியவள். விபச்சாரத் தொழிலில் ஈடுபடாள். ஆகவே இனி அவள் வர மாட்டாள். நான் அறவண அடிகளிடம் என் காதலன் மதுரையில் கொலையுண்டதைக் கூறி, நல்லறம் கேட்க, அவர் அறங்களை அருளிச் செய்தார். அதனால் நானும் அங்கு வரமாட்டேன். இதைத் தாயிடம் கூறுவாயாக" என்றுரைத்தாள். மேற்கூறிய செய்தியை மணிமேகலை கேட்டுக் கண்ணீர் சொரிந்தாள். அவள் தொடுத்துக் கொண்டிருந்த பூமாலை அவளது கண்ணீரால் நனைந்தது. அதைக் கண்ணுற்ற மாதவி மகள் கண்ணீரைத் துடைத்து "இம்மாலை கண்ணீரால் நனைந்ததால் அதன் புனிதம் இழந்தது. எனவே வேறு பூமாலை தொடுப்பதற்குச் சோலை சென்று புதுமலர் பறித்து வா" என்றாள். அப்பொழுது உடனிருந்த சுதமதி "மகளிர் தனித்து மலர் வனம் செல்லல் ஆகாது. அதனால் துன்பம் நிகழும். அங்குப் பல சோலைகள் உள. அவற்றில் உவவனமே சிறந்தது. மணிமேகலையுடன் நானும் சென்று வருகிறேன்" என்று கூறி இருவரும் உவவனத்தில் மலர் கொய்யப் புகுந்தனர்.

சோழன் மகன் உதயகுமரன் பல நாட்களாக மணிமேகலையை விரும்பியிருந்தான். அவள் சோலைக்குப் பூப்பறிக்க வந்துள்ளாளென்று அவனது நண்பன் எட்டிக் குமரன் கூறக் கேட்டு, மணிமேகலையைத் தேரில் ஏற்றிக்கொண்டு வருவேனென்று கூறிவிட்டு உவவனத்தின் வாயிலை அடைந்தான். தேரொலி கேட்ட மணிமேகலை ஒரு பளிங்கு மண்டபத்தில் புகுந்து தாழிட்டுக்கொண்டாள். சுதமதி வெளியில் தனித்து நின்றாள். உதயகுமரன் சுதமதியிடம் "நீ மணிமேகலையுடன் வந்ததாக அறிந்தேன். அவளை நான் விரும்புகிறேன்." எனக் கூறினான். அதற்குச் சுதமதி "நான் ஒன்று கூறுவேன். கேட்பாயாக மக்கள் அழகு நிலையா. அவர் யாக்கையின் இழிதகைமையை நன்கு உணர்வாயாக" என்றுரைத்தாள். இவ்வுரை அவன் செவியில் புகுமுன், அவன் கண்கள் மணிமேகலையின் உருவத்தைப் பளிங்கு மண்டபத்தினூடாகப் பார்த்துவிட்டன. பளிங்கு மண்டபத்தின் புகுவாயிலை அறியாது அம்மண்டபத்தின் சுவரினைத் தடவிக்கொண்டிருந்த உதயகுமரன், சுதமதியை நோக்கி, "மணிமேகலை எந்நிலையில் இருக்கிறாள்?" என்று கேட்க, அதற்குச் சுதமதி "மணிமேகலை தவ ஒழுக்கம் மேற்கொண்டுள்ளாள். சிறிதும் காம எண்ணம் அற்றவள். நீ அவளை விரும்புதல் தக்கதன்று" என்றாள். அது கேட்ட உதயகுமரன் "நான் அவளை எப்படியும் அடைவேன்." என்று கூறிச் சித்திராபதியின் உதவியை நாடிச் சென்றான். அதன்பின், மணிமேகலை மண்டபத்திலிருந்து வெளியே வந்து சுதமதியை நோக்கி "என்னை உதயகுமரன் கீழ்த்தரமாக இகழ்ந்தாலும், அவன் பின்னே என் மனம் செல்கிறதே காரணம் யாது?" என்று தன் உள்ளத்து உறுதியைக் கூறினாள். அப்பொழுது மணிமேகலா தெய்வம் ஒரு மடந்தை வேடம் பூண்டு இந்திரவிழாவைக் காண வந்து, புத்ததேவரின் பாதபீடிகையைத் தொழுது வணங்கியது. அருகிலிருந்த சுதமதியை நோக்கி "உங்களுக்கு நேர்ந்த துன்பம் யாது? ஏன் இங்கு நிற்கின்றீர்கள்?" என்று வினவச் சுதமதி, உதயகுமரன் வந்து சென்றதைக் கூறினாள். மணிமேகலா தெய்வம் சுதமதியை நோக்கி "உதயகுமரனுக்கு மணிமேகலைமேல் எழுந்த ஆசை இன்னும் விலகவில்லை. வீதியில் மணிமேகலை சென்றால் அவளைக் கவர்ந்து சென்றுவிடுவான். எனவே நீங்கள் மேற்கு வாயிலாக வெளியே

சென்று மாதவர் உறையும் சக்கரவாளக் கோட்டத்தை அடையின் உங்களுக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படாது." என்று கூறியது. சற்று நேரத்தில் சுதமதி நித்திரையில் ஆழ்ந்துள்ளாள். அப்பொழுது மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்று மணிபல்லவம் என்னும் தீவில் விட்டுச் சென்றது.

அதன்பின், மணிமேகலா தெய்வம், உதயகுமரன் முன் தோன்றி "மன்னன் மகனே மணிமேகலை தவத்திறம் பூண்டவள். அவள் மேல் நீ வைத்துள்ள விருப்பினைக் கைவிடுவாயாக" என்று அறிவுரை வழங்கியது. பின் உவவனம் சென்று அங்கு தூங்கிக்கொண்டிருக்கும் சுதமதியை எழுப்பி "நான் மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குப் புத்த அறநெறியில் செல்லுங் காலம் வந்துள்ளதால், அவளை மணி பல்லவத்தில் சேர்த்துள்ளேன். அவள் தன் முற்பிறப்பினை உணர்ந்து இன்றிலிருந்து ஏழாவது நாளில் வேறு வடிவத்தில் இங்கு தோன்று வாள். ஆனால் உனக்கு அவள் முன்போல் தோன்றுவாள். அவள் இங்குத் தோன்றும்பொழுது பல அற்புதங்கள் நிகழும். நான் இங்கு வந்ததையும், மணிமேகலை நல்வழியிற் சென்றதையும் மாதவிக்குச் சொல்வாயாக! மாதவி என்னை அறிந்தவள்." என்று கூறி மணிமேகலா தெய்வம் மறைந்தது.

இதைக் கேட்ட சுதமதி மணிமேகலையின் பிரிவால் பெரிதும் வருந்தி, சக்கரவாளக் கோட்டத்தை அடைந்தாள். அங்கிருந்து மாதவியிடம் சென்று நடந்தவற்றைக் கூறினாள். மாதவியும் துயருற்று வாடி வதங்கினாள். மணிபல்லவத்தில் கடற்கரை மணலில் துயில் நீங்கி எழுந்த மணிமேகலை, நாலா பக்கமும் பார்த்துச் சுதமதியைக் கூவியழைத்து, நீர்த் துறைகளிலும் மணற்குன்றுகளிலும் சுற்றி அலைந்தாள். அவள் முன் ஒரு புத்த பீடிகை தோன்றியது. மணிமேகலை புத்த பீடிகையின் அருகில் சென்று மும்முறை வலம் வந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, பணிந்து எழுந்து, தன் பழம் பிறப்பை உணர்ந்துகொண்டாள்.

"மாதவ! காயங்கரை நதிக்கரையில் நீ உரைத்தபடியே பூகம்பம் எழுந்து நகரம் அழிந்தது. இலக்குமி என்ற பெயரோடு நான்

வளர்ந்து, இராகுலன் என்பவனுக்கு மனைவியானேன். இராகுலன் பதினாறாம் நாளில் பாம்பு தீண்டி இறந்தான். நான் தீயில் புகுந்து இறந்தேன். என் கணவன் எங்கு பிறந்துள்ளான் என்று தெரிய வில்லையே" என்று மணிமேகலை கேட்டாள். அதே நேரத்தில் வானத்திலிருந்து மணிமேகலா தெய்வம் வந்து தோன்றியது. மணிமேகலை அத் தெய்வத்தை வணங்கி "என் கணவன் பிறப்பைப் பற்றிக் கூறுக" என்று வேண்டினாள். "இலக்குமியே கேள் உன் கணவன் இராகுலனும் நீயும் ஒரு பொழிலில் இருக்கும்பொழுது, பௌத்த முனிவன் சாது சக்கரன் அங்கு வந்தான். அம் முனிவனுக்கு நீ உணவு கொடுத்தாய். அந்த ஆகார தானம் உன் பிறப்பை அறுத்திடும். அந்த இராகுலன் தான் உதயகுமரன் ஆவான். அதனால் அவன் உன்னை விரும்பி னான். உன் மனமும் அவன்பின் சென்றது. இதைத் தடுக்கவே உன்னை இத்தீவில் கொண்டு வந்து வைத்து, இப் பீடிகையை உனக்குக் காட்டினேன். முற்பிறப்பில் உன் தமக்கையராகிய தாரையும், வீரையும் அங்க நாட்டு மன்னனை மணந்தனர். அவர்கள் அறவணர் சொற்படி பாத பங்கய மலையைத் தொழுத நற்பயனால் முறையே மாதவியாகவும், சுதமதியாகவும் வந்து பிறந்து உன்னுடன் சேர்ந்தனர். உனக்கு வேற்றுரு எய்தவும், வானத்தில் செல்லவும், பசி நீக்கவும் ஆகிய மூன்று மந்திரங்களையும் தருகின்றேன்." என்று மணிமேகலா தெய்வம் கூறி விண்ணில் மறைந்தது.

மணிமேகலை அத்தீவின் மணற் குன்றுகளையும், பூஞ்சோலைகளை யும், குளிர்ந்த பொய்கைகளையும் பார்த்துக்கொண்டு செல்கையில் தீவதிலகை என்னும் பெண் எதிர்ப்பட்டாள். அவள் புத்த பீடிகையைக் காத்து வருபவள். இருவரும் அறிமுகம் செய்துகொண்டனர். தீவதிலகை மணிமேகலையைப் பார்த்து "இந்தப் பீடிகைக்கு அருகில் கோமுகி என்னும் பொய்கை ஒன்றுள்ளது. புத்ததேவர் அவதரித்த வைகாசி பௌர்ணமி அன்று இப்பொய்கையில் அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் தோன்றும். அந்நாள் இந்நாளாகும். அது உன் கையில் வரும். அதில் இடும் அடிசில் அள்ளஅள்ளக் குறையாது. அதன் வரலாற்றைப் புகாரிலுள்ள அறவண அடிகளிடம் கேட்டு அறிக" என்று உரைத்தாள். இருவரும் கோமுகிப்பொய்கைக்குச் சென்று வலம்

வந்து வணங்கினர். அமுதசுரபி பொய்கையிலிருந்து கிளம்பி மணி மேகலையின் கையை வந்தடைந்தது. மணிமேகலை மகிழ்வுற்றுப் புத்தரைத் துதித்தாள். அறத்தை விலை கூறாது, ஏழைகளின் பசியைப் போக்கி, உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, போன்ற அறநெறிகளைத் தீவதிலகை மணிமேகலைக்குக் கூறினாள்.

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம் விலைபகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உயிர்க் கொடை பூண்டு உரவோய் ஆகி
கயக்கறு நல்லறம் கண்டனை"
........................ (பாத்திரம் பெற்ற காதை)

மணிமேகலை பாத்திரத்தைக் கையில் ஏந்தி, வான்வழியாகச் சென்று மாதவியையும், சுதமதியையும் கண்டு அவர்களின் முற்பிறப்பை அறிவித்தாள். "யாக்கையின் பயனை அறவணவடிகளிடம் கேட்டறி வோம். அமுதசுரபி என்னும் இப்பாத்திரம் ஆபுத்திரன் கையில் இருந்ததாகும். இதனைத் தொழுவீர்களாக" என்றாள். அவர்கள் அதனைத் தொழுதபின் மூவரும் அறவணவடிகளிடம் சென்று அவரை வழிபட்டனர். மணிமேகலை தன் வரலாற்றைக் கூறினாள். "உயிர்களைக் காக்கும் அருமருந்தான அமுதசுரபியை நீ இப்போது பெற்றுள்ளாய். மக்கள், தேவர் ஆகியோருக்கு ஒத்த அறத்தைக் கூறுகிறேன் கேள் அதுவே பசிநோய் தீர்த்தலாம்" என்று அறவணவடிகள் சிறந்த நல்லறத்தினைக் கூறினார். உயிர்களை வருத்தும் பசிநோய் நீங்குமாறு அமுதசுரபி எனும் தெய்வப் பாத்திரத்தைத் தன் கைகளில் ஏந்தி "அவ்வண்ணம் செய்வேன்" என்றாள் மணிமேகலை.

"ஆருயிர் மருந்தாம் அமுத சுரபியெனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை
மக்கள் தேவர் என இரு சாரர்க்கும்

**ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்
தனிப்பெரு நல்லறம் சாற்றினர் ஆதலின்
மடுத்ததீக் கொளிய மன்னுயிர் பசிகெட
எடுத்தனள் பாத்திரம் இளங்கொடி தானெனன்."
....... (அறவணர்த் தொழுத காதை)**

அறவணவடிகள் மணிமேகலையை நோக்கி **ஆபுத்திரன்** வரலாற்றைக் கூறினார். அந்தணன் மனைவியான சாலி என்பவள் கற்புத் தவறி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுத் தோட்டத்தில் வைத்துவிட்டுச் சென்றாள். அக் குழந்தையை ஒரு பசு ஏழு நாள்வரை பாலூட்டி வளர்த்தது. அவ்வழி சென்ற பூதி என்ற அந்தணனும், அவன் மனைவியும் அக் குழந்தையை எடுத்து வளர்த்து, குலத்திற்குரிய கல்வியைப் பயிற்றி வந்தனர். இவன்தான் ஆபுத்திரன். அவன் ஒரு நாள் அவ்வூரில் ஓர் அந்தணன் வீட்டில் புகுந்து வேள்வியில் பலியிடுவதற்குக் கட்டியிருந்த ஒரு பசுவை அவிழ்த்துச் சென்றுவிட்டான். அந்தணர்கள் அவனைப் பிடித்துப் புலையன் என்று அடித்துத் துன்புறுத்தினர். பூபதியும் அவனை வீட்டிலிருந்து துரத்தி விட்டான். ஆபுத்திரனைத் துன்புறுத்தியவனை அப்பசு தன் கொம்பினால் குத்திப் பறித்துக்கொண்டு காட்டுக்குள் ஓடிவிட்டது. ஆபுத்திரன் அவர்களை நோக்கி **"இப்பசு என்ன குற்றம் செய்தது? இது புல்லை மேய்ந்து உங்களுக்கு என்றும் பாலைத் தருகின்றது. மறை ஓதும் அந்தணர்களே சற்றுச் சிந்தியுங்கள்."** என்றான்.

**"விடுநில மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட்கு எல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை
முதுநிறை அந்தணர் முன்னியது உரைமோ?"
.............. (ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை)**

அவர்கள் "நீ விதியை அறியாது வேள்வியை இகழ்கிறாய். எனவே பசு மகன் என்பதற்குப் பொருத்தமுடையாய்" என்று கூறினர். அதற்கு ஆபுத்திரன் அவர்களை நோக்கி "அசலன் எனும் முனிவன் பசுவின் மகன், சிருங்கி முனிவன் மானின் மகன், விரிஞ்சி முனிவன் புலியின் மகன், கேச கம்பளன் நரியின் மகன். இவர்கள் நும் குலத்துக் கணங்கள் என்று போற்றுகின்றீர்கள். அதனால் இழி குலமொன்று உளதாமோ?" என்றான்.

அதன்பின் ஆபுத்திரன் அந்தணர்கள் வாழும் இடங்களிற் சென்று பிச்சை கேட்கப் பிச்சை இடாது கலைத்துவிட்டனர். அதனால் மதுரை சென்று சிந்தா தேவியின் அம்பலத்தில் தங்கினான். பிச்சை எடுத்து ஏழைகளுக்கு உணவளித்தான். திருவோட்டைத் தலைக்கு வைத்து உறங்கினான். அன்றொருநாள் பசி என்று பலர் வந்தனர். பிச்சை எடுத்ததில் மீதம் இல்லையே என்று துடித்தான். சிந்தாதேவி வெளிப்பட்டு "இதனை வைத்துக்கொள்வாயாக... கொடுக்கக் கொடுக்க இதில் உணவு பெருகிக்கொண்டேயிருக்கும்." என்று கூறி, தன் கையிலுள்ள அட்சய பாத்திரம் ஒன்றை அவன் கையிற் கொடுத்து மறைந்துவிட்டாள். ஆபுத்திரன் தேவியை வணங்கிப் பசியால் வாடுபவர்களுக்கு உணவளித்து வந்தான்.

ஆபுத்திரனின் அறத்தின் மகிமையை அறிந்து இந்திரன் ஒரு முதிய அந்தணன் வடிவம் தாங்கி ஆபுத்திரன் முன் நின்று "நான் இந்திரன், உன் தான மகிமை கண்டு உனக்கு வரம் தர வந்தேன். நீ விரும்பும் வரத்தைக் கேட்பாயாக" என்று கூறினான். அதற்கு ஆபுத்திரன் "தேவர் வேந்தே! என் கையிலுள்ள அட்சய பாத்திரம் ஒன்றே போதும். எனக்கு ஒரு வரமும் வேண்டாம்." என்றுரைத்தான். அது கேட்ட இந்திரன் கோபங்கொண்டு, பெரும் மழையைத் தோற்றுவித்தான். எங்கும் வளம் பெருகியது. பசிப் பிணியும் நீங்கியது. ஆபுத்திரனை எவரும் நாடவில்லை. சாவக நாட்டு மக்கள் பசியால் இறக்கின்றனர் என அறிந்த ஆபுத்திரன் அந்நாட்டுக்குக் கப்பல் ஏறினான். அன்றிரவு பல்லவத்தில் இறங்கிய ஆபுத்திரனைக் கவனியாமல் கப்பல் மாலுமி விட்டுச் சென்றுவிட்டான்.

மறுநாள் காலை யாருமற்ற தீவில் தான் விடப்பட்டதை அறிந்து, தான் மட்டும் தனித்து வாழ மனமின்றி அமுதசுரபியைக் கோமுகிப் பொய்கையில் போட்டுவிட்டு, உயிர் நீத்தான். முன்பு ஆபுத்திரனுக்கு ஏழு நாள் வரை பாலூட்டிய பசு சாவக நாட்டில் போய்ப் பிறந்துள்ளது. அதன் வயிற்றில் ஆபுத்திரன் போய்ப் பிறந்துள்ளான். அவன் பிறந்த நாளில் அற்புதங்கள் நிகழ்ந்தன. அவனைச் சாவகநாட்டு வேந்தன் மகனாக ஏற்று வளர்த்து வந்தான். அந்த ஆபுத்திரன்தான் இப்போது சாவக நாட்டை ஆட்சி புரிகிறான்.

"சோணாட்டில் இப்போது மக்கள் வறுமையால் வாடுகின்றனர். நீ உன் அமுத சுரபியைச் சும்மா வைத்திருத்தல் ஏற்புடையதன்று" என்று அறவணவடிகள் மணிமேகலைக்குக் கூறினார். அதைக் கேட்ட மணிமேகலை அவரை வணங்கிப் பிக்குணிக்கோலம் பூண்டு, அமுத சுரபியைக் கையிலேந்தி வீதியை அடைந்தாள். "கற்புடைய மாதர் இடும் பிச்சையை முதலில் ஏற்பது தகுதி" என்று கூறினாள். அதைக் கேட்ட விஞ்சை மகளாகிய காயசண்டிகை "மாதருள் சிறந்தவளாகிய ஆதிரையிடம் முதல் பிச்சை ஏற்றல் நன்று. அவள் இல்லம் புகுக" என்று கூறினாள்.

மேலும் காயசண்டிகை, மணிமேகலையிடம் ஆதிரையின் கற்புப் பற்றியும் கூறினாள். சாதுவன் என்பான் ஆதிரையின் கணவன் ஆவான். அவன் அயல் நாடு சென்று பொருள் திரட்டக் கருதிச் சில வணிகர்களுடன் கப்பலில் செல்கையில் கடும் காற்றால் கப்பல் கவிழ்ந்தது. சாதுவன் மரக்கட்டை ஒன்றைப் பற்றிக்கொண்டு நீந்திச் சென்று நாகர் வாழும் இடத்தை அடைந்தான். கப்பலிலிருந்து தப்பிக் காவிரிப்பூம்பட்டினம் சேர்ந்தோர் "கப்பல் கவிழ்ந்து இறந்தோரில் சாதுவனும் ஒருவன்" என்று ஆதிரையிடம் கூறினர். அது கேட்டு ஆதிரை அழுது துடித்தாள். தானும் இறக்கத் துணிந்து சுடலையில் விறகு அடுக்கித் தீயினை மூட்டி, அதற்குள் புகுந்தாள். அவளைத் தீயும் தீண்டவில்லை. "யான் என் செய்வேன்" என்று அழுது புலம்பினாள். அப்பொழுது வான் மொழியானது "ஆதிரை நங்காய்! உன் கணவன் இறக்கவில்லை. இப்பொழுது நாகர் வாழ் மலையில் உள்ளான். விரைவில் சந்திரதத்தன் என்னும் வணிகனது கப்பலில்

ஏறிவந்து உன்னை அடைவான். வருந்தாதே" என்று கூறியது. அது கேட்டு ஆதிரை வருத்தம் தெளிந்தாள்.

நாகர் மலையை அடைந்த சாதுவன் ஒரு மரநிழலில் தூங்கிக் கொண்டிருந்தான். நாகர்கள் அவனைக் கண்டு இவ்வுடல் நல்ல மாமிச உணவாகுமென்று எண்ணி அவனை எழுப்பினர். அவன் அவர்கள் மொழியில் உரையாடினான். நாகர்கள் அவனைத் தங்கள் தலைவனிடம் அழைத்துச் சென்றனர். சாதுவன், குருமகனோடு உரையாடினான். குருமகன் மகிழ்ந்து, "பசியால் வாடும் இவனுக்கு வேண்டிய கள்ளை யும், ஊனையும் கொடுத்துப் பின் இளைய நங்கை ஒருத்தியையும் கொடுங்கள்" என்றான். சாதுவன் "எனக்கு அவை ஒன்றும் வேண்டாம்" என்றான். "இவையன்றி மக்களுக்கு இன்பம் தருவன யாவை?" என்று கேட்டான் குருமகன். "கள்ளையும், கொலை செய்தலையும் அறிவுடையோர் விரும்பார். நல்லறம் செய்வோர் விண்ணுலகை அடைவர். தீமை செய்வோர் நரகம் செல்வர். கடலில் பிழைத்து வந்தோரைப் பேணு. வாழும் உயிரைக் கொல்லாதே" என்று அறங்களைக் கூறினான் சாதுவன். பிறகு சாதுவன் அவனிடமிருந்து விடை பெற்று, சந்திரதத்தன் என்பவனின் கப்பலில் ஏறி இந்நகரை அடைந்தான். ஆதிரையோடு வாழ்ந்து, பல தான தருமங்களையும் செய்து வந்தான்.

மணிமேகலை ஆதிரையின் மனையிற் புகுந்து நின்றாள். ஆதிரை அவளைத் தொழுது "பாரகம் அடங்கலும் பசிப்பிணி நீங்குக" என்று கூறி, ஆருயிர் மருந்தான அன்னத்தை அமுதசுரபியில் இட்டாள். அதிலுள்ள சோறு எடுக்க எடுக்கக் குன்றாது பெருகி வருவோர் பசியைப் போக்கியது. அது கண்ட காயசண்டிகை வியந்து மணிமேகலையை வணங்கி "என் தீராப் பசியையும் தீர்த்தருளீர்" என்று வேண்டினாள். மணிமேகலை ஒரு பிடி அமுதை எடுத்துக் கொடுக்க, காயசண்டிகை அதையுண்டு பசி தீர்ந்து தன் வரலாற்றைக் கூறினாள்.

"விஞ்சையர் உலகைச் சார்ந்த காஞ்சினபுரம் என்பது என் ஊர். பொதிய மலை வளம் காண்பதற்குக் கணவனும் நானும் புறப்பட்டோம்.

இடையில் காட்டாற்றின் கரையில் அமர்ந்திருந்தோம். விருச்சிகன் என்னும் முனிவன் பெரிய நாவற்கனி ஒன்றைத் தேக்கிலையில் வைத்துவிட்டு நீராடச் சென்றான். நான் அதைக் காலால் சிதைத்துவிட்டேன். நீராடி வந்த முனிவன் என்னை நோக்கி "இது தெய்வத்தன்மை உடையது. நான் பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை உண்ணும் கனி. அதை நீ சிதைத்துவிட்டாய். ஆகவே ஆகாய வழியே செல்லும் மந்திரத்தை மறந்து யானைத் தீ என்னும் நோயால் பன்னிரண்டு ஆண்டு துன்புறவாய். யான் மறுபடியும் கனியை உண்ணும் நாளில் உன் பசி நீங்கும்." என்று சாபமிட்டான். உடனே எனக்குக் கொடும் பசி தோன்றியது. அது தீராப் பசியாயிற்று. அந்தரத்தில் செல்லும் மந்திரமும் மறந்து போயிற்று. "நீ நடந்து சென்று காவிரிப்பூம்பட்டினத்தில் இருப்பாயாக" என்று சொல்லி என் கணவன் சென்றுவிட்டான். நான் இங்கு வந்துள்ளேன். என் கணவன் ஆண்டுதோறும் இந்திரவிழாவின் போது வந்து என்னைப் பார்த்துச் செல்கின்றான். இந்நகரில் சக்கரவாளக் கோட்டம் என்பது ஒன்றுண்டு. அதில் பலர் வந்து தங்கக்கூடிய அறவி என்னும் ஓர் அம்பலம் உண்டு. நீ உன் பணியைத் தொடர்ந்து செய்ய அங்கு செல்வாயாக" என்று கூறிக் காயசண்டிகை தன் ஊருக்குச் சென்றாள்.

பின், மணிமேகலை உலக அறவிக்குச் சென்று அதனை மும்முறை வலம் வந்து வணங்கினாள். சம்பாபதியையும், கந்திற்பாவையையும் போற்றித் துதித்தாள். அம்பலத்தே ஏறி அமுதசுரபியைக் கையிலேந்தி "ஆபுத்திரன் கையில் இருந்த அமுதசுரபி இது. உண்ண விரும்புவோர் வாரீர்" என்று கூறியதும் பெருந்தொகை மக்கள் வந்து உண்பாராயினர். அந்த அம்பலத்தில் உண்ணும் ஒலி என்றும் நிலைத்தோங்கியது.

மணிமேகலை பிக்குணிக் கோலத்துடன் உலக அறவியில் தங்கியுள்ளாள் என்பதைக் கேட்ட சித்திராபதி மிக்க கோபம் கொண்டாள். மணிமேகலையை இச்செயலில் இருந்து தவிர்க்க வேண்டும் என்று எண்ணி உதயகுமரனிடம் சென்று "மணிமேகலை உலக அறவியில் உள்ளாள். நீ சென்று அவளை அடைவாயாக" என்றுரைத்தாள். அவன் தேரேறி

ஆங்கே சென்று "நீ தவக்கோலம் பூண்டது ஏனோ?" என்று கேட்டான். மணிமேகலை, தன் முற்பிறப்புக் கணவன் இவன் என்பதால் உதயகுமரனை வணங்கினாள். "இவ்வுடல் பிறத்தலும், முதுமையடைதலும், நோய்வாய்ப்படுதலும், இறத்தலும் ஆகிய தன்மைகளை உடையது. இத்தன்மைகளை உணர்ந்து அருள் அறம்புரிய முனைந்தேன்." என்றுரைத்தாள் மணிமேகலை. அவள் வேற்று வடிவம் கொள்ள நினைத்து, கோயிலுள் சென்று சம்பாபதியை வணங்கி, முன்பு மணிமேகலா தெய்வம் அருளிய மந்திரத்தை உச்சரித்துக் காயசண்டிகை வடிவம் தாங்கி, அமுதசுரபியைக் கையில் ஏந்தி வெளியே வந்து நின்றாள். அவள் அவ்வாறு வந்துள்ளதை அறியாத உதயகுமரன், "உள்ளே சென்றவள் கோயிலுள் ஒளிந்துகொண்டாள்" எனக் கருதினான். அவன் சம்பாபதியை வணங்கி "நீ எனக்கு மணிமேகலையைக் காட்டாயாயின் நாள் பல ஆயினும் இங்கேயே கிடப்பேன். அவளை விட்டு நான் நகரமாட்டேன்" என்று சபதம் கூறினான்.

உதயகுமரனின் சபதம் கேட்ட ஒரு தெய்வம் "உனது சபதத்தால் ஒரு பயனும் இல்லை" என்று கூறியது. இதைக் கேட்ட உதயகுமரன் மனங்கலங்கி அரண்மனைக்குத் திரும்பினான். மணிமேகலை, காயசண்டிகை வடிவத்தோடு இருப்பதுதான் சிறந்தது என்று தீர்மானித்து அமுதசுரபியை ஏந்திக்கொண்டு, அந்நாட்டின் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ளோர்க்கு இன்மொழி கூறி அமுது அளித்தாள். "மடந்தை ஒருத்தி சிறைச்சாலைக்குள் வந்து உன்னை வாழ்த்திக் கையில் ஒரு பிச்சைப் பாத்திரம் ஒன்றிலிருந்து அங்குள்ளோர் யாவருக்கும் உணவளிக்கின்றாள்" என்று மன்னனிடம் காவலர்கள் கூறினர். மன்னன் ஆணைப்படி மணிமேகலை அங்கு அழைத்து வரப்பட்டாள். அரசன் மணிமேகலையை நோக்கி "நீ யார்? கையிலுள்ள பாத்திரம் எப்படிக் கிடைத்தது?" என்று வினவினான். மணிமேகலை "வேந்தே நீடு வாழ்க வேற்றுருவில் திரியும் நான் ஒரு விஞ்சை மகள். இது பிச்சைப் பாத்திரம். இதனைத் தெய்வம் ஒன்று எனக்கு அருளியது. இதுவும் தெய்வத் தன்மை உடையது. யானைத் தீ என்னும் தீராப்பசி நோயைத் தீர்த்தது. பசியால் வாடுபவர்களுக்கு உயிர் காக்கும் மருந்தாக உள்ளது." என்றாள். மீண்டும் மணிமேகலை "சிறைச்சாலையை

அறச்சாலையாக மாற்றவேண்டும்" என்றும் கூறினாள். மன்னனும் அவ்வாறே செய்தான்.

சிறைச்சாலை அறச்சாலையாக மாறியது. உதயகுமரன் இச்செய்திகளைக் கேட்டு மணிமேகலை இருக்கும் உலக அறவியில் ஏறினான். அதே நேரம் காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் தன் மனைவியைத் தேடிக்கொண்டு உலக அறவிக்கு வந்து சேர்ந்தான். வேற்றுருவில் இருந்த மணிமேகலையைத் தன் மனைவி என்று நிச்சயித்து, அவளருகில் சென்று பழைய நட்பினைக் கூறினான். அதை மணிமேகலை சற்றும் மதியாது அவனை விட்டு விலகி, உதயகுமரன் அருகிற் சென்று இளமை நிலையாமை பற்றி உரைத்துக்கொண்டிருந்தாள். இதைக் கண்ணுற்ற காஞ்சனன் பொறாமை கொண்டு காலங்கருதி அங்கே ஒளிந்துகொண்டிருந்தான். அயலான் ஒருவன் வந்திருப்பதைக் கருதி இரவில் வருவோம் என்று உதயகுமரன் அங்கிருந்து சென்றுவிட்டான். யாவரும் உறங்கிய பின்னர் உதயகுமரன் மீண்டும் அங்கு வந்தபொழுது காஞ்சனன் விரைந்து சென்று, அரசிளங்குமரனான உதயகுமரனை வாளால் வெட்டி வீழ்த்தினான். காயசண்டிகை உருவில் இருந்த மணிமேகலையை நெருங்கும்பொழுது "காஞ்சன் நில். இவள் உன் மனைவியாகிய காயசண்டிகை அல்லள். இவள் வேற்று வடிவம் தாங்கும் மணிமேகலை. காயசண்டிகையின் கதையைக் கேட்பாயாக! அவள் எவரும் செல்லக்கூடாத விந்தமலைக்கு மேலே சென்று, அம்மலையைக் காக்கும் "விந்தா கடிகை" என்பவளின் வயிற்றில் அடங்கிவிட்டாள். உதயகுமரனைக் கொன்ற பழியை நீ அனுபவிப் பாய்." என்று அங்குள்ள கந்திற்பாவைத் தெய்வம் கூறியது. அது கேட்டுக் காஞ்சனன் மிக்க கவலையோடு தன் விஞ்சை நகரை அடைந்தான்.

சம்பாபதி கோட்டத்தில் இருந்த மணிமேகலை தன் வேற்று வடிவத்தால் உதயகுமரன் இறந்ததைக் கண்டு தன் காயசண்டிகைக் கோலத்தைக் களைந்தாள். "காதலனே சென்ற பிறவியில் நீ பாம்பு தீண்டி இறந்தபோது உடன்கட்டை ஏறினேன். இப்போது காஞ்சனன் வாளால் மாண்டனை" என்று புலம்பி அவன் உடலைத் தீண்ட

நெருங்கையில் "செல்லாதே, பிறப்பறுக்க முயல்வோய் செல்லாதே" என்று கந்திற்பாவைத் தெய்வம் கழறிற்று. மேலும் அத்தெய்வம் "முற்பிறப்பில் சமையற்காரன் வழுக்கி விழ அவன்மேல் இரக்கம் காட்டாது உன் கணவன் இராகுலன் அவனை வாளால் வெட்டினான். அவ்வினையால் இப்பொழுது உன் கணவன் கொல்லப் பட்டான். இன்னும் கேட்பாயாக... சோழன் உன்னைச் சிறை வைப்பான். இராசமாதேவி உன்னைத் துன்புறுத்துவாள். அறவண அடிகள் விடுவிப்பார். ஆபுத்திரனைக் காண்பாய். மணிபல்லவம் செல்வாய். வஞ்சி நகர் புகுவாய். பல சமயக் கொள்கைகளை அறிவாய். கச்சி சென்று தருமம் கேட்டு இப்பிறப்பை அறுப்பாய். பின் உத்திர மகதத்தில் ஆணாகப் பிறந்து, அருளறம் பூண்டு, சார்பு அறுத்து, புத்தன் தலை மாணாக்கன் ஆவாய். இறுதியில் வீடு பெறுவாய்." என்று வருவதையும் கூறியது. இதைக் கேட்ட மணிமேகலை கவலை நீங்கி அமைதி அடைந்தாள்.

உதயகுமரன் கொல்லப்பட்டதைச் சக்கரவாளத்து முனிவர்கள் அறிந்தனர். வெட்டுண்ட உடலை ஓரிடத்தில் வைத்துவிட்டு, மணிமேகலையை இன்னோரிடத்தில் ஒளிந்திருக்குமாறு செய்துவிட்டு, வேந்தனிடம் சென்று, நடந்தன கூறி "அரசே மணிமேகலை மேல் வைத்த காமத்தால் இன்று உதயகுமரன் மடிந்தான்" என்று கூறினர். "இச் செய்தி பிற வேந்தர் செவியிற் படுவதன்முன் இவனுக்குரிய ஈமச் சடங்குகளைச் செய்து, மணிமேகலையையும் கைது செய்க" என்று கட்டளையிட்டான் மன்னன்.

மகன் கொலையுண்ட செய்தி கேட்ட தாய் இராசமாதேவி உள்ளம் குலைந்து, மணிமேகலையில் சீற்றம் கொண்டு, அவளைத் துன்புறுத்த நினைத்தாள். தவத்திற் சிறந்த மணிமேகலையைச் சிறை வைத்தல் அறமாகாது என்று மன்னனுக்குக் கூறி, அவளை விடுதலை செய்வித்துத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றாள். மணிமேகலையைக் கொடுமைப்படுத்தினாள். பட்டினி போட்டாள். மணிமேகலைக்கு ஒரு துன்பமும் நிகழாததைக் கண்டு அஞ்சி "மகனை இழந்த துயரம் தாங்காது இவ்வாறு செய்தேன். என்னைப் பொறுத்தருள்க" என்று

மணிமேகலையிடம் தேவி வேண்டினாள். மணிமேகலை இராசமாதேவிக்குப் பல அறநீதிகளை எடுத்துக் கூறினாள். "நீ சென்ற பிறவியில் என் கணவனாயிருந்த இராகுலனின் தாயாதலின், உன்னை நல்வழிப் படுத்த விரும்பினேன். இன்றேல் விண்ணிலே சென்றிருப்பேன். எனவே தடுமாற்றம் நீங்கி, நான் உரைக்கும் நல்லுரையைக் கேட்பாயாக. கொலை, களவு, காமம், பொய், கள் ஆகிய ஐந்தும் துன்பம் தருபவை. குற்றம் துறந்தோர் சீலமுடையவராவர். வறியோர்க்கு அளிப்பவர் வாழ்பவராவர்." என்று கூற இராசமாதேவி மனந்தெளிந்து மணிமேகலையை வணங்கினாள். அது கண்ட மணிமேகலை "நீ மன்னனின் மாபெருந்தேவியாதலால், என்னை வணங்குதல் தகாது" என்று கூறித் தானும் அவளைப் பணிந்து வணங்கினாள்.

சித்திராபதி, உதயகுமரன் கொலையுண்டதைக் கேட்டும், மணிமேகலை சிறைப்பட்டதை அறிந்தும் வருந்தினாள். மணிமேகலையைக் காப்பாற்றக் கருதி, அரசமாதேவியைச் சந்தித்து வணங்கி "உதயகுமரன் இறந்தது மட்டுமல்ல, இந் நகரத்திற்கும் மணிமேகலையால் பெரும் துன்பம் ஏற்படும் கேட்பாயாக!" என்று கூறி நடந்த வரலாற்றைக் கூறத் தொடங்கினாள் சித்திராபதி.

முன்னர், மன்னன் நெடுமுடிக்கிள்ளி இந் நகரின் கடற்கரைச் சோலையில் அழகிய மங்கை ஒருத்தியைக் கண்டு காதலித்து, அவளுடன் சோலையில் ஒரு மாதம் வரை இருந்தான். அவள் அவனுக்குச் சொல்லாது அகன்று சென்றுவிட்டாள். மன்னன் அவளைத் தேடி அலைந்து திரியும்போது எதிரில் ஆற்றல் மிக்க சாரணர் ஒருவரிடம் "அவளை எங்காவது கண்டதுண்டா?" என வினவினான். அது கேட்ட சாரணர் "அரசே, நான் அவளைக் காணவில்லை. ஆனால் பண்டு நிகழ்ந்தது அறிவேன். அவள் நாகநாட்டு மன்னன் மகள். அவள் பெயர் பீலிவளை என்பதாகும். அவள் பிறந்தபோது நிமித்தகன், "இவள் சூரிய குலத்து அரசன் ஒருவனைக் கூடிக் கருவுறுவாள்" என மன்னனிடம் கூறினான். அவளே நீ கூறிய பெண் ஆவாள். இனி, அவள் வரமாட்டாள். ஆனால், அவள் பெற்றெடுத்த மகன் வருவான். "இன்னொன்று கேள்! இந்திரவிழாச் செய்யாவிடின், மணிமேகலா தெய்வத்தின் சொற்படி,

உன் நகரினைக் கடல் கொள்ளும். ஆகவே இந்திரவிழாவை ஆண்டு தோறும் மறவாது செய்து வருக" என்றுரைத்து அகன்றார்.

"மணிமேகலையைத் துன்புறுத்தினால் மணிமேகலா தெய்வம் நாட்டுக்குக் கேடு தரும். எனவே அவளை என்னிடம் தருவாயாக!" என்று இராசமாதேவியிடம் வேண்டினாள் சித்திராபதி. "தீயொழுக்க முள்ள உன் மனைக்கு அவள் வராள். உன் பரத்தமைத் தொழிலை வெறுத்துவந்தவள் இவள்" என்று இராசமாதேவி மறுத்துவிட்டாள். அதன் பின்னர் மணிமேகலை வான்வழியாகச் சென்று ஆபுத்திரன் நாடு அடைந்து ஒரு பொழிலில் தங்கியிருந்தாள்.

மணிமேகலை தங்கியிருந்த பொழிலுக்கு நாகபுர மன்னன் புண்ணியராசன் தன் பெருந்தேவியுடன் வந்திருந்தான். மணிமேகலை, மன்னனை நோக்கி "என் கையில் இருக்கும் இப்பாத்திரம் முன்னர் உன் கையில் இருந்ததுதான். செல்வத்தால் யாவும் மறந்தனை போலும். மணிபல்லவம் சென்று புத்த பீடிகையைத் தரிசித்தால், உன் பழம் பிறப்பை அறிவாய். ஆதலின் அங்கு வருக!" என்று கூறி, வான்வழியாக மணிபல்லவம் அடைந்து, புத்த பீடிகையைத் தரிசித்தாள். அது பழம் பிறப்பை மணிமேகலைக்கு உணர்த்தியது. ஆபுத்திரன் கப்பலேறி மணிபல்லவம் அடைந்தான். தரும பீடிகையால் தன் பிறப்பு உணர்ந்தான்.

புண்ணியராசன் கப்பல் ஏறி மணிபல்லவம் அடைந்தான். அங்கு, மணிமேகலை புண்ணியராசனை வரவேற்று அழைத்துச் சென்று புத்த பீடிகையைக் காட்டினாள். அவன் அதனை வலம் வந்து தொழுது தன் பழம் பிறப்பை உணர்ந்தான். தனது பழம் பிறப்பில் அமுதசுரபி என்னும் பாத்திரத்தை அளித்த சிந்தாதேவியை வணங்கினான். பின், மணிமேகலையுடன் சென்று கோமுகிக் கரையில் ஒரு புன்னை மரநிழலில் இருந்தான். அங்குள்ள காவல் தெய்வமாகிய தீவதிலகை புண்ணிய ராசனை நோக்கி "உயிர்களின் பெருந்துயர் போக்கிய பெரியோய்! அந்தக் காலத்தில் உன்னை இங்கே விட்டுச் சென்றதற்காக உயிர் நீத்த ஒன்பது செட்டிகளின் எலும்புகளையும், புன்னை மரநிழலில் புதையுண்ட உன் எலும்புகளையும் காண்பாயாக!" என்று கூறினாள்.

பின், தீவதிலகை மணிமேகலையை நோக்கி "காவிரிப் பூம்பட்டினத்தைக் கடல் கொண்ட கதை கேட்பாய்! நாக நாட்டரசன் மகள் பீலிவளை தன் குழந்தையுடன் இங்கு வந்து புத்த பீடிகையைத் துதித்தாள். அப்பொழுது கம்பளச் செட்டியின் கப்பல் வந்து தங்கியது. பீலிவளை அவனிடம் சென்று "இவன் மன்னர் குமரன். இவனைக் கொண்டு சென்று மன்னனிடம் சேர்ப்பாயாக!" என்று சொல்லிக் குழந்தையை அவனிடம் கொடுத்தாள். அவன் மகிழ்ந்து கடலில் செல்லும்போது மரக்கலம் உடைந்து கவிழ்ந்துவிட்டது. தப்பிப் பிழைத்த சிலர் மன்னனிடம் சென்று "புதல்வன் இறந்தான்" என்று அறிவித்தனர். அரசன் சோகம் கொண்டு மகனைத் தேடித் திரிந்தான். இந்திரவிழாச் செய்தலையும் மறந்தான். மணிமேகலா தெய்வம் "இந் நகரைக் கடல் கொள்வதாக!" என்று சபிக்க உடனே கடல் நகரை அழித்தது. அரசன் வேறோர் இடம் சென்றான். அறவணவடிகள், மாதவி, சுதமதி ஆகிய மூவரும் வஞ்சி நகரை அடைந்தனர்." என்று கூறிச் சென்றாள்.

ஆபுத்திரனாகிய புண்ணியராசன் மணலைத் தோண்டித் தன் பழைய உடம்பின் எலும்பைக் கண்டு மயக்கம் அடைந்தான். உடனே மணிமேகலை "இதற்காகவா நீ இங்கு வந்தாய்? உலகாளும் அரசர்கள் அறத்தை மேற்கொண்டால் குற்றம் தொலையும் அல்லவா? அறம் என்பது:- உயிர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், உறங்க உறையுளையும் தருவதே ஆகும். நீ வருந்தாதே! உன் நாட்டுக்குச் செல்வாயாக! நான் வஞ்சி மாநகர் செல்கிறேன்" என்று கூறி அவனைத் தேற்றினாள்.

"அறம் எனப்படுவது யாது? எனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்"

........ (ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை)

மணிமேகலை வான்வழியாகச் சென்று, வஞ்சி மாநகரை அடைந்து கண்ணகி ___ கோவலன் படிமங்களைத் தொழுது அழுதாள். அவள் முன்

கண்ணகி படிவம் தோன்றி, "நான் பண்டைப் பிறவியில் மதுரையை எரித்தபோது, தோன்றிய மதுராபதித் தெய்வம் முன்னமே எனக்கொரு சாபம் உண்டு என்பதைத் தெரிவித்தது. அந்நகரைத் தீயிட்டதால் நேர்ந்த தீவினையும் தொடர்ந்து பல பிறவிகள் எடுத்து உழன்று கபிலநகரை அடைவோம். நீ இந்நகரில் பல சமயவாதிகள் கூறுவதைக் கேட்பாய். அவை உண்மை என்று உனக்குத் தோன்றாது. பின்பு புத்த சமயத்தில் நிலைத்திருப்பாய். சமயக் கணக்கர் உன்னைப் பெண் என்றும் இளையவள் என்றும் இகழ்வர். ஆதலால் நீ வேற்றுருக்கொண்டு செல்க" என உரைத்தது. மணிமேகலை அத்தெய்வத்தை வணங்கினாள். மணிமேகலா தெய்வம் உரைத்த மந்திர வலிமையால் ஒரு முனிவன் வேடந்தாங்கி வஞ்சி நகர்ப் புறச்சேரி அடைந்தாள் மணிமேகலை.

மணிமேகலை வஞ்சியில் பல்வேறு சமயவாதிகளைச் சந்தித்து அவர்களின் சமயக் கொள்கைகளைக் கேட்டு அறிந்துகொண்டாள். முதலில் அளவைவாதியைச் சந்தித்துக் காட்சி அளவை, கருத்து அளவை, உவமை அளவை, ஆகம அளவை, அபாவ அளவை, மீட்சி அளவை, உள்ள நெறி அளவை ஆகியவற்றைப் பற்றி அறிந்தாள். அத்தோடு சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகியோரின் கருத்துக்களையும் கேட்டு அறிந்தாள்.

சமயக் கணக்கர் உரைத்த சமயக் கருத்துக்களைக் கேட்டறிந்த மணிமேகலை, வஞ்சி நகர்ப் புறச்சேரியை விட்டு விலகி வஞ்சி நகருக்குள் சென்றாள். அங்குள்ள தெருக்கள், மன்றம், சந்தி, சதுக்கம், செய்குன்றம் ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்தாள். பின், புத்த துறவிகள் உறையும் தவப் பள்ளிக்குச் சென்றாள். அங்கு தவம்புரிந்துகொண்டிருக்கும் கோவலன் தந்தை மாசாத்துவானை வணங்கினாள். தனக்கு நேர்ந்தவற்றைத் தன் பாட்டனுக்கு எடுத்தரைத்தாள். அவன் தன் துறவையும், தன் முன்னோர் ஆற்றிய புத்தமதத் தொண்டையும் கூறினான். மேலும், மாசாத்துவான் "காவிரிப்பூம் பட்டினம் கடலாற் கொள்ளப்பட்டதை அறிந்தேன். அறவணவடிகள், மாதவி, சுதமதி ஆகிய மூவரும் கச்சியம்பதி

சென்றனர். அங்கு மழையின்மையால் வறுமை உண்டாயின்று. பல உயிர்கள் மடிந்தன. ஆதலால் அந்நகரம் அடைந்து எல்லா உயிர்களையும் பாதுகாத்தல் உன் கடனாகும்" என்றுரைத்தான்.

மணிமேகலை தன் பாட்டனை வணங்கி, அமுதசுரபியைக் கையில் ஏந்திக்கொண்டு, வஞ்சி நகரிலிருந்து வான் வழியே சென்று கச்சியம் பதியை அடைந்தாள். புத்த சயித்தியத்தை வணங்கிப் பொழில் ஒன்றில் தங்கியிருந்தாள். அவள் வருகையை அறிந்த கச்சி வேந்தன் அங்குச் சென்று அவளது அறச்செயலைப் பாராட்டினான். தெய்வம் ஒன்று தன்னிடம் மணிமேகலையைப் பற்றிக் கூறியதையும் உரைத்தான். மணிமேகலை அமுத சுரபியைப் பாதபங்கய பீடிகையின் மீது வைத்து "எல்லா உயிரும் உணவுண்ண வருக!" என்று அழைத்தாள். குருடர், செவிடர், முடவர், ஆதரவு அற்றோர், நோய்வாய்ப்பட்டோர் முதலிய பலரும் திரண்டு வந்தனர். அனைவருக்கும் உணவளித்துப் பசியைத் தீர்த்தாள். அப்போது அறவணவடிகளும், மாதவியும், சுதமதியும் மணிமேகலையின் அறச்சாலையை அடைந்தனர். அவர்களை உபசரித்த மணிமேகலை தன் ஆண் உருவம் நீங்கிப் பெண் உருவம் ஆனாள்.

மணிமேகலை கச்சியம்பதியில் அறவணவடிகளை வணங்கி "அடிகளே! அறம் உரைத்து அருளுக!" என வேண்டினாள். அறவண வடிகள் அவளை வாழ்த்தினார். காவிரிப்பூம்பட்டினம் இந்திரன் இட்ட சாபத்தால் அழிந்த வரலாற்றையும் கூறினார். மணிமேகலை இச் செய்தியை முன்னரே தீவதிலகை சொல்லக் கேட்டதாகக் கூறினாள். பின், மணிமேகலை தான் சமயக் கணக்கரைச் சந்தித்துப் பல்வேறு சமயக் கருத்துக்களைக் கேட்டறிந்ததையும் கூறினாள். அவற்றின் பொருளை முற்றாகத் தன்னால் நம்பமுடியாததையும் தெரிவித்தாள். அதைக் கேட்ட அறவணவடிகள் அளவைகள், அனுமானம், பக்கம், நன்பக்கம், பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப்போலி ஆகியவற்றையும், மற்றைய அறங்களையும், பொருளின் உண்மைத் தன்மையையும், அறியும் திறத்தையும் மிக விளக்கமாக எடுத்துரைத்தார். தானம் செய்தலை மேற்கொண்டு, சீலத்தில் முதன்மை பெற்று, பழம் பிறப்பின் உணர்ச்சியை அடைந்த மணிமேகலை, "புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம்

கச்சாமி" என்னும் முத்திற மணிகளையும், மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் மும்முறை சொல்லி, வணங்கி அறவணவடிகளைச் சரணா கதியாக அடைந்தாள். அறவணவடிகள் புத்த தருமத்தை மணிமேகலைக்கு உபதேசிக்கத் தொடங்கினார். பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப் பயன் என்னும் பன்னிரண்டு நிதானங்களை எடுத்து விரித்துரைத்தார். பிறகு, நால்வகை வாய்மை, ஐவகைக் கந்தம், அறுவகை வழக்கு, நால்வகை நயம் ஆகியவற்றையும் எடுத்துக் கூறினார். "வினை வருதலும், வீடு பேறும் அவரவரால் அமைவதே, பிறரால் வருபவை அல்ல" என்றும் "உலகத் துன்பத்திற்குக் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றுமே காரணம்" என்றும் அறிவுறுத்தினார். மணிமேகலை அவர் காட்டிய நன்னெறியில் நின்று "பவத்திறம் அறுப்பேன்" எனத் தவம் இயற்றலானாள்.

"ஞான தீபம் நன்கனம் காட்டத் 262
தவத் திறம் பூண்டு தருமம் கேட்டுப்
'பவத் திறம் அறுக' எனப் பாவை நோற்றனள் என்."
........(பவத்திறம் அறுத்த காதை)

## நிறைவாக

மணிமேகலை நூல் புத்தமதம் பேசும் ஓர் அரிய இலக்கியமாகும். பல சமயக் கொள்கைகளை ஆழ்ந்து ஆய்ந்து உணர்ந்த ஆசிரியர் இந்நூல் முழுவதும் மணிமேகலையின் துறவையே முதற்பொருளாக வைத்து நகர்த்திச் செல்லும் பாங்கினையும் காண்கின்றோம். இளமை நீங்கும், உடல் அழியும், அழகு சிதையும், இன்பம் நிலையா, செல்வம் நிலையா போன்றவற்றின் நிலைகள் பற்றிக் கூறி, பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் இவ்வுலக இயற்கை என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். பசிக் கொடுமை உணர்ந்து "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற உயர் பெருங்கொள்கை நிலைநாட்டப்படுகின்றது. உண்ண உணவும், உடுக்க உடையும், உறங்க உறையும் கொடுப்பதை அறம் என்பர்.

மணிமேகலை பரத்தையர் குலத்தவள். அவள் ஒரு கன்னி. அவள் கன்னிப் பருவத்தில் துறவியானாள். இவற்றை வைத்தே சாத்தனார் பெரும் காப்பியம் சமைத்தார். அவளின் பரத்தைக் குலத்தையும், கன்னிப் பருவத்தில் துறவியானதையும் முன்நிறுத்திக் காட்டி அதிலும் அவர் வெற்றி கண்டார். பரத்தை ஒழிப்பு, சிறை ஒழிப்பு, மது ஒழிப்பு, சாதி ஒழிப்பு ஆகிய பல சமுதாயச் சீர்திருத்தங்களையும் காண்கின்றோம். மணிமேகலையில் பல சிறு கதைகள் காணப்படுகின்றன. அவை காப்பியத்தோடும், அறநெறி யோடும் தொடர்புபட்டதாகவும், படிப்போர் சிந்தையைத் தொட்டுச் செல்வதாகவும் அமைந்துள்ளன.


புத்த மதத்தின் அடிப்படைக் கொள்கைகளான பட்டினியின்மை, ஒழுக்கம் தவறாமை, உயிர்க் கொலையின்மை, பிறவா நிலையடைதல், நல்லறங்கள் புரிதல், அறநிலை காக்கும் அரசு ஆகியவைகளை மணிமேகலை வலியுறுத்தி நிற்கின்றது. எல்லாத் துன்பங்களுக்கும் ஆசையே காரணம். ஆசையின்றேல் துன்பம் இல்லை, பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. ஆசையற்றோர் நல்லறம்புரிவர், துன்பமின்றி வாழ்வர். மணிமேகலையிற் கூறியுள்ள இவ்வறநிலைகள் மக்களை ஆற்றுப்படுத்தி நிற்கின்றன.

**சோழநாட்டின்** தலைநகரம் **காவிரிப்பூம்பட்டினம், பாண்டி** நாட்டின் தலைநகரம் **மதுரை, சேர** நாட்டின் தலைநகரம் **வஞ்சி, தொண்டை** நாட்டின் தலை நகரம் **காஞ்சி** ஆகிய நான்கு நகரங்களைப் பற்றி மணிமேகலையிற் காண்கின்றோம். **புகார் நகரில்** சோலைகள், கோயில்கள், மாளிகைகள், காவிரி ஆறு ஆகியவை இருந்தன. ஆங்கே வணிகர், செல்வர்கள், இசை வல்லுநர், ஓவியம் தீட்டுவோர், தொழிலாளர் கள், புலவர்கள் ஆகியோர் இருந்தனர். **மதுரையில்** அறிவிலும், கல்வியிலும், ஒழுக்கத்திலும், கொடையிலும் சிறந்தோர் பலர் இருந்தனர். **வஞ்சியில்** பல்வேறுபட்ட தொழிலாளர்கள், அறிஞர்கள், மதவாதிகள், வணிகர் ஆகியோர் பலர் இருந்தனர். **காஞ்சியில்** தவம்புரிவோர், சமயவாதிகள், சான்றோர், பதினெட்டு மொழி பேசும் பல நாட்டு மக்கள் ஆகியோர் பலர் இருந்தனர். இந்நகரைச் சோழ மன்னர்கள் ஆண்டு

வந்தனர். ஆங்கே புத்தர் கோயில், பூஞ்சோலை, குளம், புத்தபீடிகை ஆகியனவும் இருந்தன.

மணிமேகலா தெய்வம், சிந்தாதேவி, தீவதிலகை ஆகியோர் மூலம் பல தெய்வீக நிகழ்ச்சிகளையும் காண்கின்றோம். ஊழ்வினை, முற்பிறப்பு, சபித்தல், தெய்வம் அளித்த அமுதசுரபிப் பாத்திரம் ஆகிய தெய்வீகச் செயல்களையும் பல இடங்களிற் சொல்லிக் காட்டி மக்களைச் சீலர்களாக்கும் நோக்கினையும் காண்கின்றோம். மணிமேகலை பல சமயவாதிகளின் கருத்துரைகளைக் கேட்டு மனம் குலைந்த நிலையில் இருக்கையில், அறவணவடிகள் அவளுக்குப் புத்தமதப் போதனைகளை உபதேசித்தார். மனந்தெளிந்த மணிமேகலை "புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்னும் முத்திற மணிகளை மனத்திற் பதித்துத் தவத்தை மேற்கொண்டாள்.

❖❖❖





# 5

# சீவக சிந்தாமணியில் உலாவும் கதாநாயகியர்

ஐம்பெருங் காப்பியங்களில் **சீவக சிந்தாமணி** மூன்றாவது நூலாகும். இதை யாத்தவர் **திருத்தக்க தேவர்**. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்த நூலாகும். இது சமண சமயத்தைச் சார்ந்தது. **சீவகன்** கதாநாயகனாகவும், அவன் **மனைவியர் எண்மர்** கதாநாயகியராகவும், **கட்டியங்காரன்** எதிர்முகமாகவும், **சச்சந்தன், விசையை, நந்தட்டன், கந்துக்கடன், நண்பர்கள்** ஆகியோர் உப பாத்திரங்களாகவும் தோன்று கின்றனர். இதில் கடவுள் வாழ்த்துடன் 3147 விருத்தப் பாக்கள் உள்ளன. இந்நூல் பதின்மூன்று இலம்பகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கதை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் தமிழன்னையின் சிந்தாமணி ஆபரணமாக விளங்குகிறது. சீவகன் எட்டுப் பெண்களை மணம் செய்துகொண்ட காரணத்தால் இந்நூலை **"மணநூல்"** என்றும் கூறுவர்.

## சீவகன் வரலாறு

ஏமாங்கத நாட்டை அதன் தலைநகரான இராசமாபுரத்திலிருந்து **சச்சந்தன்** என்னும் மன்னன் அரசாண்டு வந்தான். வீரமும், தீரமும், பேரறிவும் கொண்ட இவன், விதைய நாட்டு அரசனான தன் மாமன் மகள் **விசையை** என்பவளை மணந்தான். அவள் பேரழகில் மயங்கினான். தன்னையும் மறந்தான். பின்விளைவுகளை யோசியாது, தன் ஆட்சிப் பொறுப்பைக் **கட்டியங்காரன்** என்னும் அமைச்சனிடம் ஒப்படைத்தான். அந்தப்புரமே சுவர்க்கம் என்று கிடந்தான். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் கருவுற்றிருந்த விசையை மூன்று கனவுகளைக் கண்டு அவற்றைத் தன் கணவனிடம் கூறினாள். நிகழப்போகும் தீமைகளை உணர்ந்த சச்சந்தன் வானில் பறக்கும் மயிற்பொறி ஒன்றை உருவாக்கி, அதை இயக்கும் முறைகளை விசையைக்குக் காட்டிக் கொடுத்தான். கனவில் கண்டதுபோல் கட்டியங்காரன் ஒரு நாள் தன்னைச் சிறை பிடிக்கத் திட்டம் போடுவதை அறிந்தான் சச்சந்தன். ஒரு நாள் கட்டியங்காரன் படையுடன் அரசன் இருந்த அரண்மனையைச் சுற்றி வளைத்துக்கொண்டான். இதை உணர்ந்த சச்சந்தன் தன் மனைவி விசையை மயிற்பொறியில் ஏற்றி வான்வழியே அனுப்பிவிட்டு, கட்டியங்காரனுடன் கடும் போரிட்டு மாண்டான்.

விசையை ஏற்றிச் சென்ற மயிற்பொறி நகரத்துக் காட்டில் இறங்கியது. அங்கு அவள் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அஞ்குள்ள சுடுகாட்டில் வதியும் தெய்வம் ஒன்று சண்பகமாலை என்னும் தோழி உருவெடுத்து வந்து உதவியது. அப்போது **கந்துக்கடன்** என்னும் வணிகன் தன் மகன் சடலத்தைப் புதைக்க அங்கு வந்தான். அவனைக் கண்ட விசையையும், தெய்வமும் ஓரிடத்தில் மறைந்துகொண்டனர். தனியே கிடந்த குழந்தையைக் கந்துக்கடன் கண்டு தூக்கி எடுத்துக்கொண்டான். அக் குழந்தை தும்மியதைக் கண்ட தெய்வம் "சீவ" என்று வாழ்த்தியது. இது வணிகன் காதில் "சீவகன்" எனக் கேட்டது. எனவே அவன் அக் குழந்தைக்கு சீவகன் என்று பெயர் சூட்டி, அக் குழந்தையைக் கந்துக்கடனும், அவன் மனைவி சுநந்தையும் கண்ணும் கருத்துமாக வளர்த்துவந்தனர்.

சீவகன் நன்கு வளர்ந்து அச்சணந்தி என்ற ஆசிரியரிடம் பல கலைகளைக் கற்றுத் தேர்ந்தான். அவரிடம் தன் தந்தையின்

வரலாற்றைக் கேட்டறிந்தான். தன் தந்தையைக் கொன்று அரசைக் கைப்பற்றிய கட்டியங்காரனை எதிர்க்கத் துணிந்தான். ஆனால் அச்சணந்தி ஆசிரியர் அவன் கடுங்கோபத்தைத் தணித்துக் கட்டியங்காரனை ஓராண்டுக்குமுன் எதிர்பதில்லை என்ற வாக்கை அவனிடமிருந்து பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் சீவகன் எட்டுப் பெண்களை மணந்து கொண்டான். தன் மாமன் கோவிந்தராசன் துணையோடு கட்டியங்காரனை எதிர்த்துப் போர் தொடுத்து வெற்றி கொண்டு தன் அரசை மீட்டுக் கொண்டான். சீவகன் தன் மனைவியர் எண்மருடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து அரசாண்டு வந்தான். அவன் ஆட்சியில் மக்கள் சந்தோசமாக இன்புற்று வாழ்ந்துவந்தனர். பிறகு அவன் உலகின் நிலையாமையை உற்று உணர்ந்து அறிந்து தன் மகன் சச்சந்தனுக்கு ஆட்சியை அளித்துத் துறவு பூண்டான்.

அதே நேரத்தில் சீவகன் தாயான விசையை தனக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்துவந்த சண்பகமாலை என்ற தோழியுருவில் வந்த தெய்வத்துக்குக் கோயில் கட்டி வழிபட்டுவந்தாள். சீவகன் பிறந்த இடத்தை அறக்கோட்டம் ஆக்கினாள். அவள் துறவை மேற்கொள்ள விரும்பினாள். அதைக் கேட்டுச் சீவகனும், தேவியரும் மனம் குலைந்தனர். விசையை, சுநந்தை முதலியோர் பம்மை கோவிலை அடைந்து துறவை மேற்கொண்டனர்.

இனி, சீவகன் மனைவியரான காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் எட்டு மகளிரின் மாண்புகளையும் பார்ப்போம்.

## காந்தருவதத்தை

சீவகன் இராசமாபுரத்தில் வாழ்ந்துவரும் நாளில் யவதத்தன் என்னும் வணிகன் மரபில் வந்தவனும் பதுமை என்பாள் கணவனுமான சீதத்தன் என்னும் வணிகன் பெருஞ்செல்வனாய் இருந்து பல கப்பல்களுடன் வாணிகம் செய்துவந்தான். பல ஆண்டுகளின்பின் தன் செல்வத்தைப் பெரும்பாலும் இழந்து ஒரே ஒரு கப்பலில் சரக்குகளை ஏற்றி வாணிபம் செய்யத் திட்டமிட்டான். நல்ல நாளில் தானங்கள் செய்து,

தெய்வத்தை வணங்கி கப்பலில் புறப்பட்டு ஒரு தீவைச் சென்றடைந்தான். அத்தீவின் மன்னனைக் காணிக்கையுடன் கண்டு அவன் இசைவுடன் வாணிபத்தைத் தொடங்கினான். ஆறுமாத காலத்தில் தான் கொண்டு வந்த பொருள்கள் யாவும் விற்கப்பட, அத்தீவில் தான் வாங்கிய பொருள்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு தன் ஊருக்குத் திரும்பினான். கடல் நடுவில் கப்பல் செல்லும்போது பெருங் காற்றடித்து பாய்மரம் முறிய கப்பல் கடலில் ஆழ, அதில் இருந்தோர் நீரில் மூழ்க, சீதத்தன் பாய்மரத் துண்டு ஒன்றைப் பற்றிக்கொண்டு கடற்கரையைச் சேர்ந்தான்.

அப்பொழுது தன்னை நோக்கி வந்த தரன் என்பவனிடம் தன் நிலையைக் கூற, தரன் அவனுக்கு உதவி விருந்தளித்தான். தரன், சீதத்தனை நோக்கி "எங்கள் அரசன் கருடவேகன் இவ் வெள்ளி மலை வேந்தன். அவன் தேவி தாரணி. அவர்கள் மகள் பேரழகி காந்தருவதத்தை. அவளை மணக்க விரும்பிப் பல அரசர்கள் முந்தியடித்துக் கொண்டுவந்தனர். அரசன் நிமித்திகனை அழைத்துக் காந்தருவதத்தையின் விவாகம் பற்றிக் கேட்க, நிமித்திகன் "இளவரசியின் நல்வாழ்வு இராசமாபுரத்திலேயே நிகழும்" என்றான். அரசனும் இதை ஏற்றான்." என்ற செய்திகளைக் கூறி, சீதத்தனையும் அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான் தரன்.

அங்கு அரசனின் இசைவு பெற்று, அரசனைக் கண்டு வணங்கி சீதத்தனை அறிமுகம் செய்து வைத்துத் தம் ஏழு தலைமுறையாகத் தொடரும் நட்பு, அறம் பற்றியும், யான் அரசன் நீ வணிகன் என்ற பாகுபாடின்றி இனிமையாகப் பேசித் தன் மனைவி தாரணியையும் அறிமுகப்படுத்திக்கொண்டான் அரசன். பின் காந்தருவத்தையைக் கண்ட சீதத்தன் அவளை அழகுத் தெய்வமோ? மாணிக்கக் கொடியோ? மின்னலோ? மணிப்பாவையோ? என்று வியந்து நோக்க, அரசன் கருடவேகன் "இவள் வீணை மீட்டுவதில் கைதேர்ந்தவள். இவளை இராசமாபுரத்துக்கு அழைத்துச் சென்று அவளை வீணையில் வெல்லுபவனுக்கு மணம் செய்துவைக்க வேண்டும்" என்று சீதத்தனிடம் கேட்க, அவனும் அதற்கு இசையத் தாரணியும் அதுவே தன் மகளுக்கு உகந்தது என்று கூறினாள்.

அரசன் கருடவேகன் தன் மகளுக்குச் சீதனமாகப் பொன்னும், பொருளும், அணிகலன் நிரம்பிய பெட்டிகள், யவனப் பேழைகள், சிறந்த கட்டில்கள், நிலைக் கண்ணாடிகள், புனுகுச் செப்பு, தூப முட்டி, ஆயிரம் யாழ்கள் முதலியன கொடுத்து, தன் மகளின் தோழி வீணாபதி என்பவளையும், தரனையும் துணையாகப் போகும்படியும் பணித்தான். அதன்படி காந்தருவத்தை, வீணாபதி, தரன் ஆகியோருடன் இராசமாபுரம் அடைந்து நடந்தேறிய விடயங்களையும், காந்தருவதத்தையின் திருமணம் பற்றியும் தன் மனைவியான பதுமையிடம் எடுத்துரைத்தான் சீதத்தன். பதுமை அவற்றிற்குப் பெரிதும் உடன்பட்டு மகிழ்ந்தாள்.

சீதத்தன், காந்தருவதத்தையின் திருமணத்துக்கு ஏற்பாடாகக் கட்டியங்காரனைச் சிறந்த பரிசுகளுடன் சென்று கதைத்து அவன் இசைவு பெற்று நிமித்தன் கூறியபடி யாழ்ப் போட்டி மண்டபத்தை அமைக்க அடிக்கல் நாட்டினான். நிலத்தை ஆழத் தோண்டித் தரையை அழகுபடுத்தி, பொற்றூண்களை நாட்டிப் பவள உத்தரம் பொருத்தி, பளிங்குக் கழிகளைப் பரப்பி, வெள்ளித் தட்டால் கூரை வேய்ந்து, காந்தருவதத்தை அமரவேண்டிய இடத்தில் பளிங்குச் சுவர் அமைத்து, ஓவியங்கள் தீட்டி, மாலைகள் சூடி, தரையில் முத்து மணல் பரப்பி மண்டபம் அமைக்கப்பட்டது.

சீதத்தன் அரசன் இசைவோடு முரசறைவோரை வருவித்து "இராசமாபுரத்தில் இளவரசி காந்தருவதத்தையின் வீணைப் போட்டியில் கலந்து வெல்பவரை அவள் கணவனாக ஏற்றுக்கொள்வாள்" என்று முரசறைவித்தான். காந்தருவதத்தை யாழ்ப்போட்டி மண்டபத்தை அடைந்து யாழைக் கையில் எடுக்கத் திரைச்சீலை மெல்ல நீக்கப்பட, அவள் தோழி வீணாபதி "இளவரசி காந்தருவதத்தை பாடப் போட்டியில் கலந்து கொள்பவர் யாழை மீட்டலாம். அல்லது அவள் யாழ் மீட்டுவதற்கேற்பப் போட்டியாளர்கள் பாடலாம்" என்று தெரிவித்தாள். அப்பொழுது அத்தினாபுர மன்னனும், காம்பிலி தேயமன்னனும், வாரணவாசி மன்னனும், அவந்தியர் மன்னனும், அயோத்தி மன்னனும், வேறு மன்னர் பலரும், அந்தணரும், வணிகரும் இப் போட்டியில் ஒருவர் பின் ஒருவராகப் பங்குபற்றி அனைவரும் தோற்று ஓடி மறைந்தனர். இவ்வண்ணம் ஆறு நாட்கள் கழிந்தன.

இந்நிலையில் சீவகன், வீணைப் போட்டி முடிவதன் முன் தானும் அதில் கலந்துகொள்ள விரும்பித் தன் நண்பன் புத்திசேனனைக் கொண்டு தன் தந்தை கந்துக்கடனிடம் தெரிவித்து அவன் இசைவும் பெற்றுக்கொண்டான். பேரழகன் சீவகன், தன் முடியிற் பூச்சூடி, காதணிகளை அணிந்து, மார்பில் சந்தனம் பூசி, விலை உயர்ந்த கலிங்கம் உடுத்தித் தேவமகன் போலப் புறப்பட்டுத் தன் தம்பியும் தோழன்மாரும் தொடர்ந்து வர, யாழ் மண்டபத்தை அடைந்து அங்கு இடப்பட்ட தவிசில் அமர்ந்தான்.

சீவகனைக் கண்ட காந்தருவதத்தை மனநிறைக் காவலைக் கடந்தாள் நாண் நீங்கினாள் வேட்பு அதிகரித்து எரியுறு மெழுகானாள். இவன் மார்பை அணைவது எப்போதோ? என்று உருகி நின்றாள். இதன்பின் அவள் "இவன் யாழ் பற்றிய அறிவினைப் பல யாழ்களைக் கொடுத்து ஆராய்ந்து, பின் நல்ல யாழை இவனிடம் கொடு" என்று வீணாபதியிடம் கூறினாள். வீணாபதி பல யாழ்களைக் கொடுக்க ஒவ்வொன்றையும் பார்த்துவிட்டு, ஒன்றும் சரியில்லை என்று ஒதுக்கி வைத்தான் சீவகன். பின் துகில் உறையிலிருந்து நாம நல்யாழை எடுத்து நீட்ட, அதனை ஏற்றுக்கொண்டு, நரம்புகளை ஆராய்ந்து அதன் சில நரம்புகளை நீக்கிப் புதிய நரம்புகளை யாழில் இணைத்து மூன்று பாடல்களைப் பாடினான். காந்தருவதத்தையும் அதற்கேற்ப ஒரு பொருள் மேல் மூன்றடுக்கிய இசைப்பாடலைப் பாடினாள். பின் சீவகன் பாடியபோது காந்தருவதத்தை யாழ் நரம்பை ஒழுங்காக வாசிக்க இயலவில்லை. சீவகனுக்கு இசையில் தோற்று நடுங்கியவள் பொன்மாலையை எடுத்துச் சீவகனுக்குச் சூடி, அவனை வணங்கி நின்றாள். யாழ்ப் போரில் தோற்ற மன்னர் பலரும் கட்டியங்காரனும் சீவகனுடன் போரிட்டுத் தோற்று ஓடினர்.

தோழர்கள் தன்னைச் சூழ்ந்து வர, சீவகன் காந்தருவதத்தையைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். காந்தருவதத்தையின் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நானூறாயிரம் குடங்கள் பால், தயிர், நெய்யும், அரிசி, சர்க்கரை, பருப்பு, உப்பு வண்டிகளும், பலா, மா, வாழைக் கனிகளும், கிழங்கு, காய், தென்னங்குலை, கமுகங் குலை, வெற்றிலை பாக்கு, பல வகைப் பூக்கள், சந்தனம், மாலைகள் ஆகிய யாவும் திருமணத்துக்கு வந்த வரிசைப் பொருட்களாகும். மக்கள் கூட்டம் நிரம்பி

வழிந்தது. காந்தருவதத்தையும் சீவகனும் திருமணப்பந்தலில் தம் இருக்கையில் வந்து அமர்ந்தனர்.

இசைக்கருவி முழங்க, வேள்வித் தீ வளர்க்கப்பட, அந்தணர் வேத மந்திரம் ஓத, சீதத்தன் காந்தருவதத்தையை நன்னீர் வார்த்துத் தானம் செய்ய, அந்த நீரினைச் சீவகன் ஏற்று, அவள் கையைப் பற்றி வேள்வித்தீயை வலம் வந்து அவளுடன் பொன்கட்டிலில் ஏறி அமர்ந்தான். இருவரும் துன்பமற்ற இன்பக் கடலில் மூழ்கினர்.

## குணமாலை

இராசமாபுரத்தில் சீவகன் காந்தருவதத்தையோடு கூடி மகிழ்ந்திருந்தான். அன்றொரு நாள் பேரழகிகளான **குணமாலையும், சுரமஞ்சரியும்** ஓர் அழகிய சோலையில் அமர்ந்திருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் தங்கள் சுண்ணப் பொடிகளே சிறந்தது என்று வாக்குவாதத்தில் இறங்கினர். அதைக் கண்ணுற்ற அவர்களின் தோழியராகிய **மாலை, கனகபதாதை** என்பவர்கள் அந்தச் சுண்ணப்பொடிகள் அடங்கிய பொற்கிண்ணங்களைச் சீவகனிடம் காண்பித்தனர். அவன் குணமாலையின் சுண்ணம் சிறந்தது என்று கூறினான். அதைக் கேட்ட சுரமஞ்சரி கடுங்கோபங் கொண்டு "சீவகன் என்னை வலிய வந்து வேண்டும்படி நோன்பு புரிவேன்" என்று சூளுரைத்துக் கன்னிமாடம் சென்றாள்.

அந்தணர்கள் உண்பதற்காகச் சமைத்து வைத்த உணவைப் பகுத்தறிவற்ற நாய் ஒன்று உண்பதைக் கண்ட அந்தணர்கள் அந்த நாயை அடித்துத் துன்புறுத்தினர். தன் அருகில் வந்து கிடந்த நாய், உயிர் நீங்கும் நிலையில் அவதிப்படுவதைக் கண்ட சீவகன் பெரிதும் வருந்திக் கண்ணீர் சொரிந்தான். அந்நாய்க்கு இரங்கிய சீவகன் அதன் காதில் ஐந்து எழுத்து மந்திரத்தை ஓதினான். உடனே அந்த நாய் உயிரைத் துறந்தது. அந்த நாய் **சுதஞ்சணன்** என்னும் தேவ உடல் பெற்று விண்ணில் தோன்றி "உனக்கு நான் ஆபத்தில் வந்து உதவுவேன்" என்று சீவகனிடம் கூறிச் சென்றது. அது கேட்ட சீவகன் பெருமகிழ்ச்சி கொண்டான்.

அப்பொழுது கட்டியங்காரனுடைய அசனிவேகம் என்ற பட்டத்து யானை கட்டுக்கடங்காது மதங்கொண்டு ஓட, அதைக் கண்ட மக்கள் ஓடி ஒதுங்கினர். அசனிவேகம் குணமாலையை நோக்கிச் சென்றது. அவளைச் சுமந்து வந்த சிவிகைப் பணியாளர்கள் பயந்து ஓடி மறைந்தனர். குணமாலையின் தோழி "இங்கு உதவ ஆடவர் யாரும் இல்லையா?" என்று கூவி அழைத்தாள். குணமாலை நடுங்கிச் செய்வதறியாது நின்றாள். தோழருடன் ஊர் திரும்பிக்கொண்டிருந்த சீவகன், குணமாலையின் அவல நிலையைக் கண்டான். "பெண் ஒருத்தி என்முன் உயிர் துறப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பது ஆணுக்கு வீரமா?" என்று நினைந்து வீராவேசங்கொண்டு அசனிவேகத்தை எதிர்த்துத் தாக்கி அதன் வேகத்தை அடக்கிக் குணமாலையைக் காப்பாற்றினான் சீவகன்.

குணமாலை தன் தோழியர்களுடன் வீடு சென்றாள். குணமாலைக்கு ஏற்பட்ட ஆபத்தைப் பற்றித் தோழியர் குணமாலையின் தாய்க்கு ஒன்றும் கூறாதிருந்தனர். குணமாலை கன்னிமாடத்தில் தனித்திருந்து சீவகன் தனக்குக் கொடுத்துச் சென்ற காதலை எண்ணி உருகிக்கொண்டிருந் தாள். "தேவர்களே சீவகனை விரைவில் என்னிடம் கொண்டு வந்து தாருங்கள்" என்றும் வேண்டிக்கொண்டாள். குணமாலை தன் காதல் வருத்தத்தைக் கிளியிடம் கூறி அதனைச் சீவகனிடம் தூதாக அனுப்பினாள். கிளி சீவகன் தங்கியிருந்த சோலையை அடைந்தது.

ஆங்கே சீவகன், குணமாலையின் ஓவியத்தைத் தீட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட கிளி மகிழ்ந்து, தன் வரவின் பொருளைக் கூறியது. மேலும் கிளி குணமாலையின் நிலையை "என் தலைவிக்கு மலர்ப் படுக்கை நெருப்பானது. பெருமூச்சு விட்டுத் தரையில் அமர்வாள். கோலம் புனையாள். பந்தும் ஆடாள். அவள் பொன்னிறம் வெளுத்தது. தனிமையை நாடுவாள். உமது பெயரைக் கூறி அழைப்பாள்." என்று கூறியது. அதைக் கேட்ட சீவகன் "கிளியே என் நிலையையும் குணமாலையிடம் கூறு. அவள் பெற்றோர் வேண்டுவன யாவும் கொடுத்து அவளை மணந்துகொள்வேன் என்றும் கூறு" என்று கூறினான். கிளி குணமாலையிடம் சென்று யாவையும் கூற, அவள் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தாள்.

குணமாலை தன் செவிலித்தாயிடம் "என்னை யானையிடமிருந்து மீட்ட சீவகனை விரும்புகிறேன். அவனையின்றி வேறொருவரையும் மணக்க மாட்டேன்" என்று தன் நிலையைக் கூறினாள். செவிலித்தாய், குணமாலையின் கருத்தினை நற்றாயிடம் கூற, அவள் அதைத் தன் கணவனிடம் கூற, அவன் "சீவகனே குணமாலைக்கு ஏற்றவன்" என்று மகிழ்ந்து, சீவகனுடைய தந்தையிடம் சான்றோரை அனுப்பி அவர்கள் இசைவும் பெற்று, சோதிடர் கூறிய நந்நாளில் முரசும், முழவும், சங்கும் ஒலிக்க, சீவகனுக்கும் குணமாலைக்கும் திருமணம் நடந்தேறியது.

இவற்றை அறிந்த கட்டியங்காரன் கடுங்கோபங்கொண்டு, சீவகனைச் சிறை பிடிக்கப் பல்லாயிரம் படைவீரர்களை அனுப்பி வைத்தான். அதை உணர்ந்த சுதஞ்சணன் என்னும் தேவன் தோன்றிக் காற்றையும், மழையையும், இருளையும் உண்டாக்கிப் படைவீரர்களைத் தடுமாறச் செய்து, சீவகனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு வானில் சென்று விட்டான்.

## பதுமை

சுதஞ்சணனுடன் சென்ற சீவகன், தேவன் அரண்மனையில் குடை நிழலில் அமர்ந்து கன்னியர் கவரி வீச, இசையோடமைந்த கூத்தினைக் கண்டு களித்தான். "உலகிலுள்ள பல நாடுகளையும், மலைகளையும் கண்டு மகிழப் போகிறேன்" என்று சீவகன் கூற, சுதஞ்சணன் சீவகன் செல்ல வேண்டிய வழிகள், கானங்கள், குன்றங்கள், நாடுகள், பொய்கைகள், குளங்கள், வாவிகள், ஆறுகள் என்பவற்றை விளக்கிக் கூறி, "காமனும் மயங்கிப்பாடும் இன்குரல் தருவதும், பாம்பு முதலிய வற்றின் நஞ்சைப் போக்குவதும், வேண்டிய வடிவம் எடுப்பது" ஆகிய மூன்று மந்திரங்களையும் சீவகனுக்கு உபதேசித்தான். மேலும் அவன் சீவகனை நோக்கி "இன்னும் பன்னிரண்டாம் மாதத்திலே இராசமாபுரத்தை அடைவாய். காந்தருவதத்தையையும் பெறுவாய். கட்டியங்காரனைக் கொன்று, முடி சூடி விழாக் கொண்டாடி, இறைவனை வழிபட்டு வீடுபேறடைவாய்" என்று கூறினான். அதைக் கேட்ட சீவகன் மகிழ்ந்து, சுதஞ்சணனைத் தொழுது, தேவியர்களிடமும் விடைபெற்றுப் புறப்பட்டான்.

பிறகு சீவகன், அரணபாதம் என்ற மலையைச் சேர்ந்து அருகக் கடவுளைத் துதித்து வணங்கி, அதன்பின், சந்திராபம் என்னும் நகரை அடைந்து, அந்நகரத்தின் அரசன் **தனபதிக்கு** நண்பனாகி அரண்மனையில் தங்கி, அரச நிகழ்ச்சிகளான நடனம், நாட்டியம், சங்கீதம் ஆகியவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அரண்மனை ஏவலன் ஒருவன் அரச குமாரனான **உலோகபாலனை** அணுகி வணங்கி **"இளவரசி பதுமையைப் பாம்பு தீண்டிற்று"** என்று கூறிச் சென்றான். உடனே உலோகபாலன் விரைந்து செல்ல அவனுடன் சீவகனும் சென்றான். சீவகன் தனக்குப் பாம்புக்கடி மந்திரம் தெரியுமென்று கூறிக் குவளை மலரை எடுத்து மூன்று முறை மந்திரம் ஓதி அவள் மயிர் முடியில் குவளையைச் செருகி, பின்னும் இரண்டு முறை மந்திரம் ஓதியளவில் அவள் உடலிலிருந்த விடம் நீங்கியது.

சீவகன் அவள் முகத்தை நோக்கினான். அவளும் தன் கண் திறந்து அவனை நோக்கினாள். அவள் சீவகனிடம் கொண்ட வேட்கை பெருகியது. அவள் அழகை அவனும் கண்டு மனம் நிறைவடைந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் நினைந்து உருகினர். இவர்கள் நிலைமை அரச சபைக்கும் சென்றது. அரசன் **தனபதியும்**, அரசி **திலோத்தமையும்**, அரச குமாரன் **உலோகபாலனும் "போன உயிரை மீட்டு, அவள் தலையில் பூச்சூட்டி, அவள் உடல் முழுவதையும் தீண்டிய சீவகனுக்கே பதுமை உரியவள்"** என்று முடிவு செய்து, சீவகன் இசைவும் பெற்றுக் கொண்டனர். நல்லநாளில் திருமணமண்டபத்தில் மகளிர் மங்கல மரபு கூறிச் **சீவகன் - பதுமை** ஆகிய இருவர் கையிலும் காப்பு நாண் கட்டி, அவர்களை நீராட்டித் திருமணம் நடந்தேறியது. அவர்கள் இருவரும் ஐம்பொறி இன்பமும் நுகர்ந்தனர்.

இவ்வண்ணம் இரண்டு மாதங்கள் பதுமையுடன் இருந்துவிட்டு, அன்றொரு இரவில் அவளைத் தனியே விட்டுப் பிரிந்து பல நாடுகளைக் காணச் சென்றுவிட்டான் சீவகன். அவன் பிரிவைத் தாங்காத பதுமை தரையில் விழுந்து புரண்டு உருகி அழுதாள்.

சீவகன் பதுமையைப் பிரிந்து சென்றதை அறிந்த அரசன் தனபதி அவனைத் தேடி வருமாறு ஏவலரை அனுப்பினான். தன்னைத் தேடி வருவர்

என்பதை ஊகித்த சீவகன் வேறொரு அழகிய வடிவம் தாங்கி நடக்கத் தொடங்கினான். அரசன் ஏவலர் மாற்று வடிவிலிருந்த சீவகனை அணுகி **"உன் போன்ற வடிவும் இளமையும் கொண்ட ஒருவர் இரவில் இவ்வழி போனதைக் கண்டாயா?"** என்று வினவ, சீவகன் **"உங்கள் இராசகுமாரியின் கணவனை இப்பொழுது காணமுடியாது. ஒன்பது மாதங்கள் கடந்தபின் அவன் வருவான். யான் கூறுவது சோதிடக் கூற்றாகும். இதனை உங்கள் அரசனுக்குக் கூறுங்கள்"** என்று அவர்களிடம் கூறிவிட்டு மேலும் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

## கேமசரி

பல நாடுகளைக் கடந்து சென்ற சீவகன் சித்திரகூட மலையில் அமைந்த ஒரு தவப்பள்ளியை அடைந்தான். அங்குப் பல முனிவர்களோடு சில நாள் இருந்துவிட்டுத் தக்க நாட்டின் தலைநகராகிய **கோமமாபுரத்தை** அடைந்தான். அந்நகரின் வணிகன் **சுபத்திரன்** என்பவனுக்கும், அவன் மனைவி **நிப்புதி** என்பவளுக்கும் **கேமசரி** என்னும் அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பிறந்தபோதே சோதிடன் ஒருவன் **"இவள் எந்த ஆடவனைக் கண்டு நாணம் உறுகிறாளோ அவனே உன் மகளுக்குக் கணவன் ஆவான்"** என்று சுபத்திரனிடம் கூறிச் சென்றான். கேமசரியும் ஆடவரைக் கண்டு நாணாத இயல்புடையவளாக இருந்தாள். அதைக் கண்டு அவள் பெற்றோர் கவலை கொண்டனர். சுபத்திரன் அவ்வூருக்கு வரும் புதிய ஆடவரை அழைத்து விருந்துவைத்தான். அவர்களைக் கண்டும் கேமசரி நாணாது இருந்தாள்.

சீவகன் கேமமாபுரத்தில் ஓர் ஆலமர நிழலில் இருந்து தியானம் செய்துகொண்டிருந்தான். அவ்வழி சென்ற சுபத்திரன், சீவகனைக் கண்டு கதைத்து, அவனைத் தன் தேரில் ஏற்றிக்கொண்டு தன் மனையை அடைந்தான். அந்நேரத்தில் கேமசரி வீணையை வாசித்துக் கொண்டிருந்தாள். சீவகன் வீட்டில் நுழைந்த நேரத்தில் கேமசரியும் சீவகனும் ஒருவரை ஒருவர் நோக்கினர்.

கேமசரியின் மாமையும், நிறையும், நாணும் கெட்டன. வேட்கைத் தீயில் அவள் உருகத் தொடங்கினாள். சீவகன் அவளை ஓர் அணங்கோ

மகளோ என்று எண்ணி ஐயுற்றான். அவளின்றி நான் இல்லை என்றளவுக்குச் சீவகன் வந்துவிட்டான். இவற்றைக் கண்ட சுபத்திரன் **"இவனே என் மருமகன் ஆவான்"** என்று திடங்கொண்டான். சுபத்திரன், சீவகனுடன் பேசிக் கேமசரியைத் திருமணம் செய்வதற்கு அவன் இசைவும் பெற்றுக்கொண்டான். அதன் பிறகு சுபத்திரன் தனக்கு நெருக்கமான அரசனுக்கும், அவன் பரிவாரம், சுற்றத்தார் ஆகியோருக்கும் கேமசரியின் திருமணம் பற்றி அறிவித்து, ஒரு நல்ல நாளில் இருவருக்கும் மணம் செய்வித்தான்.

சீவகன்- கேமசரி ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் விட்டு விலகாது இன்பமனுபவித்து இரண்டு மாதங்கள் கழிந்தன. அன்று ஒரு நாள் இரவில் கேமசரி துயின்றுகொண்டிருக்கையில் சீவகன் கதவைத் திறந்து வீட்டை விட்டு வெளியேறி இருளில் பயணத்தைத் தொடங்கினான். கனவு ஒன்று கண்டு எழுந்தாள் கேமசரி. படுக்கையில் சீவகனைக் காணாது துடிதுடித்தாள். வெளியில் வந்து நாலாபக்கமும் பார்த்தும் அவனைக் கண்டிலள். சீவகன் எங்கு சென்றானோ என்று பதைபதைத்தாள். தரையில் விழுந்து புரண்டாள். விம்மி விம்மி அழுதாள். என்றோ ஒரு நாள் தன்னைத் தேடி வருவான் என்று அவனை நினைந்து உருகியிருந்தாள்.

## கனகமாலை

பிறகு சீவகன் மன்னன் நரபதியின் தலைநகரான ஏமமாபுரம் என்ற நகரை அடைந்து அங்குள்ள பூம்பொழில் பொய்கையின் கரையில் அமர்ந்து காந்தருவதத்தை முதலியோரை நினைந்து உருகிக்கொண்டிருந்தான். அப்பொழுது, அந்நகர மன்னனான தடமித்தனுக்கும் அரசி நளினிக்கும் பிறந்த மகனான அரசகுமாரன் விசயன் என்பவன் அச்சோலைக்கு வந்தான். அவன் சீவகனைக் கண்டு கதைத்துத் தன் நண்பனாக அவனை ஏற்றுக்கொள்ளச் சீவகனும் அதற்கு இசைந்தான். விசயன் பலமுறை அம்பு எய்திச் சோலை மரங்களின் பழம் ஒன்றை வீழ்த்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ணுற்ற சீவகன் அவன் அம்பையும் வில்லையும் வாங்கி அவன் குறித்த கனி அம்போடு தன் கைக்கு வருமாறு எய்து கனியைப் பெற்றான். அதைக் கண்ட விசயன், சீவகனின் வில் வலிமையைப் போற்றிப் புகழ்ந்து, அவனைத் தன் தந்தையிடம் அழைத்துச்

சென்று, அவனின் வில் ஆற்றல் பற்றிக் கூறினான். மன்னனும் சீவகனைப் பாராட்டி, தன் மகன் விசயனுக்கும் மற்றைய புதல்வர் நால்வருக்கும் வில் வித்தை கற்றுக் கொடுக்குமாறு சீவகனை வேண்ட, அவனும் உடன்பட, அரச குமாரர் ஐவரும் சீவகனிடம் வில் வித்தை பயில்வாராகினர்.

சீவகன் மேல் மன்னனுக்கு மதிப்பு அதிகரித்தது. சீவகனைத் தன் குடும்பத்தில் இணைக்கத் திட்டங்கொண்டு, அவனை வரவழைத்து "நீ எனக்குப் பல நன்மைகள் புரிந்துள்ளாய். அதற்குக் கைமாறாக என் மகளை உனக்கு மணம்செய்து வைக்கிறேன். கணிகன் குறிப்பிட்ட படி அவள் உனக்கே உரியவள்" என்று கூற, சீவகனும் ஒருப்பட்டான். சீவகன் கனகமாலையை மணந்து இன்புற்றிருந்தான்.

இராசமாபுரத்தில் சீவக்னைக் காணாது கலங்கிய நந்தட்டன் காந்தருவதத்தையின் மந்திர சக்தியால் அவன் ஏமமாபுரத்தில் கனகமாலை யுடன் இருப்பதைக் கண்டு, சீவகனிடம் வந்து சேர்ந்து, இருவரும் அளவளாவி மகிழ்ந்தனர். பின்னர் இவர்கள் இருவரையும் தேடிப் புறப்பட்ட பதுமுகன் முதலான தோழர்கள் வழியில் உள்ள தவப்பள்ளியில் விசையைக் கண்டு மகிழ்ந்து கதைத்தனர். விசையை "சீவகனை அழைத்து வருக" என்று கேட்டுக்கொண்டாள். ஏமமாபுரத்தை அடைந்த சீவகன் தோழர்கள், சீவகன் இருப்பிடத்தை அறியும் நோக்கில் தடமித்தனின் ஆநிரையைக் கவர்ந்தனர். அதை மீட்க வந்த சீவகனைக் கண்டு பணிந்து பலதும் பேசிக் கொண்டனர். தண்டகாரணியத்துத் தவப்பள்ளியில் விசையைக் கண்ட சேதியையும் சீவகனிடம் எடுத்துரைத்தனர். தன் தாய் தவப்பள்ளியில் இருப்பதைக் கேட்டறிந்த சீவகன், கனகமாலை இருப்பிடம் சென்று தன் பிரிவை உணர்த்தி, அவள் இசைவும் பெற்று, தன் தோழர்களுடன் தாயைக் காணத் தவப்பள்ளியை நோக்கிப் புறப்பட்டான்.

## விமலை

சீவகன் தன் தாய் விசையைக் காணப்போகும் பேராசையுடன் தவப்பள்ளியைச் சென்று அடைந்தான். தன் மகன் வரவை எதிர் பார்த்திருந்த தாயின் காலடியில் ஓடோடிச் சென்று விழுந்து வணங்கினான் சீவகன். தன் அன்பு மகனைக் கண்டு பேரானந்தம் கொண்டாள்

விசையை. தன் மாமன் கோவிந்தனிடம் தன் தாயை அனுப்பி வைத்து விட்டு, சீவகன் தன் தோழர்களுடன் புறப்பட்டு இராசமாபுரத்தை அடைந்தான். அங்கு நகர்ப்புறத்திலுள்ள சோலையில் தன் தோழர்களை இருக்கும்படி கூறிவிட்டு, தான் மட்டும் வேற்றுருக்கொண்டு நகருக்குள் சென்றான்.

அவனை, அந்நகரத்து வணிகன் சாகரதத்தன், அவன் மனைவி கமலை ஆகியோரின் மகளான விமலை என்பவள் கண்டு அவன் பேரழகில் தன் மனதைப் பறிகொடுத்து அசையாது அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சீவகனும் அவளை உற்றுநோக்கி மனம் குலைந்து, அவளை மறக்க முடியாது திகைத்து நின்றுவிட்டு, அவள் தந்தையின் கடையருகே சென்று நின்றான்.

சீவகன் கடையருகே சென்றதும், கடையில் நெடுநாள் விற்கப்படாதிருந்த சரக்குகள் யாவும் விற்கப்பட்டன. அதை உணர்ந்த சாகரதத்தன், சீவகனிடம் "முன்பு ஒரு சோதிடன் என் மகள் விமலைக் குரிய கணவன் என் கடைக்கு வலிய வருவான். அவன் வந்ததும் என் கடையில் விற்காதிருந்த சரக்குகள் யாவும் விற்பனையாகி விடும். என்று கூறியிருந்தான். அது இன்று நடந்துவிட்டது. எனவே நீயே என் மகளுக்குக் கணவனாவாய்" என்று கூறி அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று விமலையைச் சீவகனுக்கு மணம் செய்து வைத்தான். சீவகன், விமலையோடு கூடி இரு நாள் மகிழ்ந்திருந்து விட்டுத் தன் தோழர்களை நாடிச் சென்றுவிட்டான்.

## சுரமஞ்சரி

சோலையில் தங்கியிருந்த தோழர்கள், திருமணக் கோலத்தோடு வந்த சீவகனைக் கண்டு மகிழ்ந்து, புதிய மணப் பெண்ணின் பெயரைக் கேட்க, சீவகன் "அவள் இனியவள். அரம்பையை ஒத்தவள். அவள் பெயர் விமலை" என்று கூறினான். தோழர்களில் ஒருவனான புத்திசேனன் என்பவன் "நீ சென்ற ஊர்களிலெல்லாம் புதுமணம் புணர்கிறாய். இவ்வூரில் வாழும் சுரமஞ்சரி என்பவள், ஆடவர் பெயர் கேட்டாலே வெறுப்படைவாள். காமனே வந்தாலும் கண் கொண்டு

பாராள். அவளை வசீகரித்து அவளை அடைவாயா?" என்று கேட்டான். அதற்குச் சீவகன் "புத்திசேனா! நான் அச் சுரமஞ்சரியை மயக்க நாளையே அவள் காமகோட்டம் வரச் செய்கிறேன். நீ அங்கே காமன் படிவத்தின் பின்னே மறைந்திரு" என்று கூறினான்.

பின் சீவகன் பார்ப்பன உருவந் தாங்கி, கூனிக் குறுகி, கிழவுருவில் சுரமஞ்சரியின் மாளிகையை அடைந்து, வாயில் காத்து நின்ற மகளிர் மயங்கும் வண்ணம் பேசிச் சுரமஞ்சரியைக் கண்டு அவளுடன் உரையாடினான். வயது முதிர்ந்தவனில் இரக்கம் கொண்டு சுரமஞ்சரி அவனுக்கு உணவளித்து, சற்றுத் துயிலவும் கட்டில் கொடுத்தாள். சற்று உறங்கியவன் எழுந்து அமுதம் பொழிவதைப் போல இன்னிசை பாடினான். அப்பாடலைக் கேட்ட சுரமஞ்சரி, தோழியரை அழைத்து "இப்பாடல் சீவகனின் இன்னிசை போல் உள்ளது. நாளையே நான் காமகோட்டம் சென்று வழிபாடு செய்து அவனை அடைய வழி செய்யுங்கள்" என்றாள்.

அடுத்த நாள் சுரமஞ்சரி காமகோட்டம் சென்று வழிபட்டாள். அப்பொழுது அங்கு ஒளித்திருந்த புத்திசேனன் "பெண்ணே நீ உன் சீவகனை அடைந்தாய்" என்று கூற, சுரமஞ்சரி தான் உணவு கொடுத்து அறையில் துயில வைத்த அந்தணன் சீவகனே என்று அறிந்து மகிழ்ந்தாள். சீவகனும் "நாளை உன்னை வந்து காண்பேன்" என்று கூறித் தன் தோழர்களை அடைந்தான்.

சுரமஞ்சரியின் தந்தை குபேரதத்தன் மகிழ்ந்து சுற்றத்தாருக்குத் தெரிவித்து, எல்லாருக்கும் ஆடை அணிகலம் வழங்கிச் சுரமஞ்சரியைச் சீவகனுக்கு மணம்செய்து கொடுத்தான். தம்பதிகள் இருவரும் இன்பக் கடலில் மூழ்கினர். பின் சீவகன் தான் சிலநாள் பிரியவேண்டிய நிலமையைக் கூறி, தன் பிரிவைப் பொறுக்குமாறு வேண்ட, சுரமஞ்சரியும் கண்ணீர் சிந்தி உடன்பட்டாள். அடுத்து சீவகன் தோழர்களுடன் தன் வீட்டிற்கு வந்து பெற்றோர்களையும், காந்தருவதத்தை, குணமாலை ஆகியோரையும் கண்டு மகிழ்ந்தான். மறுநாள் கந்துக்கடனிடம் தன் திட்டங்களைக் கூறி, வணிக வேடம் பூண்டு தோழர்களுடன் குதிரையேறி விதைய நாட்டை அடைந்து, தன் மாமன் கோவிந்தனைக் கண்டான்.

கோவிந்தன் தன் மகள் இலக்கணையின் சுயம்வரத்திற்குத் திரி பன்றிப் பொறி ஒன்று செய்து வைத்து அதை அம்பெய்து வீழ்த்துபவனே அவளின் மணாளனாவான் என்று அறிவித்தான். பலர் அப் போட்டியில் தோற்றனர். சீவகன் அப் பொறியைத் தன் அம்பால் வீழ்த்தினான். சீவகனைக் கண்ட கட்டியங்காரன் மனங் கொதித்து அவனுடன் போர் தொடுத்துத் தாங்காது மாண்டான். அவன் படைகளும் அழிந்தன. அதையறிந்து விசையை மகிழ்வுற்றாள். வாகை சூடிய சீவகன் அரண்மனை அடைந்தான். மறுநாள் சீவகன் மங்கல நீராடி, பெருமான் திருவடி பணிந்து, நண்பர்கள் உறவினர் புடை சூழ, மணித்தவிசில் வீற்றிருக்க, விண்ணிருந்து சுதஞ்சணன் இறங்கி வந்து, சீவகனுக்கு மணிமுடி சூட்டினான். மன்னன் சீவகன் எல்லா மக்களுக்கும் வாரி வழங்கினான்.

## இலக்கணை

சீவகன் தன் தேவிமாரான காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி ஆகியோரை வரப்பணித்தான். அவர்களைக் கண்டு சீவகன் பெரிதும் மகிழ்ந்தான். கோவிந்த மன்னன் தன் மகள் இலக்கணைக்குத் திருமணம் செய்யத் தினம் குறித்து நகரை அலங்காரப்படுத்தினான்.

சீவகன் மங்கள நீராடி, அணிமணி புனைந்து, இலக்கணையின் கையைப் பற்றி, தீ வலம் வந்து, அவள் கால்களை அம்மியில் வைப்பித்து, விவாகம் பண்ணி எழுந்து, அருந்ததியை இலக்கணைக்குக் காட்டி, இருவரும் பாலடிசில் உண்டு, மகிழ்வோடு வாழ்ந்தனர். தன்னை வளர்த்த கந்துக்கடனைக் குறுநில மன்னனாக்கிச் சுகந்தைக்குப் பெருந்தேவிப் பட்டமும் வழங்கினான். தன் தம்பி நந்தட்டனை இளவரசனாக்கினான். தன் மாமன் கோவிந்தனுக்குக் கட்டியங்காரனின் எல்லா உடைமைகளையும் வழங்கினான். தேவன் சுதஞ்சணனுக்கு ஒரு கோயில் அமைத்தான். தான் சிறுவனாய் இருந்து விளையாடிய ஆலமரத்தின் கீழ்ப் பொற்பீடம் ஒன்றை அமைத்தான். மனைவியர் எண்மருக்கும் பார்புகழ் அரசியர் பட்டம் கொடுத்தான். மக்கள் வாழ்த்த நாட்டை ஆண்டுவந்தான்.

கணிகர் கிரகநிலையைக் கணித்துச் சீவகனின் எட்டுப் புதல்வர்களுக்குச் சாதகம் எழுதினர். காந்தருவதத்தையின் மகன் **சச்சந்தன்**, குணமாலையின் மகன் **சுதஞ்சணன்**, பதுமையின் மகன் **தரணி**, கேமசரியின் மகன் **கந்துக்கடன்**, கனகமாலையின் மகன் **விசயன்**, விமலையின் மகன் **தத்தன்**, சுரமஞ்சரி மகன் **பரதன்**, இலக்கணையின் மகன் **கோவிந்தன்** என்று பெயர் சூட்டினர். காலம் நகர்ந்து செல்லச் சீவகன் முப்பது ஆட்சி ஆண்டுகளை நிறைவு செய்தான். அப்பொழுது அவனுக்கு வயது நாற்பத்தைந்து ஆயிற்று. அவன் துறவில் நாட்டங்கொண்டான். தன் மகன் சச்சந்தனுக்கு முடிசூட்டி மன்னனாக்கி அரசாளும் பொறுப்பைக் கொடுத்தான். சீவகன் சமண சமயத்தை அடைந்து, துறவு பூண்டு, முத்தி நெறி உணர்ந்து, நிலையான பேரின்ப வாழ்வு கண்டான். அவன் தேவியர் எண்மரும் தவமியற்றித் தம் நிலைகுலைந்து, தேவநிலை அடைந்து, முத்தி பெற்றனர்.

## நிறைவாக

சீவக சிந்தாமணியில் வரும் எட்டு மகளிர்களின் தனிச் சிறப்புகளை மேற்காட்டிய பகுதிகளிற் பார்த்தோம். அவர்கள் எண்மரும் ஓர் ஆணான சீவகனை மட்டும் பகிர்ந்துகொண்டு, சந்தோசமாக வாழ்ந்து, அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்து, யாவரும் போற்றும் வண்ணம் சீரிய குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பது, ஒரு சிறந்த படிப்பினையை மக்கள் மத்தியில் பரப்பி நிற்கின்றது. அந்நாளின் பலதார மணங்களை அரசுகளும், மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

காமத்தில் மூழ்கி அழிந்த சச்சந்தன், தீச்செயலால் அரசைக் கைப்பற்றிய கட்டியங்காரன், காதல் வீரம் கலை ஆகியவற்றில் சிறந்த சீவகன், சீவகனை வளர்த்தெடுத்து ஆளாக்கிய வணிகன் கந்துக்கடன், சீவகனோடு நட்புரிமை கொண்ட நந்தட்டன், கணவனை இழந்து துறவு பூண்ட விசையை, சீவகனைக் காதலித்துக் கணவனாக்கிய மங்கையர் எண்மர், சீவகன் நண்பர்கள் ஆகியோரை வைத்துத் திருத்தக்கதேவர் தம் சீவக சிந்தாமணி என்ற காப்பியத்தைப் படைத்து, இவர்கள் மூலமாக அறநெறியையும், தேவர் உலக இயல்பையும், மக்கள் உய்யும் வழி முறைகளையும், ஆற்றுப்படுத்துகின்றார்.

இந்நூலில் மக்கள் வாழ்வியல் பற்றி நிறையப் பேசப்படுவதைக் காணலாம். உழவியல் முதலிடத்தைப் பெற்றுள்ளது. எருமைகளையும் எருதுகளையும் ஏர்களிற் பூட்டி நிலங்களை உழுது விதைத்தனர். வாணிகம் சிறந்து விளங்கியது. தெங்கு, கமுகு, மா, பலா, வாழை, அவரை, வெற்றிலை, துவரை ஆகியவை விளைபொருளாகின. இராசமாபுரத்தில் மதில், அகழி, கால்வாய், பள்ளிமாடம், அரண்மனை, நாடக சாலை, மணிமண்டபம், கோயில்கள், வீதிகள், நகரங்களின் அமைப்பு ஆகியவற்றால், அக்கால மக்களிடையே நிலவிய கட்டடக் கலையின் சிறப்பினையும் காண்கின்றோம். சீவகன் பதுமையை மணந்த முறையால் அக் காலத் திருமண நிகழ்வினைக் காணலாம். சோதிடன் குறித்த நாளில் மணக்கோயிலில் மங்கையர் வாழ்த்துக் கூறி, சீவகன், பதுமை ஆகியோர் கைகளில் காப்புநாண் கட்டி, சீவகனை நீராட்டி, அவனை ஒப்பனை செய்து, பதுமையையும் அலங்கரித்து, பதுமையின் பெற்றோர் உடனிருந்து அவ்விருவர்க்கும் திருமணம் நடந்தேறியது.


அன்று கல்வியுடன் வில், வாள் ஆகிய பயிற்சியும், பல நுண்கலைப் பயிற்சியும், குரல் இசையும், யாழ், குழல், முரசு ஆகிய இன்னிசையும், நடனம், ஓவியம், சிற்பம், மகளிர் பந்தாடல் ஆகிய கலைகளும் கற்றிருந்தனர். சுண்ணம் செய்தல், நீரில் நீந்தல், நீர் வீசுதல், மலர் கொய்தல், மாலை தொடுத்தல் முதலியவை மகளிரின் பொழுது போக்காயிருந்தது. அன்று பெரும்பாலும் காதல் மணமே நடந்தேறியது. அக்காலத்தில் கடகம், குழை, ஆரம், குண்டலம், தோடு, பொன் ஓலை, மணி மகரம், முத்துவடம், குரங்குச் செறி, கிண்கிணி, பாடகம், சிலம்பு, மோதிரம், பொன்மாலை, மேகலை, வெள்வளை ஆகிய அணிகலங்களை மக்கள் அணிந்தனர். அரிசி, காய் ஆகியவற்றை நெய்யும், தயிருங் கலந்து செய்யப்படும் **"பாலமிர்தம்"** ஒரு சிறந்த உணவாயிருந்தது. உணவுக்குப் பின் வெற்றிலைப்பாக்குப் போடும் பழக்கமும் அன்று இருந்தது. இவைகள் அக்கால மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்றது.

அன்று வானில் பறக்கும் **"மயில் பொறி"** பாவிக்கப்பட்டதையும் காண்கின்றோம். இந்த மயில் பொறியில் விசையை ஏறி வான்வழியே சென்று வேறு நாட்டில் போய் இறங்கித் தன் உயிரையும், தன் வயிற்றுள்

இருக்கும் ஓர் உயிரையும் காப்பாற்றிக்கொண்டாள். இது, அக் காலத்து மக்கள் வானியல் அறிவும் பெற்றிருந்தமை தெளிவாகின்றது.

மலைகள், குன்றுகள், பொய்கைகள், குளங்கள், வாவிகள், ஏரிகள், ஆறுகள், நீர் வீழ்ச்சிகள், மரங்கள், சோலைகள் ஆகிய இயற்கை வளங்கள் நிறைந்துள்ள நாடுகளையும் காணலாம். மேலும் கனவு காணல், தெய்வம் உருவெடுத்து உதவுதல், வேறுரு எடுத்தல், சாதக நம்பிக்கை, கணிகர் எதிர்வு கூறல், மகளிர்க்குச் சீதனம் கொடுத்தல், ஊழ்வினை நம்பிக்கை போன்றவற்றையும் மக்கள் மத்தியில் காண்கின்றோம். தலைசிறந்த காப்பியங்கள் அனைத்தும் கற்பனைக் களஞ்சியமாகவே தோன்றுகின்றன. கற்பனையின் சொல்லாற்றல் இலக்கியமாகின்றது. அந்த இலக்கியங்கள் சிறந்த காப்பிய நூலாய் மிளிர்கின்றன. அக் காப்பியங்களுள் தலை சிறந்தது சீவக சிந்தாமணியாகும்.

❖❖❖





6

# வளையாபதியில் வளையல் அணிந்த வனிதையர்

வளையாபதி ஐம்பெருங் காப்பியங்களில் நாலாவது நூலாகும். அது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்தது. நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. இந்நூல் சமண சமயம் சார்ந்தது. அதன் கதாநாயகன் நவகோட்டி நாராயணன் என்பவன் ஆவான். தமிழ் அன்னையின் வளையல்களாக அவள் கைகளில் இந்நூல் திகழ்கின்றது. நூலின் கதாநாயகி பெயர் தெரியவில்லை. வளையாபதி நூல் முழுவதும் கிடைக்கவில்லை.

ஆனால் இக்காப்பியத்தின் 72 பாடல்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 66 பாடல்கள் 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய புறத்திரட்டில் மேற்கோளாகவும், 3 பாடல்கள் சிலம்பின் அடியார்க்குநல்லார் உரையில் மேற்கோளாகவும், 2 பாடல்கள் யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கண நூலின் பெயர்தெரியாத ஓர் அறிஞரால் இயற்றப்பட்ட விருத்தியுரையில் மேற்கோளாகவும், எஞ்சிய ஒரு பாடல் இளம்பூரணரின்

தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரையிலும், நச்சினார்க்கினியரின் தொல்காப்பியம் செய்யுளியலிலும் மேற்கோளாகவும் காட்டப்பட்டுள்ளன. தற்பொழுது வளையாபதிக் காப்பியம் கதைவடிவில் மாத்திரம்தான் உள்ளது. இனி வளையாபதியின் கதைச் சுருக்கத்தையும், அதில் வரும் மகளிர் பற்றியும் பார்ப்போம்.

புகார் நகரில் நவகோடிநாராயணன் என்னும் ஒரு சிறந்த வணிகன் இருந்தான். அவன் சைவ சமயத்தவன். தன் குலத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை மணந்து இன்பகரமான இல்வாழ்க்கை நடாத்தி வாழ்ந்து வந்தான். இந்நாளில், ஓர் அழகிய வேற்றுச் சாதிப் பெண்ணைக் கண்டு காதலித்து அவளைத் தன் இரண்டாம் மனைவியாகத் திருமணம்புரிந்து கொண்டான். அந்நாளில் பலதார மணத்துக்குப் பச்சைக்கொடி காட்டப்பட்ட காலம். ஆனால், அவன் வேற்றுச் சாதிப்பெண்ணை மணந்ததை எதிர்த்து அவன் குலத்தவர்கள் அவனைத் தம் குலத்தை விட்டு ஒதுக்கி வைக்கப்போவதாக அச்சுறுத்தினர். இதற்கஞ்சி நவகோடிநாராயணன் தன் இரண்டாம் மனைவியை விட்டுப் பிரிந்து முதல் மனைவியுடன் கப்பலேறி வேறு நாடொன்றுக்குச் சென்று வாழ்ந்துவந்தான். அவன் அந்த நாட்டில் வைர வியாபாரத்தில் ஈடுபட்டுச் செல்வச் செழிப்புமிக்க வணிகன் ஆனான்.

நவகோடிநாராயணன் தன் இரண்டாம் மனைவியை விட்டுப் பிரிந்த சமயத்தில் அவள் கருவுற்றிருந்தாள். அந்நிலையில் இரண்டாம் மனைவி தனக்கு உதவுவார் எவருமின்றி மனங் குலைந்து, காளிதேவியை நாடி, கண்ணீர் மல்கி, அழுது, புலம்பித் தனக்கு உதவுமாறு இறைஞ்சி நின்றாள். காளிதேவியும் அவள் நிலை கண்டு இரங்கி பிள்ளை பிறந்தபின் உதவுவதாக வாக்குறுதி கொடுத்திருந்தாள்.

அவளும் காளிதேவியை நாள்தோறும் வழிபட்டுவந்தாள். சில மாதங்கள் கழித்து அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தையை நல்ல முறையில் வளர்த்து வந்தாள். ஐந்து வயதானதும் தன் மகனைப் பாடசாலை ஒன்றில் சேர்ப்பித்துக் கல்வியறிவு புகட்டிவந்தாள். அச்சிறுவனுடைய பாடசாலைத் தோழர்கள் அவனைத் தகப்பன் பெயர் தெரியாதவனென்றும், அநாதையென்றும் பழி கூறிப் பரிகாசம் செய்து துன்புறுத்திவந்தனர்.

அதனால் மனம் உடைந்த சிறுவன் அழுத வண்ணம் தாயிடம் நடந்ததைக் கூறி, தன் தகப்பன் யாரெனக் கூறும்படி அடம்பிடித்து நின்றான். தாயும் வேறு வழியின்றி நடந்தேறிய துயரக் கதையை அழுதழுது கூறி, தகப்பனின் பெயரையும் கூறினாள். உடனே அச் சிறுவன் தன் தந்தையைப் பல இடங்களிலும் பல நாட்களாகத் தேடிச் சென்று ஈற்றில் தந்தை இருக்குமிடத்தைக் கண்டுபிடித்தான். பின், தாயிடம் வந்து தந்தை இருக்குமிடத்தைக் கூறி, அவளையும் அழைத்துக்கொண்டு தந்தையிடம் சென்று, தன்னை அறிமுகப்படுத்தி, தன்னையும் தாயையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டி நின்றான்.

அதற்கு நவகோடிநாராயணன் "உன் தாயை எனக்குத் தெரியும். அவளை நான் ஏற்பேன். ஆனால், நீ எனக்குத்தான் பிறந்தவனென்று எனக்குத் தெரியாது. எனவே, உன்னை நான் என் மகனாக ஏற்கமாட்டேன்." என்று கூறிவிட்டான். அப்பொழுது காளிதேவி தோன்றி "நவகோடிநாராயணா! இவன் உன் மகன்தான். இவளும் உன் மனைவிதான். இவர்களையும் உன் மகனாகவும், மனைவியாகவும் ஏற்றுக்கொள்." என்று கூற, நவகோடிநாராயணனும் காளிதேவியை வணங்கிவிட்டு, அவர்களையும் ஏற்றுக்கொண்டு, தன் மகனுக்கு வீரவாணிபன் எனப் பெயரிட்டு, இரு மனைவியர்களுடனும் பிள்ளை களுடனும் இனிது வாழ்ந்துவந்தான் என்று கதை முடிகின்றது. இவ்வாறு வளையாபதி வரலாற்றை வைசிய புராணம் கூறுகின்றது. இவ்விரு மனைவியர்களின் பெயர்களும் மறைந்துவிட்டன.

மேலும், இச் சிறுவன் சிறிய வயதில் காளிதேவியின் உதவியுடன் இச்செயலைப் புரிந்ததாகக் காப்பியக்கதை கூறுகின்றது. சமண மதக் கொள்கைகளைக் கூறும் இக் காப்பியத்தில் காளிதேவியைப் பற்றிய செய்திகளும், சைவ சமயத்தைச் சார்ந்த நவகோடிநாராயணன் பற்றிய செய்திகளும் இடம்பெற்றிருப்பது ஆய்வுக்கும், தேடலுக்குமுரிய ஒரு விடயமாகும்.

இக் காப்பியத்தின் அனைத்துப் பாடல்களும் கிடைத்திருப்பின், நூலின் கருப்பொருள், சொல் நயம், இலக்கியம், அக்கால வாழ்க்கைமுறை

போன்றவற்றைப் படித்து இன்புற்றிருக்கலாம். இவை கிடைக்கப்பெறாதது ஒரு துர்ரதிட்டமே.

பின் வரும் வளையாபதிப் பாடலொன்றை இளம்பூரணர் தொல்காப்பிய உரையில் செய்யுளியல் 98ஆம் நூற்பாவுக்கும், யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரையாசிரியர் 37ஆம் நூற்பாவுக்கும் நூற்பெயரைக் குறிப்பிடாமல் மேற்கோளாகக் காட்டியுள்ளமை இப்பாடலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. இன்னும், நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் செய்யுளியல் 148ஆம் நூற்பாவின் உரையில் இப்பாடலை வளைபதிச் செய்யுள் என மேற்கோள் காட்டி இக்காப்பியத்தின் சிறப்பினை உணர்த்தியுள்ளார். மேலும், இப்பாடல் கடவுள் வாழ்த்துப் பாடலாகவும் அமைந்துள்ளமை இன்னொரு சிறப்பாகும்.

"உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்துமாண்
திலகம் ஆயதிறல் அறிவன் அடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றுயான்."


இக் காப்பியத்தில் கிடைக்கப்பெற்றுள்ள 72 பாடல்களையும் புறத்திரட்டிலும், இளம்பூரணர் தொல்காப்பிய உரையிலும், நச்சினார்க் கினியர் தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரையிலும், சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையிலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளமை, இப்பாடல்களில் பொதிந்துள்ள கருப்பொருள், ஈர்ப்புத் தன்மை, ஆற்றுப்படுத்தல், சொற்பிரயோகம், அறநெறியாற்றல், பிறர்மனை நயவாமை, உயிரோம்பல், ஊன் உண்ணாமை, பொய்யுரையாமை, இளமை நிலையாமை, தவம் நோற்றல், கற்புடை மகளிர், கற்பில் மகளிர், மக்கட் பேறு, உண்டி கொடுத்தலின் உயர்வு, செல்வம் நிலையாமை, பழவினை, நட்பு, நல்குரவு (வறுமை), சாத்தன் தெய்வம் ஆகியவற்றின் நற்சிறப்பினையும் எடுத்துக்காட்டுகின்றது.

இக் காப்பியத்தின் மையப்பொருளை இவ்வாறு கூறலாம். நவகோடி நாராயணன் ஒரு சைவசமயத்தவன். அவன் அதே குலத்தில் ஒரு

பெண்ணை விவாகம் செய்தான். இன்னும் அவன் வேறொரு குலப்பெண்ணைக் காதலித்து விவாகம்புரிந்து அவளைத் தன் இரண்டாம் மனைவியாக ஏற்றுக்கொண்டான். காதல், குலம் பார்ப்பதில்லை. பலதார மணம் பேசப்பட்டுள்ளது. வளையாபதி சமண மதக் கொள்கைகளைக் கூறும் நூல். ஆனால் நவகோடிநாராயணனின் இரண்டாம் மனைவி காளிதேவியை நாடி, வணங்கி நின்று, உதவி கேட்டுப் பெறுகின்றாள். எனவே இந்நூல் குலத்தால், மதத்தால், பலதார மணத்தால் இறுகிய கட்டுக்குள் அமையாது பரந்த நோக்குடன் சிறந்து நிற்பதைக் காண்கின்றோம்.

இன்னும் வர்ணம், குலம், சாதி ஆகியனவும், ஒடுக்குமுறை, சாதிக் கட்டுப்பாடு, குலப்பற்று. பலதார மணம், தெய்வ நம்பிக்கை ஆகியனவும் அக்காலந் தொட்டே இருந்துள்ளன என்பதையும் இக் காப்பியம் எடுத்தியம்புகின்றது.

❖❖❖





7

# குண்டலகேசி நூலின் கதாநாயகி குண்டலகேசி

குண்டலகேசி ஐம்பெருங் காப்பியங்களில் ஐந்தாவது நூலாகும். இந்நூல் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்தது. இது பௌத்த மதம் தொடர்பானது. இதனை யாத்தவர் **நாதகுத்தனார்** என்பவராவர். **குண்டலகேசி** என்பவள் இந்நூலின் கதாநாயகி ஆவாள். கதாநாயகியின் பெயரே நூலுக்கும் பெயராயிற்று. அவள் பெண் துறவியாக மாறினாள். அவள் கணவனாகிய **சத்துவன்** என்பவன் எதிர்முகம் காட்டி நின்றான். இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. 19 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. குண்டலகேசிப் பாடல்கள் சில புறத்திரட்டிலும் காணலாம். இந்நூலைக் **"குண்டலகேசி விருத்தம்"** என்றும் கூறுவர். இந்நூல் தமிழன்னையின் காதணியான **குண்டலமாய்** விளங்குகிறது. இனி, குண்டலகேசியின் கதையையும் காண்போம்.

## குண்டலகேசி

குண்டலகேசி இராச கிருகத்தில் வணிகர் குலம் ஒன்றில் பிறந்தவள். அவளுக்குப் பத்தாதீசா என்னும் பெயர் சூட்டினர். அவள் வளர்ந்து பருவம் எய்தினாள். அன்று ஒரு நாள் அந்த நகரத்தில் அந்தணன் ஒருவனின் மகனான சத்துவன் என்பவன் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட பொழுது பிடிபட்டு அரசன் ஆணைப்படி அவனைக் கொல்லும் வண்ணம் கொலைக்களமான சோரர் மலைக்குச் சேவகர் இழுத்துச் சென்றனர். அப்பொழுது அவனைப் பத்தாதீசா சன்னல் ஊடாகப் பார்த்து, இரக்கங்கொண்டு, பரிதாபப்பட்டு, அவன் மேல் காதலும் கொண்டாள். "இவனை அடைவேன். அன்றேல் உயிர் துறப்பேன்" என்று சபதங் கொண்டு தன் மெத்தையில் படுத்துக் கண்ணீர் பெருக்கெடுத்தாள்.

அவள் தந்தை அதைக் கண்டு மனங்கலங்கினான். நடந்ததைக் கேட்டறிந்தான். ஆயிரம் பொன் கொடுத்து உபாயத்தினால் சத்துவனை விடுவித்தான். அவனை நறுமண நீரில் ஆடவைத்து, அணிகலன் பூணுவித்துத் தன் மாளிகைக்கு அனுப்பிவைத்தான். சத்துவனைக் கண்டு, நாணங்கொண்டு, மகிழ்ந்தாள் பத்தாதீசா. அவனை வரவேற்று, அமரச் செய்து, சிற்றுண்டி கொடுத்து உபசரித்தாள். அவள் தன்னை அணிகலங்களால் அலங்கரித்து, அவனுக்குத் தொண்டு செய்து, அவனை மகிழ்வித்து இன்புற்றிருந்தாள்.

பல நாள் சென்ற பின்பு சத்துவன் அவள் அணிந்திருக்கும் ஆபரணங்களைக் கண்டு ஆசைகொண்டான். அவளைக் கூப்பிட்டுப் புன்முறுவல் காட்டி "பத்தே! நான் கூறுவதைக் கேட்பாயாக! அன்று என்னைச் சேவகர்கள் கொலைக்களத்துக்கு இழுத்துச் சென்ற போது, உயிரோடு தப்புவேனாகில் உனக்குப் பலியாகப் படைக்கும் பொருள்கள் கொண்டு வந்து தருவேன் என்று சோரர் மலையில் உறையும் தேவதைக்கு நேர்த்திக்கடன் பண்ணி வந்தேன். ஆகையால் அதற்குப் பலி கொடுப்பதற்கு ஆயத்தம் செய்" என்று கூறினான்.

அவளும் அவனைச் சந்தோசப்படுத்த விரும்பித் தேவதைக்குக் கொடுக்கவேண்டிய பலியை ஒழுங்கு செய்து, தன்னையும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரித்து, தன் கணவனோடு ஒரு வண்டியிலேறிச் சோரர் மலையடியை அடைந்தாள். அங்கு வண்டியை நிறுத்திவிட்டு, பலிக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு இருவரும் மலை ஏறி உச்சியை அடைந்தனர்.

அவள் அவன் செய்கையில் ஐயம் கொண்டாள். சத்துவன் அவளை நோக்கி "பத்தே! உன் மேலாடையைக் கழற்றி, உன் ஆபரணங்கள் முழுவதையும் அதற்குள் வைத்து முடிச்சாக முடிந்து தா" என்றான். அதற்கு அவள், "சுவாமி நான் புரிந்த குற்றம் யாது?" என்று அவனைக் கேட்டாள். அதற்கு அவன் "அடி பெண்ணே! இங்கே வந்தது தேவதைக்குப் பலி கொடுக்க என்று நினைக்கிறாயா? இப்படி ஓர் உபாயம் கூறி உன் நகைகளைப் பறிக்கவே இங்கு உன்னைக் கூட்டி வந்தேன்." என்றான். அப்பொழுது அவள் "நீங்கள் கூறியவாறே செய்வேன். எனக்கு ஒரு விருப்பம் உண்டு. நான் ஆபரணங்கள் அணிந்திருக்கும் நிலையில் தங்களை ஒரு முறை சுற்றி வந்து கை கூப்பி வணங்க அனுமதியுங்கள்" எனத் தாழ்மையாகக் கேட்டாள். சத்துவனும் அதற்கு இசைந்தான். அவன் இசைவை பத்தாதீசா தனக்குச் சாதகமாக்கிக்கொண்டாள். அவள், அவன் முன் தோன்றி, கை கூப்பி அவன் காலில் வீழ்ந்து வணங்கி எழுந்து, அவனை வலப்புறமாகச் சுற்றி அவன்பின் வந்து அவனை மலையினின்று கீழே தள்ளிவிட்டாள். அவன் மலையிலிருந்து விழுந்து தலை சிதறி மாண்டான். இச் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த மலைத்தெய்வம் ஒன்று அவளை ஆசீர்வதித்தது.

"நான் இந்நிலையில் வீட்டிற்குப் போவது தகுந்ததன்று. துறவியாவதே சிறந்தது." என்று சிந்தித்து நிகண்டத் துறவிகள் வசிக்கும் ஆசிரமம் சென்று, துறவு நிலையை வேண்டி நின்றாள். துறவி, அவள் தலைமயிரைப் பனங்கருக்கு மட்டையால் நீக்கிச் சந்நியாசம் கொடுத்தார். சில நாட்கள் சென்றதும் அவள் தலைமயிர் நீண்டு வளர்ந்து குண்டலமாக வளைந்து நின்றது. அதன் காரணமாக அவளைக் குண்டலகேசி என்று அழைக்கத் தொடங்கினர்.

குண்டலகேசியான பெண் துறவி ஆசிரியரிடம் அச்சமயத்தைப் பற்றிப் படித்துவந்தாள். அவள் வாதம் செய்யும் முறையையும் கற்று, அதில் சிறந்து விளங்கினாள். மேலும் படிக்க விரும்பி வேறு வேறு ஆசிரியர்களிடம் சென்று தன் சமய அறிவைப் பெருக்கிக்கொண்டாள். தன்னோடு வாதம் செய்ய ஒருவரும் வராததால் ஊர்கள், சிற்றூர்கள், நகரங்கள் எங்கும் நடந்து திரிந்தாள். அவ்வூர்களுக்குப் போகும்போது, அவற்றின் வாயிலில் மணலைக் குவித்து, அவற்றின்மேல் சம்பு நாவற்கிளை ஒன்றை நாட்டி, **"என்னுடன் வாதம் செய்ய வல்லவர்கள் இங்கு இருப்பின் அவர் இந்தச் சம்பு நாவற்கிளையைக் காலால் மிதித்து உழக்குதல் வேண்டும்"** என்று எழுதி வைத்து, சிறுவர்களைப் பார்த்துக் கொள்ளும்படி கூறி, தான் அருகில் ஓரிடத்தில் தங்குவாள். ஏழு நாட்களுக்கு அச்சம்பு நாவற்கிளை குவியலில் இருக்குமாயின் அதனை எடுத்துக் கொண்டு வேறு ஊருக்குச் சென்றுவிடுவாள்.

சாரிபுத்தர் சாவந்தி நகருக்கு அருகிலுள்ள சேதவனத்தில் வந்து தங்கினார். குண்டலகேசி பல நாடுகளுக்கும் நடந்து திரிந்து சாவந்தி நகருக்குச் சென்றாள். அங்கும் வழக்கம் போல மணற் குவியலில் சம்பு நாவற்கிளையை நாட்டிவிட்டு, அங்கு கூடி நின்ற சிறுவர்களை அழைத்து அதனைப் பார்க்கும்படி கூறிவிட்டு, சாவந்தி நகருக்குள் சென்றாள். சாரிபுத்தர் நகரைப் பார்க்கத் தனித்து நடந்து சென்றபோது சம்பு நாவற்கிளையைக் கண்டு, சிறுவர்களைக் கேட்க, அவர்கள் கிளையின் காரணத்தைக் கூறினர். அதைக் கேட்ட சாரிபுத்தர் **"அவ்வாறாயின் இக்கிளையைக் காலால் மிதித்துச் சிதையுங்கள்"** என்று கூற, சிறுவர் அவ்வாறே செய்தனர்.

குண்டலகேசி தன் உணவைப் புசித்துவிட்டு வந்து தான் நட்டு வைத்த நாவற்கிளை சிதைக்கப்பட்டிருப்பதைக் கண்டு சிறுவர்களை விசாரித்தாள். ஒரு புத்தத் துறவி அதை உழக்குவித்தார் என்பதை அறிந்து கொண்டாள். வாதம் செய்யும்போது மக்களும் உடன் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து, சாவந்தி நகருக்குள் தெருதோறும் சென்று **"சாக்கிய புத்தரின் சீடன் ஒருவனோடு வாதம் செய்யப் போகின்றேன். வந்து**

பாருங்கள்" என்று கூவி அழைத்து, ஒரு பெரும் கூட்டமான மக்களுடன் வந்து, ஒரு மரநிழலில் அமர்ந்திருந்த சாரிபுத்தரை அணுகினாள்.

குண்டலகேசி அவரை வணங்கி, வாய் பொத்தி ஒதுங்கி நின்று, "நான் நிறுத்தி வைத்த சம்புக் கிளையை உழக்குவித்தது நீர்தானா?" என்று கேட்க, அதற்கு அவர் "ஆம்" என்றார். அதற்குக் குண்டலகேசி "நான் தங்களுடன் வாதம் செய்யவேண்டும்" என்றதும், "நீ உன் வினாவைக் கேட்பாயாக" என்றார் சாரிபுத்தர். அவள் தன் மனதிலுள்ள கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிவிட்டு மௌனம் காத்தாள். அவள் நிலையைக் கண்ட சாரிபுத்தர் "நீ என்னிடம் பல வினாக்களைக் கேட்டுவிட்டாய். நான் உன்னிடம் ஒரே ஒரு வினா மட்டும் கேட்பேன். அது யாதெனில், "ஒன்றே உளது" அது என்ன? பதில் கூறு." என்று வினவினார். குண்டலகேசிக்கு விடை தெரியவில்லை. அவள் "அறியேன் சுவாமி" என்றாள். "இது தெரியாவிட்டால் பயனில்லை" என்று கூறி அவளுக்குத் தருமோபதேசம் செய்து வைத்தார். குண்டலகேசி, சாரிபுத்தர் அடிகளில் விழுந்து வணங்கிச் சரணடைந்தாள். அப்போது அவர் "பத்தே, என்னைச் சரணடையாதே. தேவர், மனிதர் எல்லாருள்ளும் சிறந்த ஒருவனாகிய பகவான் புத்த பெருமானையே சரணடையக் கடவாய்!" என்று பணித்து அருளினார். குண்டலகேசி "அவ்வாறே செய்வேன்" என்று கூறி விடை பெற்றாள்.

புத்தர் பெருமான் மாலைப்பொழுது தருமோபதேசம் செய்யும் வேளையில் குண்டலகேசி அவர் முன்னிலையில் தோன்றித் தரையில் விழுந்து வணங்கி எழுந்து பணிந்து நின்றாள். அவர் அவளின் ஞான பரிபக்குவ நிலையை அறிந்துகொண்டார். குண்டலகேசியும் அருகத நிலையை அடைந்தாள். அவள் கேட்டுக்கொண்டபடி பகவான் அவளைத் துறவி ஆக்கினார். அதன் பின் அவள் பிக்குணிகள் வாழும் மடத்துக்குச் சென்று பிக்குணியாக வாழ்ந்து ஞானநிலை பெற்றாள். அதில் அவள் பெற்ற நிர்வாண சுகத்தை அனுபவித்து, தான் பெற்ற பேற்றை மனத்தால் உணர்ந்து, அவை தொடர்பான கீழ்வரும் பாடல்களைப் பாடியருளினாள்.

வெட்டிய கேசத் தோடும்
விளங்குசேற்று உடலி னோடும்
முட்டரும் அரையின் மீது
முடையுடைக் கந்தை சுற்றி
இட்டமாய்த் திரிந்தேன் முன்னாள்
இனியத்தை இன்னா என்றும்
மட்டரும் இன்னா உள்ள
பொருளையும் இனிதென் றேனே. 1

நண்பகல் உறங்குஞ் சாலை
நடுநின்றே வெளியே போந்தேன்
தண்புனல் கழுகுக் குன்றம்
தனையடைந்து அலைந்த போது
நண்புடை அறவோர் கூட்டம்
நடுவணே மாசில் தூயோன்
பண்புடைப் புத்தன் தன்னைப்
பாவியேன் கண்டேன் கண்ணால் 2

அண்ணலை நேரே கண்டேன்
அவன் முனே முழந்தாளிட்டு
மண்ணதில் வீழ்ந்து நைந்து
வணங்கினேன் வணங்கி நிற்கத்
தண்ணவன் என்னை நோக்கித்
தகலொடு பத்தா இங்கே
நண்ணுதி என்றே சாற்றி
நாடரும் துறவை ஈந்தான். 3

அலைந்துமே அங்க நாட்டோடு
அண்டுமா மகத நாடு
மலைந்தபேர் வச்சி யோடு
மன்னுகோ சலமும் காசி


நலந்தரு நாடு தோறும்
 நாடினேன் பிச்சைக் காக
உலைந்த இவ்ஐம்ப தாண்டில்
 எவர்க்குமே கடன்பட் டில்லேன். 4

துறவியேன் பத்தா கட்டச்
 சீவரங் கொடுக்கும் மாந்தர்
முறையுடை மணத்த ராகி
 நீள்புவி வாழ்ந்து நாளும்
குறைவில்நல் வினைகள் ஈட்டிக்
 கோதின்மெய் அறிவர் ஆகி
முறைமையாய் மலங்கள் நீக்கி
 முத்தியை அடைவார் திண்ணம். 5

குண்டலகேசி முதலில் சமணத் துறவியாயிருந்து பின்பு புத்தத் துறவியாக மாறியவள். இப்பாடல்களால் குண்டலகேசியின் வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாகக் காண்கின்றோம்.

குண்டலகேசிப் பாடல்களில் "புத்த பெருமான் சான்றோன், மனம் தூயோர்க்கே இன்பம் உண்டாம், தவ ஒழுக்கம், நுகர்வினால் அவா அறுத்தல் ஆகாது, யாக்கையின் இழி தகைமை, இறை மாட்சி, குற்றம் கடிதல், வருவது வந்தே தீரும்" போன்ற தத்துவங்கள் பரவிக் காணப்படுகின்றன.

❖❖❖





8

# கம்பராமாயணம் காட்டும் அரச மகளிர்

**இராமாயணம், மகாபாரதம்** ஆகிய இரண்டும் தலைசிறந்த பழம்பெருங் காப்பியங்களாய்த் திகழ்கின்றன. **வால்மீகி** என்னும் முனிவர் இராமாயணத்தை வடமொழியில் எழுதியுள்ளார். இதைத் தழுவிக் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த **கவிச்சக்கரவர்த்தியான கம்பர்** **"கம்பராமாயணம்"** என்ற நூலைத் தமிழில் யாத்துள்ளார். **"கல்வி சிறந்த தமிழ்நாடு, புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு"** என்று பாரதியார் சிறப்பித்துக் கூறியுள்ளார். கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள், 112 படலங்கள், 10,569 பாடல்கள் உள்ளன. ஆறு காண்டங்களோடு **தெய்வப் புலவர் ஒட்டக்கூத்தர்** அருளிய **உத்தரகாண்டமும்** சேர்த்துக் காண்டங்கள் ஒருமித்து ஏழாகின்றன. இனி, கம்பராமாயணம் பேசும் மகளிர் பெருமை பற்றிக் காண்போம்.

## பட்டத்தரசிகள்

**கோசலை, கைகேயி, சுமத்திரை** ஆகிய மூவரும் கோசல நாட்டின் தசரத மன்னனின் பட்டத்தரசிகளாவர். இவர்களுக்கு மகப்பேறு இல்லாதலால் தசரத மன்னன் கவலையுற்றான். இதையறிந்த கலைக்கோட்டு முனிவர் புத்திர காமேஷ்டி யாகம் செய்து ஒரு கிண்ணத்தில் அமிர்தத்தை மன்னரிடம் கொடுத்துத் தேவியர்களுக்குக் கொடுக்கும்படி பணித்தார். தசரத மன்னன் தன் மனைவியர் மூவருக்கும் அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுத்து, கிண்ணத்தில் ஒட்டியிருந்த அமிர்தத்தைச் சுமத்திரைக்கு மீண்டும் கொடுத்தான். மூவரும் கர்ப்பமுற்று, **கோசலை- இராமன்** என்ற குழந்தையையும், **கைகேயி- பரதன்** என்ற குழந்தையையும், **சுமத்திரை- இலக்குவன், சத்துருக்கன்** என்ற இரு குழந்தைகளையும் பெற்றெடுத்தனர்.

## கைகேயி

**கோசலை, கைகேயி, சுமத்திரை** ஆகிய மூவரசிகளும் தத்தமக்குப் பிறந்த **இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன்** ஆகிய நான்கு அரச குழந்தைகளையும் தமது குழந்தைகளாகக் கருதிப் பேதம் காட்டாது சீராட்டிப் பாராட்டி அரச குமாரர்களாக வளர்த்துவந்தனர். அரச குமாரர்கள் எல்லாக் கலைகளையும் கற்று முடித்திருந்தனர். இராமனுக்கு முடி சூட்டப்போவதாகத் தசரத மன்னன் பணித்தான். அதை யானை ஏறி முரசு அறிவித்து நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. மக்கள் சந்தோசப்பட்டு நாட்டை அலங்கரித்தனர். இதையறிந்த கைகேயியின் தாதியான மந்தரையெனும் கூனி விரும்பாதவளாய்ச் சூழ்ச்சி தீட்டத் தொடங்கினாள்.

"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்." ........ (1445)

கூனியானவள் கைகேயியை நாடி "அரசியே! நாளை இராமன் முடிசூடி மன்னனாகப் போகிறான். அப்பொழுது பரதன் நிலை என்ன? உன் நிலை என்ன? இனிப் பரதன் நாட்டை ஆளமுடியுமா?

நீங்கள் இருவரும் காடேக வேண்டியதுதான். இனி உனக்குப் பொருளுமில்லை, புகழுமில்லை. நான் கூறுவதைக் கேட்டால் பரதனைக் கோசல நாட்டுக்கு அரசனாக்குவேன். இதுதான் எனது திட்டம். முன்னொருநாள் மன்னன் உனக்கு இரு வரங்களைத் தந்தான். ஒரு வரத்தால் உன் மகனை மன்னனாக்கு. மறு வரத்தால் இராமனைக் காட்டிற்கு அனுப்பி அங்கே பதினான்கு ஆண்டுகள் வாழச் செய்." என்றுரைத்தாள்.

"இரு வரத்தினில் ஒன்றினால் அரசுகொண்டு இராமன்
பெருவனத்திடை ஏழ்இரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்தி ஒன்றினால் செழுநிலம் எல்லாம்
ஒருவழிப்படும் உன்மகற்கு உபாயம் ஈது என்றாள்."

................ (1488)

கூனி கூற்றால் மனம் திரிந்தனள் கைகேயி. கூனிக்கு மாணிக்க மாலையும், நிதியமும் பரிசளித்தாள். "நான் இந்த இரு வரங்களையும் பெறுவேன். அல்லது மன்னன்முன் உயிர் துறப்பேன். நீ சென்றுவா!" என்றாள் கைகேயி.

கூனி போனபின் கைகேயி தன் செயற்கை அலங்காரங்களைச் சிதைக்கத் தொடங்கினாள். தான் அணிந்திருந்த பூமாலையைத் தரையில் வீசினாள். மேகலை, கிண்கிணிச் சிலம்பு, கைவளையல் ஆகியவற்றையும் கழற்றி எறிந்தாள். நெற்றிக் குங்குமத்தையும் அழித்தாள். தலைவிரி கோலமாய்த் தரையில் உருண்டு புரண்டு படுத்தாள்.

"வளைதுறந்தாள் மதியினில் மறுத்துடைப்பாள் போல்
அளகவாள்நுதல் அரும்பெறல் திலகமும் அழித்தாள்."

........ (1492)

மன்னன் கைகேயி அரண்மனைக்கு வந்தான். அவள் கிடந்த கோலம் கண்ட மன்னன் மதி கலங்கினான். "அரசி கைகேயியே! நடந்தது என்ன? உன்னை யார் எதிர்த்தார்? அவரை மண்ணில் மாய்த்து விடுவேன். சொல்." என்றான் மன்னன். "என்மீது இன்னும் இரக்கம்

இருந்தால், அன்று நீங்கள் தருவதாகக் கூறிய இரு வரங்களையும் தந்துதவுங்கள்." என்றாள் கைகேயி. இது ஒரு சிறு விடயம் என்று நினைத்து மன்னன் சிரித்துக்கொண்டு "அந்த இரு வரங்களையும் இன்றே தருவேன். இது இராமன் மீது ஆணை!" என்றான். அதற்குக் கைகேயி "இரு வரங்களில் ஒன்றால் என் மகன் பரதன் நாடாள வேண்டும். மறு வரத்தால் சீதையின் கணவன் (இராமன்) காடாள வேண்டும்." என்று கூறினாள்.

"ஏயவரங்கள் இரண்டின் ஒன்றினால் என்
சேய் அரசு ஆள்வது சீதை கேள்வன் ஒன்றால்
போய் வனம் ஆள்வது" எனப் புகன்று நின்றாள்
தீயவை யாவையினும் சிறந்த தீ யாள். .............................. (1504)

கைகேயி கொட்டிய நஞ்சு வார்த்தைகளால் உடல் வெந்து தரையில் வீழ்ந்தான் மன்னன். இவளைக் கெஞ்சிப் பார்ப்போமென்று எழுந்த மன்னன் அவள் காலைப் பிடித்து விம்மி அழுது பார்த்தும் அவள் ஒன்றுக்கும் மசியமாட்டாளென நினைத்து "உனக்கு இரண்டு வரமும் தந்தேன், நான் வானுலகம் போவேன், நீயும் உன் மகனும் எல்லாப் பழியையும் ஏற்கவும்." என்று கூறி மூர்ச்சையானான்.

"ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள
மாய்ந்தே நான் போய் வான் உலகு ஆள்வேன்!
வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின் மகனோடும் நெடிது என்றாள்."
................ (1538)

கைகேயியும் உறங்கிவிட்டாள். நடந்தவை ஒன்றும் எவருக்கும் தெரியாது. விடிந்ததும் முடிசூட்டு விழாவுக்கு அரசர், அந்தணர் முனிவர் ஆகியோர் வரத் தொடங்கினர். வசிட்ட முனிவரும் வந்துவிட்டார். சுப நேரம் வந்ததும் மன்னரை அழைத்து வருவதற்காக முதன் மந்திரி சுமந்திரன் கைகேயி அரண்மனைக்குச் சென்றார். மன்னனை அவனால் காணமுடியவில்லை. கைகேயி வந்து "இராமனை அழைத்து வருக!"

என்று சுமந்திரனுக்கு ஆணையிட்டாள். கைகேயி அரண்மனைக்கு வந்த இராமனிடம் "உன் தந்தை சொன்னது ஒன்றுண்டு. அதை நான் இப்போது உனக்குச் சொல்வேன் கேட்பாயாக! கடல்சூழ்ந்த உலகம் எல்லாம் பரதனே ஆளப்போகிறான். நீ கானகம் போய்த் தவம் செய்து, புண்ணிய நதிகளில் நீராடி, பதினான்கு ஆண்டுகளுக்குப் பின் திரும்பி வா, என்று அரசன் கூறினான்." என்றாள்.

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம்மேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டில் வா என்று இயம்பினன் அரசன் என்றான்."
................ (1601)

இதைக் கேட்ட இராமன் பெரு மகிழ்ச்சியடைந்து "தாயே மன்னன் கூறாவிட்டாலும் நும்பணி மறுப்பேனோ? என் தம்பி பரதன் பெறும் செல்வமெல்லாம் நான் பெற்ற செல்வமாகும். இச் செய்தியைத் தலைமேற் கொண்டேன். கானகம் செல்ல விடையும் பெற்றேன்." என்றான்.

"மன்னவன் பணிஅன்று ஆகில் நும்பணி மறுப்பெனோ என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ
என்இதின் உறுதி? அப்பால் இப்பணி தலைமேல் கொண்டேன்
மின்ஒளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்."
........ (1604)

இதன்பின் கைகேயியை வணங்கினான். தந்தை இருப்பதான திசையைத் தலைதாழ்த்தி வணங்கினான். கோசலையின் அரண்மனைக்குச் சென்று தாயை வணங்கி "உன் அன்பு மகன், என் தம்பி பரதனே முடிசூட இருக்கிறான். நான் பதினான்கு ஆண்டு கானம் சென்று தவமிருந்து திரும்புவேன். இது மன்னன் ஆணை யாகும்." என்று கூறினான். இதைக் கேட்ட கோசலை மயங்கி விழுந்து அழுதாள். பின் எழுந்து கைகேயி அரண்மனை சென்று மன்னன் மயங்கிக்

கிடப்பதைக் கண்டு குமுறி அழுதாள். வசிட்ட முனிவர் வந்து கைகேயியிடம் இணக்கம் கதைத்தும் அவள் ஒன்றுக்கும் இணங்கவில்லை. மன்னனை முனிவன் தன் கையால் எழுப்பச் செய்தான். இராமன் காடு செல்லக் கைகேயி தானே கட்டளையிட்டுவிட்டாள் என்பதை முனிவன் மூலம் அறிந்துகொண்டான் மன்னன். முனிவனை அழைத்து "இவள் என் தாரம் அல்லள், இவளைத் துறந்தேன், மன்னனாக வரும் பரதனும் என் மகன் அல்லன், அவனும் ஆகான் என் உரிமைக்கு. இது என் ஆணை." என்றான் மன்னன். இலக்குவனும் இராமருடன் காடேகச் சம்மதித்தாள் சுமித்திரை.

இராமனும், இலக்குவனும் மரவுரி தரித்தனர். இராமன் சீதையிருக்கும் மாளிகைக்குச் சென்றான். மரவுரி தரித்து வரும் இராமனைக் கண்டு சீதை கலங்கினாள். நடந்தவற்றை அறிந்த சீதை தானும் மரவுரி அணிந்து காட்டுக்கு வருவதாகக் கூறி இராமன் கையைப் பற்றி நின்றாள். அறம், ஒழுக்கம், பாசம், கருணை, வாய்மை, வில்லு ஆகிய துணையுடன் இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் சுமந்திரன் தேரில் ஏறி இரவோடு இரவாகக் கானகம் புகுந்தனர்.

"தையல்தன் கற்பும்தன் தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேமமாகக் கொண்டு
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே." ...................... (1886)

அவர்கள் மூவரையும் அனுப்பிவிட்டுச் சுமந்திரன் அயோத்தியை அடைந்தான். தேர் வந்ததென அனைவரும் பேசியதால், இராமன் வந்து விட்டான் என மன்னன் மயக்கம் தீர்ந்து சுமந்திரனை அழைத்து இராமன் வந்தானா? என்று கேட்டான். அதற்குச் சுமந்திரன் "இராமனும், சீதையும், இலக்குவனும் காடேகிவிட்டனர்." என்றுரைக்க, தசரதன் ஆவி பிரிந்து விட்டது.

"வேய்உயர் கானம் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினான் என்றான் என்ற போழ்தத்தே ஆவி போனான்."
........ (1898)

கோசலை, சுமித்திரை ஆகிய இருவரும் அழுது புலம்பி வெம்பினர். கைகேயியும் வஞ்சத்தால் வாழ்வெல்லாம் தொலைந்ததே என்று வயிற்றில் அடித்து அழுதாள். பரதன் வரும்வரை தைலத்தில் அரசன் உடலை வைத்திருந்தனர். பரதனை வரச் சொல்லிக் கேகய நாட்டுக்கு ஓலை அனுப்பினான் சுமந்திரன். பரதனும் கோசல நாட்டுக்கு வந்துவிட்டான். தந்தையின் கடன் செய்யப் பரதன் அமர்ந்தபொழுது முனிவன் வந்து **"உன் தாயை மனைவி இல்லை என்றும், உன்னை மகனில்லை என்றும் உன் தந்தை துறந்துவிட்டான். எனவே நீ அவருக்குக் கடன் செய்ய முடியாது."** என்று கூறினான். எனவே சத்துருக்கனைக் கொண்டு தசரதனின் இறுதிக் கடன்களைச் செய்து முடித்தனர். பரதன் முடிசூடி நாடாள மறுத்துவிட்டான். அவன் காடேகி இராமனைக் கண்டு, நடந்தவை கூறி இருவரும் விழுந்து அழுது புலம்பி ஓய்ந்து, வேறு வழி இல்லாது **"இராமனின் பாதுகை இரண்டுடன்"** நாடு திரும்பி — **"தலைவன் பாதுகைகளே இனி நாடாளும்"** என்றிருந்தான்.

## சீதை

மிதிலை மாநகரத்தின் **சனக** மன்னன் மகளான **சீதை** கன்னி மாடத்தில் தோழியர் சகிதம் நின்றாள். அதே சமயம் சனக மன்னனைக் காண **விசுவாமித்திர** முனிவர் **இராமன், இலக்குவனுடன்** சென்று கொண்டிருக்கையில், மாடத்தில் நின்ற சீதையை இராமன் பார்க்க, சீதையும் இராமனைப் பார்க்க, இருவரும் காதல் வயப்பட்டனர். சனக மன்னன் விசுவாமித்திரருடன் இராமன், இலக்குவன் ஆகியோரை வரவேற்று மாளிகையில் தங்கச் செய்தான். அங்கிருந்த கோதம முனிவனின் மகனான **சதானந்த** முனிவருக்கு விசுவாமித்திரர் இராமனை அறிமுகம் செய்து வைக்கையில் **"இவனே தாடகையை வதம் செய்தான், என் வேள்வியைக் காத்தான், உன் அன்னையின் சாபத்தை நீக்கி அவளை உன் தந்தையுடன் சேர்த்துவைத்தான்."** என்று புகழ்ந்துரைத்தார். சனகர், அவையிலிருக்கும் இராமன், இலக்குவனைப் பார்த்து இவர்கள் யாரென விசுவாமித்திரரைக் கேட்க அவர் **"இவர்கள் உன் விருந்தினராகவும், நீ செய்யும் யாகத்தைக் காணவும், நீ வைத்திருக்கும் சிவதனுசுவைப் பார்க்கவும் வந்தனர். மேலும் இவர்கள்**

தசரத மன்னனின் புதல்வர்கள் ஆவர். சீதைக்காக வில் நாணை ஏற்றக் கூடியவர்கள்." என்றுரைத்தார். சனக மன்னன் சந்தோசமடைந்து, வில்லைக் கொண்டு வரும்படி பணிக்க வில்லும் வந்தடைந்தது. விசுவாமித்திரர் இராமனை நோக்கினார். இராமன் வில்லை எடுத்தான். நாண் பூட்ட வளைத்ததை எவரும் கண்டிலர். ஆனால் வில் ஒடிந்த ஓசை யாவர்க்கும் கேட்டது.

"தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர். கையால்
எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்." ............... (699)

பணிப்பெண் மூலம் வில்லை எடுத்து உடைத்தவன் தசரதன் மகன் இராமன் என்றும், தம்பியோடு முனிவன் பின் நம் நகருக்கு வந்தவனென்றும், நடந்தவற்றை அறிந்துகொண்டாள் சீதை. விசுவாமித்திரர் சொற்படி சனக மன்னன் தசரதனுக்குத் திருமணம் பற்றிய தூதை அனுப்பினான். சனக மன்னனின் தூதுவர் தசரத மன்னனின் ஓலையைக் கொண்டு வந்தனர். அதைப் படித்த சனக மன்னன் திருமணச் செய்தியை முரசறைந்து கூறச் செய்தான். தசரதன் படைகளுடனும், அரசகுடும்பத்தினருடனும் மிதிலை நோக்கி வர, சனகன் அரச மரியாதையுடன் தசரதனை வரவேற்று மாளிகைகளில் தங்கிட இடமளித்தான்.

திருமண மண்டபத்தில் தசரதன் முதலியோர் கூடியிருந்தனர். வசிட்ட முனிவனே மணவேள்வி செய்ய முன்வந்தான். இராமனும் சீதையும் மணத்தவிசு ஏறி அமர்ந்தனர். மணவேள்வி மந்திரம் மூன்று முறை முழங்கச் சீதையின் கையை இராமன் பற்றி மணவேள்வித் தீயை வலம் வந்து வணங்கினர். சீதையைக் கைப்பிடித்து மாளிகை ஒன்றில் இராமன் புகுந்தான். திருமணம் முடிந்து சில நாட்களில் யாவரும் அயோத்தி சென்றனர். இராமனுக்கு முடிசூட்டுவது தடைப்பட்டதிலிருந்து இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் காடேகி, அதனால் தசரதன் உயிர் பிரிந்து, தசரதனின் இறுதிக் கிரிகைகள் முடிவேறியவரை மேற்காட்டிய "கைகேயி" என்ற பகுதியில் கண்டோம்.

பதினான்கு ஆண்டுகள் வனம் சென்ற இராமன் கடைசி ஓராண்டுக் காலமே சீதையைப் பிரிந்து தேடியதும், இராவணனை அழித்ததும் ஆகும். எஞ்சிய பதின்மூன்றாண்டுகளும் வனத்தில் முனிவர்களுக்குப் பாதுகாப்பாயிருந்ததே ஆகும். அகத்திய முனிவரைத் தரிசித்து ஆசியும் பெற்றனர் மூவரும். அகத்தியன் பஞ்சவடியின் சிறப்பைக் கூறி மூவரையும் அங்குத் தங்கும்படியும் கூறினார். பஞ்சவடிக்குச் சென்றவர்கள் சடாயுவைக் கண்டனர். சடாயு "நான் தசரத மன்னனின் நண்பன். கழுகின் மன்னன். சம்பாதி என் அண்ணன். நான் உங்கள் மூவரையும் காத்து நிற்பேன்." என்று கூறினான்.

கோதாவரி ஆற்றங்கரையில் பஞ்சவடி அருகில் இலக்குவன் அமைத்த தவச் சாலையில் இராமன் சீதை இருந்தனர். ஒரு காரணத்தால் அந்த வனப்பகுதியில் தனித்து வாழ்பவள் சூர்ப்பணகை. அவள் இராமன் இருக்கும் இடம் நாடிச் சென்றாள். அவன் அழகில் மயங்கி நின்றாள். திருமகள் மந்திரத்தை ஓதித் தன் உருவைத் திருமகள் போல மாற்றிக் கொண்டாள். அவள் அழகைக் கண்ட இராமன் திகைத்துப்போனான். "உன் வரவு நல்லதாகட்டும் நீ யார்? உன் நகரம் எது? உன் பெயர் என்ன? உறவினர் யார்?" என்று கேட்டான். "நான் விச்சிரவசுவின் புதல்வி- குபேரனின் தங்கை- இராவணன் பின் பிறந்தவள்- என் பெயர் கமலவல்லி- நான் ஒரு கன்னி." என்றாள் சூர்ப்பணகை. இதைக் கேட்டு இராமன் ஐயுற்றான். "என்னிடம் வந்த காரியம் என்ன? சொல்!" என்றான் இராமன். "நான் கொண்ட காதலை நானே சொல்வது குல மகளிர்க்கு அழகல்ல. என்னைக் காப்பாயாக!" என்று கூறினாள் சூர்ப்பணகை. இதைக் கேட்டதும் "இவள் நாணமற்றவள், ஐயத்துக் குரியவள், இழிகுலத்தவள், நல்லவளில்லை" என்று இராமன் உணர்ந்தான்.

"நாண்இலள் ஐயள் நொய்யள்
நல்லளும் அல்லள் என்றான்." .................... (2777)

அதே நேரத்தில் தவச்சாலையை விட்டு வெளியே வந்தாள் சீதை. சீதையை அரக்கியும் கண்டாள் என்பதைக் கம்பன் பாடல் கூறும் பாங்கிது.

"மீன்சுடர் விண்ணும் மண்ணும்
விரிந்தபோர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின்
கனலியைக் கண்ணின் கண்டாள்." ........................ (2789)

சீதை, இராமன் அருகில் சென்றபோது "அரக்கியே நடுவில் வந்த நீ யார்?" என்று சீதையைச் சூர்ப்பணகை அதட்டினாள். மேலும் இங்கிருப்பது சரிவராது என்று கருதிய இராமன் சீதையை அழைத்துக் கொண்டு தவச்சாலைக்குச் சென்றுவிட்டான். "அவள் இருக்கும் வரை என்னை விரும்பமாட்டான்- அவளைக் கவர்ந்து செல்வேன்." என்று சூர்ப்பணகை திட்டம் போட்டாள். காலை வழிபாட்டிற்காக வெளியே போகும் இராமனைப் பார்த்தாள்- சீதை தனித்திருப்பாள் எனறெண்ணி அவளை நெருங்கும்பொழுது அங்குள்ள சோலையிலிருந்த இலக்குவன் கண்டான். "நில்லடி!" என்று ஓடி வந்து அவளைப் பிடித்து இழுத்தான். அவள் தப்பி ஓடும்பொழுது, அவளை விடாது பிடித்து அவளின் மூக்கும், காதும், முலைக்காம்பும் அறுத்து, ஓடடி என்று கலைத்துவிட்டான் இலக்குவன்.

அறுபட்ட அவயவங்களுடள் தன் சகோதரனான கரன் என்பவன் காலடியில் விழுந்து நடந்தவற்றைக் கூறினாள் சூர்ப்பணகை. கரன் தன் படையுடன் சென்று இராமருடன் யுத்தம்புரிந்து மாண்டான். அதே கோலத்துடன் தன் அண்ணனான இராவணன் காலில் விழுந்து அழுது நடந்தனவற்றுடன், இராமன்- இலக்குவன் பற்றியும், சீதையின் அழகு பற்றி- தேர் போன்ற இடை- செம்பொன் மார்பு- பாட்டுமொழி- தேன்மலர்க் கூந்தல்- பஞ்சுபோன்ற அடிகள்- பவளம் போல் விரல்கள்- தங்கம் போன்ற முகம்- பெரிய கணகள்- நாளையே நீ போய்க் காணப் போகிறாயே! - என்று கூறிக்கொண்டே நின்றாள்.

"தோளையே சொல்லுகேனோ? சுடர்முகத்து உலவுகின்ற
வாளையே சொல்லுகேனோ? அல்லவை வழுத்து கேனோ?
மீளவும் திகைப்பதல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்
நாளையே காண்டி அன்றே? நான் உனக்கு உரைப்பது என்னோ."
........ (3139)

"உடனே சீதையைப் போய்ப் பார்" என்று உந்தியது அவன் மனசு. இராவணனின் மாமனான மாரீசன் இராமன் வதியும் வனத்தில் தவம் மேற்கொண்டிருந்தான். அவனிடம் இராவணன் வந்து நடந்தவற்றை எல்லாம் கூறிப் பொன் போன்ற மானாகச் சென்று சீதையை மயக்கும்படி கேட்டான். மலர் பறிக்க வந்த சீதை மானைக் கண்டு ஆசைகொண்டு அதைப் பிடித்துத் தரும்படி இராமனைக் கேட்டாள். இராமரும் மானைத் துரத்திச் சென்று ஓர் அம்பு எய்ய மானான மாரீசன் இராமன் குரலில் "இலக்குமணா சீதா" என்று கூவி, மாரீசனாக உருவெடுத்து இறந்தான். இராமன் குரல் கேட்டுச் சீதை "என் வாழ்வு முடிந்தது" என்று புலம்பி அழுதாள். "உன் அண்ணன் அபயக்குரல் கேட்டும் ஓடோடிச் சென்று பார்க்காமல் இங்கு நிற்கிறாயே உடன் ஆங்கே செல்! அல்லது நான் தீயில் விழுந்து மடிவேன்." என்று கூறவும் இலக்குவன் இராமனைத் தேடிச் சென்றுவிட்டான். சீதை தனித்திருக்கையில் இராவணன் சந்நியாசி வேடம் தாங்கி வந்தான். சந்நியாசியைக் கண்ட சீதை "வருக!" என்று வரவேற்றாள். இருவரும் சிறு நேரம் உரையாடினர். உரையாடல் மாறுபட்டுச் சென்றது.

பிரம்மா தனக்கிட்ட சாபத்தை எண்ணிப் பயந்து சீதையைத் தொடுவதற்கு அஞ்சித் தன் தோள் வலிமையால் பூமியைப் பர்ணசாலையோடு அகழ்ந்தெடுத்துத் தன் தேரில் வைத்து விண்வழியாகச் செல்கையில் சடாயு எதிர்கொண்டு இராவணன் முடிகளைக் கீழே தள்ளி விழுத்தி, வீணைக் கொடியை ஒடித்து, அவன் அம்புகளைத் தடுத்து, குண்டலங்களைப் பறித்து, முத்து மாலைகளை அறுத்து, நாணையும் வில்லையும் உடைத்து, அவன் மார்பிலும் தோளிலும் சிறகால் அடிக்க இராவணன் முடி சாய்ந்து கீழே விழுந்தான். அதன்பின் அரக்கன் எழுந்து சிவன் கொடுத்த வாளால் சடாயுவின் சிறகை வெட்ட, சடாயு கீழே விழுந்து மயங்கினான். இதைக் கண்ட இராவணன் தேரிலிருந்த தவச்சாலையைச் சீதையோடு எடுத்துத் தன் தோள் மீது வைத்துக்கொண்டு விண்வெளியே பறந்து சென்று அசோக வனத்தில் சிறை வைத்தான். இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடித் திரிகையில் குற்றுயிராய்க் கிடக்கும் சடாயுவைக் கண்டனர். சடாயு நடந்தவற்றை இராம இலக்குவர்க்குக் கூறியபின் இறந்து போனான். சடாயுவை அடக்கம் செய்தனர் இராம இலக்குவர்.

இராம இலக்குவர் சீதையைத் தேடிக்கொண்டு போகையில் **சுக்ரீவன், அனுமன்** ஆகியோரின் நட்பும், கணக்கிலடங்காத படை உதவிகளும் கிடைத்தன. நாலா பக்கமும் படை வீரர்கள் சென்று சீதையைத் தேடினர். அனுமன் மகேந்திர மலையிலிருந்து தாவி இலங்கைக்குச் சென்று ஊரெல்லாம் சீதையைத் தேடித்திரிந்தான். இராவணன் மாளிகைக்கு அருகிலுள்ள அசோக மரச்சோலையை அடைந்து ஒரு மரத்தின்மேல் ஏறி அமர்ந்திருந்து நாலா பக்கமும் பார்த்தான் அனுமன்.

அரக்கியர் பலர் சூழ்ந்திருக்க நடுவில் ஓர் அழகிய பெண் சோகத்துடன் இருப்பதைக் கண்டான். இராமன் கூறிய அடையாளங் களைப் பொருத்திப் பார்த்து இவள்தான் சீதை என்றுணர்ந்தான். அங்கே **வீடணன்** மகள் **திரிசடை** என்பவள் சீதைக்குத் தோழியாக இருந்தாள். அப்பொழுது **இராவணன்** சீதையிடம் வந்து தன் ஆசையைத் தெரிவிக்கச் சீதை சொற்களால் சுட்டெரித்ததையும், இராவணன் சீதையைவிட்டு அகன்றதையும் அனுமன் கண்டான். அந்நிலையில் அனுமன் சீதையின் அருகில் சென்று **"உலகத் தலைவனான இராமனின் தூதுவன் நான். இதோ இராமன் தந்துவிட்ட கணையாழி"** என்று பணிந்து நின்றான். நடந்தவை யாவையும் அனுமன் சீதைக்குக் கூறினான். **"இச் சூடாமணியை என் நாயகனிடம் கொடுப்பாய்!"** என்று கூற அனுமனும் சீதையை வணங்கிப் பெற்றுக்கொண்டான்.

அதன்பின் அனுமன் அசோக வனத்தின் மரங்கள், கற்பகச் சோலை, வாவி, மண்டபம் ஆகியவற்றை அழித்தான் எதிர்த்து வந்த அரக்கர்களைக் கொன்றான். மேலும் பல படைத் தலைவர்களைக் கொன்று குவித்தான். பின், இராவணன் மகன் **இந்திரசித்து** அனுமனைப் பிடித்து இராவணன் முன் நிறுத்தி அவன் வால் முழுவதும் பந்தம் சுற்றித் தீ வைக்க, அனுமன் பறந்து திரிந்து இலங்கையை எரித்து, அங்கு நடந்தன எல்லாம் எடுத்துக் கூறி, சீதை கொடுத்த சூடாமணியை இராமனிடம் கொடுத்தான்.

இராமன், இலக்குவன், சுக்ரீவன், அங்கதன், அனுமன், வானரச் சேனைகள் ஆகியோர் இலங்கைக்குப் போகும் கடற்கரையை அடைந்தனர். இராவணனின் தம்பியாகிய **வீடணன்** தன் தமையனுடன் கருத்துப் பரிமாறலில் முரண்பட்டு இராமனிடம் சரணடைந்தான். இராமன்

"இலங்கையின் அரண்- அரக்கர் வலிமை- சேனையின் தொகை- வேறு இயல்புகள்- ஆகியவற்றைக் கூறுவாய்!" என்று கேட்டு அறிந்து கொண்டான். கடலில் பாலம் கட்டி யாவரும் மறு கரையை அடைந்தனர். வாலி மகன் அங்கதன் இராவணனிடம் தூது சென்று சமரசமின்றிப் போர்புரியப் பறையறைந்து தெரிவிக்கப்பட்டது. போர் தொடங்கியது. பிணக்குவியலும் வளரத் தொடங்கியது. இறுதியாக இராமனின் பிரம்மாஸ்திரத்தால் இராவணன் உயிர் துறந்தான்.

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடு உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும் தின்று மார்பில்
புக்குஓடி உயிர்பருகிப் புறம் போயிற்று இராகவன் தன் புனித வாளி."

................ (9899)

இராவணனின் இறுதிக் கடனை வீடணன் செய்தான். இராமன் ஆணைப்படி இலக்குவன் வீடணனுக்கு முடிசூட்டி இலங்கை வேந்தனாக்கினான். இராமன் வீடணனை அழைத்துச் சீதையைக் கூட்டிவருமாறு பணித்தான். சீதை வந்ததும் இராமன் அவளின் கற்பில் சந்தேகங் கொண்டான். உடனே சீதை இலக்குவனை அழைத்துத் தீயமைக்கும்படி கேட்டு, அதில் விழுந்து தன் கற்பை நிலைநாட்டினாள். வானரப் படை, வீடணன் படை, இராம இலக்குவர் சீதை முதலிய அனைவரும் விமானத்தில் ஏறி அயோத்திக்கு வந்தனர். அரச ஒழுங்குகளுடன் இராமனுக்கு வசிட்டன் திருமுடி சூட்டி மன்னனாக்கினான்.

"அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலிஓங்க வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி."

........(10,327)

வீடணன் மற்றைய அனைவரும் இராமன், சீதை, பரதன், இலக்குவன், சத்துருக்கன், வசிட்டன், தாய்மார் மூவர் ஆகியோரிடம் விடைபெற்றுக் கொண்டு விமானத்தில் ஏறி இலங்கை சென்றனர். இராமன் தம்பியரோடு நீதி தவறாது அரசாட்சி செய்துவந்தான்.

இராமனும் சீதையும் மிகுந்த சந்தோசத்துடன் இன்பமாகக் காலத்தைக் கழித்தனர். சீதையும் கருவுற்றிருந்தாள். இராமன் ஒற்றர்களை அழைத்து "மக்கள் பேசும் நன்மை தீமைகளைக் கூச்சப்படாது என்னிடம் கூறுவீர்!" என்றான். ஒற்றர்கள் இராமனை வணங்கி "இராமன் தன் மனைவியான சீதையை இராவணன் பன்னிரண்டு மாதங்கள் இலங்கைச் சிறையில் வைத்திருந்தான். அவளை இராமன் இன்று தாரமாய் ஏற்றுக் குடும்பம் நடாத்துகின்றான். என்று பேசுகின்றனர்." எனக் கூறிச் சென்றனர். இதைக் கேட்ட இராமன் இலக்குவனை நோக்கி "சீதையைக் காட்டில் கொண்டு சென்று வால்மீகியின் ஆசிரமத்தில் விட்டு வருவாய். சீதையும் காட்டிற்குச் செல்ல விரும்பியுள்ளாள்." என்றான். சுமந்திரன் கொண்டு வந்த தேரில் இலக்குவனோடு காடு சென்றாள் சீதை. அங்கே இலக்குவன் சீதைக்கு நடந்தவை எல்லாம் சொல்ல, சீதை கலங்கித் துடித்துப் பதைபதைத்து அழுது புரண்டாள். பின் யாவும் விதிப்பயன் என்றிருந்தாள். வால்மீகி சீதையிடம் "நீ எங்களுடன் இந்த ஆசிரமத்தில் இருக்கலாம்" என்றுரைக்க அவளும் ஆறுதலடைந்து ஆசிரமத்தில் தங்கியிருந்தாள்.

சில மாதங்களின்பின் சீதைக்கு பிரசவ நோவு ஏற்பட்டு இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். அக் குழந்தைகளுக்கு "குச", "லவன்" எனப் பெயரிடப்பட்டது. வால்மீகி குச, லவன் ஆகிய இருவருக்கும் எல்லாக் கலைகளையும் கற்பித்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு இராமன் அசுவமேத யாகம் செய்வித்தான். இதில் முனிவர்கள், பல தேச மன்னர்கள், குறுநில மன்னர், மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த யாகம் பற்றி அறிந்த வால்மீகி முனிவர் குசலவர்களை அழைத்து "நீங்கள் இராமனுடைய யாகசாலை அணுகி, சீதையின் புதல்வர்கள் என யாருக்கும் தெரியாதபடி இராமனின் காவியத்தைச் சொல்வீர் களாக!" என்றார்.

குசலவர்கள் முனிவர்களின் மக்களைப் போன்று வேடம் தரித்துக் கையில் யாழுடன் யாகசாலை சென்று பாடி இசைத்தனர். இவர்கள் உருவத்தால் இராமனை ஒத்திருக்கின்றனர் என்றும் கதைத்தனர். செய்தியறிந்த இராமன் அவர்களை அழைக்க, அவர்களும் இராமன் முன் இராம காவியத்தை யாழினால் இசைத்துப் பாடினர். தங்கள் பெயர் குசலவர்கள் என்றும், காவிய வரலாற்றைச் சொல்லித் தந்தவர் வால்மீகி முனிவர் என்றும் கூறினர். "நாங்கள் தினம் தினம் வந்து பாடுவோம்." என்று கூறி விடைபெற்று வால்மீகி ஆசிரமம் சென்றனர். இவர்கள் சீதையின் பிள்ளைகளென ஒருநாள் இராமன் அறிந்து அவர்களை அழைத்துத் தழுவிக்கொண்டான்.

பின்னொருநாள் வால்மீகி முனிவருக்குத் தூதுவரை அனுப்பித் தன் மனைவி சீதையை அழைத்து வருக எனத் தெரிவித்தான். மறுநாள் வால்மீகி முனிவர் சீதையுடன் இராமன் அரண்மனை வந்தடைந்தார். முனிவரை விழுந்து வணங்கிய இராமன் "மீண்டும் ஒரு முறை சீதை தீயில் விழுந்து தன் கற்பைக் காட்ட வேண்டும்." என்றான். இதைக் கேட்ட முனிவர் திகைத்தார். சீதை "என் கணவர் என்னைச் சந்தேகிக்கும்போது என்னிடம் கற்பு இருந்து பயனென்ன? நான் செய்வதைக் காண்பீர்!" என்று கூறி இராமன் காலடியில் வீழ்ந்து வணங்கி "பூமாதே! எனக்கு உன்னிடம் வர இப்பூமியில் ஒரு வழி தருவாய்." எனக் கூறினாள். உடனே சீதையின் முன்னால் அரசவையில், நிலம் பிளந்தது. அதிலிருந்து பூமாது தோன்றிச் சீதையின் இரு தோள்களையும் இறுகக் கட்டியவாறு அந்த நிலத்தின் பிளப்பின் வழியாக இருவரும் உள்ளே சென்றனர். அவர்கள் உட்புகுந்ததும் நிலம் முன்பிருந்த பழைய நிலையை அடைந்தது.

கற்புக்கரசியான சீதை அரச குலத்தில் பிறந்து, வீரம் நிறைந்த இராமனை மணந்து, கோசல நாட்டுக்கு இராமனுடன் சென்று, கோசலை-கைகேயி- சுமத்திரை ஆகிய மூவரசிகளின் மருமகளாய்த் திகழ்ந்து, கைகேயி மாமியின் வஞ்சனையால் பதின்மூன்று ஆண்டுகள் இராமனுடன் வனவாசம் புரிந்து, ஓர் ஆண்டு இராவணன் சிறையில் அமர்ந்து, அதன்பின் மீட்கப்பட்டு இராமனுடன் கோசல நாடேகி, மன்னன் இராமனின்

அரசியாகி, மக்கள் தீயுரையாலும், இராமன் ஆணையாலும் சீதை, வால்மீகி முனிவர் வதியும் காடேகி, ஆங்கே குச, லவன் ஆகிய இரு குழந்தைகளைப் பெற்றெடுத்து, இராமன் அழைப்பின்படி வால்மீகி முனிவருடன் சீதை, இராமன் அரண்மனை சென்று, மீண்டும் ஒருமுறை தீயிற் புகுந்து சீதையின் கற்பை நிரூபிக்கும்படி இராமன் கேட்க, சீதை அதற்கு உடன்படாது மறுத்துரைத்து, இராமனை வணங்கிவிட்டு, பூமாதேவியை நினைந்து **"நான் உன்னுடன் வர இந்த நிலத்தில் ஒரு வழி அமைத்துத் தா!"** என்று கேட்க நிலத்தில் பிளவு ஏற்பட்டு அதிலிருந்து பூமாது தோன்றிச் சீதையின் கைகளைப் பற்றிக்கொண்டு அந்தப் பிளப்பினூடே இருவரும் உள்ளே சென்றதும் அப்பிளவு மூடிக்கொண்டது. இவ்வாறான ஒரு நீண்ட பயணத்தைச் சிறப்புடன் முடித்துக்கொண்ட சீதை ஒரு தெய்வமாகினாள்.

## தாரை

**"பஞ்ச கன்னியர்"** என்று கூறப்படும் **அகலிகை, திரௌபதி, சீதை** அல்லது **குந்தி, தாரை, மண்டோதரி** ஆகியோர் கற்புக்கரசிகளாவர். அவர்களை மானிடப் பெண்களாகிய **குந்தி, சீதை, திரௌபதி, அகலிகை** என்றும், அரக்கப் பெண்ணாகிய **மண்டோதரி** என்றும், குரங்கினப் பெண்ணாகிய **தாரை** என்றும் மூவகையாக வகுத்துப் பார்க்கலாம். மேலும், **அகலிகை, சீதை, தாரை, மண்டோதரி** ஆகிய பெண்கள் **கம்பராமாயணத்திலும், குந்தி, திரௌபதி** ஆகிய பெண்கள் **மகாபாரதத்திலும்** நடைபோடுகின்றதையும் காண்கின்றோம். தாரை என்பவள் குரங்கின மருத்துவரான **சுசேனாவின்** மகளாவாள். **கிட்கிந்தை** நாட்டுக் குரங்கினத்தின் மன்னனான **வாலி,** தாரையை மணம்புரிந்து கொண்டான். அதனால் தாரை கிட்கிந்தையின் இராணியானாள்.

வாலியின் சகோதரன் **சுக்ரீவன்** ஆவான். சுக்ரீவன் மனைவி **உருமை** ஆவாள். அண்ணனாகிய வாலி, தம்பியாகிய சுக்ரீவனைத் துன்புறுத்தி அவன் மனைவி உருமையைக் கவர்ந்துகொண்டு, சுக்ரீவனை நாட்டிலிருந்து கலைத்துவிட்டான். இதை அறிந்த அனுமன் காட்டில் வதியும் இராமனுக்குக் கூறி உதவி கேட்டான். இராமனின் உதவியுடன் சுக்ரீவன்

வாலியோடு சமர் தொடுத்தான். இதை அறிந்த தாரை வாலியைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் ஓடோடி வந்தாள். அப்பொழுது வாலியின் கண்களிலிருந்து எழுந்த தீயானது தாரையின் கூந்தலைக் கருக்கியது. இதைக் கம்பன் பாவிலமைத்த பாங்கிது.

"ஆயிடைத் தாரை என்று அமிழ்தின் தோன்றிய
வேயிடைத் தோளினாள் இடைவி லக்கினாள்
வாயிடைப் புகைவர வாவிகண் வரும்
தீ யிடைத் தன்நெடும் கூந்தல் தீகின்றாள்." ...................... (3956)

தாரை தன் கூந்தல் கருகிவிட்டதே என்றுகூடக் கவலைப்படவில்லை. தன் கணவனைக் காக்க வேண்டுமென்ற உந்தலால் மீண்டும் வாலியைத் தடுக்க முன் வந்தாள். ஆனால் வாலி "என்னைத் தடுத்து நிறுத்தாதே! அவன் வலிமையைக் கலக்கிப் பாற்கடல் கடைந்ததுபோல் அவன் உயிர் பறித்து வருவேன்." என்றான்.

"விலக்கலை விடுவிடு விளிந்துளான் உரம்
கலக்கிஅக் கடல்கடைந்து அமுது கண்டுஎன
உலக்கஇன் உயிர்குடித்து ஒல்லை மீள்குவல்
மலைக்குல மயில்என மடந்தை கூறுவாள்." ...................... (3957)

"முன்பே உன்னிடம் தோற்று ஓடியவன். இப்பொழுது அவனுக்கு எங்கிருந்து வலிமை வந்தது? அவன் பின்னால் ஒரு பெரும் துணை உள்ளது. அதை வைத்துக்கொண்டு இப்பொழுது போர்புரிய வந்துள்ளான். இதை நீ அறியவில்லையே கணவ!" என்றாள் தாரை.

"பெற்றிலன் பெருந்திறல் பெயர்த்தும் போர்செயற்கு
உற்றது நெடுந்துணை உடைமையால் என்றாள்." ........ (3958)

இதைக் கேட்ட வாலி "மூன்றுலகமும் ஒன்றுபட்டு வந்தாலும் என்னை யாராலும் வெல்ல முடியாது. தேவரும் அசுரரும் பாற் கடலைக் கடைய முடியாத பொழுது நான் அதைத் தயிர் போலக்

கடைந்து அமிர்தம் எடுத்த ஆற்றலை மறந்துவிட்டாயோ தாரை! என்னை எதிர்க்கும் எதிரியின் ஆற்றலில் பாதி என்னை வந்து சேரும் என்ற வரத்தையும் மறந்தாயோ பெண்ணே!" என்று தாரைக்குக் கூறினான்.

"தயிர்எனக் கடைந்து அவர்க்கு அமுதம்தந்தது
மயில்இயல் குயில்மொழி! மறக்கல் ஆவதோ?" ........ (3961)

இதற்கும் தாரை அமைதி பெறாது "இராமன் என்பவன் உன் உயிர் பறிக்க வந்துள்ளதாக என் உற்ற தோழிகள் கூறினர்" என்றாள்

"அன்னது கேட்டவள் அரச! ஆயவற்கு
இன்னுயிர் நட்புஅமைந்து இராமன் என்பவன்
உன்உயிர் கோடலுக்கு உடன்வந்தான் எனத்
துன்னிய அன்பினர் சொல்லினார் என்றாள்." ........ (3964)

இச் செய்தியை வாலி நம்பவில்லை. அவள் கூற்றின் உண்மையை உணரும் நிலையிலும் வாலி இல்லை. இராமனில் அவ்வளவு உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தான் வாலி. "இதனால் இராமன் பெறும் நன்மைதான் என்ன?" என்று தாரையைப் பார்த்துக் கேட்டான். அறத்தின் நெறியுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் இராமனுக்குப் பொருந்தாததெல்லாம் பேசியுள்ளாய். "பிழைத்தமை பாவி! உன் பெண்மையால்" என்றும் கடிந்து நின்றான்.

"உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்தயர் உலகினுக்கு அறத்தின் ஆறுஎலாம்
இழைத்தவற்கு இயல்பல இயம்பி என்செய்தாய்?
பிழைத்தனை பாவி உன் பெண்மையால் என்றான்."
........ (3965)

இத்துடன் வாலி நிற்கவில்லை. மேலும் பேசுகிறான். "இராமனுக்கு வந்த அரசைத் தன் தம்பிக்குக் கொடுத்துவிட்டுக் காடேகிய சிறப்பினை நீ அறியாயோ? உலகை அழிக்கும் வில்லுடையோன்

**குரங்குகளுடன் போரிடுவானா? நடுநிலையான இராமன், நானும் என் தம்பியும் புரியும் போரில் இடைவந்து அம்பு எய்வானா? சற்று நில் தாரை. இதோ என் தம்பி உயிர் குடித்து வருவேன்."** என்று கடிந்துரைத்துச் சென்றுவிட்டான்.

**"தம்பியர் அல்லது தனக்கு வேறுஉயிர்**
**இம்பரில் இலதுஎன எண்ணி ஏய்ந்தவன்**
**எம்பியும் யானும்உற்று எதிர்ந்த போரினில்**
**அம்புஇடை தொடுக்குமோ அருளின் ஆழியான்." ....... (3969)**

வாலியும் சுக்ரீவனும் எதிர்கொண்டனர். வாலி சுக்ரீவனை மேலே தூக்கி நிலத்தில் மோதிக் கொல்ல எத்தனித்தான். அதே நேரம் இராமன் ஓர் அம்பை நாணில் ஏற்றி வாலியின் மார்பில் பதிக்க அவன் நிலத்தில் வீழ்ந்து இறந்தான். இதையறிந்த தாரை அவன் மேனிமேல் விழுந்து, அழுது, புரண்டாள். வாலியின் ஈமக் கடன்கள் முறைப்படி நடந்தேறின. சுக்ரீவன் முடிசூடி மன்னனானான். தாரை கைம்மை பூண்டாள். வாலியின் மகன் அங்கதன் இளவரசனானான். சுக்ரீவன் தாரையைத் தாயாக மதித்து, அவள் அறிவுரை கேட்டுச் சிறப்புடன் ஆட்சி செய்தான். தாரை பாரில் சிறந்த கற்புக்கரசி ஆனாள்.

## அகலிகை

விசுவாமித்திர முனிவன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் மிதிலையில் சனக மன்னன் வேள்வியைக் காணச் சென்றனர். சோணை நதி, கங்கை ஆறு ஆகிய இரண்டையும் கடந்து சென்று மிதிலை நாட்டை அடைந்தனர். நகரத்தின் எல்லையில் அகலிகை தன் கணவனால் சாபம் பெற்றுக் கல்லாகக் கிடந்த மேட்டைக் கண்டனர். இராமன் அந்த மேட்டைத் தாண்டும்போது அவனின் கால்தூசிகள் அந்தக் கல்லில் பட்டதும் ஓர் அழகிய பெண் எழுந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றாள்.

"கண்ட கல்மிசைக் காகுத்தன் கழல்துகள் கதுவ
உண்ட பேதைமை மயக்குஅற வேறுபட்டு உருவம்
கொண்டு மெய்உணர்பவன் கழல் கூடியது ஒப்ப
பண்டை வண்ணமாய் நின்றனள் மாமுனி பணிப்பான்."
.........(465)

அப்போது இராமன் விசுவாமித்திரரிடம் "ஐயனே! என்ன அதிசயம். தாயையொத்தவளுக்கு நேர்ந்தது என்ன? சொல்லுவீர் முனிவ!" என்று கேட்டான். விசுவாமித்திரர் இராமனுக்கு அகலிகை பற்றி விவரமாக எடுத்துக் கூறினார்.

இவள் தவத்தில் சிறந்த கோதம முனிவரின் மனைவியாவாள். இவள் பெயர் அகலிகை என்பர். இவள் அழகில் தேவேந்திரன் மயங்கித் துன்புற்று வாடினான். அன்றொரு நாள் முனிவன் போல் பொய்வேடம் தாங்கி, விடிந்துவிட்டதைக் காட்டச் சேவல் போலக் கூவினான் இந்திரன். முனிவன் விடிந்துவிட்டது என்று எண்ணிப் பூசைக்குப் போய்விட்டான். முனிவன் வேடத்தில் இந்திரன் ஆசிரமத்துள் புகுந்தான். அதை அகலிகை அறியாது, தன் கணவன்தான் என்றிருந்தாள். உள்ளே சென்ற இந்திரன் அகலிகையுடன் கூடி இருவரும் ஒன்றுபட்டு இன்பம் அனுபவித்தனர். புணர்ச்சியில் புதியதொரு வேறுபாட்டினை உணர்ந்த அகலிகை, இவன் தன் கணவனல்லன் என்றும் இவன் இந்திரனே என்றும் உணர்ந்து கொண்டாள். உணர்ந்திருந்தும் அதைத் தவிர்க்காது, தன்னை மறந்து தளர்ந்திருந்தாள். வெளியில் சென்ற முனிவன் இன்னும் விடியவில்லை என்பதை அறிகுறிகளால் உணர்ந்து ஆசிரமத்தை அடைந்தான்.

"புக்கு அவளோடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
'தக்கது அன்று' என்னஓராள் தாழ்ந்தனள் இருப்பத் தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்."
................ (470)

முனிவன் ஆசிரமத்துள் நுழைந்தபோது கலைந்த ஆடையுடன் அகலிகை எழுந்து நின்றாள். இந்திரன் அவதிப்பட்டு எழுந்து ஒரு பூனை

வடிவெடுத்துத் தப்பி ஓட முயன்றான். அது கண்ட முனிவன் "இந்திரா நில்!" என்றார். இந்திரன் நடுநடுங்கி நிற்கையில் "நீ பெண்ணின் மர்மக்குறிக்கு ஆசைப்பட்டாய். எனவே உனக்கு ஆயிரம் குறிகள் உன் உடம்பில் உண்டாகட்டும்" எனச் சபித்தார். உடனே அவன் மேனி முழுவதும் ஆயிரம் குறிகள் தோன்றின. இந்திரன் நாணிக் கோணிக் கொண்டு தன் இருப்பிடம் சென்றான்.

மாற்றான் என்று தெரிந்த பிறகும் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டிருந்த அகலிகைக்கு "கல்லாகக்" கடவாய் என்று சாபம் கொடுத்தான் முனிவன். செய்குற்றம் பொறுத்தருளி, பாவத்திற்கும் விமோசனம் அருள வேண்டுமென்று அகலிகை கேட்க, "தசரதன் மகன் இராமன் என்பவனின் கால்தூசி பட, கல்உருவம் மாறிப் பெண் உருவம் பெறுவாய்!" என்றான் முனிவன்.

> "பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே அன்பால்
> அழல்தரும் கடவுள் அன்னாய் முடிவு இதற்கு அருளுக என்ன
> தழைத்து வண்டுஇமிரும் தண்தார்த் தசரத ராமன் என்பான்
> கழல்துகள் கதுவ இந்தக் கல்உருத் தவிர்தி என்றான்."
>
> ........ (474)

இப்படியான சாபமும் விமோசனமும் கொடுக்கும்போது அயோத்தியில் இராமன் அவதரிக்கவில்லை. அவ்வாறிருந்தும் தசரதன் மகனாகிய இராமன் என்று கூறியதும் முனிவன் முக்காலத்தையும் முழுமையாக அறிந்திருந்தான் என்பதைக் காட்டுகின்றது. அகலிகை வரலாற்றைக் கூறிய விசுவாமித்திர முனிவன் "இராமா உன் கைவண்ணம் தாடகையை வென்றபோது அங்குக் கண்டேன். உன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்." என்று புகழ்ந்து பாராட்டினான்.

> "இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனிஇந்த உலகிற்கு எல்லாம்
> உய்வண்ணம் அன்றி மற்றுஓர் துயர்வண்ணம் உறுவது உண்டோ?

**மைவண்ணத்து அரக்கி போரில் மழைவண்ணத்து**
**அண்ணலே! உன்**
**கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக்**
**கண்டேன்."**
................ (475)

*தனக்குச் சாப நீக்கம் அருளிய இராமனை, அகலிகை வீழ்ந்து* வணங்கினாள். கோதம முனிவன் இருக்கும் இடத்துக்கு அகலிகையுடன் யாவரும் சென்றனர். "இவன்! இராமன் கால்தூசி பட்டுத்தான் கல்லான இவள் பெண்ணானாள். தானாக இவள் வெளியே சென்று தவறிழைக்கவில்லை. நெஞ்சினால் பிழைப்பு இல்லாதவள். இவளைத் தாங்கள் மீண்டும் மனைவியாக ஏற்க வேண்டும்." என்று வேண்டினார் விசுவாமித்திரர். அதைக் கோதம முனிவரும் ஏற்றுக்கொண்டார்.

**"அஞ்சன வண்ணத் தான்தன் அடித்துகள் கதுவா முன்னம்**
**வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தாள்**
**ஆகிநின்றாள்**
**நெஞ்சினாள் பிழைப்பு இலாளை நீஅழைத் திடுக என்ன**
**கஞ்சமா மலரோன் அன்ன முனிவனும்,**
**கருத்துள் கொண்டான்."**
................(478)

அப்போது கோதமரை வலம் வந்து வணங்கினாள் அகலிகை. விசுவாமித்திரர் அகலிகையின் கரங்களைப் பிடித்துக் கோதமர் கரங்களில் கொடுத்தார். இவ்வண்ணம் அகலிகை பஞ்ச கன்னியர்களில் ஒருத்தி ஆனாள்.

## மண்டோதரி

"முக்கோடி வாழ்நாள், முயன்றுடைய பெருந் தவம், 'எக்கோடி யாராலும் வெல்லப்படாய்' என்று முன்பு பிரமன் கொடுத்த வரம், எட்டுத் திசைகளையும் உலகம் முழுவதையும் போர்புரிந்து வென்ற தோள்." ஆகியவற்றின் உறவினனான இலங்கை வேந்தன்

இராவணனின் மனைவிதான் மண்டோதரி ஆவாள். அவள் அரக்க மன்னன் தேவதச்சன் மயனின் மகளும் தானவர் இனத்தவளுமாவாள். அழகு, கடமை, கண்ணியம், நேர்மை யாவும் அவளுடன் தஞ்சம் அடைந்துள்ளன. இராவணன்- மண்டோதரி ஆகியவர்களுக்கு இந்திரசித்து, அதிகாயன், அக்ககுமாரன், தேவராந்தகன், திரிசிதன், நராந்தகன் ஆகிய அறுவரும் வீரதீரம் நிறைந்த அரச குமாரர்களாவர்.

தேவர்கூட இராவணனை அணுகமுடியாதவாறு அவன் இலங்காபுரியை ஆண்டுவந்தான். அவ்வாறான வீரங்கொண்டவன் இலங்கை வேந்தன். இவன் வலிமைக்கு அஞ்சி, ஒதுங்கி, ஏவற்பணி புரிந்து நிற்பர் விண்ணவர். இவ்வண்ணமே இராவணன் மனைவி மண்டோ தரிக்கும் தேவருலக நடனமாதராகிய அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆகிய நால்வரும் பிறரும், அவளின் கால்களை வருடி, சாமரம் வீசி, யாழ் இன்னிசை மீட்டி, கற்பக மலர் மணம் வீசச் செய்து, தொடர் பணியாற்றி வந்தனர்.

இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து இலங்கையில் சிறை வைத்தான். இதனால் மண்டோதரி மனமுடைந்து கலங்கினாள். இராவணனை அணுகி "மன்னவ! பெண் பாவம் பொல்லாதது. பெண் பழி உன்னை வந்து சூழும். இராமன் ஆற்றல் அறியாயோ? அவன் ஒரு தெய்வப்பிறவி அல்லவா? அவனுடன் மோதுவதைத் தவிர்த்துக் கொள். இன்னும் சீதைப்பிராட்டி ஒரு கற்புக்கரசி. அவள் ஒரு காலமும் உன்னை விருப்பமாட்டாள். எனவே ஐயனே! சீதையைக் கொண்டுபோய் இராமனிடம் விட்டு வருவாயாக! இதை நான் உனக்காகவும், எங்கள் பிள்ளைகளுக்காகவும், எனக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்." என்று அறநெறி கூறினாள். இராவணன் இதைக் கருத்திலெடுக்கவில்லை. அவன் காமவாயிலில் சீதையை எண்ணி நின்றான். சீதை ஒருநாள் தன்னுடன் இணங்கி வருவாள் என்று பித்தம் பிடித்துத் திரிந்தான்.

இராமன்- இராவணன் போர் மூண்டது. அப்போரில் இராவணன் உட்பட யாவரும் இறந்துபோயினர். இராவணன் இறந்தான் என்பதை

அறிந்த அவன் மனைவி மண்டோதரி தலைவிரி கோலமாய்ப் பல்லாயிரம் அரக்கிமார் தன்னைத் தொடர்ந்துவர ஓடிவந்து கதறி அழுது தன் கணவன் உடல் மீது விழுந்தாள்.

"என் வேந்தனுக்கு முன்பே சுமங்கலியாக இறக்க வேண்டுமென்று நான் நினைத்திருந்த கருத்து மாறிப்போய் அவனுக்குப் பின்னேயோ இறப்பது? உன் முடித்தலைகள் தரையில் முகம் பதிய முன்னால் விழுந்ததே? நிலங்களில் அவை பட்டு அலையலாமோ? இராவணனார் கொடுத்த பரிசு இப்படியானதே! அம்மா" என்று மண்டோதரி புலம்பினாள்.

**"அன்னையோ அன்னையோ ஆ! கொடியேற்கு அடுத்தவாறு அரக்கர் வேந்தன்**
**பின்னேயோ இறப்பது? முன் பிடித்திருந்த கருத்து அதுவும் பிடித்தி லேனோ?**
**முன்னேயோ விழுந்ததுவும் முடித்தலையோ? படித்துஅலைய முகங்கள் தானோ?**
**என்னேயோ என்னேயோ இராவணனார் முடிந்த பரிசு இதுவோ பாவம்."**
................ (9939)

"இராமன் என்ற ஒருவன் அம்பு, வெள் எருக்கை மாலை அணிந்த சிவபிரான் எழுந்தருளி இருக்கும் கைலை மலையைப் பெயர்த்தெடுத்த உன் உடம்பு முழுவதையும் சிறு இடமும் விடாது உயிர் இருக்கும் இடத்தைத் தேடித் துளைத்த தன்மையோ இது? அல்லது தேன் சிந்தும் மலர் அணிந்த சீதையை மனத்தில் மறைத்து வைத்த காதல் மறைந்திருக்கும் இடந்தேடி உடல் புகுந்து தடவியதோ இது?" என்று மண்டோதரி மேலும் புலம்பினாள்.

**"வெள் எருக்கஞ் சடைமுடியான் வெற்பு எடுத்த திருமேனி மேலும் கீழும்**
**எள் இருக்கும் இடன் இன்றி, உயிர் இருக்கும் இடன் நாடி இழைத்தவாறோ?**

கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை மனச் சிறையில்
கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி, உடல் புகுந்து தடவியதோ
ஒருவன் வாளி?"
.........(9940)

"முக் கடவுளர்களை விட, தேவர்களை விட, யானைகளை விட வலிமை பெற்ற என் முன்னனே உனக்கு என்றும் சாவில்லை என்று எண்ணியிருந்தேனே! உன்னை அழிக்க ஒரு மனிதன் இருப்பான் என்று நான் எண்ணவில்லையே! நீ போனபின் நான் ஏன் உயிர் வாழவேண்டும்?" என்று சொல்லிச் சொல்லிப் புலம்பி, இராவணனின் மார்பைத் தன் கைகளால் தழுவித்தழுவிப் பெருமூச்சு விட்டு உயிர் நீத்தாள் உத்தமி மண்டோதரி.

## நிறைவுரை

இதில் கோசலை, கைகேயி, சுமத்திரை, சீதை, கூனி, தாரை, அகலிகை, மண்டோதரி, சூர்ப்பணகை, திரிசடை, உருமை ஆகிய மகளிர் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அவர்களில் கைகேயி, கூனி, சூர்ப்பணகை ஆகிய மூவரும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டனர். கைகேயி, கூனி ஆகிய இருவரின் சூழ்ச்சிச் செயலால் தசரத மன்னன் மாண்டான். சூர்ப்பணகையின் செயலால் இராவணன் மடிந்தான். பஞ்ச கன்னியர்களில் ஒருத்தியாய் "தலைக் கற்பில்" நின்று, தன் கணவன் இராவணன் இறந்துபட்டான் என்பதை அறிந்து, அவனுடன் தானும் உயிர் நீத்து, பிறர்க்குணர்த்திய "மூதானந்தம்" (ஒன்றுபட்ட அன்பினால் வந்த சாக்காடு) என்ற பேரின்பத்தில் இன்றும் மூழ்கி நிற்பவள் மண்டோதரி ஆவாள்.

இராமன், போரில் இராவணனை வென்று, சீதையை மீட்டு, அறவழி நின்று, மனுநீதி தவறாது அரசாட்சிபுரிந்துவந்தான். மக்களும் இராமனைப் போற்றினர், வாழ்த்தினர்.

❖❖❖



9

# பண்டைப் பாடல் பாடிய பெண்பாற் புலவர்

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ்ப் பற்றுள்ள பாண்டிய மன்னர்கள், தமிழ் மொழித்திறன் வாய்ந்த புலவர்களை ஒன்றுசேர்த்து முச்சங்கங்களை நிறுவித் தமிழ்மொழியை வளர்த்துப் பேணிக் காத்து வந்தனர். **தலைச் சங்கத்தில்** எழுந்த நூல்கள் அத்தனையும் கடற்பெருக்கால் அழிந்துவிட்டன. அதேபோல் **இடைச் சங்கத்தில்** எழுந்த நூல்களில் **தொல்காப்பியம்** தவிர மற்றைய நூல்கள் அனைத்தும் மாண்டு போயின. இன்னும் இதிகாசங்களான **மகாபாரதம்**, **இராமாயணம்** ஆகிய இரண்டும் தொல்காப்பியத்துக்கு முன் எழுந்த நூல்களாகும். மேலும் **கடைச் சங்கத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை,** ஆகிய **பதினெண் மேற்கணக்கு நூல்கள்** எழுந்தன. பத்துப்பாட்டில் **(1) திருமுருகாற்றுப் படை, (2) பொருநராற்றுப்படை, (3) சிறுபாணாற்றுப்படை, (4) பெரும்பாணாற்றுப்படை, (5) முல்லைப்பாட்டு, (6) மதுரைக்காஞ்சி, (7) நெடுநல்வாடை, (8) குறிஞ்சிப்பாட்டு, (9) பட்டினப்பாலை,**

(10) மலைபடுகடாம் ஆகிய பத்து நூல்கள் அடங்கும். எட்டுத்தொகையில் (1) குறுந்தொகை, (2) கலித்தொகை, (3) புறநானூறு, (4) அகநானூறு, (5) ஐங்குறு நூறு, (6) நற்றிணை, (7) பரிபாடல், (8) பதிற்றுப் பத்து ஆகிய எட்டு நூல்கள் அடங்கும். அதையடுத்துச் சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான (1) திருக்குறள், (2) நாலடியார், (3) நான்மணிக்கடிகை, (4) இன்னா நாற்பது, (5) இனியவை நாற்பது, (6) திரிகடுகம், (7) ஆசாரக் கோவை, (8) பழமொழி நானூறு, (9) சிறுபஞ்சமூலம், (10) ஏலாதி, (11) முதுமொழிக் காஞ்சி, (12) ஐந்திணை ஐம்பது, (13) திணைமொழி ஐம்பது, (14) ஐந்திணை எழுபது, (15) திணைமாலை நூற்றைம்பது, (16) கைந்நிலை, (17) கார் நாற்பது, (18) களவழி நாற்பது போன்ற நூல்களும், ஐம்பெரும் காப்பியங்களான (1) சிலப்பதிகாரம், (2) மணிமேகலை, (3) சீவக சிந்தாமணி, (4) வளையாபதி, (5) குண்டலகேசி, ஆகிய ஐந்து நூல்களும், ஐஞ்சிறு காப்பியங்களான (1) சூளாமணி, (2) நீலகேசி, (3) யசோதர காவியம், (4) நாககுமார காவியம், (5) உதயகுமார காவியம் ஆகிய ஐந்து நூல்களும், திருமூலர் திருமந்திரம், திருவாசகம், கம்பராமாயணம், பெரிய புராணம் ஆகிய நான்கு (04) நூல்களும் எழுந்தன. மேற்காட்டிய ஐம்பத்தி மூன்று (53=3+10+8+18+5+5+4) நூல்களும் சங்க நூல்களாகவும், தமிழன் சொத்தாகவும் அமைந்துள்ளமை, தனித் தமிழின் ஓர் அரிய சிறப்பாகும்.

சங்கத் தமிழ்ப் பாடல்களை ஆண், பெண், அரசர், இரப்பாளிகள் ஆகியோர் பாடியுள்ளனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், அரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், இளவரசர், படைத் தலைவர்கள், கொடைவள்ளல்கள் ஆகியோர்மேற் பாத்தொடுத்துப் பாடுவது புலவர் வழக்காகும். இதற்குப் பரிசிலும் வழங்குவர் மன்னர்.

## பெண்பாற் புலவர்

அவர்களில் சிறப்புற்று விளங்கிய பதினேழு (17) பெண்பாற் புலவர்களான 1. ஔவையார், 2. ஒக்கூர் மாசாத்தியார், 3. அள்ளூர் நன்முல்லையார், 4. காக்கை பாடினியார் நச்செள்ளையார், 5. காவற்பெண்டு, 6. குறமகள் இளவெயினியார், 7. குறமகள் குறியெயினி, 8. நக்கண்ணையார், 9. நெட்டிமையார், 10. பாரி

மகளிர், 11. பூங்கண் உத்திரையார், 12. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, 13. பேய்மகள் இளவெயினியார், 14. மாறோக்கத்து நப்பசலையார், 15. மாறபித்தியார், 16. வெண்ணி குயத்தியார், 17. வெறிபாடிய காமக் கண்ணியர். பற்றியும், அவர்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றியும், அவர்கள் சமைத்த பாடல்கள் பற்றியும் ஆராய்வதுதான் இக் கட்டுரையின் நோக்காகும்.

**1. ஔவையார்:-** இவர் பாணர் மரபினர். அக்காலத்திற் புலவர், அரசர் மத்தியிற் பெருமதிப்புடன் வாழ்ந்தவர். அதியமான், தொண்டைமான், நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி, அதியமான் மகன் பொகுட்டெழினி ஆகிய பலரையும் பாடியவர். சங்கத்தொகை நூற்களுள் 60 செய்யுட்கள் இவராற் பாடப்பட்டுள்ளன.

இவர் **புறநானூறு** நூலில் (87-104, 140, 187, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392) **33** பாடல்களும், **குறுந்தொகை** நூலில் (15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388) **15** பாடல்களும், **நற்றிணை** நூலில் (129, 187, 295, 371, 381, 390, 394) **ஏழு (07)** பாடல்களும், **அகநானூறு** நூலில் (11, 97, 147, 273, 303) **ஐந்து (05)** பாடல்களுமாக ஒருமித்து **60** பாடல்களைப் பாடியுள்ளார்.

புறநானூற்று நூலில் அமைந்த நானூறு (400) பாடல்களையும் நூற்றிஐம்பத்தெட்டுப் (158) புலவர்கள் பாடியுள்ளனர். அதில் பதினாறு (16) பெண்பாற் புலவர்கள் பாடல் சமைத்துள்ளனர். பாடல் பாடிய பதின்நால்வரின் (14) பெயர்கள் மறைந்துவிட்டன. அவர்கள் பாடிய பாடல்கள் இவை:- (244, 256, 257, 263, 297, 307, 323, 327, 328, 333, 339, 340, 355, 361). இரு பாடல்கள் (267, 268) முற்றும் கிடைக்கப் பெற்றிலது. வேறு இரு பாடல்கள் (328, 370) முதல்வரி இல்லாதவையாகும். பிற்பகுதி இல்லாத மூன்று பாடல்கள் (244, 355, 361) உள்ளன. பாடல் இடையில் சில பகுதிகள் இல்லாதனவாய் நாற்பத்தி மூன்று (282, 283, 285, 288, 306, 317, 321, 323, 328, 333, 334, 335, 337, 339, 340, 341, 343, 345, 347, 352, 353, 357, 361, 362, 366, 370, 371, 373, 377, 379,

380, 383, 384, 387, 388, 390, 391, 393, 395, 396, 398, 399, 400) பாடல்கள் உள்ளதையும் அவதானிக்கலாம்.

புறநானூறு நூலில் ஔவையார் பாடிய 33 பாடல்களில், 25 பாடல்கள் அதியமான் நெடுமான் அஞ்சி பற்றியும், பாவலர், மக்கள், மன்னர், அரசர், குடும்பப் புறநிலை வாழ்வு, போர், பெருமை, வண்மை, ஒழுக்கவியல், தத்துவம், இனப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, அறநெறிப்பற்று, ஆண்மை, போரியல் மரபு, இசைப்போர், அருள், அன்பு, பண்பு, பாசம், அரசு, நாடு, "எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" போன்ற விடயங்கள் பரவலாகப் பேசப்பட்டுள்ளன. அதனால் புறநானூறு மக்களின் இலக்கிகிய - அறிவியல் நூலாகின்றது.

குறுந்தொகை நூலில் 15 பாடல்களில், தலைமகன் தலைமகளை உடன்கொண்டு செல்வதும், தலைமகளின் வாட்டம் கண்ட தாய் கட்டுவிச்சியை அழைப்பதும், தலைவன் வரைவிடைவைத்துப் பிரிவதும், தலைவியின் ஆற்றாமையும், தலைவன் தலைவியர் பகற்குறியிற் கூடுவதும், இரவுக்குறி மறுக்கப்படலும், தலைவன் பரத்தையை நாடிச் செல்வதும், தலைவன் பரத்தையை விட்டுத் தலைவியை நாடிவர வாயில் மறுக்கப்படலும் ஆகியவை பற்றி ஔவையார் பாடல் சமைத்துள்ளார்.

நற்றிணை நூலில் ஏழு (07) பாடல்களில், ஆடவர் வினைவயிற் பிரியும்பொழுது, மனைவியரும் உடன் செல்லாது மனையில் ஆறியிருப்பதே கடமையாகும், காதலனைப் பிரிந்ததும் தலைவிக்குப் பசலை படர்வதும், தலைவன் தலைவியைக் கூடுவதும், அதை அன்னை அறிவதும், குறித்த காலத்தில் தலைவன் வராதவிடத்துத் தலைவி துடித்து வருந்துவதும், பரத்தையுறவு உடையான் தலைவன் என்று தலைவி ஊடுவதும் ஆகிய செய்திகளைப் புலவரின் பாடல்கள் கூறுகின்றன.

அகநானூறு நூலில் ஔவையார் பாடிய ஐந்து (05) பாடல்கள் உள்ளன. அவற்றில், தலைவன் பொருள் தேடப் பிரிந்தான், தலைவி பிரிவுத் துயரால் நலிந்தாள், தலைவியைத் தேற்றத் தோழி வந்தாள், தோழி சொல்லும் பயன் அற்றது, தலைவிக்குத் தனிமைத் துயரம் மிகுந்தது, அவள் அறிவும் மயங்கியது, வருவதாக அவன் குறித்துச் சென்ற தவணை நாளும் கடந்துவிட, அவள் உடல் மெலிவுற்ற நிலையிலும் தானும் அவனை நாடிச்

செல்லத் திடங்கொள்வதும் போன்ற செய்திகளைப் பாவில் வடித்துள்ளார் புலவர்.

**2. ஒக்கூர் மாசாத்தியார்:-** இவர் பெண்பாற் புலவர். இவர் பாண்டி நாட்டின் ஒக்கூர் என்ற ஊரில் பிறந்து தமிழ்ப் புலமையாளராகத் திகழ்ந்தவர். இவர் புறநானூறு நூலில் ஒரு பாடலும் (279), அகநானூறு நூலில் இரண்டு (324, 384) பாடல்களும், குறுந்தொகை நூலில் ஐந்து (126, 139, 186, 220, 275) பாடல்களுமாக ஒருமித்து எட்டுப் (08) பாடல்களைச் சமைத்துள்ளார்.

புறநானூறு நூலின் 279ஆம் பாடலில், ஒரு மறக்குடி மகளின் தந்தை முன்னர் நடந்த போரில் யானையை வென்று களத்தில் மாண்டதும், நேற்றைய போரில் இவள் கணவன் இறந்ததும், இன்று போர்ப்பறை கேட்டதும் தன் ஒரே சிறு வயதுடைய மகனிடம் வேல் கொடுத்துப் போர் முனை செல்க என்று அனுப்பி வைத்தாள். இவள் ஒரு வீரத்தாயாவாள்.

அகநானூறு நூலில் இவர் பாடிய இரு பாடல்களில், தலைவன் தன் தலைவியைப் பிரிந்து வினைமேற் செல்வதும், அவள் நினைவில் அவன் ஊறியிருப்பதும், வினை நிறைவுற்றுத் தேரேறி வருவதும், தேர் விரைந்தோடும் சிறப்பிற்குரிய பாகனைப் பாராட்டுவதும், மழையினாற் தோன்றிய புதிய காட்சிகளைச் சொல்லியும், அவன் சென்றடையத் தலைவியும் புது நலம் பெற்றுப் பொலிவாள் என்ற கருத்துக்களையும் காண்கின்றோம்.

குறுந்தொகை நூலில் இவர் பாடிய ஐந்து பாடல்கள் உள்ளன. இவற்றில், இளமையைக் கருதாது செல்வத்தை நாடிச் சென்றார், பரத்தையை நாடிச் சென்ற தலைவன் வாயில் வேண்டி வந்தபொழுது **"அம்பலொடு எம்தெரு வரேல்"** என்று வாயில் மறுத்ததும், தலைவனை நினைந்து தலைவியின் கண்கள் துயில் மறந்தன, குறித்த காலம் கடந்தும் என் தலைவன் வந்திலர், துயரில் வாடி வதங்கும் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறல் போன்ற கருத்தோட்டச் செய்திகள் மிதந்துள்ளன.

**3. அள்ளூர் நன்முல்லையார்:-** இவர் பாண்டிநாட்டுச் சிவகங்கைக்கு அருகிலுள்ள அள்ளூர் ஊரினரும், பெண்பாற் புலவரும் ஆவார். இவர் குறுந்தொகை நூலில் எட்டுப் (32, 67, 68, 93, 96, 140,

202, 237) பாடல்களும், புறநானூறு நூலில் 306ஆம் பாடலையும், அகநானூறு நூலில் 46ஆம் பாடலுமாக ஒருமித்து 10 பாடல்களைப் பாடியுள்ளார்.

குறுந்தொகை நூலில் இவர் சமைத்த எட்டுச் செய்யுள்களில், பிரிவால் வேட்கைநோய் கொண்டாரை என்றும் வருத்தும், பனை மடலோடு தெருவில் வருவது நுமக்குப் பழிதரும், உயிர் வாழ்தல் எமக்குப் பழிதரும், தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி மெலிவடைதல், பசலை படர்தல், அழகு கெடல், துயர் படல், தலைவன் தலைவியைவிட்டுப் பரத்தையரை நாடிச் செல்லல் போன்ற செயல்கள் செய்யுள்களில் செறிந்து காணப்படுகின்றன.

புறநானூறு நூலின் 306ஆம் பாடல்:- அந்தச் சிறிய ஊரில் வாழ்ந்து வரும் மறக்குல இளையவள் ஒருத்தியின் கணவன் போருக்குச் சென்றான். அவன் வெற்றியுடன் திரும்பி வருதல் வேண்டுமென்று தன் குடி முன்னோரின் நடுகற்களைத் தொழுது வேண்டுகின்றாள். அந்த ஊரினில், களிறுகள் பொருதி இடையிடையே சிதைந்த முள்வேலி, மக்கள் வந்து உண்ணும் நீர்நிலை, முன்னோரின் நடுகற்கள் ஆகியவற்றையும் காண்கின்றோம்.

அகநானூறு நூலின் 46ஆம் பாடல்:- தன் தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையை நாடிச் சென்றதற்கு நொந்தாள் தலைவி ஒருத்தி. அவன் வீடு திரும்பியபொழுது அவள் "நும் பரத்தமை பற்றி ஊரார் கூறுகின்றனர். நான் அதுவும் கூறேன். என் நலிவும் மெலிவும் என்னுடையதேயாகட்டும். அங்கே உன் பரத்தை தேடுவாள். நீர் அங்கேயே அவளிடம் செல்க. உன்னைத் தடுப்பவர் யாரும் இலர்" என்று கூறினாள்.

**4. காக்கை பாடினியார் நச்செள்ளையார்:-** இவர் பெண்பாற் புலவராவார். இவர் இயற்பெயர் செள்ளையார் என்றும், முன்னும் பின்னும் உள்ள "நச்" மற்றும் "ஆர்" விகுதிகள் என்றும், காக்கையைச் சிறப்பித்துப் பாடியதால், "காக்கை பாடினியார்" என்னும் சிறப்புப் பெயர் பெற்றார் என்பர். இவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பதிற்றுப் பத்துள் ஆறாம் பத்திற் பாடி, ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசும் பெற்ற சிறப்பினராவர். இவர் பதிற்றுப் பத்து நூலில் பத்துப் பாடல்களும் (51-60), புறநானூறு நூலில் 278ஆம் பாடலும், குறுந்தொகை நூலில் 210ஆம் பாடலுமாக ஒருமித்து 12 பாடல்களைப் பாடியுள்ளார்.

பதிற்றுப் பத்து நூலின் 51-60ஆம் பாடல்கள்:- சேர மன்னன் பனைமரச் சோலையில் அமைந்திருந்த பந்தலில் நாடக மகளிர் ஆடல் பாடல்களைப் பார்த்து இன்புற்றிருக்க, அங்குள்ள மன்னரும் மற்றையோரும் வந்து அவனைப் போற்றிப் புகழ்ந்தனர். மகளிர் துணங்கைக் கூத்தாட முதற் கையினைக் கொடுத்து உதவினான் சேர மன்னன். இது கண்ட அரசமாதேவி, ஆடல் மகளிரோடு துணங்கைக் கூத்தாடினான் என்று பொய்க்கோபம் கொண்டு ஊடினாள். மதிலின் புறத்தே அமைந்த அகழியின் சிறப்பை "குண்டுகண் அகழி" என்று கூறியுள்ளார். யானைப் படையையும் எதிர்த்துத் தாக்கும் படைவரிசை "நில்லாத் தானை" என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. விறலியரே! அவன் புகழ்போற்றி ஆடுக, பாணர்களே! அவன் புகழ்பாடுங்கள், பகைவர் அழியப் போரில் வெற்றி, புகழ், செல்வம் பெற்று, மழை மேகமாய் மக்களுக்கு என்றும் உதவி நின்று, வாழ்வாயாக! என்று சேர மன்னனைப் போற்று கின்றார் புலவர்.

புறநானூறு நூலில் 278ஆம் பாடல்:- முதிய தாய் ஒருத்தி "தன் மகன் படையினை விட்டுப் போரிலே புறங்காட்டி ஓடி மாண்டான்" என்று ஊரார் வந்து கூறக் கேட்டு மனங் கலங்கிக் கொதிப்படைந்தாள். "என் மகன் போரில் புறங்கொடுத்து ஓடினானாகில், அவன் பாலுண்ட என் முலையை அறுத்து எறிவேன்" என்று சூளுரை உரைத்துப் போர்க்களஞ் சென்றாள். கையில் வாளும் தாங்கிப் பிணக்குவியலைப் புரட்டிப் புரட்டித் தேடினாள். அப்போது, அங்கொருபால், செங்களத்திலே சிதைந்து வேறாகி வீழ்ந்து கிடந்த தன் மகனின் உடலைக் கண்டாள். தன் மகன் வீரமரணம் அடைந்தான் எனக் கண்ட தாயின் உவகையும், சோகமும், நாட்டுப்பற்றும் இச் செய்யுளில் அழகுற அமைத்துள்ளார் புலவர்.

குறுந்தொகை நூலின் 210ஆம் பாடல்:- "விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" எனத் தம் கொழுநர் வரவை முன்கூட்டியே கரைந்து அறிவித்த காக்கைக்கு மகளிர் நெய்யுடன் கலந்த சோற்றைக் கலத்திற் படைத்துப் பலியிட்டுப் போற்றும் செய்தியைப் புலவர் நயம்படக் கூறியுள்ளார்.

**5. காவற் பெண்டு:-** இவர் பெண்பாற் புலவர் ஆவார். இவரைக் "காதற்பெண்டு" என்றும் அழைப்பர். இவர், சோழன் போர்வைக்

கோப்பெருநற் கிள்ளியின் செவிலித் தாயாராக விளங்கி, அறிவாற்றலும், புலமைச் செறிவும் கொண்டிருந்தவர் ஆவார். இவர் புறநானூறு நூலில் ஒரு செய்யுளைப் பாடியுள்ளார்.

புறநானூறு நூலின் 86ஆம் பாடல்:- "என் சிறிய வீட்டின் தூணில் சாய்ந்து நின்று "உன் மகன் எவ்விடத்தான்?" என்று கேட்கின்றாய்! அவன் எங்குள்ளானோ நான் அறியேன். புலி கிடந்து பின் வெளியே போன மலைக்குகை போல, அவனைப் பெற்ற வயிற்றினை இதோ பார். அவன் போர்க்களத்திலே வந்து தோன்றுவான். அவனை அங்குச் சென்று காண்பாயாக!" என்று பாடல் சமைத்துள்ளார் புலவர். அக்காலத்துத் தாய்மார் கொண்டிருந்த மனத்திண்மையையும், நாட்டுப்பற்றையும் எடுத்துக் காட்டுகின்றது. **"புலி சேர்ந்து போகிய கல்லளை போல, ஈன்ற வயிறோ இதுவே; தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே"** என்னும் வாக்கு, வீரத் தாய்மாரின் திருவாக்காகும்.

**6. குறமகள் இளவெயினியார்:-** இவர் குறக்குலத் தலைவன் ஒருவனின் மகள் என இவரின் பெயரிலிருந்து அறியலாம். அக்காலக் குறக்குடியினரும் சிறந்த கல்வி, பண்பு ஆகியவற்றில் மேம்பட்டிருந்தனர் என்பதும் தெளிவாகின்றது. நற்றிணையின் 357ஆம் செய்யுளைப் பாடியவரான குறமகள் குறியெயினியாரும் இதனை வலியுறுத்தும் சான்றாவர். புறநானூறு நூலில் குறமகள் இளவெயினியாரின் ஒரு பாடல் அமைந்துள்ளது.

புறநானூறு நூலின் 157ஆம் பாடல்:- "தமர் தப்புச் செய்தால் அதைப் பொறுத்தலும், பிறர் வறுமையுற்றவிடத்து உதவாத நிலைக்கு இரங்கித் தான் நாணுதலும், பிறர் பழி கூறாத போராற்றலும், மூவேந்தர் அவையில் தலைநிமிர்ந்து நடத்தலும், பிற தலைவர்களே உங்கள் போன்றோர்க்கு இயலாதென எம் தலைவன் வில் வளைத்ததால் அகன்ற மார்பும், கொல்லும் வேலும், காந்தட் கண்ணியும் உடையவன் முகில் படியும் உயர்மலையும், செவி தாழ்த்துக் கேட்கும் தன்மையும் உடைய மலைநாட்டுத் தலைவன், ஏறைக்கோன்! அவனுக்கே அவை எல்லாம் பொருந்தும்" என்று ஏறைக்கோனின் மேம்பாடுபற்றிக் கூறும் சிறந்த செய்யுள் இதுவாகும்.

**7. குறமகள் குறியெயினி:-** இவர் எயினர் மரபினர். **"எயினி"** என்பது குறவர் (எயினர்) குடியினருள் ஒரு வகுப்பினராவர். இவர்

எயினர்குலத் தலைவன் ஒருவனின் மகள் என்பது அவர் பெயரிலிருந்து தெளிவாகும். இவர் பாடிய பாடலொன்று நற்றிணை நூலினை அலங்கரிக்கின்றது.

நற்றிணை நூலில் 357ஆம் பாடல்:- இக் குறிஞ்சித் திணைப் பாடல் பெண்ணின் மனத்திடத்தைச் சிறப்பித்துக் காட்டுகின்றது. "சாரல் நாடனொடு ஆடிய நாளே, என்னொடு நிலையாதாயினும், என்றும் நெஞ்சு வடுப்படுத்துக் கெட அறியாதே" என்று தலைவி கூற்றாகப் புலவர் பாடல் அமைத்துள்ளார். "சாரல் நாடனுடன் சேர்ந்து மகிழ்ந்து கைகொடுத்து நீராடி இன்புற்றிருந்த அந்த நினைவை என்னால் என்றும் மறக்க முடியாதலால், அந்நினைவை நெஞ்சில் தாங்கிக்கொண்டு, அவர் என்னை நாடி வரும்வரை அவர் நினைவில் உயிர்தரித்திருப்பேன்." என்று தலைவி யானவள் தோழிக்குக் கூறினாள்.

**8. நக்கண்ணையார்:-** இவர் பெண்பாற் புலவராவார். இவர் பெருங்கோழி நாய்கன் மகள் எனவும் கூறுவர். இவர் தித்தனின் மகனான போர்வைக் கோப்பெருநற் கிள்ளி என்னும் சோழகுலத்து இளவரசனைக் கண்டு காதலித்து, அவனால் அக் காதல் ஏற்றுக்கொள்ளப்படாது அவன் வெளிநாடு சென்ற நிலையிலும், அவனையே தம் தலைவனாக நினைந்து வாழ்ந்தவள் என்பர். புறநானூற்று 83, 84, 85ஆம் செய்யுட்களும், அகநானூற்று 252ஆம் செய்யுளும், நற்றிணையின் 19, 87ஆம் செய்யுட்களுமாக ஒருமித்து ஆறு (06) செய்யுட்களைச் சமைத்துள்ளார்.

புறநானூறு நூலில் 83, 84, 85ஆம் பாடல்கள்:- ஒருதலைக் காமம் கொண்ட நக்கண்ணையார் தான் காதலித்த சோழன் போர்வைக் கோப்பெருநற் கிள்ளி என்னும் இளவரசன் பற்றிக் கைக்கிளைத் திணையில் இம் மூன்று பாடல்களையும் பாடியுள்ளார். "அவனுக்காக என் வளையல் கழல்கின்றன, தாய்க்கும் அஞ்சுகிறேன், அவன் தோள் தழுவ விரும்பினும் சபை கண்டு நாணினேன், மனம் மாறிமாறி மயங்குகிறதே. என் தலைவன் பெருந்தோள் உடையவன், யான் அவன் சிறையில் இருந்தும் பசலை பாய்ந்தவளானேன், போரில் பகைவரை வெல்லும் ஆற்றலுடையோன்." என்று தன் மனக்கிடக்கையைக் கொட்டுகின்றார் புலவர்.

அகநானூறு நூலில் 252ஆம் பாடல்:- இரவுக்குறியிடத்தில் தலைமகளைத் தலைமகன் சந்தித்துக் கூடும் காலமது. "புலியும்,

யானையும், யாளியும் நிறைந்த காட்டின் ஊடாக வேல் ஒன்றினை மட்டும் கையில் ஏந்தியவனாய்த் தனித்து வருதலை அவனும் அஞ்சினான் இல்லை. அவன் வரும் வழியில் துயருறுவானோ என்றும் அஞ்சுகிறேன். அவனைக் காணாது தனித்திருக்க என்னாலும் முடியவில்லை. அன்னையோ தன் துயில் மறந்து என்னைக் கடுங்காவல் காத்துவருகின்றாள். இனி யாம் எவ்வாறு அவருடன் கூடி மகிழ்வோம்?" என்று தலைமகள் தன் தோழியிடம், தங்கள் களவு உறவைக் கூறியதாகப் புலவர் பாடியுள்ளார்.

நற்றிணை நூலில் 19, 87ஆம் பாடல்கள்:- பகற்குறியிலே தலைவனும், தலைவியும் பலநாட்கள் கூடி இன்புற்று வந்தனர். ஒரு நாட் கூடியதன்பின், தலைவனைத் தோழி சந்தித்து "இனி, நின்னைப் பிரிந்து இவள் வாழாள், எனவே தலைவியை விரைந்து வரைந்துகொள்" என்று வேண்டினாள். திரும்பி வரும் தினத்தைக் குறித்து வைத்து, தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டச் சென்றான் தலைவன். பிரிவினால் தலைவி தளர்ந்தாள். அன்று அவள் ஒரு பகற்கனவு கண்டு அதைத் தோழிக்கு உரைத்து இவ்வாறு புலம்பினாள். "புன்னையின் பூந்தாது உதிர்ந்து அழகு படுத்துவதுபோல், அவரைப் பற்றிய கனவு நம்மையும் அழகுபடுத்தியது. அதுவும் விழித்த பொழுதிற் கழிந்தது. இன்னும், மாங்கிளையில் தொங்கியபடி தூங்கும் வௌவால், தொலைவிலுள்ள காட்டின் நெல்லிக் கனியை அருந்தினதாகக் கனவு கண்டதுபோல், நானும் வெளிநாட்டிலுள்ள தலைவனோடு இன்புற்றிருந்தேன். அதுவும் விழித்த பொழுதில் இல்லாது கலைந்து போயிற்று."

**9. நெட்டிமையார்:-** இவருக்கு இப் பெயர் உறுப்பால் வந்தது என்பர். இவர் ஒரு பெண்பாற் புலவராவர். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவனை இவர் பாடியுள்ளார். புறநானூறு நூலில் இவர் பாடிய மூன்று (9, 12, 15) செய்யுட்கள் உள்ளன.

புறநானூறு நூலில் 9, 12, 15ஆம் பாடல்கள்:- பாண்டியன் பெருவழுதி மன்னன், வன்மை நிறைந்தவர்களுடன்தான் போரிடுவான். இவன் போரிடும் நகர்களில் உள்ள பயன் தரும் ஆனினம், பார்ப்பன மக்கள், பெண்டிர், பிணி உடையவர், புதல்வரைப் பெறாதோர் ஆகியோரைப் பாதுகாவலான இடஞ் சேருமாறு எச்சரித்துவிட்டே போர்புரிவான். இவ்வாறான அறவழியும், துணிவும் உடையவன் எம் மன்னன். "அவன்

நன்னீர்ப் பஃறுளி ஆற்று மணலிலும் பல்லாண்டுகள் வாழ்வாயாக!" (புறம் 9) என்று வாழ்த்துகிறார் புலவர். பாணர் பொற்றாமரைப் பூச் சூடினர். புலவர் யானையும், தேரும் பெற்றனர். வெற்றிச் சிறப்புடைய குடுமியே! வேற்றரசர் நிலத்தைக் கவர்ந்து கொள்கின்றாய். நின்பால்வரும் பரிசிலர்க்கு இனியவற்றையே செய்து வருகின்றாய். அதுதான் நின் அறநெறியோ? - புறம். 12. (அவன் அறத்தை இகழ்வது போல, அவன் வீரத்தையும், வள்ளன்மையையும் புகழ்ந்தது.) வழுதியானவன், பகைவர் நாடுகளை அழித்தவன் பல யாகங்கள் செய்து புகழ் பெற்றவன் விறலியர் போற்றிப் பாடும் தகுதிகள் பலவும் உடையவன் பெருஞ் சிறப்பினன்- (புறம் 15) என்று போற்றுகிறார்.

10. **பாரி மகளிர்:-** பாரி வள்ளலின் மகளிர் இவர். ஔவையார் இவரை மலையமானின் மக்கட்கு மணஞ்செய்து வைத்தனர். தம் தந்தையின் பிரிவால் மனங்கலங்கிப் பாடிய **ஒரு** செய்யுள் **புறநானூறு** நூலை அலங்கரிக்கின்றது. இச் செய்யுள் ஐந்து அடிகள் எனினும், அதன் அடக்கச் சோகம் அனைவரையும் கலங்க வைக்கின்றது.

**புறநானூறு** நூலின் 112ஆம் பாடல்:- அந்தத் திங்களில், இவ் வெண்ணிலவு இவ்வண்ணம் பிரகாசிக்கும் வேளையில், எம் தந்தையும் உடையோம், எம் குன்றும் உடையோம், இந்தத் திங்களில், இவ் வெண்ணிலவில், வென்றெறி முரசின் வேந்தர்கள் எம் குன்றையும் கவர்ந்தனர், யாமோ எம் தந்தையையும் இழந்தவராயினோம் என்று பாடல் சமைத்தனர்.

**"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொள்ளார்,**
**இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவில்,**
**வென்று எறி முரசின் வேந்தர் எம்**
**குன்றும் கொண்டார், யாம் எந்தையும் இலமே!"**

—— (புறம் 112)

11. **பூங்கண் உத்திரையார்:-** உத்திர ஓரையிற் பிறந்த இவர் ஒரு பெண்பாற் புலவராவர். "பூங்கண்" உறுப்பால் வந்தது எனலாம். **புறநானூறு** நூலில் 277ஆம் பாடலையும், **குறுந்தொகை** நூலில் 48, 171ஆம் பாடல்களையும் இவர் பாடியுள்ளார்.

புறநானூறு நூலில் 277ஆம் பாடல்:- தன் இளையோனாகிய மகனை எதிர்த்து வந்த களிற்றைக் கொன்று, தானும் அப்போரிலே புண்பட்டு இறந்தான் எனக் கேட்ட முதியோளாகிய தாய், அவனைப் பெற்ற பொழுதினும் பெருமகிழ்வு கொண்டனள் என்று பாடல் அமைந்துள்ளது.

குறுந்தொகை நூலின் 48, 171ஆம் பாடல்கள்:- பகற்குறியிடத்தே தலைவனைக் காணும்பொழுதினும் காணாப்பொழுதே பெரிதென்று கருதிய வருத்தத்தால், அவள் நல்ல நுதலிடத்துப் பசலை கண்ட தோழி, "வரைந்து கொள்" என்ற ஒரு சொல்லைக் காதலர்க்குச் சொல்ல வில்லையே? - (பாடல். 48) என்று தலைமகளது ஆற்றாமையைக் கூறுகிறாள்.- "குளத்தில் வீசிய மீன்வலையில் அகப்பட்ட நீர் விலங்கைப் பலரும் வந்து பார்ப்பதுபோல், யான் வரைவிடைப்பட்ட பொழுது, பலரும் என்னைப் பார்த்துத் தூற்றினரே!" -(பாடல் 171) என்று தோழிக்குத் தலைமகள் கூறியது.

**12. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு:-** இவர் பூதப்பாண்டியனின் தேவியார் ஆவார். கணவன் போரில் இறந்தான். தானும் தீயிற் பாய்ந்து உயிர்விடத் துணிந்தார். இவரைத் தடுத்தனர் சான்றோர். அதற்குக் கூறும் பதிலாய் அமைந்தது இப் பாடல். இவர் கற்பும், புலமையும், தெளிவும் உடையவராவார். புறநானூறு நூலில் இவரின் பாடலொன்றைக் காணலாம்.

புறநானூறு நூலில் 246ஆம் பாடல்:- "நின் கணவன் இறந்து பட்டான். அவனுடன் நீயும் செல்வாயாக என்று சொல்லாது என்னைத் தடுத்து நிறுத்தும் சான்றோர்களே! நெய்யற்ற நீர்ச்சோறு, எள்ளுத்துவை, புளி சேர்த்துச் சமைத்த வேளைஇலை ஆகியவற்றை உண்டும், பாயின்றிக் கற்கள்மேல் படுத்தும், கைம்மை நோற்கும் பெண்டிர் அல்லோம் யாம்! ஈமப் படுக்கை உங்களுக்கு அரிதாகத் தோன்றலாம். இறந்துபட்டவன் நம் கணவன். எமக்கு அத்தீ தாமரைக் குளத்து நீர்போல இன்பம் தருவதாகும்." என்று கூறி முடித்தார் தேவி.

**13. பேய்மகள் இளவெயினியார்:-** இவர் பேயுருவத்தில் நின்று பாலை பாடிய சேரமான் பெருங்கடுங்கோவைப் பாடியவர். இவர் பெண்பாற் புலவர் என்பது இவர் பெயராற் தெரியும். இளவெயினியார்

என்பது இவரது குடிப்பெயராகும். இவர் இளவயதில் இறந்தபின் பேய் உருவம் பெற்றவர் என்றும் கூறுவர். சேரமானின் மறத்திறத்தையும், கொடைத்திறத்தையும் போற்றிப் பாடியுள்ளார். இவரின் ஒரு பாடல் புறநானூறு நூலில் இடம்பெற்றுள்ளது.

புறநானூறு நூலில் 11ஆம் பாடல்:- வெற்றி வேந்தனாக விளங்கிய சேரமான், பகைத்த மன்னர்களின் அரண்களை அழித்தான். அவன் வீரத்தை வியந்து பாடிய பாடினிக்குப் பல களஞ்சால் செய்யப்பட்ட பசும்பொன் அணிகலன்களையும், அவள் பாணனுக்குப் பொன்னாற் செய்யப்பட்ட தாமரைப் பூமாலையையும் பரிசாகக் கொடுத்தான். ஆனால், யானோ ஏதும் பெற்றிலேன். "அவர்களுக்குக் கொடுத்த பரிசில் போன்று எனக்கும் வழங்குவாயாக!" என்று பாடல் அமைத்தார் புலவர்.

**14. மாறோக்கத்து நப்பசலையார்:-** இவர் ஒரு பெண்பாற் புலவர். கொற்கை சார்ந்த மாறோக்கம் என்னும் பகுதியைச் சேர்ந்தவர். மகளிர்க்குரிய பசலை நோயைச் சிறப்புறக் கூறியதால் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், மலையமான் திருமுடிக்காரி, அவன் மகன் சோழியவேனாதி திருக்கண்ணன், கபிலன், அவியன் ஆகியோரை இவர் பாடியுள்ளார். புறநானூறு நூலில் காணப்படும் 37, 39, 126, 174, 226, 280, 383ஆம் ஆகிய ஏழு (07) பாடல்கள் இவராற் பாடப்பட்டன.

புறநானூறு நூலில் 37, 39, 126, 174, 226, 280, 383ஆம் பாடல்கள்:- கிள்ளி வளவனை, "புறவின் துயர் துடைத்த செம்பியன் மரபினன், வேற்படையுடையோன், மாற்றான் படையை அழிக்கும் வல்லோன், சேரனின் கருவூர்க் கோட்டையை அழித்து வென்றோன், அவனை எதிர்த்து நின்று வெல்ல முடியாதோன்" என்று அவன் வீரம் பாடிய மூன்று (37,39,226) செய்யுள்களிற் காண்கின்றோம்.

மலையமான் திருமுடிக்காரியைப் பாடுகையில் "இருண்ட காடும், ஒலிமுழங்கும் அருவியும் உடைய முள்ளூர் மலையின் வேந்தனே! பேரறிவாளன் கபிலன் நின் புகழ் பாடினான் அறிவிற் குறைந்த யாமும் நின்னைப் பாடுவோம். எம் உரையையும் கேட்டு, எமக்கும் அருள்வாயாக!" என்று 126ஆம் செய்யுளைச் சமைத்தார்.

"பகைவர் கைப்பட்ட சோழவளநாட்டைக் கைப்பற்றிக் காத்த பெருமானே! மக்கள் துயர் துடைக்க நீ வந்து தோன்றினாய். கோடைக் காலத்தில் பெருமழை சொரிந்தாற் போல, நீயும் மக்களுக்கு உதவ வந்துதித்தாயே!" என்று மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன் என்பவனை 174ஆம் பாடலில் பாடியுள்ளார் புலவர்.

"அவன் மார்புப் புண் பெரிதானது. வண்டுகள் வந்து மொய்க்கின்றன. வீட்டில் ஏற்றிய விளக்கு எரிய மறுக்கின்றது. அவனுடன் உறங்காதிருந்த என் கண்கள் மூடுகின்றன. அதோ கூகையும் கூவுகின்றது. இவன் பிழைப்பான் என்று கூறிய முதுபெண்டிரின் வாக்கும் தவறிவிட்டதே! துடி கொட்டுபவனே! பாணனே! விறலியே! இனி இங்கிருந்து வாழ்தல் நுமக்கு அரிது. அவன் இறப்பு நெருங்கிக்கொண்டு வருகிறது. யானும் அவனுடன் இறக்கப்போகிறேன்! நீங்கள் வேறிடம் சென்று வாழ்வீராக!" என்று மனைவியின் துயரை 280ஆம் பாடலில் காண்கின்றோம்.

"சேவல் கூவ எழுந்து, பனியில் நனைந்து, அரசனின் தலைவாயிலில் நின்று, அவன் புகழ் பாடி நின்றேன். என் குரல் கேட்டு அவன் வந்தான். என் வறுமை நீங்கிற்று. பழைய வாழ்வு நீங்கிப் புது வாழ்வு பெற்றேன். மூங்கில் நிறைந்த கானக நாடனை யான் என்றும் மறவேன். அவன் தன் கடமையிற் தவறாதவன். சுக்கிரன் நிலை மாறுபட்டாலும், நாடே பஞ்சத்தில் மூண்டாலும், யான் இனி வருந்தேன்." என்று பாடல் (383) சமைத்தார் புலவர்.

**15. மாற்பித்தியார்:-** இவர் பெண்பாலர். தலைவன் ஒருவன் இவரைக் காதலித்துப் பின் கைவிட்டுத் துறவறம் ஏகினான். அந்நிலையை எண்ணிக் கலங்கியவராய்ப் புறநானூறு நூலில் இரு பாடல்களைப் பாடியுள்ளார்.

புறநானூறு நூலில் 251, 252ஆம் பாடல்கள்:- அந்த இளைஞன் அன்று குறுந்தொடி அணிந்த கன்னியின் காதற் தீயை மூட்டினான். பின்னர் இல்வாழ்வு பூணுதலைத் துறந்து, துறவறம் மேற்கொண்டான். அவன்மேற் கொண்ட மையல் மயக்கம் தீராத இவர் 251ஆம் பாடலைப் பாடியுள்ளார். "இவனேதான், மயில் போன்ற இளங்கன்னியரைத் தன்

காதல்மொழிகளை வீசி, மயக்கித் தன்வசப்படுத்தியவன்" என்று 252ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

16. **வெண்ணி குயத்தியார்:-** "வெண்ணி" என்னும் ஊரிற் குயக்குடியிற் தோன்றிய பெண்பாற் புலவர் இவர். சோழன் கரிகாற் பெரிவளத்தானை இவர் பாடியுள்ளார். இவர் பாடிய பாடலொன்று புறநானூறு நூலில் உள்ளது.

புறநானூறு நூலில் 66ஆம் பாடல்:- "மதயானை மிகுந்த படை வன்மை உடையவனே! பகைவரைக் கொன்றழித்த வெற்றி வீரனே! "வெண்ணி" என்ற ஊர்ப்புறத்தே நடந்த போரில் புறப்புண்பட்டனன் சேரன். உலகில் புகழ் பெறுமாறு அவன் வடக்கிருந்து உயிர் துறந்தனன். புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர் துறந்த அவன், புறத்தே அம்பேவிப் போர்முறை பிறழ்ந்த நின்னைக் காட்டினும், நல்லவன் அல்லனோ!" என்று கரிகாலனது வெற்றியைப் புலவர் கூறியுள்ளார்.

17. **வெறிபாடிய காமக் கண்ணியார்:-** இவர் பெண்பாற் புலவர். தெய்வமேற்று வெறியாடலை அழகுறப் பாடியதால் இப்பெயர் பெற்றார். காமக் காணியார் எனவும் இவர் பெயரைச் சிலர் கூறுவர். புறநானூறு நூலில் 271, 302ஆம் பாடல்களையும், அகநானூறு நூலில் 22, 98ஆம் பாடல்களையும், நற்றிணை நூலில் 268ஆம் பாடலுமாக ஒருமித்து ஐந்து (05) பாடல்களைப் பாடியுள்ளார்.

புறநானூறு நூலில் 271, 302ஆம் பாடல்கள்:- நொச்சிமாலை சூடிப் போருக்கு வந்த மறவோன் வாளால் வெட்டுப்பட்டு வீழ்ந்தனன். களத்திலே நிணந்தின்ன வந்த பருந்து, செந்நீரில் நனைந்த நொச்சி மாலையினை, நிணம் என்று கருதி உயரத் தூக்கிப் பறந்து சென்றதையும் கண்டோம். மறவன் மாலையை அணிந்ததனால் அதற்கும் பெருமை ஏற்பட்டது- என்று 271ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

துள்ளித் தாவிச் செல்லும் குதிரைகளையுடைய மாவீரன், விறலியர்க்குப் பொற்பூக்கள் அளித்தான். பாணர்க்கு நரந்தம்பூ மாலைகள் கொடுத்தான். இவனின் சிற்றூர்களைப் பகைவர் கவர வந்தபொழுது, கொல்களிறு போலச் சினந்து எழுந்தான். களத்திலே அவன் கொன்று

குவித்த களிறுகள் வானத்து நட்சத்திரங்களிலும் பார்க்க மிகுதியாகும்- என்று 302ஆம் பாடலில் அவன் மறச்செயலைப் பாடியுள்ளார்.

**அகநானூறு** நூலில் 22, 98ஆம் பாடல்கள்:- "மலை உச்சிகள், தெய்வங்கள், அருவிகள், காடுகள் நிறைந்த நாட்டிற்கு உரியவன் நம் தலைவன். அவன் மார்பைத் தழுவாதலால் வருத்தம் உண்டாயிற்று. அதனை அறியாத தாயார் கலக்கமுற்று, வேலனைப் போற்றினால் அவள் துயரம் தணியும் எனத் தாயார் எண்ணினாள். முதுபெண்டிரும் இதற்கு உடன்பட்டனர். வேலினை நிறுத்தி, கண்ணியும் சூட்டி, வெறியாடும் களம் அமைத்து, வேலன் புகழ் பாடி, பலிக்கொடையும் கொடுத்து, முருகனை வரவழைத்தனர். அந்த நடு இரவிலே, நம் மனையினைக் காத்து நிற்கும் காவலர்கள் அறியாதவாறு மறைந்து மறைந்து, நாம் மெலிதற்கு ஏதுவான நோயைத் தணித்தற்கு நம் காதலனும் வந்தான். அவன் என்னைத் தழுவிக்கொண்டிருந்தான். என் துயரும் நீங்கிற்று. ஏதும் தொடர்பில்லாத வேலன் வெறியாட்டத்தை நினைத்து யானும் தொடர்ந்து சிரித்துக்கொண்டேன்." என்று தலைமகள் தோழிக்குக் கூறுவதாக இவ்விரு பாடல்களைப் புலவர் அமைத்துள்ளார்.

**நற்றிணை** நூலின் 268ஆம் பாடல்:- "முற்றத்தில் புதுமணல் பரப்பி, எதிர்வு கூறுவோனாகிய வேலனையும் அழைத்து, வெறியாடற்கும் அன்னை ஏற்பாடு செய்துள்ளாள். மணங்கமழும் தேன் அடைகள் நிறைந்த நாடன், நம் தலைவன்! அவனை யான் விரும்பி அளவற்ற காதல் செய்து இன்புற்று ஒழுகிவந்தேன் ஆனால் அவனோ அந்த அளவுக்கு என்னைக் காதலிக்காதது ஏனோ? இதனை நாம் வேலனிடம் கேட்போம்! வருவாய் தோழி!" என்று தலைமகன் கேட்டுணருமாறு, தலைமகள் தோழியிடம் கேட்கின்றாள். இதனால், தலைவன்பால் வரைவு வேட்கையை உண்டாக்கு வதாகவும் கருதலாம் என்றவாறு.


## முடிவுரை


மேற்கூறிய 17 பெண்பாற் புலவர்களும் ஒருமித்து 123 சங்கப் பாடல்களைப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் சங்க இலக்கிய நூல்களான **புறநானூற்றில் 60** பாடல்களும், **குறுந்தொகையில் 31** பாடல்களும், **அகநானூற்றில் 11** பாடல்களும், **நற்றிணையில் 11** பாடல்களும்,

பதிற்றுப்பத்தில் 10 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஔவையார் தனித்து 60 பாடல்களைப் பாடிய பெருமைக்குரியவராவர்.

இதுகாறும் 17 பெண்பாற் புலவர்கள் பற்றியும், அவர்கள் சமைத்த சங்கப் பாடல்கள் பற்றியும், அப்பாடல்கள் இடம்பெற்ற சங்க நூல்கள் பற்றியும், பாடல்களின் தரம், கருத்தோட்டம், கூறும் செய்தி, ஆற்றுப் படுத்தும் பாங்கு போன்றவை பற்றியும் விவரமாகக் கூறப்பட்டுள்ளதைக் கண்டு மகிழ்ந்தோம். அவர்கள் பாடல்கள் அத்தனையும் உயிர் ஓவியமாகத் திகழ்கின்றன.

❖❖❖





10

# பெண் பெருமை பேசும் சங்க இலக்கியங்கள்

நாம் வாழும் பூமியானது நானூற்றி ஐம்பத்து நாலு (454) கோடி ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. அதில் இருபது (20) இலட்சம் ஆண்டளவில் முதல் மனிதன் ஆபிரிக்காக் கண்டத்தில் தோன்றினான். அதிலும் இரண்டு (2) இலட்சம் ஆண்டுகளுக்குமுன்.தான் உறுப்பியல் சார்ந்த அமைப்பியலான நவ நாகரிகப் பண்பாடுடைய மனிதன் தோன்றினான். "**மனிதன் தோன்றினான்**" என்பது ஆணும், பெண்ணும் தோன்றினர் என்பதுதான் பெருள். அவர்கள் தோன்றியபொழுது பூமியில் **ஓரறிவான- புல்லும், மரமும், பிறவும், ஈரறிவான- நந்தும், முரளும், பிறவும், மூவறிவான- சிதலும், எறும்பும், பிறவும், நான்கறிவான- நண்டும், தும்பியும், பிறவும், ஐயறிவான- மாவும், புள்ளும், பிறவும்,** ஆகியவை வாழ்ந்துகொண்டிருந்தன. மனிதன்தான் உயிர்கள் வாழும் பூமிக்கோளை உலகம் என்று கணிததான். அவனில் அமைந்த ஆறறிவு

உலகத்தை நவீனமுறைப்படுத்தி, அறிவியல் முன்னிலை பெற்று, மக்கள் வாழ்வியலில் முன்னேறி வருவதை அவதானிக்க முடிகின்றது.

உலகத்திலுள்ள உயிரினங்கள் அத்தனையிலும் ஆண் இனமும், பெண் இனமும் உள்ளன. இந்த ஆண், பெண் இனங்களின் இணைவினாலும், உறவினாலும்தான் அந்தந்த உயிரினங்கள் அழியாது காப்பாற்றப்படுகின்றன. ஆண், பெண் ஆகிய இரு இனங்களில் ஓர் இனந்தானும் இல்லையெனில் அந்த உயிரினம் அழிந்துபோவது திண்ணமாகும். எனவேதான் ஆண் இனத்தையும், பெண் இனத்தையும் இயற்கை தந்துதவுகின்றது. ஆணில் ஆண்மையும், வீரமும் அமைந்துள்ளதுபோல், பெண்ணில் பெண்மையும், அழகும், சாந்தமும் அமைந்துள்ளன. ஆண் பெண்மையையும், பெண் ஆண்மையையும் விரும்பி ஒன்றுபட்டு வாழ்வியலில் இறங்குவர். ஆணின்பின் பெண்ணும், பெண்ணின்முன் ஆணும் சேர்ந்து ஓடுவதுதான் வாழ்க்கையாகும். ஆணும், பெண்ணும் இந்த ஓட்டத்தில் வெற்றிவாகை சூட **"ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி"** என்ற தாரக மந்திரத்தைக் கடைப்பிடிப்பர். அதில் நிச்சயம் வெற்றியும் காண்கின்றனர்.

இயற்கையில் பெண்கள் அழகுடையவர்கள். அவர்கள் உடலமைப்பு அவ்வாறமைந்துள்ளது. இதற்கு ஆணும் செயற்கைச் சாதனங்கள் கொடுத்துத் துணைநிற்பான். **"பெண் என்றால் பேயும் இரங்கும்" "பெண்ணுக்குப் பொன் இட்டுப்பார்"** என்பர். பெண்கள் அழகு பற்றிப் பாவலர், நாவலர், புலவர், கவிஞர், ஆசிரியர் ஆகியோர் பல பாடல்களைப் பாடியுள்ளனர். அதில் சங்ககாலப் புலவர்கள், சங்ககாலப் பெண்ணின் தோற்றம், அவயவம் ஆகியவற்றை அடிமுதல் முடியீறாகப் புனைந்து பாடிய சங்கப் பாடல்கள் படிப்போர் மனதைத் தொட்டு நிற்கின்றன. இனிப் பெண் பெருமை பற்றித் தமிழ் இலக்கியங்கள் பேசும் பாங்கினையும் பார்ப்போம்.

**(1) தொல்காப்பியம்:-** இடைச்சங்க காலத் தொல்காப்பியர் **(கி.மு. 711)** யாத்த மூத்த நூலான தொல்காப்பியம் பெண்கள் பற்றிக் கூறுவதையும் காண்போம். மனைவி (பொருள். 77-10,13, 163-1, 164-1, 170-2, 223-1) என்றும், கிழத்தி (பொருள். 90-3, 116-2, 140-2, 144-32,

153-2, 171-2, 178-2, 200-3, 490-2, 494-1, 495-1, 496-1, 499-2) என்றும், காமக் கிழத்தி (பொருள். 144-49, 145-18,36) என்றும், நல்லோள் (பொருள். 77-30) என்றும், காதலி (பொருள். 77-28) என்றும், கிழவி (பொருள். 111-5, 118-2, 121-3) என்றும், கிழவோள் (பொருள். (145-43, 230-1) என்றும், "அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல், நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (பொருள். 96) என்றும், "உயிரினும் நாணம் சிறந்தது அதனினும் கற்புச் சிறந்தது" (பொருள். 111) என்றும், "பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி" (பொருள். 547) என்னும் பதின்மூன்றும் (13) பெண்பாற் பெயராகும் என்றும், "தோழி, செவிலி (பொருள். 490-1) என்றும், விறலி, பரத்தை (பொருள். 491-1) என்றும், "ஒண்டொடி மாதர் (பொருள். 494-1) என்றும், தொல்காப்பியம் பெண்களைச் சிறப்பித்துக் கூறுகின்றது. மேலும் களவிற் கூற்று நிகழ்தற்குரியோராகக் தோழி, செவிலி, கிழத்தி (பொருள்.490) ஆகியோரும், கற்பிற் கூற்று நிகழ்த்தற்குரியோராக விறலி, பரத்தை (பொருள்.491) ஆகிய பெண்களை நியமித்தமை பாராட்டுக்குரிய செயலெனலாம்.

(2) **குறுந்தொகை:-** கடைச் சங்கத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் "மயிலியல் செறிஎயிற்று அரிவை கூந்தல்" (2-3,4) என்றும், "மௌவல் நாறும் பல்லிருங் கூந்தல்" (19-4,5) என்றும், "அகவன் மகளே அகவன் மகளே மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் அகவன் மகளே பாடுக பாட்டே" (23-1,2) என்றும், "வாலிழை மகளிர்" (45-2) என்றும், "தேமொழித் திரண்ட மென்றோள்" (72-3) என்றும், "வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்பு" (82-1) —— நீட்சி பொருந்திய கடைகுழன்றுள்ள கூந்தலைக் கோதி முதுகிடத்தே சேர்ந்து - என்றும், "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (135-2) என்றும், "மனையோள் மடமையிற் புலக்கும்" (164-5) என்றும், "குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்" (208-3) என்றும், "பசுப்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்" (287-4,5) என்றும், "ஓரை மகளிர்" (316-5, 401-3) என்றும், "கடலாடு மகளிர் (326-2) என்றும் பெண் பெருமை பேசும் சீரினையும் காண்கின்றோம்.

(3) **கலித்தொகை:-** எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை நூலின் பாலைக் கலியில் "நிலைஇய கற்பினாள்" (1-13) என்றும், "எல்வளை" (12-10) என்றும், "நலம்பெறு சுடர்நுதால்" (12-14) என்றும், "கிளிபுரை கிளவியாய்" (12-18) என்றும், "பணைத் தடமென்தோள், ஏந்துஎழில் மலர்உண்கண், நிரைவெண்பல், மணம் நாறு நறுநுதல், இருங்கூந்தல்" (13-1,2,3,4) என்றும், "முளைநிரை முறுவலார்" (14-25) என்றும், "புனையிழாய்" (15-9) என்றும், "ஒளியிழாய்" (15-13) என்றும், "ஊறுநீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய்" (19-11) என்றும், "மாண்எழில் வேய்வென்ற தோளாய்" (19-15) என்றும், குறிஞ்சிக்கலியில் "கயமலர் உண்கண்ணாய்" (1-1) என்றும், "நறுநுதால்" (1-12) என்றும், "சுடர்த் தொடீஇ" (15-1) என்றும், "மான்நோக்கின் மடநல்லாய்" (20-17) என்றும், "திருந்திழாய்" (29-1) என்றும், மருதக்கலியில் "அணைமென்தோள்" (1-9) என்றும், "ஒளிபூத்த நுதலாரோடு" (1-19) என்றும், முல்லைக்கலியில் "நறுநுதால், நெட்டிருங் கூந்தலாய்" (5-53,57) என்றும், "தாதுசூழ் கூந்தள்" (11-12) என்றும், நெய்தற்கலியில் "நன்னுதால்" (15-9) என்றும் பெண்ணைச் சிறப்பித்துப் பேசும் பாங்கினையும் காண்கின்றோம்.

(4) **ஐங்குறுநூறு:-** எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு பெண்ணழகைக் கூறும் சீர் இவை. "நன்நெடுங் கூந்தல்" (153-5) என்றும், "பணைத்தோள், ஒண்தொடி அரிவை" (171-3,4) என்றும், "ஒண்தொடி அரிவை கொண்டனள்" (172-1) என்றும், "கொய்தளிர் மேனி" (176-4) என்றும், "மகளிர் நீர்வார் கூந்தல்" (186-2) என்றும், "இரும்பல் கூந்தல்" (191-2) என்றும், "கொழும்பல் கூந்தல் ஆய்தொடி" (196-1,2) என்றும், "வளையணி முன்கை வாலெயிற்று அமர்நகை" (198-1) என்றும், "வீங்கு எல்வளை ஆய்நுதல் கவின" (200-1) என்றும், "குவளை உள்ளகங் கமழும் கூந்தல்" (225-2,3) என்றும், நின் மென்தோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும்" 230-2,3) என்றும், "சாந்தம் நாறும் நறியோள் கூந்தல் நாறு நின்மார்பே" (240-3,4) என்றும், "காந்தள் நாறும் வண்டிமிர் சுடர்நுதல் குறுமகள்" (254-2,3) என்றும், "மடமகள் வண்டுபடு கூந்தல் தண்டழைக் கொடிச்சி வளையள் முளைவாள் எயிற்றள்" (256-1,2,3) என்றும், திருந்திழை

அரிவை" (355-1) என்றும், "அணிஇழை" (359-4) என்றும், "தாழிருங் கூந்தல்" (411-4) என்றும், "தாதார் பிரசம் மொய்ப்ப போதார் கூந்தல்" (417-3,4) என்றும், "நன்னுதல்" (426-2) என்றும் "முல்லை நாறுங் கூந்தல்" (446-1) என்றும் கூறும் செய்திகளை ஐங்குறுநூறு நூலில் நாம் நுகர்கின்றோம்.

(5) **பதிற்றுப்பத்து:-** எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் "ஒள் இழை மகளிரொடு" (13-21) என்றும், "சுடர் நுதல், அசைநடை உள்ளளும் உரியள்" (16-13) என்றும், "முகிழ் நகை, மடவரல், கூந்தல் விறலியர்" (18-5,6) என்றும், "வாள் நுதல் அரிவை" (19-14) என்றும், "கார் மலர் கமழும், தாழ் இருங் கூந்தல்" (21-33) என்றும், "வளை மகள்" (23-23) என்றும், "எல் வளை மகளிர்" (27-7) என்றும், "வளைக் கை மகளிர்" (29-2) என்றும், "ஒண் நுதல் மகளிர்" (30-28) என்றும், "வண்டு பட ஒலிந்த கூந்தல், அறம் சால் கற்பின், ஒள் நுதல்" (31-23,24,25) என்றும், "சில் வளை விறலி மெல் இயல் மகளிர்" (40-21,23) என்றும், "கார் விரி கூந்தல், சேயிழை மகளிர்" (43-1,2) எனவும், "இழையர், குழையர், நறுந் தண் மாலையர், சுடர் நிமிர் அவிர் தொடி செறித்த முன்கை, திறல் விடு திருமணி இலங்கு மார்பின், வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்" (46-1,2,3,4) என்றும், "நல் நுதல் விறலியர்" (47-7) என்றும், "ஒள் நுதல் விறலியர்" (48-2) என்றும், "வரி மென் கூந்தல்" (50-19) என்றும், "சில் வளை விறலி" (57-6) என்றும் பெண் பெருமை பேசுவதையும் காண்கின்றோம்.

(6) **நற்றிணை:-** எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் "மனைமாண் இனியோள்" (3-8,9) என்றும், "சுணங்கனி வனமுலை" (9-6) என்றும், "தேம்பாய் மரா அம் கமழும் கூந்தல்" (20-3) என்றும், "திருந்திழை மகளிர்" (40-4) என்றும், "மாயக் குறுமகள்" (66-11) என்றும், "சில்வளைக் குறுமகள்" (90-9) என்றும், "நல்கூர் நுசுப்பின் மெல்லியல் குறுமகள்" (93-8) என்றும், "குறிஞ்சி நல்லூர்ப் பெண்டிர்" (116-11) என்றும், "பிறைநுதல்" (120-7) என்றும், "விரிஒலி கூந்தல்" (141-12) என்றும், "அணிநுதற் குறுமகள்" (147-1) என்றும், "ஒள்ளிழை மகளிர்" (155-1) என்றும், "ஐம்பால் வகுத்த கூந்தல்,

செம்பொறித் திருநுதல்" (160-6,7) என்றும், "மடக்கண் தகரக் கூந்தல், பணைத்தோள், வார்ந்த வால் எயிறு" (170-1,2) என்றும், "குவளை யுண்கண், இவள் மாமைக் கவினே" (205-6,11) என்றும், "ஒழுகுநுண் நுசுப்பு, தெளிதீங் கிளவியாள்" (245-5,6) என்றும், "பொற்றொடி மகளிர், நெருங்கேர் எல்வளை" (258-5,11) என்றும், "மேனி, கண், சாயல், கிளவி, வனப்பு, கமழ் கூந்தல்" (301) என்றும் பெண்களைப் பற்றிப் புகழ்ந்து, பாராட்டிப் பேசியுள்ள சீரினையும் காண்கின்றோம்.

(7) **சிலப்பதிகாரம்:-** ஐம்பெரும் காப்பியங்களில் தலைசிறந்து விளங்கும் நூலான இளங்கோவடிகள் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டு) யாத்த சிலப்பதிகாரத்தில் பெண்ணழகு பேசப்படும் பாங்கினையும் காண்போம். "போதிலார் திருவினாள் (கண்ணகி) புகழுடை வடிவினாள்" (1-26) என்றும், "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! கரும்பே! தேனே! ஆருயிர் மருந்தே! தாழிருங் கூந்தல் தையால்!" (2-73,74,75,80) என்றும், "செம்பொற் கைவளை, பரியகம், வால்வளை, பவழப் பல்வகை அணிந்து" (6-92,93) என்றும், "குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி" (12-23) என்றும், "இணைமலர்ச் சீறடி" (12-45) என்றும், "கொங்கைச் செல்வி! தென்தமிழ்ப் பாவை! செய்தவக் கொழுந்து" (12-47,48) என்றும், "பெருமனைக் கிழத்தி" (13-57) என்றும், "பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்! நாணின் பாவாய்! நீணில விளக்கே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!" (16-89,90,91) என்றும் சிலம்பு பெண்ணழகைப் பேசுகின்றது.

(8) **திருக்குறள்:-** சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருவள்ளுவர் (கி.மு.31) யாத்த திருக்குறளில் "மனத்தக்க மாண்புடையள்" (51) என்றும், "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண் டாகப் பெறின்" (54) என்றும், "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்" (55) என்றும், "கனங்குழை மாதர்" (1081) என்றும், "பிணை ஏர் மட நோக்கும் நாணும் உடையாட்கு" (1089) என்றும், "இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது" (1091) என்றும், "கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள." (1101) என்றும்,

"அணியிழை" (1102) என்றும், "இவள் நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்" (1104) என்றும், "காமம் செறிதோறும் சேயிழை மாட்டு" (1110) என்றும், "நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும் மென்னீரள் யாம்வீழ் பவள்" (1111) என்றும், "முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம் வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு" (1113) என்றும், "மலரன்ன கண்ணாள்" (1119) என்றும், "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்" (1120) என்றும் பெண்கள் பெருமை பேசப்படுகின்றது.

(9) **நாலடியார்:-** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரில் "அறுசுவையுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட" (1-1) என்றும், "மனையாள்" (3-4) என்றும், "முல்லை முகைமுறுவல் முத்தென்றும்" (45-1) என்றும், "நிரைதொடீஇ" (111-3) என்றும், "இனியார் தோள்" (338-3) என்றும், "பூங்குழையார்" (370-1) என்றும், "கொய்தளிர்" (373-3) என்றும், "அரும்பெறற் கற்பின்" (381-1) என்றும், "நறுநுதலாள்" (381-4) என்றும், "மாதர் மனைமாட்சியாள்" (382-4) என்றும், "மாண்கற்பின் இல்லாள் அமர்ந்ததே இல்" (383-3இ4) என்றும், "கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள், உட்குடையாள், ஊர்நாண் இயல்பினாள், உட்கி இடன் அறிந்து ஊடி யினிதின் உணரும், மடமொழி மாதராள் பெண்." (384) என்றும், "சுடர்த் தொடீஇ" (398-2) என்றும் பெண்ணழகு பேசப்படும் சீர் இவையாம்.

(10) **நான்மணிக்கடிகை:-** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நான்மணிக்கடிகையில் "பெண்மை நலத்துக்கு அணியென்ப நாணம்" (11-2,3) என்றும், "நிலைநின்ற பெண் நன்று" (15-1,2) என்றும், "மனைக்காக்கம் மாண்ட மகளிர்" (20-1) என்றும், "மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை" (22-1) என்றும், "தாயின் சிறந்த தமரில்லை" (35-2) என்றும், "தாயென்பாள் முந்துதான் செய்த வினை" (45-3,4) என்றும், "உருபோடு அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்ணென்ப" (55-2,3) என்றும், "கொடுங்குழை நல்லாரை நல்லவர் நாணுவப்பர்" (56-2,3) என்றும், "ஈன்றாளோடெண்ணக் கடவுளு மில்" (57-3,4) என்றும், "பேணிய நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர்" (90-2,3) என்றும்,

"பாழொக்கும் பண்புடையாள் இல்லா மனை" (101-3,4) என்றும், "மனைக்கு விளக்கம் மடவார்" (105-1) என்றும் பெண் புகழ் பாடப்படு கின்றது.

## முடிவுரை

இதுவரை தொல்காப்பியம், குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, சிலப்பதிகாரம், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை ஆகிய பத்துச் (10) சங்க இலக்கிய நூல்களில் பெண் பெருமை பேசும் பாங்கினைப் பார்த்தோம். அவற்றில் பெண்ணை- மனைவி, கிழத்தி, காமக் கிழத்தி, நல்லோள், காதலி, கிழவி, கிழவோள், பேடை, பெட்டை, பெடை, பெண், பாட்டி, தோழி, செவிலி, விறலி, பரத்தை, ஒண்டொடி மாதர், அரிவை, வாலிழை மகளிர், மகளிர், ஒளியிழாய், நறுநுதால், சுடர்த்தொடீஇ, திருந் திழாய், நெட்டிருங் கூந்தலாள், நன்னுதால், கொய்தளிர் மேனியர், சுடர்நுதல் குறுமகள், மடமகள், அணிஇழையாள், கூந்தல் விறலியர், வளைமகள், மெல் இயல் மகளிர், சில்வளை விறலி, மனைமாண் இனியோள், பொற்றொடி மகளிர், தென் தமிழ்ப் பாவை, கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி, கனங்குழை மாதர், நறுநுதலாள், இல்லாள், கட்கினியாள், தாயென்பாள், நற்பெண்டிர், பண்புடையாள், ஈன்றாள், மடவார், நிலைநின்ற பெண், இனியார் தோள் போன்ற சொற்பதங்களை அடக்கிச் சங்க இலக்கிய நூல்களில் பாடல் சமைத்தமை சங்கப் புலவர்கள் மனித வாழ்வியலின் உச்ச நிலையை மனத்தில் பதித்துச் செயற்பட்டனர் என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

ஆண், பெண் ஆகிய இருவரும் ஒன்றுசேர்ந்து செயற்படின் அவர்கள் வாழ்வியல் சிறந்தோங்கும் என்பதில் ஐயப்பாடேதும் இருக்காது. வாழ்க்கைக்குப் பெண்ணின் பங்கு மிகவும் முக்கியம் என்பதை யாவரும் ஏற்பர். அதை அன்றே சங்கப் புலவர்களும் அறிந்திருந்து பெண்கள் பெருமையும், சீரும், சிறப்பும் பேசிப் பாடல்கள் யாத்தனர் போலும். இப்பாடல்களால் இரண்டாயிரத்து ஐநூறு (2500) ஆண்டுகளாக மக்கள் மத்தியிற் பெண் பெருமை பேசிக்கொண்டு உயிருடன் உலாவி வரும் சீரினையும் காண்கின்றோம்.

❖❖❖



11

# சங்க இலக்கியங்கள் பேசும் பெண் கூந்தற் பெருமை

பரந்து விரிந்த எல்லையற்ற பெரும் வெட்டவெளியான வானத்தில் ஒரு சூரிய குடும்பம் அந்தரத்தில் மிதந்து குதூகலமாகப் பறந்து திரிந்த வண்ணமுள்ளது. ஆங்கே சூரியன், நிலாக்கள், விண்மீன்கள், ஒன்பது கோள்களாகிய புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, விண்மம் (Uranus —— யுறெனஸ்), சேண்மம் (Neptune —— நெப்டியூன்), சேணாகம் (Pluto —— புளூடோ) ஆகியவை அந்தரத்தில் ஒவ்வொன்றின் ஈர்ப்புச் சக்தியால் மிதந்த வண்ணமும், சுழன்ற வண்ணமும் உள்ளன. இதில் சூரியன் சுமார் 460 கோடி (460,00,00,000) ஆண்டுகளுக்கு முன் தோன்றினான் என்றும், பூமி சுமார் 457 கோடி (457,00,00,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றினாள் என்றும், பூமி நிலா சுமார் 453 கோடி (453,00,00,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றினாள் என்றும் அறிவியல் கூறுகின்றது.

மேற்கூறிய ஒன்பது கோள்களில் பூமிக்கோளில் மாத்திரம்தான் உயிரினங்கள் வாழமுடியும். பூமிக்கோளில் சுமார் 400 கோடி (400,00,00,000) ஆண்டளவில் ஒரு கலத்தைக் கொண்ட உயிரினமான அணுத்திரண்மம் (molecule) முதன்முதலாகத் தோன்றி உயிர் மலர்ச்சி (Evolution of Life) முறையை ஆரம்பித்தது. இதையடுத்துப் புல், பூண்டு, செடி, கொடி, தாவரம், மரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு ஆகிய ஓரறிவிலிருந்து ஐயறிவுவரையான உயிரினங்கள் தோன்றியபின், அவற்றின் உச்சமாக ஆறறிவு படைத்த மனித இனமான ஆண், பெண் ஆகிய இருவரும் இரண்டு இலட்சம் (2,00,000) ஆண்டளவிற் தோன்றி, பூமியில் பல மில்லியனுக்கும் மேற்பட்ட உயிரினங்களுடன் இற்றைவரை தமது ஆட்சியைப் பூமியில் நிலை நிறுத்தி வருகின்றனர்.

ஆண், பெண்ணைப் பார்த்து அவள் அழகில் மயங்கி நிற்றான். பெண், ஆணைப் பார்த்து அவன் திருவுருவில் மருண்டு நின்றாள். இருவரும் ஒருவரை ஒருவர் நாடி வந்து, ஈர்த்து நின்று, அன்பு மழை சொரிந்து, வாழ்வியலில் இறங்கி, தம் இன விருத்தியைப் பெருக்கி, உலகை உய்வடையச் செய்து ஆனந்தப்படுவர்.

இயற்கையிலேயே ஆண்களை விஞ்சிய அழகு படைத்தோர் பெண்களாவர். பெண்ணின் பாதாதிகேசம் வரையான பாதம், கால்விரல், கால், தொடை, இடுப்பு, உடல், கை, கைவிரல், தோள், கழுத்து, நாடி, வாய், உதடு, கண், மூக்கு, செவி, கன்னம், நெற்றி, தலை, கூந்தல் ஆகிய ஒவ்வொரு உறுப்புகளையும் தொட்டுச்சென்று பாவிசைத்த பெருமைக்குரிய புலவர் குழாம் சங்க இலக்கியங்களில் நிரம்பி வழிகின்றனர். இவர்களால் பெண்கள் மேலும் பெருமையடைகின்றனர்.

இனி, சங்க இலக்கியங்களில் பெண் கூந்தற் பெருமை பேசும் பாங்கினைப் பார்ப்பதுதான் இக் கட்டுரையின் நோக்காகும்.

ஆண்கள் தமது தலைமுடியை நீளமாக வளரவிடாது இடைக்கிடை வெட்டித் தணித்துக்கொள்வர். ஆனால் பெண்கள் அதிலும் தமிழ்ப்

பெண்கள் தம் கூந்தலை வெட்டாது நீளமாக வளர்த்து வருவர். இதற்காக அவர்கள் இயற்கையான பச்சிலைகளையும் பாவித்துச் சிரமப்பட்டுத் தம் கூந்தலை வளர்த்து அகிற்புகைத் தூபமும் காட்டித் தூய்மை செய்திடுவர். இன்னும், அவர்கள் தம் கூந்தலைத் தம் உயிரினும் மேலாக மதித்துப் பேணிக் காத்திடுவர்.

## அகநானூறு

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் பெண் கூந்தற் பெருமை கூறும் பாங்கினை ஈண்டுக் காண்போம். "கொடுநுண் ஓதி" (9-11) —வளைந்த பெண் கூந்தல் என்றும், "பிடிக்கை அன்ன பின்னகம் தீண்டி" (9-22) — பிடியானையின் துதிக்கை போன்ற அவள் பின்னலிட்டுத் தொங்கும் கூந்தலைத் தீண்டி- என்றும், "நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு" (36-11) என்றும், "நறுங்கதுப்பு உளரிய நன்னர் அமையத்து" (39-22) என்றும், "பல்இருங் கூந்தல், மெல்இயல் மடந்தை" (43-11) என்றும், "தேன்நாறு கதுப்பின் கொடிச்சியர்" (58-5) என்றும், "நாறுஐங் கூந்தல்" (65-18) — மணம் நாறும் ஐவகைக் கூறுபாடமைந்த கூந்தல்- என்றும், "பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க" (86-16) என்றும், "தாழ்இருங் கூந்தல்நம் காதலி" (87-15) என்றும், "இருள்மென் கூந்தல்" (92-13) என்றும், "இரும்பல் கூந்தல்" (94-14), (136-29), (373-10) என்றும், "சில் ஐங்கூந்தல்" (123-6) — சிலவாகிய ஐந்து பகுதியைப் பொருந்திய கூந்தல்- என்றும், "தோள்தாழ்வு இருளிய குவைஇருங் கூந்தல்" (197-10) என்றும், "சுரிவணர் ஐம்பால் நுண்கேழ்" (223-12,13) — சுரிதலையும், வளைவுகளையும், ஐவகையாக முடித்தலையும், மென்மையினையும் பொருந்திய கூந்தல் - என்றும், "நரந்தம் நாறும் குவைஇருங் கூந்தல்" (266-4) என்றும், "கோதை இணர, குறுங்கால், காஞ்சிப் போதுஅவிழ் நறுந்தாது அணிந்த கூந்தல்" (296-1,2) என்றும், "காந்தள் நாறும் நறுநுதல், துணைஈர் ஓதி-கூந்தல்" (338-8) என்றும், "இமையக் கானம் நாறும் கூந்தல்" (399-2) என்றும் பெண் கூந்தல் அழகு பற்றிக் கடைச்சங்க நூலான அகநானூறு பேசுகின்றது.

## புறநானூறு

"இரும்பல் கூந்தல் மடந்தையர்" (120-17) என்றும், "ஒலியிருங் கதுப்பின் ஆயிழை" (138-8) என்றும், "விரை வளர் கூந்தல்" (133-4) என்றும், "ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்" (146-9) என்றும், "நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்" (147-6) என்றும், "நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழ" (247-6) என்றும், "கூந்தல் கொய்து, குறுந்தொடி நீக்கி" (250-4) என்றும், "மனையோள் உளரும் கூந்தல் நோக்கி" (260-3,4) என்றும், "நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்" (276-1) என்றும், "குமரி மகளிர் கூந்தல் புரைய" (301-2) என்றும், "விளங்கிழை மகளிர் கூந்தற் கொண்ட" (302-3) என்றும் எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு பெண் கூந்தற் பெருமை பேசி நிற்கின்றது.

## குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை நூலில் பெண் கூந்தல் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளையும் காண்போம். "அரிவை கூந்தலின்" (2-4) என்றும், "மௌவல் நாறும் பல்லிருங் கூந்தல்" (19-4,5) என்றும், "நன்னெடுங் கூந்தல்" (23-2) என்றும், "நரந்த நாறும் குவைஇருங் கூந்தல்" (52-3) என்றும், "இரும்பல் கூந்தல் இயலணி கண்டே" (165-5) என்றும், "இவள் ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே" (225-6,7) என்றும், "மலர் நாறும் நறுமென் கூந்தல்" (270-7,8) என்றும், "குவளை நாறும் குவையிரும் கூந்தல்" (300-1) என்றும், "நெடும்பல் கூந்தல் குறுந்தொடி மகளிர்" (384-2) என்றும், "நீர்வார் கூந்தல் ஓரை மகளிர்" (401-2,3) என்றும் குறுந்தொகைப் புலவர் பெண் கூந்தற் பெருமை பேசுகின்றனர்.

## கலித்தொகை

"வண்டரற்றுங் கூந்தலாள்" (கடவுள் வாழ்த்து—வரி10) என்றும், "பல்லிரும் கூந்தல்" (முல்லைக்கலி- 01-41,42) என்றும், "மாரிவீழ் இருங்கூந்தல்" (பாலைக்கலி- 13-4) என்றும், "நரந்தம்நாறு

இருங்கூந்தல்" (குறிஞ்சிக்கலி- 18-5) என்றும், "மணம்கமழ் நறுங்கோதை மாரிவீழ் இருங்கூந்தல்" (குறிஞ்சிக்கலி- 24-2) என்றும், "நீ நாறுஇருங் கூந்தலார் இல்செல்வாய்" (மருதக்கலி- 30-1,2) என்றும், "எம் பல்லிரும் கூந்தல்", "நாறிரும் கூந்தல் பொதுமகளிர்" (முல்லைக்கலி- 1-41,42,48) என்றும், "நெட்டிருங் கூந்தலாய்" (முல்லைக்கலி- 5-57) என்றும், "சில மழைபோல் தாழ்ந்து இருண்ட கூந்தல்" (நெய்தற்கலி - 30-19) என்றும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் கூந்தல் அழகு பேசப்படுவதைக் காண்கின்றோம்.

## ஐங்குறுநூறு

பதினெண் மேற்கணக்கு நூல்களில் ஒன்றான ஐங்குறுநூற்றில் "தோளும் கூந்தலும் பல பாராட்டி" (178-1) என்றும், "மகளிர் நீர்வார் கூந்தல் உளரும் துறைவ" (186-1,2) என்றும், "கழிப்பூத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்" (191-2) என்றும், "கோடீர் எல்வளைக் கொழும்பல் கூந்தல் ஆய்தொடி" (196-1,2) என்றும், "முகம்புதை கதுப்பினள்" (197-2) என்றும், "இரும்பல் கூந்தல் திருந்திழை அரிவை" (231-2) என்றும், "போதார் கூந்தல் இயலணி அழுங்க" (232-1) என்றும், "கொடிச்சி கூந்தல்" (300-1) என்றும், "பல்லிருங்கூந்தல் மெல்லிய லோள்" (308-1) என்றும், "போதார் கூந்தல் முயங்கினள் எம்மே" (417-4) என்றும், "முல்லை நாறும் கூந்தல்" (446-1) என்றும் பலவாறாகப் பெண் கூந்தல் மணம் வீசி எம்மைப் பரவசப்படுத்துகிறது.

## நற்றிணை

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணை என்ற நூலில் மாதர் கூந்தற் பெருமை பேசும் பாங்கினையும் காண்போம். "நன்னெடுங் கூந்தல் நரையொடு மடிப்பினும்" (10-3) என்றும், "தேம்பாய் மரா அம் கமழும் கூந்தல்" (20-3) என்றும், "வடிக்கொள் கூழை ஆயமோடு ஆடலின்" (23-2) என்றும், "மாக்கொடி அதிரற் பூவொடு பாதிரித் தூத்தகட்டு எதிர்மலர் வேய்ந்த கூந்தல்" (52-1,2) என்றும், "கண்ணும்

தோளும் தண்ணறுங் கதுப்பும்" (84-1) என்றும், "தேன்கமழ் ஐம்பால் (கூந்தல்) பற்றி" (100-4) என்றும், "அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்" (110-6) என்றும், "பின்னிருங் கூந்தலின் மறையினள்" (113-8) என்றும், "அரிசில்அம் தண் அறல் அன்னஇவள் விரிஒலி கூந்தல்" (141-11,12) என்றும், "ஐம்பால் வகுத்த கூந்தல்" (160-6) - ஐம்பகுதியாக வகுத்து முடிக்கப்பெற்ற கூந்தலைக் கொண்டவள்- என்றும், "நாறிரும் கதுப்பினெம் காதலி" (250-8) என்றும், "குவளை நாறும் கூந்தல்" (262-7) என்றும், "கலிமயிற் கலாவத் தன்ன இவள் ஒலிமென் கூந்தல்" (265-8,9) என்றும், "தண்தலை கமழும் வண்டுபடு நாற்றத்து இருள்புரை கூந்தல்" (270-2,3) என்றும், "புறந்தாழ்வு இருண்ட கூந்தல்" (284-1) என்றும், "ஒலிவரும் தாழிருங் கூந்தல்" (295-2) என்றும், "இரும்போது கமழுங் கூந்தல்" (298-11) என்றும், "தேமறப் பறியாக் கமழ்கூந் தலளே" (301-9) என்றும் பல்வேறுபட்ட நிலைகளில் பெண்கள் கூந்தல் பறந்த வண்ணமுள்ளன.

## பதிற்றுப்பத்து

"இருள் வணர் ஒலிவரும் புரி அவிழ் ஐம்பால்" (18-4) — சுருண்டு வளைந்த, அடர்ந்து தழைத்த, ஐந்து பிரிவாகப் பின்னிய ஐம்பால் கூந்தல்- என்றும், "கூந்தல் விறலியர்" (18-6) என்றும், "வண்டு பட ஒலிந்த கூந்தல்" (31-23,24) என்றும், "கவரி முச்சி, கார் விரி கூந்தல்" (43-1) என்றும், "வண்டு படு கூந்தல் முடி புனை மகளிர்" (46-4) என்றும், "வரி ஞிமிறு இமிரும் மார்பு பிணி மகளிர், வரி மென் கூந்தல் மெல் அணை வதிந்து" (50-18,19) என்றும், "தேம் பாய் கூந்தல்" (54-5) என்றும், "சாய் அறல் கடுக்கும் தாழ் இருங் கூந்தல்" (74-3) என்றும், "தன் நிறம் கரந்த வண்டு படு கதுப்பின்" (81-27) என்றும், "தண்ணெனத் தகரம் நீவிய துவராக் கூந்தல்" (89-15,16) என்றும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் பெண் கூந்தல் பற்றிப் பரவலாகப் பேசப்படும் பாங்கு இவையாகும்.

## பரிபாடல்

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் "மீப்பால் வெண் துகில் போர்க்குநர், பூப்பால் வெண்துகில் சூழ்ப்பக் குழல் முறுக்குநர்" (10-79,80) எனவும், "கொண்டிய வண்டு கதுப்பின் குரலூத" (10-120) எனவும், "கார்கொள் கூந்தற் கதுப்பமைப் போரும்" (12-15) எனவும், "பன்மணம் மன்னு பின்னிருங் கூந்தல்" (19-89) எனவும், "புயல்புரை கதுப்பகம் (கூந்தல்) உளரிய வளியும்" (21-49) எனவும், "காரணி கூந்தல் கயற்கண் கவிரிதழ்" (22-29) எனவும் பாவிசைத்துப் பெண் கூந்தல் அழகு காட்டும் பாவலர் நுகர்வுத் திறன் காண்கின்றோம்.

## சிலப்பதிகாரம்

"போதொடு விரி கூந்தல் பொலன்நறுங் கொடி அன்னார்" (1-60) என்றும், "பல்லிருங் கூந்தல் சின்மலர் அன்றியும்" (2-65) என்றும், "தாழிருங்கூந்தல் தையாள்", "வாரொலி கூந்தல்" (2-80,84) என்றும், "மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப" (4-56) என்றும், "தாமரைச் செவ்வாய்த், தண் அறல் கூந்தல்" (4-74) என்றும், "ஆரப் பேரியாற்று, மாரிக் கூந்தல்" (5-2) என்றும், "நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப், புகையின் புலர்த்திய பூமென் கூந்தல்" (6-79,80) என்றும், "தளர்ந்த சாயல், தகைமென் கூந்தல்" (8-100) என்றும், "நறும்பல் கூந்தல்" (10-39) என்றும், "பொலங்கொடி மின்னின் புயல் ஐங்கூந்தல்" (11-109) என்றும், "நறம்பல் கூந்தல்", "குறுநெறிக் கூந்தல்", "கணவனொடு இருந்த மணமலி கூந்தல்" (12- 3,23,46) என்றும், "போதவிழ் புரிகுழல் பூங்கொடி நங்கை", "குறுநெறிக் கூந்தல்" (13-81,84) என்றும், "விரைமலர் நீங்கா அவிர் அறல் கூந்தல்" (13-167) என்றும், "புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க்கு அல்லது", "குரல் தலைக் கூந்தல்" (14-37,87) என்றும், "நாறைங் கூந்தல்", "தேமென் கூந்தல் சின்மலர் பெய்து" (15-97,133) என்றும், "குரல்தலைக் கூந்தல், குலைந்து பின் வீழ" (30-38) என்றும் பெண் கூந்தல் அழகும், பெருமையும் காட்டித் தீட்டிய ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், சேரன் தம்பி இளங்கோவின் செந்தமிழ்க் காப்பியமாகும்.

## நீண்ட கூந்தலுக்கான உலகச் சாதனை

சீன நாட்டு "எக்ஸ்ஐஇ குய்யுபிங்" (Xie Qiuping) என்ற பெயர் கொண்ட பதின்மூன்று (13) வயது நிரம்பிய பெண் ஒருவர் 1973-ஆம் ஆண்டிலிருந்து தன் கூந்தலைச் சிரமப்பட்டு நீளமாக வளர்க்கத் தொடங்கினார். முப்பத்தொரு (31) ஆண்டுகளின்பின், 08-05-2004 அன்று அவரின் கூந்தலை அளந்து பார்த்த பொழுது அது 18 அடி 5.54 அங்குலம் (5.627 metre) நீளமாக வளர்ந்திருப்பதைக் கண்டு மிகவும் பரவசமடைந்தனர். இந்தப் பெண்ணின் நீண்ட கூந்தலை உலகச் சாதனையாகக் கின்னஸ் (Guinness) பொத்தகத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இக் கூந்தலைச் சீப்பினால் ஒரு முறை வாரி இழுத்துத் துப்புரவாக்கச் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்பட்டதாம். இன்னும் இக் கூந்தலை ஒரு முறை கழுவி, உலர்த்துவதற்கும் ஐந்து (5) அல்லது ஆறு (6) மணித்தியாலங்கள் செலவிடப்பட்டதாகவும் அறிகின்றோம். தன் உயரத்திலும் பார்க்க மூன்று மடங்குக்குமேல் இக் கூந்தல் வளர்ந்திருப்பது ஓர் அதிசயச் செயலெனலாம்.

## நிறைவுரை

பெண்கள் தம் கூந்தலைப் பேணி, காத்து, வளர்த்து, சீவிச் சிங்காரித்து, நறுமணப்புகை காட்டி, மல்லிகைப் பூச்சூடி என்றும் மணம் நாறும் வண்ணம் வைத்திருப்பர். இதனாற்றான் சங்ககாலப் புலவர்களும் பெண் கூந்தல் நறுமணத்தில் மயங்கிப் பாவிசைத்துப் பரவசமடைந்தனர். அதே மணம் இன்றும் இரண்டாயிரத்து ஐந்நூறு (2,500) ஆண்டுகள் கடந்த பின்பும் நம் மத்தியல் வீசி எம்மனைவரையும் மகிழ வைக்கின்றது. எம்மால், புலவர் பாணியில் பாட்டிசைக்க முடியாவிட்டாலும் நாம் அந்த அற்புத மணத்தை நுகர்ந்துகொண்டு எம் வாழ்வியலை நடாத்தி எம்மினத்தைப் பெருக்கி உலகை உய்வடைய உதவுகின்றோம்.

பெண்கள் எல்லாரும் தமக்கு நீண்ட கூந்தல் அமையவேண்டும் என்று பிரார்த்திப்பர். கன்னிப் பெண்கள் தம் கூந்தலை வாரிச்சீவி நல்லெண்ணைய் பூசிப் பின்னிவிட்டு அழகு பார்ப்பர். அடர்த்தியான

கூந்தலுள்ளோர் இரண்டு பின்னல் பின்னிவிட்டு மனம் குளிர்வர். இளம் பெண்கள் தம் கூந்தலால் கொண்டை போட்டுப் பூச்சூடிப் புன்சிரிப்போடு மகிழ்வர். வயது வந்த பெண்கள் தம் கூந்தலால் குடுமி போடுவர்.

**சங்க காலத்து ஒரு சில பெண்கள் தமது கூந்தலை ஐந்து வகைப் பின்னலாகப் பின்னி மகிழ்ந்திருந்த செய்தியை மேற்காட்டிய அகநானூறு (65-18, 123-6, 223-12,13), நற்றிணை (160-6), பதிற்றுப்பத்து (18-4) ஆகிய நூல்களில் படித்து மகிழ்ந்தோம்.** தமது கூந்தலை ஐந்து பின்னலாகப் பின்னினர் என்றால் அவர் கூந்தல்கள் மிக அடர்த்தி கொண்டனவாய் இருந்துள்ளமை புலனாகின்றது. இன்றைய நாளில் ஒன்று அல்லது இரண்டு பின்னல்கள் கொண்ட பெண்களைக் காண்கின்றோம். ஆனால் இன்று ஐந்து பின்னல்கள் உடைய பெண்களைக் கண்டிலேம்.

பதினெட்டரை அடி (18½ feet) நீளம் கொண்ட ஒரு பெண்ணின் கூந்தலுக்கு 2004-ஆம் ஆண்டில் மிக நீண்ட கூந்தலுக்கான உலகச் சாதனைப் பரிசு வழங்கப்பட்டுக் கின்னஸ் பொத்தகத்திலும் பதிவாகியுள்ளமை மேற்காட்டிய ஒரு அதிர்ச்சிச் செயலாகும். அதனால் பெண் குலத்தார் பெருமையடைகின்றனர். ஆனால் சங்க காலத்தில் இவ்வாறான அதி நீண்ட கூந்தல் இருந்ததாகச் சங்க நூல்களில் ஒரு குறிப்பும் கிடைத்தில.


இந்த நீண்ட ஆக்கத்தின் முடி தொட்டு அடி ஈறாகப் பெண்கள் பற்றியும் அவர் கூந்தல் பற்றியும் நிறையப் பேசப்பட்டுள்ளதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆனால் மேற்காட்டிய விடயம் தொடர்பில் ஆண்களாகிய நாம் எங்கிருக்கிறோம் என்றொரு கேள்வி எழாமலுமில்லை? **பெண்ணானவள் ஆண் அருகில் என்றும் இணைந் திருப்பவள். ஆக்கித் தருபவள். ஆக்கி வைப்பவள். அவன் நன்மை, தீமைகளில் பங்கேற்பவள். சுய நலமற்றவள். தன் நலம் கருதாதவள். பிறர் நலம் கருதுபவள். பின் தூங்கி, முன் எழுபவள். கணவனே கண்கண்ட தெய்வமெனத் துதிப்பவள்.**

இவ்வாறான அதிசயப் பெண்களின் கூந்தற் பெருமை, அதன் அழகு, அது பெற்ற உலகச் சாதனை போன்றவற்றால் ஈர்க்கப்பட்டு எல்லாப் பெண்களும் ஒன்றுகூடிப் பெருவிழா எடுத்து, மேடை அமைத்து, ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பதைக் கண்ணுற்ற இவர்களின் கணவர்மாரும் சாரி சாரியாக வந்து ஒன்றுசேர்ந்து மேடை ஏறித் தம் மனைவியர்களை அணைத்துக் கைகொடுத்துக் கூத்தும் ஆடி இன்புற்றிருந்த பாங்கு கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வாறான ஒத்த கணவர் - மனைவியர்களிடையே நிலவும் இன்ப உணர்வு அவர்கள் வாழ்வியலை ஓர் உன்னத நிலைக்கு எடுத்துச் செல்லும் என்பதில் ஐயுறவேதும் இருக்காதெனலாம்.

மேற்காட்டிய பதினொரு (11) ஆக்கங்களிலும் ஒருமித்து எழுபது (70) காவிய மகளிர்களின் எழில்நடை போடும் பாங்கினையும் கண்டோம். அவர்களின் பெயர்கள் வருமாறு:-

[ கங்காதேவி, சத்தியவதி, அம்பை, அம்பிகை, அம்பாலிகை, காந்தாரி, குந்தி, மாத்ரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை, கண்ணகி, மாதரி, கோப்பெருந்தேவி, கவுந்தியடிகள், தேவந்தி, மணிமேகலை, சுதமதி, மாதவி, சித்திராபதி, தாரை, வீரை, காயசண்டிகை, இலக்குமி, ஆதிரை, பீலிவளை, இராசமாதேவி, அறவணவடிகள், சிந்தாதேவி, தீவதிலகை, காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை, குண்டலகேசி, பத்தாதீசா, கோசலை, கைகேயி, சுமத்திரை, சீதை, கூனி, தாரை, அகலிகை, மண்டோதரி, சூர்ப்பணகை, திரிசடை, உருமை, ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், அள்ளூர் நன்முல்லையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினியார், குறமகள் குறியெயினி, நக்கண்ணையார், நெட்டிமையார், பாரி மகளிர், பூங்கண் உத்திரையார், பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பேய்மகள் இளவெயினியார், மாறோக்கத்து நப்பசலையார், மாறபித்தியார், வெண்ணி குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியர், கமலை, மணிமேகலா தெய்வம் (70 பெண்கள்).

❖❖❖



12

# துணை நின்ற நூல்கள்


1. தொல்காப்பியம் (முழுவதும்), புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், 469 பக், பாரி நிலையம், சென்னை, பன்னிரண்டாம் பதிப்பு, 2003.

2. மகாபாரதம் உரைநடையில் - பேராசிரியர் ஜெ.ஸ்ரீசந்திரன் எம்.ஏ. 564 பக். வர்த்தமானன் பதிப்பக வெளியீடு.40, சரோஜினி தெரு, தி.நகர். சென்னை. முதற்பதிப்பின் மறு பதிப்பு 2007.

3. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள். 244 பக், பூம்புகார் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1996.

4. மணிமேகலை - பேராசிரியர் ஜெ.ஸ்ரீசந்திரன் எம்.ஏ. 437 பக். வர்த்தமானன் பதிப்பகம், 141, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர். சென்னை. மூன்றாம் பதிப்பு: 2002.

5. சீவக சிந்தாமணி உரைநடை- தி.வே. கோபாலய்யர், 272 பக். கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை- 600 017. முதற் பதிப்பு: டிசம்பர், 2002.

6. உரைநடைத் தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள்- வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை, 208 பக். நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, தி.நகர், சென்னை- 600 017,

7. குறுந்தொகை, உரையாசிரியர் திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கன், 384 பக். முல்லை நிலையம், பாரதி நகர், சென்னை. முதற்பதிப்பு 2000.

8. நற்றிணை, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், முதற் பகுதி- 436 பக், இரண்டாம் பகுதி- 468 பக், பாரி நிலையம், சென்னை. முதற் பகுதி - நான்காம் பதிப்பு 2001. இரண்டாம் பகுதி- முதற் பதிப்பு 2001.

9. புறநானூறு, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், 563 பக், பாரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு 1958, விரிவாக்கிய புதிய பதிப்பு 2002.

10. அகநானூறு, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், களிற்றியானை நிரை- 304 பக், எட்டாம் பதிப்பு 2002, மணிமிடை பவளம் - 464 பக், ஏழாம் பதிப்பு 2002, நித்திலக்கோவை —— 296 பக், ஆறாம் பதிப்பு 2002, பாரி நிலையம், சென்னை.

11. பதிற்றுப் பத்து - கவிஞர்கோ ஞா. மாணிக்கவாசகன், 320 பக். உமா பதிப்பகம், 171/18, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை. புதிப்பு ஆண்டு 2005.

12. கம்பராமாயணம் - மோரணம் புலவர் சி. திருநாவுக்கரசு, 512 பக். நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, தி. நகர், சென்னை. முதற் பதிப்பின் மறு பதிப்பு 2004.

13. தொல்காப்பியத் தேன் துளிகள்- நுணாவிலூர் கா.விசயரத்தினம், 200 பக். வெளியிட்டோர்- சென்சரி கவுஸ், 35, ஏச்ஏ1 2ஜேயு, மிட்டிள்செக், யுகே. உதவி- மணிமேகலை பிரசுரம், சென்னை, தமிழ் நாடு, தென். இந்தியா. புதிப்பு ஆண்டு 2008.

14. ஆங்கிலம்- தமிழ்ச் சொற்களஞ்சியம் சென்னைப் பல்கலைக்கழகம்.

15. பரிபாடல், புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், 312 பக், பாரி நிலையம், சென்னை. ஐந்தாம் பதிப்பு 2002.

16. கலித்தொகை, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், 416 பக், பாரி நிலையம், சென்னை. ஆறாம் பதிப்பு 2000.

17. ஐங்குறுநூறு, உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கனார், ஆ.யு. முதல் தொகுதி, 371 பக், புதிய பதிப்பு 2001, இரண்டாம் தொகுதி, 442 பக், புதிய பதிப்பு 2001, வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை.

18. நாலடியார் - திரு. கு. மதுரை முதலியார்- பாரிநிலையம்- பக்கம் 144- பதிப்பு 1988

19. திருக்குறள் தெளிவுரை, டாக்டர் மு.வரத்ராசனார், MA, MOL, Ph.D. 291 பக், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை.

20. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - இரண்டாம் தொகுதி- 403 பக். பதிப்பு 2006. வர்த்தமானன் பதிப்பகம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை- 17.



13

# ஆசிரியரின் நூல்களும், பெறும் விவரங்களும்

| | நூலின் பெயர் | பதிப்பு | விலை |
|---|---|---|---|
| 1. | கணினியை வீஞ்சும் மனித மூளை | 2005 | £ 3.99 * |
| 2. | Essentials of English Grammar | 2007 | £ 2.99 * |
| 3. | தொல்காப்பியத் தேன் துளிகள் | 2008 | £ 4.99 * |
| 4. | பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும் (இலக்கிய ஆய்வுக்கான "தமிழியல் விருது- 2011" என்ற விருதைப் பெற்ற நூல்.) | 2010 | £ 3.99 * |
| 5. | இலக்கிய - அறிவியல் நுகர்வுகள் | 2012 | £ 4.99 * |
| 6. | வியக்க வைக்கும் பிரபஞ்சம் | 2013 | £ 2.99 * |
| 7. | பல்வேறு பயன் தரும் பனை மரம் | 2014 | £ 3.99* |
| 8. | காலத்தை வென்ற காவிய மகளிர் | 2015 | £ 2.99 * |
| 9. | பூந்துணர் (பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தாரின் கூட்டு முயற்சி) | 2007 | £ 3.99 * |
| 10. | பூந்துணர் (பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தாரின் கூட்டு முயற்சி) | 2010 | £ 4.99* |

| | | | |
|---|---|---|---|
| 11. | பூந்துணர் (பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தாரின் கூட்டு முயற்சி) | 2012 | £ 4.99* |
| 12. | பூந்துணர் (பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தாரின் கூட்டு முயற்சி) | 2014 | £ 4.99* |

* *தபாற் செலவு மேற்படி விலையில் அடங்கவில்லை. நூல்களின் விலை, தபால் கட்டணம் ஆகியவற்றை முன்பணமாக ஆசிரியரின் கீழ்க்காட்டிய விலாசத்துக்குக் காசோலை அனுப்பி நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

**தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:-**

K. Wijeyaratnam
35, Southborough Road
Bickley, Bromley
Kent. BR1 2EA, U.K.
T.P. 020 3489 6569
e-mail:- wijey@talktalk.net


❖❖❖



## 14

# நுணாவிலூர் கா.விசயரத்தினம்

## NUNAVILOOR K. WIJEYARATNAM



ஆசிரியர் நுணாவிலூர் திரு. கா. விசயரத்தினம் அவர்கள், தமிழன் தாயகமாம் ஈழத் திருநாட்டின் வட மாகாணத்தின் தென்மராட்சிப் பகுதியில் புகழ் பூத்த நகரான சாவகச்சேரியில் ஆன்றோரும், சான்றோரும், கற்றோரும் நிறைந்து, நாற்றிசையும் அமைந்த கோவில்களின் உறை தெய்வங்கள் காத்து நிற்கும் நுணாவில்-மேற்கு என்னும் அழகிய பச்சைப் பசேலென்ற கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, தமிழ்க் கல்வியை மட்டுவில் தெற்கு சரசுவதி வித்தியாசாலையிலும், ஆங்கில மேற்படிப்பைச் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும் கற்றவர்.

அவர் படிப்பை முடித்து, அரச சேவையில் சேர்ந்து, படிப்படியாகப் பல போட்டிப் பரீட்சைகளில் சித்திபெற்று, இலங்கை அரசின் கணக்காய்வுச் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்புக் கணக்காய்வு அதிபதித் திணைக்களத்தில் கணக்காய்வு அத்தியட்சகராகக் கடமையாற்றி, ஓய்வு பெற்றவர். நுணாவிலூர் திரு. கா. விசயரத்தினம் அவர்கள் அரச, சபை, கூட்டுத்தாபன சேவைகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்து, அறிக்கைகளை இலங்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து, நாடாளுமன்றப் பொதுக்கணக்குக் குழுக்கூட்ட விவாதங்களிற் பங்கேற்ற அனுபவமும் உடையவர். இவர் ஒரு பட்டதாரியும், கணக்காய்வாளரும், உள்ளகக் கணக்குத் தணிக்கையாளரும், இலக்கிய ஆய்வுக்கான *"தமிழியல் விருது - 2011"*, தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கான *"தமிழியல் விருது - 2014"* என்ற விருதுகளைப் பெற்றவரும் ஆவார்.

2005-ஆம் ஆண்டில் வெளிவந்த *"கணினியை விஞ்சும் மனித மூளை"* எனும் ஆய்வு நூலினதும், 2007-ஆம் ஆண்டில் வெளிவந்த


"*Essentials of English Grammar*" என்ற ஆங்கில இலக்கண நூலினதும், 2008-ஆம் ஆண்டில் வெளிவந்த "*தொல்காப்பியத் தேன் துளிகள்*" என்ற இலக்கிய ஆய்வு நூலினதும், 2010-ஆம் ஆண்டில் வெளிவந்த "*பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும்*" என்ற ஆய்வு நூலினதும், 2012-ஆம் ஆண்டில் வெளிவந்த "*இலக்கிய — அறிவியல் நுகர்வுகள்*" என்ற ஆய்வு நூலினதும், 2013-ஆம் ஆண்டில் வெளிவந்த "வியக்க வைக்கும் பிரபஞ்சம்" என்ற விஞ்ஞான நூலினதும், 2014-ஆம் ஆண்டில் வெளிவந்த "பல்வேறு பயன் தரும் பனைமரம்" என்ற ஆய்வு நூலினதும், 2007-ஆம், 2010-ஆம், 2012-ஆம், 2014-ஆம் ஆண்டின் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கமாகிய *ELAB*-இன் தொகுப்பு நூல்களாகிய "*பூந்துணர்*" இல் ஒருவராகவும், நூற்றுக் கணக்கான ஆய்வுக் கட்டுரைகளினதும் ஆசிரிய ராகிய நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்கள் இன்று இலண்டனில் வசித்து வருகின்றார்.

Publishers:
Wijey Publication
35, Southborough Road
Bickley, Bromley, Kent. BR1 2EA
UNITED KINGDOM

Assisted By:
Manimekalai Pirasuram
Chennai 600 017
Tamil Nadu
SOUTH-INDIA

WIJEY PUBLICATION ISBN: 978-0-9575862-2-2

❖❖❖



# காலத்தை வென்ற காவிய மகளிர்!

(70 காப்பிய மகளிர்)

கங்காதேவி : KANKAA DEVI,
சத்தியவதி : SATHTHIYAVATHY,
அம்பை : AMPAI,
அம்பிகை: AMPIKAI,
அம்பாலிகை : AMPAALIKAI,
காந்தாரி : KAANTHARI,
குந்தி : KUNTHI,
மாத்ரி : MAATHRI,
திரௌபதி: THIRAVPATHI,
சுபத்திரை: SUPATHTHIRAI,
உத்தரை: UTHTHARAI,
கண்ணகி: KANNAKI,
மாதவி: MAATHAVI,
கோப்பெருந்தேவி:KAWPPERUNTHEVI,
கவுந்தியடிகள்: KAVUNTHIYADIKAL,
தேவந்தி: THAEVANTHI,
மணிமேகலை:MANIMAEKALAI,
சுதமதி: SUTHAMATHI,
கமலை: KAMALAI,
சித்திராபதி: SITHTHITAAPATHI,
தாரை: THAARAI,
வீரை: VEERAI,
காயசண்டிகை: KAAYACHANDIKAI,
இலக்குமி: ILAKKUMI,
ஆதிரை: AATHIRAI,
பீலிவளை: PEELIVALAI,
இராசமாதேவி: IRAASAMAADEVI,
அறவணவடிகள்: ARAVANAVADIKAL,
மணிமேகலா தெய்வம்:
MANIMEKALAA THEIVAM,
சிந்தாதேவி: CHINTHAATHEVI,
தீவதிலகை: THEEVATHILAKAI,
காந்தருவதத்தை:
KAANTHATUVATHATHTHAI,
குணமாலை: KUNAMAALAI,
பதுமை: PATHUMAI,
கேமசரி: KAEMASARI,
கனகமாலை: KANAKAMAALAI,
விமலை: VIMALAI,
சுரமஞ்சரி: SURAMANCHATI,
இலக்கணை: ILAKKANAI,
கோசலை: KOSALAI,
கைகேயி: KAIKAEYI,
சுமத்திரை: SUMATHTHIRAI,
சீதை: SEETHAI,
கூனி: KOONI,
தாரை: THAARAI,
அகலிகை: AKALIKAI,
மண்டோதரி: MANDOTHARI,
சூர்ப்பணகை: CHOORPPANAKAI,
திரிசடை: THIRICHADAI,
உருமை: URUMAI,
ஔவையார்: AVVAIYAAR, ஒக்கூர் மாசாத்தியார்:
OKKOOR MASAATHIYAAR,
அள்ளூர் நன்முல்லையார்:
ALLOOR NANMULLAIYAAR,
காக்கை பாடினியார் நச்செள்ளையார்: KAAKKAI PAADINIYAAR NATCHELLAIYAAR,
காவற்பெண்டு: KAAVATPENDU,
குறமகள் இளவெயினியார்:
KURAMAKAL ILAVEYINIAAR,
குறமகள் குறியெயினி:
KURAMAKAL KURIYEYINI,
நக்கண்ணையார்:NAKKANNAIYAAR
நெட்டிமையார்: NEDDIMAIYAAR,
பாரி மகளிர்: PAATI MAKALIR,
பூங்கண் உத்திரையார்:
PUUNKAN UTHTHITAIYAAR,
பூதப்பாண்டியன் தேவிபெருங்கோப் பெண்டு: PUUTHAPAANDIYAN THAEVI PETUNKAWP PENDU,
பேய்மகள் இளவெயினியார்:
PAEIMAKAL ILAVEYINIAR,
மாறோக்கத்து நப்பசலையார்:
MAAROKKATHTHU APPASALAIYAR,
மாற்பித்தியார்:MAARPITHTHIYAAR,
வெண்ணி குயத்தியார்:
VENNI KUYATHTHIYAAR,
வெறிபாடிய காமக் கண்ணியர்:
VERIPAADIYA KAAMAK KANNIYAR,
குண்டலகேசி: KUNDALAKAESI,
பத்தாதீசா: PATHTHAATHEESAA.
மாதரி: MAATHARI

ISBN : 978 0 9575862 2 2